# சைவ சமய நெறி

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருப்பரங்குன்றம்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

TVM

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சைவ சமய நெறி

(மூலமும் விளக்கவுரையும்)

வெளியீடு

ஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சைவ சமயநெறி (மூலமும் விளக்கவுரையும்) |
| உரையாசிரியர் | : | ஆறுமுக நாவலர் |
| பொருள் | : | சைவ சமய இலக்கணம் |
| மதிப்பு | : | மறுபதிப்பு 18.12.2002 |
| நூலின் அளவு | : | 21 x 14 |
| எழுத்து | : | 10 பாயிண்ட் |
| பக்கம் | : | 272 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 90/- |
| அச்சிட்டோர் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி) லிட்., சிவகாசி. போன் : 223315. |
| முகப்பு அட்டை | : | ஆர்ட் பேப்பர் |
| வெளியீடு | : | ஸ்கந்தகுரு வித்யாலயம்<br>66, சன்னதி தெரு,<br>திருப்பரங்குன்றம், மதுரை -5<br>போன் : 0452 - 2482945 |
| நூல் கிடைக்குமிடம் | : | சிவஸ்ரீ K. இராஜா பட்டர்<br>திருப்பரங்குன்றம் |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# பதிப்புரை

*வானவன்காண் - சிவபுரத்து எம் செல்வர் தாமே.*

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாகவும் விளங்குகின்ற பரமபதியாகிய சிவபெருமான் அனாதியே ஆணவமலத்தினால் கட்டுண்டிருக்கும் பெத்த நிலை பசுக்களாகிய ஆன்மாக்களின் மேல் வைத்த பெருங்கருணையால் சதாசிவ மூர்த்தியாகிய முதற் சிருட்டியின் ஆரம்பத்தில் அருளிய நூல்களே "**வேதசிவாகமங்கள்**" ஆகும். நூல்கள் இரண்டாயினும் அவைகளில் வேற்றுமை காணக் கூடாது என்று ப்ரம்மசூத்ர பாஷ்யத்தில் நீலகண்ட சிவாச்சார்யார் கூறுகின்றார். வேதத்தின் ஞானகண்டம் மாயாவாதிகள் பலருக்கும் அவரவர் கொள்கைக்கு தக்கவாறு பல பொருள் பட இருப்பதாலும், சிவாகமத்தின் ஞானகண்டம் அவ்வாறன்றி மலபரிபாகத்தினாலே திருவருள் பதிந்த நிலையில் உள்ள ஆன்மாக்களுக்கு உண்மை பொருளை. தெளித்து உணர்த்தலாலும் வேதம் பொது ஆகமம் சிறப்பு என்று சைவ சித்தாந்த நூல்களாகிய திருமந்திரம், சிவஞானசித்தியார், சிவபிரகாசம் ஆகியவை எடுத்துக் கூறுகின்றன. சைவாகமங்களில் உள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களிலும் சரியா பாதத்தையும், கிரியா பாதத்தையும் விளக்கி கூறுகின்றது இந்த **சைவ சமய நெறி** என்னும் இந்நூல். சைவாகமங்களின் வழி நின்று சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷை பெற்று உய்வுறும் வண்ணம் சைவ சமயிகளுக்காக ஸ்நான விதி தொடங்கி இஷ்ட லிங்கஸ்தாபனம் வரையில் உள்ள சில கிரியைகளை கூறுதலின் கண் சைவசமயநெறி எனப் பெயர் பெற்றது. இந்நூலை அருளியவர் சிதம்பரத்தின் கண் வாழ்ந்த மறை ஞான சம்பந்த நாயனார் ஆவர். சிவபெருமானிடத்தும் சிவாகமங்களிலும் பெரிதும் பக்தியுடைய அப்பெருமானார் சமஸ்த சைவாகமங்களையும் நன்றாக பதி அறிவின் துணையாலே ஆராய்ந்து இந்நூலை ஆசாரியரிலக்கணம், மாணாக்கரிலக்கணம், பொதுவிலக்கணம் என்று மூன்று அதிகாரமாக அமைத்துள்ளார். தீக்ஷை, பிரதிஷ்டை முதலிய கிரியைகளை செய்ய வேண்டியவர் ஆசாரியர். ஆகையால் முதலில் ஆசாரியரிலக்கணமும், அந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசாரியார் எவர் என்று அறிந்து அவரை அடைந்து வழிபட்டு தங்களது பக்குவத்திற்கேற்ப தீக்ஷை பெற வேண்டுவோர் மாணாக்கராகையால் இரண்டாவதாக மாணாக்கரிலக்கணமும் அவ்விருவரும் கிரியை நெறிகளை அறிந்து அவ்வாறொழுகி மேலான இஹ பர ஸௌபாக்கியங்களை பெற வேண்டுமாகையால் பொதுவிலக்கணத்தை மூன்றாவதாகவும் கூறியுள்ளார். சைவசமயத்தில் பிரவேசிக்கும் மாணவமணிகளுக்கும், சிவாச்சார்ய குழந்தைகளுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கிடைத்தற்கு அரிதாகிவிட்ட இந்நூலை நமது **ஸ்கந்தகுரு வித்யாலயத்தின்** ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்மொழி, வடமொழி என்று மொழி வேற்றுமை காணாது வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவனாகிய சிவபெருமானைப் பரம்பொருளாக வணங்கும் சைவ சமயிகள் இரண்டு மொழிகளையும் இரண்டு கண்களாகக் கொள்வதே சிறப்பாகும். எனவே சைவ சமயிகளாகிய நாம் சைவ சமய நெறி என்னும் அருள்நூலைப் படித்து பாசங்கள் நீங்கப் பெற்று ஊனக் கண் பாசம் உணராப் பதியாகிய சிவபெருமானின் திருவருள் பெற்று இம்மையிலும் மறுமையிலும் நலமாக வாழ திருப்பரங்கிரிதனில் உறையும் தெய்வயானை மணவாளனின் திருவருளை வேண்டுகிறேன்.

இந்நூலை வெளியிட தாங்களிடமிருந்த பிரதியைக் கொடுத்து உதவிய மானாமதுரை **ராஜேஷ் (எ) சோமசுப்பிரமணியபட்டர்** அவர்களுக்கும், தென்சேரிமலை **பாலகணபதி சிவம்** அவர்களுக்கும் திருநெல்வேலி **சிவஸ்ரீ கோமதி சங்கரபட்டர்** அவர்களுக்கும் மற்றும் **சிவாச்சார்ய மாணவமணிகளுக்கும்** இந்நூலை அச்சிட்டுத்தந்து உதவிய **விஷ்ணு பிரியா. பழனியப்பன் அவர்களுக்கும்** ஸ்கந்தகுரு வித்யாலயத்தின் சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இங்ஙனம்**

*சிவாகம சிரோமணி ஈசான சிவாச்சார்யார்*

**சிவஸ்ரீ K. ராஜாபட்டர் (எ) சந்திரசேகர பட்டர்**

***நிறுவனர். முதல்வர் ஸ்ரீ காஞ்சிமஹா ஸ்வாமிகள் சதாப்தி***

***வேதசிவாகம பாடசாலை டிரஸ்ட். திருப்பரங்குன்றம், மதுரை.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனை
தூய மறைப்பொருளாம் வார்கடல் நஞ்(சு)
உண்ட தனுக்கிறவா தென்றும் இருந்தவனை
ஊழி முதல்வனோ டொள்ளரியும் முணரா
அண்டனை அண்டர் தமக்காகம நூல் மொழியும்
ஆதியை மேதகுசீர் ஓதியை வானவர்தம்
கண்டனை அன்புடன் சென்றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ் கானப்பேருறை காளையையே

*– சுந்தர மூர்த்தி சுவாமிகள்*

*படைப்பின் நோக்கம் :*

உயிர்களாகிய நாம் அனைவரும் அனாதியே காரிட்ட ஆணவ கருவறையுள் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போல கட்டுண்டு கிடந்தோம். என்று தாயுமான சுவாமிகள் வாக்கால் அறிகிறோம். அக்கருவறையுள் இருந்து விடுவித்து நம்மை எல்லாம் தன்னுடன் ஐக்கியப்படுத்தி முக்தி என்னும் பேரின்ப வீட்டில் திளைக்க வைக்க திருவுளம் கொண்ட கருணை வடிவமான இறைவன் சங்கல்ப மாத்திரத்தால், படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சக்ருத்யங்களையும் செய்கிறார். உயிர்கள் எந்த ஒன்றையும் தானே உணராது உணர்ந்த உணரக்கூடியவைகள் ஆதலின் அவைகள் யாவும் இன்ப துன்பங்களை அனுபவித்து உணரும் பொருட்டு தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து அவற்றில் சிறிது காலம் பொருந்தி இருக்கச் செய்கிறான். அவ்வாறு உயிர்கள் பொருந்தி இருக்கும் பொழுது செய்கின்ற வினைகளுக்கேற்ப அவைகளுக்கு பல்வேறு பிறவிகளை கொடுத்து பக்குவப் படுத்துகிறான். சார்ந்தன் வண்ணமாம் தன்மையை உடையன உயிர்கள் ஆதலின் பல்வேறு பிறவிகளை எடுப்பதும் உயிர்கள் மாயா காரியமான உலக இன்பங்களை பேரின்பமாக நினைத்து வாழ்ந்து வருங்கால் அவற்றில் மயக்குறா வண்ணம் தான் சிற்றறிவுப் பொருளாகிய பசு என்பதையும், தன் தலைவன் முற்றறிவுப் பொருளாகிய பதி என்பதையும், தன் தலைவனை தான் அடைய தடைசெய்யும் அறிவிலி பொருள்களாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங்களை பற்றியும் அறிந்து கொண்டு, தலைவனை அடைய வேண்டிச் செய்ய வேண்டிய சாதனைக்குரிய வழிமுறைகளையும் உண்டாக்கி சாதனையின் பயனாகிய இருவினை ஒப்பெய்தி, மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களுக்கு முக்தியை அளிப்பதற்காகவுமே ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றுமே இல்லாத இறைவன் மந்திர வடிவங்கொண்டு ஞான சாஸ்திரங்களாகிய வேத, சிவாகம சித்தாந்த சாஸ்திரங்களை அருளினான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை ஆகும்.

ஆணவ மலத்தினில் அமிழ்ந்திய பசுக்களை
அனவரதம் தன்னகத்தே
ஐக்கியங் கோடற் (கு) அருந்தொழில்கள் ஐந்துநனி
யாற்றுமைம் முகனாகி நீ
மாணுடன் நவின்ற நல் ஆகமம் – என்பது

பாம்பன் சுவாமிகள் வாக்கு. அவ்வாறு இறைவன் உருவங்கொண்டு வேத சிவாகமங்களை அருளாவிட்டால் உயிர்களுக்கு முக்தி என்பதே இல்லை என்கிறார் அருள் நந்தி சிவனார்.

ஆரண ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டே
காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும்
நாரணர் முதலாயுள்ள சுரர் நரர் நாகர்க்கெல்லாம்
சீரணி குருசந்தான செய்தியும் சென்றிடாவே
– சிவஞான சித்தியார்.

***வேதங்களும், சிவாகமங்களும் :***

வேதமொடாகமம் மெய்யாமிறை வன்னூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென்றுள்ளன
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே – திருமூலர்.

சைவம் என்பது சிவத்துடன் தொடர்புடையது என்று பொருள்படும். சிவபெருமானால் உண்டாக்கப்பட்டதாகவும் சிவமே பரம்பொருள் என்பதை உணர்த்துவதாகவும் விளங்குவது சைவ சமயம் என்றும், இந்த சித்தாந்த சைவமானது விந்திய மலையின் தெற்கு பகுதியில் தான் தோன்றியது என்றும் காரணாகமம் கூறுகின்றது.

𑌶𑌿𑌵𑍇𑌨 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌃 𑌶𑍈𑌵𑌂 𑌶𑍈𑌵𑌨 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌂 𑌶𑌿𑌵𑌃॥

𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌃 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌦𑍇𑌶𑍇 𑌶𑍈𑌵𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவே தான் மணி வாசக பெருந்தகையும் "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று பாடுகிறார். தனிப்பட்ட ஒரு தலைவரால் உண்டாக்கப் படாமல், காலத்திற்கும், இடத்திற்கும் அப்பாற்பட்டு உலகத்தில் உள்ள மற்ற எல்லா சமயங்களின் கொள்கைகளையும் தன்னுள் கொண்டு தான் அவற்றுள் ஒன்றாகாது.

முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமானால் தோற்று விக்கப்பட்டு தன்னிகரில்லாது விளங்கும் சைவ சமயத்தின் மூல வேர்கள் வேதங்களும், சிவாகமங்களும் ஆகும். இவற்றுள் வேதம் பல சமயத்தவர்களுக்கும் அவரவர் கொள்கைகளுக்கு ஒத்தவாறு பல பொருள் பட இருப்பதால் பொது எனவும் சிவாகமங்கள் அவ்வாறன்றி சத்திநிபாதம் அடைந்த ஆன்மாக்களுக்கு சிறப்பு நிலையில் உண்மைப் பொருளை விளக்குவதால் சைவம் அருஞ்சிறப்பு நூல் எனவும் வழங்கப் பெறும். எனினும் இவ்விரண்டு நூல்களுக்கும் *கர்த்தா பரமேஸ்வரன்* ஆதலால் அவற்றுள் வேற்றுமை காண்பது அறியாமை ஆகும், வேதங்களுக்கு பொருள் கொள்ளும் போது ஆகமங்கள் கூறும் வண்ணம் கொண்டால் இவற்றுள் வேற்றுமை எண்ணம் தோன்றாது. வேதங்களின் சாரமாக உடையதே *சித்தாந்தம்* எனவும், சித்தாந்தத்தினால் கூறப்படும் ஆசாரம் *வைதிகாசாரம்*. எனவும் வேதங்களை ஒப்புக்கொள்ளாத சித்தாந்தங்கள் தள்ளப்பட வேண்டியவை என்றும் மகுடாகமம் கூறுகின்றது.

ஸிவாஜ்ஞொ வெதவாாகவாதிநூக வெதவஹிஷ்கூதக ।

ஸிவாஜ்ஞ விஹிதாசாரஃ வைதிகாசார உச்யதெ ॥

வேதமாகிய மரம் இன்றேல் சிவாகமமாகிய கனியும் இன்றாம். எனவே தான் *வேதத்தின் "பயனாம் சைவம்"* என்றார் சேக்கிழார் பெருமான். இவ்விரு நூல்களும் சிவபெருமானால் அருளப்பட வில்லையானால் சைவம் என்ற ஒரு சமயமே இல்லை எனலாம்.

***<u>சிவாகமங்களின் தோற்றம் :</u>***

ஜய ஜமதி ஸஹுருய விஹித ஷுக்தியதயா ஈஸாமவ ஜயுயி ஸயெூ நிஃஷாநாம்

தஜ்தூாணொவாபஜாநதாம் ஸவிஜாநாம் ஷாணிநாம் ஸநூஷாய

வாசகாாணிெகா ஷ்வாு வாசஸிவ: காசிகாதி வாதாஊாஞு திவூாமாு

நாதாஷூாதுதயா ஷாணிநாய தஷு ஷவாு வஜாஸிவொவி நாதாஷூாதுதயா

ஆமதம் தஷெவ தஞுஸநெகஷுதொாவதயா விமஜூ காசிகாதி ஸஂஹிதாகூசென

ஷாணவாதிஷூ: ஊஷூ: ஶிவெஷூ: ஸநாதிாஷாதிஷூ: ஸஷாதஸெஷூ: ாஜெஷூஷு

உவதிஷ்வாுஊஜு தஞாவதாஸெவிவிசபுஷஸ்விஷூாசஃ

ஸ்ரீமச உமாபதி ஶிவாசாய்:

வெளஷ்கரஸஂஹிதாமாஷ்யெ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*கிரியையென மருவுமவையாவும் ஞானம்*
*கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்குமுண்மைச்*
*சரியை கிரியா யோகத்தன்மை யோர்க்குச்*
*சாலோக சாமீப சாரூபங்கள்*
*மருவியிடும உயர் ஞான மிரண்டாம் மாறா*
*மலமகல அகலாது மன்னுபோதத்*
*திருவருள் ஒன்று ஒன்றதனைத் தெளியவோதும்*
*சிவாகமம் என உலகறியச் செப்பும் நூலே*

– சிவப்பிரகாசம்

சிவஞானம் இரண்டு வகைப்படும். ஒன்று உணர்வறிய மெய்ஞானம். இயல்பாகவே மலமற்றவராகவும், தத்வங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டவராகவும் விளங்குகின்ற சிவபெருமானின் திருவருளே அவபோத வடிவ ஞானமாகும். ஒன்று அந்த திருவருளைத் தெளிய சிவபெருமானே கொண்ட நாத வடிவ ஞானமாகிய சிவாகம சாஸ்திரங்களாகும். இவை உவமையில்லா கலைஞானம் என வழங்கப்பெறும். இந்த நாத வடிவமானது நமது உடலைப் போல் சப்த தாதுக்களால் ஆகாமல் மந்திர மயமான ஞான வடிவம் ஆகும். இவற்றையே *வித்யாதேஹம்* என்றும் *சப்த ப்ரஹ்ம ரூபம்* என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இவ்வுண்மையை உணர்ந்த ஞானசம்பந்த பெருமான்

*போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்*
*பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி*
*ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்*
*நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே !*

என்ற தேவாரத்தில் ஆகமார்த்த தோலுடையன் என்று குறிப்பிடுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக விளங்கும் சிவபெருமான் உயிர்களின் மேல்கொண்ட கருணையினாலே அவ்வுயிர்கள் பிறவி பெருங்கடலில் நீந்தி கரையேறும் வண்ணம் தன் திருவருட் சக்தியினால் நாதரூப ஞானத்தை அருளினார். பின்பு 25 திருமுகங்களைக் கொண்ட மஹாசதாசிவ மூர்த்தி நாதரூப ஞானத்தை காமிகம் முதல் வாதுளம் ஈறாகிய 28 தந்திரங்களாக பலவித சந்தங்களினாலே பிரணவர் முதலான பத்து சிவர்களுக்கும் அநாதிருத்திரர்கள் பதினெண்மருக்கும் உபதேசித்து அருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு உபதேசிக்கப்பட்ட சிவாகமங்கள் உபதேசக்ரமமாக சதாசிவபெருமானிடத்து அனந்தேசருக்கும், அவர் ஸ்ரீகண்டருத்ரர்க்கும் அவர் நந்தி எம்பெருமானுக்கும், அவர் தேவருஷிகளுக்கும், அவர் மனுஷ்ய ருஷிகளுக்கும் அவர் மனிதர்களுள் பக்குவம் வாய்ந்தவர்களுக்கும் உபதேசித்தனர். இவ்வாறு தான் ஆகமங்கள் காலந்தோறும் இடைவிடாது வந்து கொண்டிருக்கின்றன.

இந்த சிவாகமங்கள் 51 அக்ஷர வடிவமாக விளங்குகின்றது என்றும், இவற்றை முதலில் கேட்டவர்கள் யாவர் என்பதையும் திருமந்திரமும், சைவ சமய நெறியும் கூறுகின்றது.

*ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்*<br>
*ஐம்பதெழுத்தே அனைத்து ஆகமங்களும்*<br>
*ஐம்பது எழுத்தேயும் மாவதறிந்த பின்*<br>
*ஐம்பதெழுத்தும் போய் ஐந்தெழுத்தாமே.*

இவை காரம் முதல் க்ஷ காரம் ஈறாகிய கிரந்த எழுத்துக்கள் ஆகும்.

*அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்*<br>
*அஞ்சோடிருபத்து மூன்றுள ஆகமம்*<br>
*அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்*<br>
*அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.*

– திருமந்திரம்

*இருபது மெட்டுமே மூலமுபபேதம்*<br>
*இருநூறு மேழுமென வெண்*<br>
*அறுபத்தறுவர் பிரணவராதி*<br>
*அறிவறக் கேட்டாராகமம்* – சைவ சமய நெறி

சைவ சமயத்தின் முதல் நூல்களாக விளங்கக்கூடிய இந்த வேத சிவாகமங்களுக்கு தோற்றமும் ஒடுக்கமும் உண்டே தவிர அழிவு என்பதே கிடையாது. எனவே இவை நித்யமானவை என்றும் அனாதி என்றும் வழங்கப்பெறும். இவையன்றி வேறு நூல்களை முதல் நூல்கள் என்று சொல்பவர்களுக்கு இவற்றை விளங்க வைக்க முடியாது என்கிறார். அருள் நந்தி சிவனார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*அருமறை ஆகமம் முதனூல் அனைத்தும் உரைக்கையினான்*
*அளப்பு அரிதாம் அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்*
*தருவர்கள் பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்*
*தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து*
*மிருதி புராணம் கலைகள் மற்றும் எல்லாம்*
*மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம் வேதாங்கம்*
*சுருதி சிவாகமம் ஒழியச் சொல்லுவது ஒன்று இல்லை*
*சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே* என்றும் உலகத்தில் உயர்ந்த நூல்கள் என கூறப்படுவன மறைகளும் சிவாகமங்களுமாகிய இரண்டே தாம் என்றும் சிவாகமங்களே சித்தாந்தங்கள் என்றும் கூறுவர்.

வேத நூல் சைவ நூல் என்று இரண்டே நூல்கள்
வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் தருநூல் இரண்டும்
ஆரண நூல்பொது சைவம் அரும்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீள் மறையின் ஒழி பொருள் வேதாந்தத்
தீது இல்பொருள் கொண்டு உரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் – சிவாகமங்கள் சித்தாந்தமாகும் – என்கிறார். இவ்வாறு புகழ் பெற்ற சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பகுதிகளை உடையனவாக பதி, பசு, பாசங்களை விளக்குகின்றன. இவைகள் படி நிலையில் உயிர்களை முக்திக்கு இட்டுச் செல்கின்றன.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் சைவ சமய நெறி அரும்பு, மலர், காய், கனி, போல் அன்றோ பராபரமே! இவற்றுள் முதல் இரண்டு நெறிகளையும் சிறப்பாக சிவாகமங்களை மூலமாகக் கொண்டு விளக்கிக் கூறுவதே இந்த சைவ சமய நெறி ஆகும். சைவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிகளை விளக்கிக் கூறுவதால் “சைவ சமய நெறி” எனப் பெயர் பெற்றது. இந்நூலாசிரியர் *மறைஞான சம்பந்தர்* 14 ம் நூற்றாண்டில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர் ஆவார். ஆசாரியரிலக்க்ணம், மாணாக்கரிலக்கணம், பொதுவிலக்கணம் என மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது இந்நூல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் உரை எழுதி உள்ளார்கள். அதை சென்னை வித்யானுபாலன யந்த்ரசாலை உரிமையாளர் பொன்னுஸ்வாமி பிள்ளை அவர்கள் 1955 ம் ஆண்டு வெளியிட்டுள்ளார்கள். நாவலரின் உரையை தற்காலத்திற்கேற்ப சிறிது மாற்றங்களுடன் வெளியிடும் திருப்பரங்குன்றம் "*ஸ்கந்தகுரு வித்யாலயா*" மாணவர்களின் பணி மிகவும் போற்றுதற்குரியதாகும். அதிலும் குறிப்பாக அருமை நண்பர் திருநெல்வேலி *பா. சந்திரசேகர சிவம்* (சுகுமார்) அவர்கள் மூல நூல் மிகவும் சிதிலமாகி இருந்தபடியால் நூல் முழுவதையும் எழுதித் தந்துள்ளார்கள். அவருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் ஸ்கந்தகுரு வித்யாலயத்தின் 9ம் ஆண்டுவிழாவில் இந்த நூல் வெளிவருவது மிகவும் சிறப்பானதாகும். இந்நூலால் சைவ உலகம் பயனடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இது போல சிவாகம பாடசாலை மாணவமணிகள் எல்லோரும் சிவாகமங்களின் கிரியாபாதங்களின் ஒரு பகுதியாகிய ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்த கிரியைகளை மட்டும் படிப்பதோடல்லாது கிரியை பின்பயனாகிய ஞானத்தை அடைய சிவாகமங்களின் ஞான பாதங்களையும், யோக பாதங்களையும், திருமுறைகளையும், மெய்கண்ட சாஸ்திரங்களையும் கற்று சைவ சித்தாந்த பூஷணங்களாக விளங்க வேண்டும்.

𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑌾𑌦𑍇𑌷𑍁 𑌨𑌿𑌪𑍁𑌣𑌃 𑌚𑌰𑍍𑌯𑌾𑌪𑌾𑌦𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌕𑌃

𑌯𑍋𑌗𑌪𑌾𑌦𑍇 𑌕𑍃𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌾𑌦𑌾𑌨𑍁𑌰𑌞𑍍𑌜𑌕𑌃

𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌆𑌚𑌾𑌰𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿

𑌸𑍍𑌵𑌯𑌂 𑌆𑌚𑌰𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

கிரியைகளைச் செய்வதில் நிபுணத்வம் வாய்ந்தவனாகவும், சர்யா பாதத்தை கடைபிடித்து ஒழுகுபவனாகவும், யோகத்தை செய்பவனாகவும், சிவஞானத்தில் அழுந்தி இருப்பவனாகவும் இருத்தல் வேண்டும். சாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந்து அதன்வழி நின்று தனக்குப்பின் வருபவர்களையும் அதன் வழி ஒழுகசெய்பவனே ஆசார்யன் எனப்படுவான் என்னும் ஆகம வாக்யங் களுக்கு இணங்குவது ஆதி சைவ மாணவமணிகள் யாவரும் வித் சிரோண்மணிகளாய் சைவசித்தாந்த வித்தகர்களாய் வேத சிவாகமங்களையும், திருமுறை, சித்தாந்த சாத்திரங்களையும் இரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்களாக கொண்டு அவற்றை நன்றாகப் படித்து தெளிவு பெற்று பரார்த்த பூஜையை செய்தல் வேண்டும்.

*வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமைதப்பி*
*தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம்சாறும்*
*ஊழ்பெறல் அரிது சால உயர் சிவ ஞானத்தாலே*
*போழ் இள மதியினானை போற்றினார் அருள் பெற்றாரே.*

சிவஞான சித்தியார்

எவ்வளவோ பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பயனாக சைவ சமயத்தில் பிறக்கும் ஊழைப் பெற்ற நாம் சைவ சமயத்தின் வேராக விளங்கக்கூடிய சிவாகமங்களை பாதுகாக்கத் தவறி விட்டோம். எனவே தான் நம் நாட்டில் இறைவழிபாட்டில் மொழியை கருவியாக்கி பணமும், புகழும் சம்பாதிக்கின்றனர் சிலர். அவர்கள் உண்டாக்கி இருக்கும் இந்த மாயையில் நம் சைவ சமயத்தினர் சிக்காது வேதங்களும், சிவாகமங்களும் எல்லோருக்கும் பொதுவானவை என்பதையும் அவை ஒரு தேசத்திற்கோ ஒரு இனத்திற்கோ சொந்தமல்ல என்பதையும் அவை நம் சமயத்தின் பூர்வீக சொத்துக்கள் என்பதையும் விளக்கி கூற வேண்டும். அதோடு மட்டுமல்லாது சைவ சமயத்தில் பிறந்த மாணவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஓலைச் சுவடிகளாக உள்ள சிவாகமங்களை தகுந்த அறிஞர்களின் உதவியோடு தமிழ் உரையுடன் வெளிவர ஆவன செய்ய வேண்டும். அதுவே நம் கடன். நம் கடனாகிய பணியை நாம் செய்யத் துவங்கினால் நம்மைத் தாங்கி அருள்புரிவதையே கடனாக கொண்டுள்ள இறைவன் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தோன்றாத் துணையாக நின்று அருள் புரிவான் இது சத்தியம்.

இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் என் குருநாதர் திருப்பரங்குன்றம் சிவாகம சிரோன்மணி. சிவஸ்ரீ **K.** *ராஜாபட்டர்* அவர்களுக்கும், திருப்பரங்குன்றம். ஸ்கந்த குரு வித்யாலய மாணவமணிகளுக்கும் எஞ்ஞான்றும் நன்றிக் கடப்பாடு உடையேன்.

ஆலயங்களில் பரார்த்த பூஜை செய்கின்ற சிவாச்சார்ய பெருமக்கள் தாங்களுக்கு ராஜீகத்தாலோ அல்லது வேறு வகையாலோ துன்பங்கள் நேர்ந்தால் இறைவனை நோகாது நாம் அறிந்தோ, அறியாமலோ செய்த பிழைகளுக்காகவே இறைவன் அப்படி ஒரு துன்பத்தை நமக்கு தந்துள்ளான் என்பதை உணர்ந்து அவன் திருவடிகளிலேயே மனமுருகி சரண் புகுந்தால் பாதகத்துக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிசு வைத்தவனும், குற்றம் நீக்கி குணம் கொள்பவனுமாகிய பேரருளாளன் உமைபங்கன் நமக்கு நிச்சயம் அருள்புரிவான்.

ஆதி சைவ மாணவமணிகள் வேத சிவாகமங்கள், திருமுறை மெய்கண்ட சாஸ்திரங்களை நன்றாகப் படித்து சிறந்த சிவாச்சார்ய பெருமக்களாக உலக உயிர்கள் யாவற்றுக்கும் நன்மை பயக்கும் ஆலய வழிபாட்டை சிறப்புறச் செய்யவும், செய்பவர்களும், செய்விப்பவர்களும் சகல நலன்களும் பெற்று வாழவும் எல்லாம் வல்ல இறைவனின் பூங்கழல்களை வழுத்துகிறோம்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய சன்னிதானங்களுக்கும், சிவாச்சார்ய பெருமக்களுக்கும், நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர மிகவும் உதவி செய்த பெரியோர்களுக்கும், மாணவமணிகளுக்கும், பொருளுதவி செய்த அன்பர் சிவநேயச் செல்வர். திரு. *நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா* அவர்களுக்கும் நூலைச் சிறப்புடன் அச்சிட்டு உதவிய மதுரை விஷ்ணு பிரியா உரிமையாளர். திரு. *பழனியப்பன்* அவர்களுக்கும் திருப்பரங்குன்றம்: ஸ்கந்த குரு வித்யாலயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அவர்கள் இன்னும் பலப்பல நற்பணிகளைச் செய்வதற்கு சகல நலன்களையும் பெற எல்லாம் வல்ல இறைவனின் இணையடி மலர்களை சிந்திக்கிறோம்.

வாழ்க தமிழ் ! வளர்க சிவாகமம் !
ஓங்குக ஒற்றுமை ! சிறந்து விளங்குக !
உலகம் யாவும்

அன்புடன்.

க. கார்த்திகேயசிவம்
*செயலாளர். ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்*
*எண் – 17. ம.பொ.சி. தெரு, சென்னை – 78*
☎ 4744229
gangakarthik@hotmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவ சிவ

Ph : 56655

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள் அதிபர்,
காசித்திருமடம்.

திருப்பனந்தாள் - 612 504.
(தஞ்சை மாவட்டம்)
தேதி : 1.12.2002

## வாழ்த்துரை

*"மறைமுடிவாம் சைவம்"* *"திவ்வியம் பழுத்த சைவம்"* – என்றெல்லாம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கனிந்து போற்றிய மேன்மை கொள் சைவ நீதியின் நெறிமுறைகளைப் பற்றிய விளக்கங்கள் அடங்கிய "சைவ சமயநெறி" மூலமும், உரையும் – எனும் நூல் செம்மைப்பட, திருத்தம் மிக்கதாக வெளியிடப் பெறுவது அறிந்து மகிழ்கிறோம்.

சொல்லு தமிழையும் சுருதியையும் போற்றிய நல்லைநகர் ஆறுமுக நாவலர், ஆசாரியர் இலக்கணம், மாணாக்கர் இலக்கணம், பொது இலக்கணம் எனும் மூன்று பகுப்புள் அடக்கி சுருங்கிய குறள் வடிவில், நுட்பமிக்க கருத்துக்களைச் சுட்டும் பாடல்களையும், அதற்கு மிகவிரிவான நயமிக்க உரையையும் தந்துள்ளமை மிகவும் அருமையானது. விழுமிய பயனைத் தருவது.

முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் பேறும், தென் ஆலவாயில் உறையும் ஆதியையும், பரங்குன்றில் கோமானையும் பரவும் வாய்ப்பும், வேதம் போற்றிப் பலர்க்கும் பயில்விக்கும் தொண்டும், மிகப்பெரும் பொருட்செலவில் ருத்ர ஹோமத்தைச் செய்யும் நல்ல உள்ளமும் அமைந்த திருப்பரங்குன்றம் சிவாகம சிரோன்மணி **சிவஸ்ரீ இராஜாபட்டர் (எ) சந்திரசேகர பட்டர்** அவர்களின் சீரிய முயற்சியில் இந்நூல் வெளியிடப் பெறுவது தக்கது. பாராட்டிற்குரியது.

சமயம் சார்ந்த, இன்றியமையாத அறிவு, முழுமை பெற்றதாக மிகக் குறைந்தவர்களிடமே உள்ளது. அதிலும் ஐயந்திரிபற உள்ள நிலை மிகவும் அரியதே. இந்நூல் இதனைச் சீர் செய்ய உதவும் என்பது உறுதி.

நூல் சிறப்பான முறையில் வெளியிடப்பெற்றுப் பல்லாயிரம் பேர்க்குப் பயனை நல்கிடச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
**சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்**
திருவாவடுதுறை – 609 803.
நாகை மாவட்டம்.
தொலைபேசி : 04364 – 232021

பெறுநர் :
திரு. கே. ராஜா பட்டர்
அவர்கள்
66, சன்னதித் தெரு,
திருப்பரங்குன்றம்,
மதுரை - 5.

நாள் : 1.12.2002

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க*

## அருள் வாழ்த்துரை

திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்தியாலயத்தின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவும், ஆகமத்தை ஐந்து ஆண்டுகள் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழாவும் நூல் வெளியீடும் நடைபெறுவதும் அறிந்து மகிழ்ந்தோம்.

"***ஆகமம் ஆகி அன்னிப்பான் தாள்வாழ்க***" என்று மணிவாசகப் பெருமானும் "***வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண்***" என்று தேவாரமும் சிவபெருமானைப் போற்றுகின்றது. சிவபெருமான் "***நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்தாய் விளங்குபவர்***" அப்பெருமானைத் தொழுது தூமலர்த் தூவித் துதித்து நிற்பவர்களுக்கு இம்மைவானவர் செல்வமும் அருளி, பிறவித்துயரும் நீக்குவார். இப்பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு போற்றுவது சைவ சமயம்.

இச்சைவ சமய நெறியை யாவரும் உணரும் வகையில் யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் நூலாக ஆக்கித் தந்துள்ளார்கள். அந்நூலை மறுபதிப்பாக வெளியிடப் பெறுவது பாராட்டிற்குரியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமது ஆதீனம் யாழ்ப்பாணத்து நல்லூர் *ஆறுமுகம் பிள்ளை* அவர்களுக்கு "*நாவலர்*" பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. அன்று முதல் அவர் *ஆறுமுக நாவலர்* என்று அழைக்கப்பட்டார். நமது அருளாட்சியில் ஆண்டுதோறும் சிதம்பரத்தில் நடைபெறும் தவத்திரு. ஆறுமுக நாவலர் குருபூஜை விழாவிற்கு அருட்கொடை ரூ. 1000/- வழங்கிச் சிறப்பித்து வருவதை தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும்.

"*சைவ சமய நெறிகள்*" யாவும் மனத்தூய்மை தந்து, மாண்புறு மனிதப் பிறவியின் சிறப்பினை உணர்த்தி பெருமான் திருவடிப் பேற்றை அடையச் செய்யும். அதனால் "*சைவத்தின் மேற்சமயம் வேறில்லை*" என்று போற்றி வருகின்றனர். சைவ சமயத்தைப் பற்றி நிற்போர்க்கு "சைவ சமயநெறி" என்னும் நூல் பெரும் பயன்தரும்.

ஆகம நூல்களையும் முறையினையும் ஐந்தாண்டுகள் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேன்மேலும் சிறப்புற்று விளங்க, ஒன்பதாம் ஆண்டு விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் சிறப்பாக நடைபெற நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ***ஞானப்பெருங்கூத்தன்*** திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*K. PITCHAI KURUKAL*
*CHIEF PRIEST*
*SRI KARPAGA VINAYAGAR TEMPLE*
*PILLAYARPATTI 630207, SIVAGANGAI DISTRICT*
*SOUTH INDIA*

உ

## வாழ்த்துரை

எல்லாம் வல்ல சிவபெருமான் உயிர்கள் பால் கொண்ட பெருங்கருணையினால் அனைவரும் உய்யும் பொருட்டு வழங்கியவை வேத சிவாகமங்கள். சிவாகம ஞானபாதம் வழங்கும் கருத்துக்களை வடமொழியிலும், தமிழ் மொழியிலும் மெய்கண்ட பரம்பரையினர் வழங்கி வழிகாட்டி வந்தனர்.

மறைஞான சம்பந்தர் அருளிய பல்வேறு வடமொழி தென்மொழி நூல்களுள் சிறப்புற்று விளங்குவது சைவ சமயநெறி. இவர் 16–ஆம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்தவர். சிவாகமங்களை ஆராய்ந்து இதனை வழங்கியதாகக் கூறுவதையும் அறிய முடிகிறது. இந்த நூல் ஆசிரியர் இலக்கணம், மாணவர் இலக்கணம், பொது இலக்கணம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது.

நமது சைவசமயத்தை பற்றி அனைவரும் அறிந்து கொள்ள இது போன்ற பழங்கால நூல்கள் மிக அவசியமானவை. இதனை வெளியிட்டு உதவும் ஸ்கந்த குரு வித்யாலய ஸ்தாபகர் மதிப்பிற்குரிய **ராஜா பட்டர்** மற்றும் வெளிவர உதவிய சீடர் **சிர. சுகுமார், சிர. கார்த்திகேயசிவம்** உள்ளிட்ட அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகர் திருவருளால் அனைத்து நலங்களும் உண்டாகப் பிரார்த்திக்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# சைவ சமய நெறி
# மூலமும் உரையும்

## காப்பு

*நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட்*
*பொல்லார் தாள் யாஞ்சூடும் போது.*

தெளிவுரை: எட்டு வகையான பக்திகளை செய்கின்ற நல்லோர்கள் வணங்காநின்ற திருவெண்ணெய் நல்லூரின் கண்ணுள்ள சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாரின் திருவடிகளே நாங்கள் சிரசின் மேல் சூடும் மலர்களாம்.

**எண்வகைப் பத்திகளாவன:**

*தொண்டரடி தொழல்பூசைத் தொழின் மகிழ்தலழகார்*
*துளங்கிய வர்ச்சனை புரித றொகுதி நியமங்கள்*
*கொண்ட பணி திருவடிக்கே கொடுத்தலீசன்*
*குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு*
*மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்பலுன்னன்*
*மருவு திருப் பணிகாட்டி வருவ வாங்கி*
*யுண்டிகொளா தொழிதலென விவையோரெட்டு*
*முடையரவர் பத்தரென வுரைத்து ளாரே!*

திருத்தொண்டர் புராணசாரம்

என்னுந் திருவிருத்தத்திற் கூறப்பட்டனவாம். பொள்ளாரென்பது லள வொற்றுமைப் பற்றிப் பொல்லாரென்றாயிற்று சுயம்பு மூர்த்தியென்றதாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## பாயிரம்

### சிவ வணக்கம்

*1) உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தோங்கி*
*யிலகுஞ் சிவனெம் மிறை.*

தெளிவுரை: புவனங்கள் எல்லாவற்றிலும் பலவகைப்பட்ட ஆன்மாக்களிடத்திலும் பொருந்தி இரண்டற வியாபித்து நின்றும் அவற்றிற்கு அப்பாற்பட்டு விளங்காநின்ற சிவபெருமானே எமக்கு கர்த்தா ஆவர். பல்லுயிர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்.

### சத்தி வணக்கம்

*2) ஒன்றாகி யைந்தொழிற்கு மைந்துவித முற்றுயிரு*
*ணின்றாள் பொற் பாதநினை வாம்.*

தெளிவுரை: சிவபெருமானோடும் வேற்றுமையின்றி ஒரு முதலாகி பஞ்ச கிருத்தியத்தின் பொருட்டுப் பஞ்ச சக்தி பேதங்களைப் பொருந்தி எல்லா ஆன்மாக்களிடத்தும் வியாபித்து நின்ற சிவசத்தியினுடைய பொலிவாகிய திருவடிகளைத் தியானிப்பாம்.

பஞ்சகிருத்தியங்களாவன சிருட்டி, திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அனுக்ரஹம் என்பனவாம். பஞ்ச சக்திகளாவன பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்பனவாம். அக்னிசக்தி ஒன்றேயாயினும் சூடுவிளக்கம் அடுதலாகிய தொழில் வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமாறு போலச் சிவசக்தி ஒன்றேயாயினும் படைத்தல், காத்தல் முதலிய தொழில் வேறுபாட்டினாலே பலவாகத் தோன்றுமென்பது சிவாகம நூற்றுணிவு.

### விநாயகர் வணக்கம்

*3) அடியரிடர் தீர்த்தருளு மானைமுகன் பாதங்*
*கடிமலர்தூய்க் கைதொழுவாங் கண்டு.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தம்மை வழிபடுகின்ற தொண்டர்களுடைய துன்பத்தை நீக்கி அருள் புரியும் யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானது திருவடிகளைக் கண்டு மணம் பொருந்திய தூய மலர்களைத் தூவி கைக்குவித்து வணங்குவாம்.

## சுப்பிரமணியர் வணக்கம்

*4) அமரரிடர் தீர்த்தே யவர்க்கருளும் வென்றிக்*
*குமரனடி சிந்திப்பாங் கூர்ந்து.*

தெளிவுரை: தேவர்களுக்குச் சூரன் முதலிய அசுரர்களால் நிகழ்ந்த துன்பத்தை நீக்கி அவர்களுக்கு அருள் செய்த வெற்றியையுடைய சுப்பிரமணிய சுவாமியின் திருவடிகளை மனமொன்றித் தியானிப்பாம்.

## திருநந்தி தேவர் வணக்கம்

***5) நம்பன் கணத்துக்கு நாதனரு ணந்திபதம்***
***வம்பலர்க்கைக் கொண்டுபணி வாம்.***

தெளிவுரை: சிவபெருமானைச் சேவிக்கும் கணங்களுக்குத் தலைவராகிய கருணையுடைய திருநந்தி தேவரது திருவடிகளை மணம் பொருந்திய மலர்களைக் கையிலெடுத்து அவற்றால் அர்ச்சித்து வணங்குவாம்.

## சனத் குமாரர் வணக்கம்

***6) சதுர்முகன் மைந்தன் சனத்குமரன் பாத***
***பதுமமலர் சென்னியில்வைப் பாம்.***

தெளிவுரை: (சதுர்முகன் மைந்தன்) பிரமதேவருடைய புத்திரராகிய சனத்குமார மகா முனிவருடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை எமது சிரசின்மேற் சூடுவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## மற்றைமுனிவர் வணக்கம்

*7) மற்றை முனிவர் மலர்த்தா டலைமேல்வைத்*
*தெற்றுவமே பாசமெலாம் யாம்.*

தெளிவுரை: ஞான சாத்திரங்களைப் போதிக்கும் அகஸ்திய மகா முனிவர் முதலிய மற்றை முனிவர்களுடைய செந்தாமரைமலர்போலுந் திருவடிகளையும் நமது சிரசின்மேல் வைத்து பஞ்சபாசங்களையும் நீக்கிக்கொள்வாம்.
பஞ்சபாசங்கள்: ஆணவம், மாயை, கர்மம், வைந்தவம், திரோதாயி.

## காரைக்காலம்மையார் வணக்கம்

*8) நம்மடிக ணாடகத்தை ஞானவிழி யாற்றிளைக்கு*
*மம்மைதிருப் பாதநினைப் பாம்.*

தெளிவுரை: திருவாலங்காட்டின் கண்ணே நம்முடைய கடவுளாகிய சிவபெருமானது தாண்டவத்தை ஞானக் கண்ணினாலே தரிசித்து அநுபவித்த காரைக்காலம்மையாருடைய திருவடிகளைச் சிந்திப்பாம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வணக்கம்

*9) வெப்பொழிய மீனவற்கு நீறளித்த வேதியன்ற*
*னெப்பொழுதுஞ் சிந்திப்பாம் யாம்.*

தெளிவுரை: பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் நீங்கும்படி விபூதியைக் கொடுத்து அருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருவடிகளை யாம் எக்காலத்திலுந் தியானிப்பாம்.

## திருநாவுக்கரசு நாயனார் வணக்கம்

*10) பரித்தரிப்பாம் பாசம் பரமசிவன் பாதந்*
*தரித்துயர்ந்த வாகீசர் தாள்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிவபெருமானுடைய திருவடிகளைச் சிரசின் மேலே தரித்து அதனால் உயர்ந்த திருநாவுக்கரசு நாயனாருடைய பாதங்களை யாம் எமது தலையின் மேலிருத்திப் பாசத்தை நீக்குவாம்.

### சுந்தரமூர்த்தி நாயனார் வணக்கம்

*11) பிழைப்பித்தே கூற்றான் முதலைவாய்ப் பிள்ளை*
*யழைப்பித்தார் பாதநினைப் பாம்.*

தெளிவுரை: முதலை வாயினிடத்தே நாசமடைந்த பிராமணப் பிள்ளையை இயமனாலே பிழைப்பித்து அழைப்பித்த சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகளைத் தியானிப்பாம்.

### மாணிக்கவாசக சுவாமிகள் வணக்கம்

*12) பரிமேல் வரவமலன் பாடியமெய்ப் பத்த*
*னிருபதமுஞ் சென்னியில்வைப் போம்.*

தெளிவுரை: சிவபெருமானை குதிரையின் மேலேறி வரும்படி பாடியருளிய மெய்யன்பராகிய மாணிக்கவாசக சுவாமிகளுடைய இரண்டு திருவடிகளையும் சிரசின் மேலிருத்தி வணங்குவாம்.

### மாளிகைத்தேவர் முதலியோர் வணக்கம்

*13) மாளிகைத் தேவன் முதன்மதுர வாக்கினர்தந்*
*தாளினைவைப் பாமெந் தலை.*

தெளிவுரை: திருமாளிகைத் தேவர் முதலாகிய மதுர வாக்காயுள்ள திருவிசைப்பாச் செய்தருளிய அடியார்களுடைய பாதங்களை நமது சிரசின் மேலிருத்தி வணங்குவாம்.

திருவிசைப்பாச் செய்தார்கள் பெயர்:
*சீரார்மா ளிகைத் தேவர் கருவூர்த் தேவர்*
*திகழ்நம்பி கண்டராதித்த தேவர்*
*பாராள்வே ணாட்டிடக டிருவாலி யமுதர்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*பரவுபுரு டோத்த மர்பண் புளசேதி ராய*
*ரேராரு மிளம் பெருமா னடிகள் சேந்த*
*ரெண்ணிலதி ராவடிக ளிவர்களோடும்*
*பாராளுங் கல்லாடர் பட்டணத்துப் பிள்ளை*
*பரவுதிரு விசைப்பாவைப் பாடினாரே.*

*தனிப்பாடல்*

## அடியார் வணக்கம்

14) *பொய்யுலக மென்றமலன் பொற்பாதஞ் சார்ந்தார்தாள்*
*கைதொழுவா முள்ளங் களித்து.*

தெளிவுரை: அமலன் பொற்பாதம் சார்ந்தார்தாள் சிவபெருமானுடைய பொலிவாகிய திருவடிகளையடைந்த திருத்தொண்டர்களுடைய பாதங்களை மனம் மகிழ்ந்து கைகுவித்து வணங்குவாம்.

## மெய்கண்ட தேவர் வணக்கம்

15) *சிந்திப்பாம் வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனடி*
*வந்திப்பாம் வாழ்த்திமகிழ் வாம்.*

தெளிவுரை: திருவெண்ணெய்நல்லூரின் கணெழுந்தருளி யிருந்த மெய்கண்ட தேவருடைய திருவடிகளை மனசினாலே தியானிப்பாம். சரீரத்தினாலே வணங்குவாம். வாக்கினாலே துதித்து அதனாற்களிப்பாம்.

## பதியுண்மையுணர்ந்தார் வணக்கம்

16) *உண்டுசிவ னென்று முயிருள்ளு மென்றுணர்ந்த*
*பண்டிதர்பொற் பாதநினைப் பாம்.*

தெளிவுரை: · ஆன்மாக்களின் அகத்தும் புறத்தும் உள்ள சிவபெருமான் என்றும் உள்ளவன் என்று அறிந்த ஞானிகளுடைய பொலிவாகிய திருவடிகளை சிந்திப்போமாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## இது முதலாறு பாட்டுக்களால் வாழ்த்து

17) *ஆனினமு மந்தணரு மன்பருமா னூர்திக்கு*
*வானவரும் வாழ்க மகிழ்ந்து.*

தெளிவுரை: பசுக் கூட்டங்களும் பிராமணர்களும் விருஷப வாகனத்தையுடைய சிவபெருமானிடத்தே அன்புடையவர்களும் தேவர்களும் களித்து வாழ்க.

18) *வாழ்க தரணிதனைத் தாங்குமனு நீதிமன்னர்*
*வீழ்கபுனன் மண்மகிழ மிக்கு.*

தெளிவுரை: பூமியைப் பரிபாலனஞ் செய்கின்ற மனுநீதியை உடைய அரசர்கள் வாழக்கடவர். பூமியின் உள்ள ஆன்மாக்கள் மகிழும்படி மாதந்தோறும் மும்மழை மிகுந்து பொழிக.

19) *உதவியதே தும்பெரியோர்க் கூட்டிப் பினுண்னும்*
*விதிவினையார் வாழ்கநில மீது.*

தெளிவுரை: தம்மாலியன்றது எவ்வளவு இருந்தாலும் பெரியோர்களுக்கு அன்னம் அளித்து பின் எஞ்சியதை புசிக்கும் விதிக்கிசைந்த தொண்டு உடைய அடியார்கள் பூமியின் மேல் வாழக்கடவர்

20) *வரையாதே யுச்சிதனில் வந்தவரை யூட்டும்*
*புரையோர் தழைகபுகழ் புக்கு.*

தெளிவுரை: உச்சிக் காலத்தில் வந்தவர்கள் எவராயினும் அவர்களை நீக்காமல் அவர்களுக்கு அமுது செய்விக்கின்ற உயர்ச்சியை யுடையோர்கள் கீர்த்தி பெற்றுச் செழிக்கக்கடவார்கள்.

21) *திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்*
*விருப்புடனீ வார்பெருக வீடு.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிவபெருமானைக் குறித்துத் திருப்பணி செய்யும் பக்தர்களுக்கு செம்பொன்னைச் சிரத்தையுடன் கொடுப்போர்கள் மோக்ஷமடையக் கடவர்கள்.

*22) உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்*
*செய்வார் பெறுக சிவம்.*

தெளிவுரை: உய்யக்கருதும் பக்தர்கள் கொடுக்கும் திரவியங்களை வாங்கித் திருப்பணியைச் செய்பவர்கள் சிவத்தை அடையக்கடவர்கள்.

**நூற்பெயரும் வழியும் நுதலியபொருளும்**

*23) சைவ சமயநெறி சைவா கமத்தாய்ந்து*
*கொய்துரைப்பாம் வாஞ்சையுளங் கொண்டு.*

தெளிவுரை: சைவசமய நெறியை உலகத்தவர்கள் அறிந்து ஈடேறல் வேண்டுமென்னும் விருப்பத்தை மனதிலே பொருத்தி காமிகம் முதலிய சைவாகமங்களில் ஆராய்ந்து எடுத்துச்சொல்வாம்.

சைவசமய நெறியனவே நூனுதலியபொருளும், நூற்பெயரும் பெறப்பட்டன. ஆகமம் என்பது 'ஆ' என்பது ஞானத்தையும், 'க' என்பது மோக்ஷத்தையும் 'ம' என்பது மலநாசத்தையும் குறிக்கும். ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி ஞானத்தை உதிப்பித்து மோக்ஷத்தை கொடுக்கின்ற காரணத்தால்ஆகமம் எனப் பெயர் பெற்றது.

**அவையடக்கம்**

*24) தேசிகனோக் காற்றி மிரந் தீருமுயிர்க் கிந்நூலி*
*னாசறுஞ்சொல் லாய்ந்தவர்நோக் கால.*

தெளிவுரை: ஆன்மாக்களிடத்தில் உள்ள மல இருளானது ஆச்சாரியனுடைய பார்வையினால் நீங்குவது போல இந்த நூலிடத்தில் உள்ள குற்றமானது பஞ்சலக்னத்தை ஆராய்ந்த புலவர்களுடைய பார்வையினால் நீங்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**நூல்வழங்கு நிலனும் நூற்பயனும்**

25) *இரவியென விந்நூ லிலங்குகவெங் கெங்கு*
*மிருண்மலர்ந்தீர்த் தாக்கு முயிர்க் கின்பு*

தெளிவுரை: சூரியன் உலகமெங்கும் பிரகாசிப்பது போல இந்த நூலும் தமிழ் வழங்கும் நிலமெங்கும் பிரகாசிக்கக்கடவது. இது ஆன்மாக்களின் மல இருளைப் போக்கிப் பேரின்பத்தை விளைவிக்கும்.

**பாயிரம் முற்றிற்று**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவசமயநெறியானது ஆசார்யார் இலக்கணம், மாணக்கர் இலக்கணம், பொது இலக்கணம் என மூன்று அதிகாரமாக கூறப்பட்டுள்ளது. தீக்ஷை, பிரதிஷ்டை முதலிய கருமங்களைச் செய்யக் கூடியவர்கள் ஆச்சார்யார் ஆதலால் ஆச்சார்யார் இலக்கணத்தை முதலாவதாகவும், அந்த ஆச்சார்யார் எவர் என்று அறிந்து அவரை அடைந்து வழிபட்டு தங்களுடைய பக்குவத்திற்கு ஏற்ப தீக்ஷை பெறவேண்டுவோர் மாணாக்கர். ஆகையால் மாணாக்கர் இலக்கணத்தை இரண்டாவதாகவும், அவ்விருவரும் சரியை, கிரியை முதலியவற்றை அறிந்து அவ்வாறு அநுஷ்டித்து அபரமுத்தி, பரமுத்திகளைப் பெற வேண்டுகையால் பொது இலக்கணத்தை மூன்றாவதாகவும் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## முதலாவது
# ஆசாரியரிலக்கணம்

*யாம் இது கூறுவாமென நுதலிப் புகுகின்றார்.*

*1) தேசிக ராதி திறந்தொகுத்துச் செப்புவர்*
*மாசறுவார் தேறுகவா ராய்ந்து.*

தெளிவுரை: ஆசாரியர், சாதகர், புத்திரர், சமயிகள் என்னும் நால்வர்களுடைய முறைமைகளையும் யாம் தொகுத்து கூறுவாம். ஆணவ முதலிய குற்றந் தீரும்படி விரும்புவோர் அவைகளை ஆராய்ந்து அறியக் கடவர்.

**மேனிருத்த முறையானே ஆசாரியரிலக்கணமுணர்த்த தொடங்கி ஆசாரியாதற்குரிய ஜென்ம தேசமும் வருணமும் இரண்டு திருக்குறள்களாலே உணர்த்துகின்றார்.**

*2) கங்கைநதி யாதிநவ தீர்த்தக் கரைநாட்டுட்*
*டங்குமவ ருற்பவித்துத் தாம்.*

தெளிவுரை: கங்காநதி முதலாகிய ஒன்பது தீர்த்தக் கரைகளிலிமுள்ள புண்ணிய தேசங்களில் பிறந்து வசிக்கின்றவர்கள்

தாம் - அசை. நவதீர்த்தங்களாவன: கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணாநதி, துங்கபத்ரை என்பனவாம். சிறப்புடை பொருளை தானெடுத்து மொழிதல் என்னும் தந்திர உத்தியால் சிறந்தனவாகிய ஒன்பது நதிகளை எடுத்துரைத்தார். ஆதலால் பிற புண்ணிய (தேசங்களாகுமென) நதி தீரத்துள்ள தேசங்களும், சுயம்புலிங்கம், தேவியால் பூஜிக்கப்பட்ட லிங்கம், தேவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கம், முதலிய சிவலிங்கங்கள் உள்ள தலங்களும் மான் சஞ்சரிக்கும் தேசங்களும் ஆகுமெனக் கொள்க. தங்குமவரென்னும் எழுவாய்க்குப் பயனிலை வருந்திருக்குறளின் உத்தமராவாரென்பதாம்.

*3) உத்தமரா வாரவர்த முள்ளுஞ் சிறப்புடைய*
*வுத்தமரே நாற்குலத்துள் ளோர்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு வருணத்தாருங் குரவராவர் என்பதற்கு பிரமாணம் சுப்பிரபேதாகமத்தில்

***ப்ராம்மணா: க்ஷத்ரியா: வைஷ்யா: சூத்ரா: ஸ்ரீந்த குலோத்பவா:/***
***ஆச்சார்யாஸ்தேது விக்ஞேயா நாந்யேஷாம் து கதா சந//***

தெளிவுரை: பிராமணரும், க்ஷத்ரியரும், வைஷ்யரும், சுத்த குலத்தில் பிறந்த சூத்திரரும் ஆகிய நால்வருமே ஆசாரியராவர். மற்றையோர்க்கு ஒருக்காலும் ஆச்சார்யத்துவம் இல்லையாமென்றறிக.

**ஸ்கந்த காலோத்தரத்தில்**

***வாஷாண: ஸ்ரீவஸம்ஸ்காராத் புக்தி முக்தி ப்ரதோ பவேது/***
***பாஷாண: ஸ்ரீவதாம் யாதி சூத்ரஸ் துநகதம் பவேது//***

*கல்லானது சிவ ஸம்ஸ்காரத்தினாலன்றோ போக மோஷங்களை தருவதாகும். கல்லானது சிவத்தன்மை யடையுமாகிற் சூத்திரன் அங்ஙனம் ஆகானென்பது எங்ஙனம்.*

*சைவ புராணத்தில்*

***ஸ்ரீவ ஸாஸ்த்ர ஸமாயுக்தா: பஸ்ரீரி ஸாஸ்த்ர பராங்முகா:***
***ப்ராம்மணாதி சதுர்வர்ணா ஆசார்யாஸ் ப்ரகீர்த்திதா://***

பசு சாத்திரத்தை பற்றாது விட்டுச் சிவ சாத்திரத்தை பற்றி பயிலும் பிராமணர் முதலான நான்கு வருணத்தாருமே ஆசார்யர் ஆவரரென்று கூறுகிறது.

**மனக்குற்றமு முடற்குற்றமுமில்லாதோரே ஆசாரியராதற் குரியதென்பதுணர்த்துகின்றார்**

***4) அவருள்ளு முள்ளு மவலத்தை யற்றா***
***ரவரவருள் தேசிகரா தற்கு.***

தெளிவுரை: நான்கு வருணத்தாருள்ளும் காம முதலிய மனக்குற்றங்களும் அங்ககீனத்துவ முதலிய உடற்குற்றங்களு மில்லாதவர்களே ஆசாரியராதற்குரியவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**இருவகை குற்றங்கட்கு காரணம் உணர்த்துகின்றார்**

***5) காலப்பழுதாலுங் கற்பிற் பழுதாலுங்***
***காயத்தினும் பழுதாங் காண்.***

தெளிவுரை: விலக்கப்பட்ட காலத்திலே புணர்ந்த காலப்பழுதினாலும், நான்காம் நாள் ஸ்நானஞ் செய்த உடனே தன் கணவன் முகத்தில் விழியாமல், மற்றைப் புருடர் முகத்திலே விழித்த கற்பிற்பழுதினாலும், பிறந்த பிள்ளைகளினுடைய உடலிலும் மனசிலும் குற்றமுண்டாகுமென்றறிக.

மற்ற புருடர் முகத்திலே விழித்தால் தான்பெரும் பிள்ளை அவர்களை போலப் பிறக்குமாதலால் ஸ்நானஞ் செய்த உடன் சிவ சூரியனை தரிசிக்கில் குற்றமில்லை என்று உணர்க.

**நல்ல உரு உண்டாதற்கு காரணம் உணர்த்துகின்றார்**

***6) ஆகார தோடமற வன்னைபுசித் தானல்ல***
***வாகாரம் புத்திரர்பா லாம்.***

தெளிவுரை: மாதாவானவள் நான்கா நாளிலே கடின பதார்த்தங்களைக் கூட்டாமல் பாயசம் பால் தயிர் முதாலாகிய சாத்துவிக பதார்த்தங்களைப் புசித்தல் அவள் பெறும் புத்திரரிடத்திலே நல்லுருவமுண்டாகும்.

**நல்லுருவத்திற்கும் நற்குணத்திற்குங் காரண முணர்த்துகின்றார்.**

***7) முற்றினர்க்கு நல்வினைமுன் முற்றுங் குணமெல்லா***
***மற்றையருக் குண்டோ வரம்.***

தெளிவுரை: பூர்வ ஜன்மத்திலே புண்ணியங்களைச் செய்தவர்களுக்கு நன்மையாகிய குணங்களெல்லாம் பலிக்கும். அவ்வாறு புண்ணியஞ்செய்யாத மற்றவர்களுக்கு அக்குணங்களுண்டாமோ, உண்டாகாது.

**அக்குற்றங்க ளிவைகளென்பதும் அவைகளில்லாதாரே ஆசாரியராதற்கு உத்தமரென்பதும் பன்னிரண்டு திருக்குறளாலும்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உணர்த்துகின்றார்.

*8) அறவு நெடிய னறவுங் குறிய*
*னறவும் பரியனவ லன்.*

தெளிவுரை: மிக நெடியவன் குற்றமுடையவன், மிகக் குறுகியவனும் குற்றமுடையவன் மிகப் பருத்தவனும், குற்ற முடையவன்.

*9) அறவும் வெளிய னறவுங் கரிய*
*னறவுஞ்செய் யானுமவ லன்.*

தெளிவுரை: மிக வெள்ளையனும் குற்றமுடையவன். மிகக் கரியவனும் குற்றமுடையவன். மிகச் சிவந்தவனும் குற்றமுடையவன்.

*10) கஞ்சன் குணிகூனன் காணனிரு கண்ணுமிலா*
*னெஞ்சினன்கை யாதியுருப் பின்.*

தெளிவுரை: முடவனுங் குற்றமுடையவன், சொத்திக்கை உள்ளவனும் குற்றமுடையவன். கூனனுங் குற்றமுடையவன். ஒருகண் குருடனுங் குற்றமுடையவன். இருகண் குருடனுங் குற்றமுடையவன். கை முதலிய அவயங்களிலே குறைந்தவனும் குற்றமுடையவன்.

*11) காக்கைக் கணன்குழிந்த கண்ணனிழி கண்ணனிடர்*
*நோக்கியுயிர்க் காக்குமவ னும்.*

தெளிவுரை: காகத்தைப் போலும் ஒருகட் பார்வை யுடைவனும் குற்றமுடையவன், ஆழிய கண்ணை உடையவனும் குற்றமுடையவன். எப்பொழுதும் பீளை நீர் ஒழுகும் கண்ணை உடையவனும் குற்றமுடையவன். சமயம் பார்த்து ஆன்மாக்களுக்குத் துன்பத்தைச் செய்வோனும் குற்றமுடையவன்.

*12) பரிய்வுத டன்பரிய பல்லன் பரந்து*
*முருவழிந்த மூக்குடையா னும்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: பெரிய உதட்டை உடையவனும் குற்றமுடையவன். பெரிய பல்லை உடையவனும் குற்றமுடையவன். சப்பையாகிய வடிவு குன்றிய மூக்குடையவனும் குற்றமுடையவன்.

*13 ) முழந்தாள் குறியநெடுந் தாளினான் மோட*
*னழுந்தியற நீண்டவடி யான்.*

தெளிவுரை: முழந்தாள் மிகக் குறுகியவனும் குற்றமுடையவன். முழந்தாள் மிக நெடியவனும் குற்றமுடையவன். புருடாகிருதிக்குச் சொல்லப்பட்ட அளவுகளில் உயர்ந்தவனும் குற்றமுடையவன். பாதம் பஞ்சு போலாகாது கடினமாய் நீண்டு முறம் போற் படம் விரியப் பெற்றவனுங் குற்றமுடையவன்.

*14) பெரிய வயிறன் பிணிகொள் வயிற*
*னெரிகுரலன் விக்கலன்சொ னீத்து.*

தெளிவுரை: பெரிய வயிற்றை உடையவனும் குற்றமுடையவன். மகோதர வியாதி உடையவனும் குற்றமுடையவன். நெரி குரலோடு பேசுபவனும் குற்றமுடையவன். சொற்களைச் செப்பமாகச் சொல்லாது திக்கிச் சொல்கின்றவனும் குற்றமுடையவன்.

*15) நீங்காத வாதநோய் பித்தநோய் நெஞ்சத்தி*
*னாங்காச நோயுமுடை யான்.*

தெளிவுரை: தீராத வாத நோயை உடையவனும், தீராத பித்த நோயை உடையவனும், நெஞ்சிலே உண்டாகின்ற காச நோயை உடையவனும் குற்றமுடையவன்.

*16) அறவுந் தருண னறவும் விருத்த*
*னறவுமழ கற்றா னவன்.*

தெளிவுரை: பதினாறு வயதுக்குட்பட்டவனாகிய தருணனும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குற்றமுடையவன். எழுபது வயதுக்கு மேற்பட்டவனாகிய விருத்தனும் குற்றமுடையவன். மிக அழகில்லாதவனும் குற்றமுடையவன்.

*17) கோவி யவாவ னிரங்காக் குணக்கேடன்*
*பாவியமல் லாததுரைப் பான்.*

தெளிவுரை: மிகுந்த கோபத்தை உடையவனும் குற்றமுடையவன். மிகுந்த ஆசையை உடையவனும் குற்றமுடையவன். ஆன்மாக்களின் இடத்தில் இரங்காத துர்குணம் கொண்டவனும் குற்றமுடையவன். சொல்வதற்கு அருகமல்லாத வார்த்தையைச் சொல்பவனும் குற்றமுடையவன்.

*18) மடிவஞ் சனையன் மறவீ பசுநூற்*
*படிறனுரைக் கும்பயன்பற் றான்.*

தெளிவுரை: மிகச் சோம்பல் உடையவனும் குற்றமுடையவன். கபடத்தை உடையவனும் குற்றமுடையவன். ஆசாரியனிடத்திலேதான் கேட்ட நூற்பொருளைச் சிந்தித்து அறியாமல் அதனை உடனே மறந்துவிடுவோனும் குற்றமுடையவன். எப்பொழுதும் பதி நூல்களையே படியாமல் பசு நூல்களை படிப்பவனும் குற்றமுடையவன். தனக்கு தன் ஆசாரியன் போதித்த படி தான் தன் மாணாக்கர்களுக்குப் போதிக்கும் சக்தி பொருந்தாதவனும் குற்றமுடையவன்.

*19) என்றே யிசைத்த விவைமுதலா கும்பழுது*
*னொன்றுமிலா ருத்தமரென் றோர்.*

தெளிவுரை: இப்படிச் சொல்லப்பட்ட இவை முதலாகிய குற்றங்களுள் ஒரு குற்றமும் இல்லாதவர்களே ஆச்சாரியார் ஆவதற்கு உத்தமர்கள் என்று அறிக.

இந்த குற்றமுடையோர்கள் தீக்ஷை, பிரதிட்டைகள் செய்தால் சிவ சாந்நித்யயம் ஆகாதென்று சிவாகமங்கள் கூறுவதால் ஆச்சாரியாகார்கள் என்று விடுக. இந்த இலக்கணங்கள் மூர்த்தி பர்க்குமொக்கும் மூர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பராவார் பிரதிட்டாதிகளிலே ஆசாரியரோடு கூடியிருந்து ஓமசாந்தி முதலிய கர்மங்களை அவரது கட்டளையினால் செய்வோர்.

**ஆசாரியர்கட்குரிய விசேடவிலக்கணம் ஆறு திருக்குறளாற் குளகமாக உணர்த்துகின்றார்.**

***20) சமயமுத னான்குந் தரித்தா ரியனாற்
சமயநெறி தன்னையுமுன் சார்ந்து.***

தெளிவுரை: தன்னுடைய சந்தானத்திற்கு ஏற்ற ஆசாரியனால் சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்கின்ற நான்கையும் பெற்று முன்பே அதற்கதற்கு ஏற்ப ஆசாரங்களையும் அனுட்டானங்களையும் அனுஷ்டிக்க வேண்டும்.

***21) ஆரியன்பா லன்பாகி யாய்ந்தா கமமனைத்து
நேரியவே தாந்த நிலையும்.***

தெளிவுரை: தன்னுடைய ஆசாரியனிடத்திலே பக்தியுடையவனாகி சமஸ்த ஆகமங்களையும் சூக்ஷமமாகிய வேதாந்த நிலையையும் ஆராய்ந்து உணர்த்து.

வேதாந்தமென்றது வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிஷதம் ஆகும். மேலும் வேதாந்தமென்பது வேத சிரசென்றும் உபநிஷதம் என்றும் பிரபல சுருதி என்றும் சொல்வர். உபநிடதங்களை உற்று நோக்கி வியாசமுனிவர் இயற்றிய சூத்திரரூபமாகிய பிரமமீமாஞ்சையும் வேதாந்தமெனப்படும். அதன் மெய்பொருள் வேதசிவாகமம் இரண்டையும் நன்குணர்ந்த நீலகண்ட சிவாசாரியார் உரைத்து பாடியதால் இனிது விளங்கும். மற்றுள்ளோர் உரைத்த பாடியங்களும் அவர் வேதாந்தமெனப் பெயரிட்டு இயற்றிய பிரகரணங்களும் சிவாகமத்துக்கு மறுதலைப்பட்ட புறச்சமய நூற்பொருளை உடையனவாதலின், அவற்றை மெய்யென கொண்டு மயங்காதொழிக. வேதம் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமும், சிவகாமம் அதனை அங்ஙனமாகவே ஒட்டாது தெளித்துரைக்கும் பாடியமும் போலச் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன. வேத சிவாகமங்கட்குப் பேதமின்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*" வேதமொ டாகம மெய்யா மிறைவனு*
*லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக*
*நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்*
*பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"*

என்னும் திருமந்திரத்தாலும் ஆகும். மேலும் வேதாந்தமென்பது வேதசிரசென்னும் உபநிஷதம் வேத வாகமங்கட்கு பேதங்காண்கின்றிலம் வேதமே சிவாகமம்; என நீலகண்டபாடியத்தில் நீலகண்ட சிவாச்சாரியார் கூறியவாற்றுனு முணர்க. சமயங்கள் புறப்புறசமயமும், புறச் சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமும் என நான்கு வகைப்படும். இன்னான்கும் தனித்தனி அறுவகைப்படும். இவற்றையெல்லாங் கடந்து நின்றது சித்தாந்த சைவம். இங்ஙனமேயாகவும், தற்காலத்துச் சைவ சமயிகள் பலர் புறச்சமயங்கள் ஆறனுள் ஒன்றாயுள்ள ஏகான்மவாதவகை நான்கனுள் ஒன்றாகிய மாயாவாதத்துக்குரிய ஆசாரியரை வேடம் ஒற்றுமைபற்றித் தம்மாசாரியரெனக் கொண்டு வழிபட்டொழுகியும், அம்மாயாவாத நூல்களைத் தன்சமய நூல்களெனக் கொண்டு பாராட்டியும், தன் சமய நிலையின் வழுவித்தாம் முன்னர்ப் பெற்ற சிவத்தீக்ஷையின் பயனையும் அநுட்டித்த சமயாசாரங்களின் பயனையும் இழந்து, எரிவாய் நிரயத்துக்கு இரையாகுகின்றனர்.

*22) தாசனாய் பூசை சமைக்கும் பொழுதமலற்*
*கேசறவுற் றற்றெனதி யான்.*

தெளிவுரை: சிவார்ச்சனை முதலிய கிரியைகளைச் செய்யும்போது சிவபெருமானை ஆண்டவனாகவும் தன்னை அடிமையாகவும் பாவித்து அநாதிமல முத்தராகிய அந்தச்சிவ பெருமானிடத்தே அன்பு வைத்து தனதல்லாத புவன போகங்களை எனதென்னும் மமகாரமும் தானல்லாத தனுகரணங்களை யானென்னும் அகங்காரமுமாகிய இவ்விரண்டையும் நீங்கி.

*23) அமலனைத்த னுட்கண் டகம்பிரம மென்றே*
*சமலர்க்குப் பாசந் தடுத்து.*

தெளிவுரை: தீக்ஷை செய்யும்போது மலரகிதராகிய. சிவபெருமானைத் தன்னுள்ளே தரிசித்து சிவோகம் பாவனை பண்ணி மலசகிதராகி ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*24) சாம்பவியாற் சத்தியான் மாந்திரியாற் சத்திபதிந் தாம்பயத்தின் பேதமா ராய்ந்து*

தெளிவுரை: பாசநீக்குமிடத்து அந்த அந்த ஆன்ட மாக்களது சத்தி நிபாதங்களால் விளையுங் குறிகளின் பேதங்களை ஆராய்ந்தறிந்து அவற்றிற்கேற்ப சாம்பவி தீக்ஷை யாலேனும் சத்தி தீக்ஷையாலேனும், மாத்திரி தீக்ஷையாலேனும் இருவினை யொப்பும் ஆணவமலசக்தி பதிந்து மாவினது நித்திய ஞானக்கிரியை விளக்குவதாம். நிபாதம்பதிதல் சக்திநிபாதங்கள் நான்கு. அவையாவன மந்ததரம் தீவிரம், தீவிரதரம் என்பனவாம். நன்றக முற்றிய காய்சேர்ந்த ஔஷதமேயன்றிப் பிஞ்சு கட்டிய ஔஷதம் பலியாதவாறு போலச் சக்திநிபாதமுள்ளார்க்குச் செய்த தீக்ஷையேன்றி அஃதிலார்க்குச் செய்த தீக்ஷை பலங்கொடாதென உணர்க.

*25) வீட்டிமல மூன்றுமுயி ருள்விமலன் பொற்பாதங் காட்டுமவன் றேசிகனே காண்.*

தெளிவுரை: மும்மலங்களையும் போக்கி அவ்வான்மாக்களுள் உள்ளே சிவபெருமானுடைய பொலிவாகிய திருவடிகளைத் தரிசிப்பவனே ஆசாரியன் என்று அறியவும்.

**மேற்கூறப்பட்ட தீக்ஷைகளுள்ளே சத்தி தீக்ஷையுஞ் சாம்பவி தீக்ஷையுமா மாறுணர்த்துகின்றார்.**

*26) சத்திமனத் தாற்புரிகை சாம்பவிஞா னக்கணினாற் சுத்திசெய லென்றே துணி.*

தெளிவுரை: மேற்கூறிப்போந்த மூவகைத் தீக்ஷைக ளுள்ளும் சத்தி தீக்ஷையாவது குண்டம், மண்டலம், அக்னி, நெய், சுருக்குச் சூருவம் முதலியவனெல்லாம் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது பாசத்தை கெடுத்தலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாம்பவி தீக்ஷையாவது திருநோக்கு முதலியவற்றால் மாணாக்கனது பாசத்தை சேதிக்கையாம்.

சத்தியெனினும் ஞானவதியெனினும் ஒக்கும். சாம்பவிதீக்ஷையெனினும் விஞ்ஞானதீக்ஷையெனினும் மொக்கும்.

**மாந்திரி தீக்ஷையாமாறுணர்த்துகின்றார்.**

***27) மாந்திரிதான் குண்டத்தான் மண்டலத்தினான்***
***மலத்தை தேய்ந்திடவே செய்யுஞ் செயல்.***

தெளிவுரை: மாந்திரி தீக்ஷையாவது குண்டமண்டலங்களைப் புறத்தேயிட்டு விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது மலத்தைக் குன்றும்படி செய்யும் தீக்ஷையாகும்.

மாந்திரியெனினும் கிரியாவதியெனினும் ஒக்கும். ஞானவதி கிரியாவதியென்னும் இரண்டும் ஒளத்திரி தீக்ஷையெனப்படும். ஒளத்திரியாவது ஓமத்தோடு கூடச் செய்வது.

**ஆசாரியர் வகையும் பெயருமுணர்த்துன்கிறார்.**

***28) முந்திப் பிரேரிப்பான் போதிப்பான் முத்திதனென்***
***றிந்தவிதத் தார்தே சிகர்.***

தெளிவுரை: ஆசாரியர் பிரேரகாசாரியனும் போதகாசாரியனும் முத்திதாசாரியனுமென இம்மூவகையினர்.
முந்திப் பிரேரிப்பான் முற்பட்டுச் செலுத்துவான். பிரேரகனெனினுஞ் சோதகனெனினும் இழுக்காதென்க.

**மேனிறுத்த முறையானே பிரேரகாசாரியனிவ என்பது உணர்த்துகின்றார்.**

***29) சைவரைச் சாரவருட் டக்கா னிவனென்றே***
***யுய்விப்பான் முந்தினனென் றோர்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அம்மூவகை ஆசாரியர்களுள்ளும் முற்பட்ட பிரேரகாசாரியனாவான். சைவத்துக்கு யோக்கியர்களாகிய மாணாக்கர்களை உமக்கு அருள் செய்தற்கு யோக்கியராகிய ஆசாரியரிவரென்று காட்டி அவரை அடையும்படி செலுத்தி உய்விப்பவனே என்று அறி.

யோக்கியனல்லாத ஆசாரியனை மோஹத்தால் யோக்கியன் என்று காட்டினோன் நரகம் அடைவான் என்று ஆகமம் கூறுகிறது.

**போதகாசாரியனிவன் என்பது உணர்த்துகின்றார்.**

*30) பரிந்தடைந்தா னைத்தீக்கை பண்ணி நியதி*
*புரிந்தருளு வான்போ தகன்.*

தெளிவுரை: போதகாசாரியனாவான் தன்மேல் அன்பு கொண்டு தன்னை அடைந்த மாணாக்கனுக்குச் சமய தீக்ஷை விசேஷதீக்ஷைகளைச் செய்து ஆசாரங்களைக் கற்பித்து அருளுவார்.

**முத்திதாசாரியனிவன் என்பது உணர்த்துகின்றார்.**

*31) அடைந்தவனைப் பக்குவம்பார்த் தாண்டா றிரண்டுட்*
*டடிந்தவனே பாசமுத்தி தன்.*

தெளிவுரை: முத்திதாசாரியனாவான் (அடைந்தவனை பன்னிரண்டு ஆண்டுகள் பக்குவம் பார்த்துத் தடிந்தவனே) முந்திய சமயதீக்ஷைகளைப் பெற்ற மாணாக்கனைப் பன்னிரண்டு வருஷத்துக்குள்ளே பக்குவப் பரீக்ஷித்து நிர்வாண தீக்ஷை செய்து அவனுடைய பாசத்தைப் போக்குபவன். பாசமுத்திதன் பாசநீக்கத்தைக் கொடுப்பவ்ன். முத்தி விடுதல், தன் கொடுப்பவன்.

**இன்னவருணத்தார்க்கு இன்னவருணத்தாரே. ஆசாரியாரா கலாமென்பது இரண்டுதிருக்குறளால் உணர்த்துகின்றார்.**

*32) அந்தணரே யந்தணர்க்குத் தேசிகரா வாரொழிந்தார்*
*தந்தொகைக்கு மந்தணரே தாம்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: பிராமணர்க்குப் பிராமணரே ஆசாரியராவார். அந்த பிராமணர் மற்றை அரசர் வைசியர் சூத்திரருக்கும் ஆசாரியராவார்.

தேசிகராவார் என்பது பின்னுங் கூட்டப்பட்டது.

***33) மன்னரொரு மூவர்க் கிருவர்க்கே வாழ்வசியர்***
***பின்னவராற் பிந்தினர்க்கே பேறு.***

தெளிவுரை: அரசர், தன் சாதியினரும், தம்மின் இழந்த வைசியர், சூத்திரர் இருவருமாகிய மூவர்க்கே ஆசாரியராவார். வாழா நின்ற வைசியர் தன் சாதியினரும் தம்மின் இழந்தசூத்திரர் ஒருவருமாகிய இருவர்க்கே ஆசாரியராவார். சூத்திரர் சூத்திரர்க்கே தீஷா பலமுண்டாம்.

மேற்கூறிய திருக்குறளில் வந்த தேசிகராவாரென்பது இங்குமிரண்டிடத்திற் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

**ஞானகாண்டத்திற்கு மேலெய்யதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றார்.**

***34) அற்றிடினே யந்தணருன் ஞானி யடுத்தவன்பாற்***
***பெற்றிடுக வந்தணன்மெய்ப் பேறு.***

தெளிவுரை: பிராமணன் ஆனவன் தன் சாதியாராகிய பிராமணருள் ஞானகாண்டம் போதிக்கவல்ல ஆசாரியானில்லை யாயின் தனக்கடுத்த அரசனிடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவன்.

**இவ்விதி கருமகாண்டத்திற்கு எய்தாது என்பதை மேலும் வற்புறுத்துகின்றார்.**

***35) பிரமோப தேசம் பெறுதலே பாங்கு***
***கருமோப தேசங் கழி.***

தெளிவுரை: முற்கூறியபடி ஞானோபதேசமாத்திரம் பெறுதலே முறைமை, கருமோபதேசம் ஒருக்காலும் பெறாதொழி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**இவ்விதி மற்ற வருணத்தாருக்குமொக்குமென்பது உணர்த்துகின்றார்.**

***36) இந்தமுறை மற்றையார்க்கு மேற்கு மிதுதன்னை நிந்தையல வென்றே நினை.***

தெளிவுரை: இப்படித் தன் வருணத்தின் ஞானாசாரிய னில்லையாயில் தனக்கடுத்த வருணத்தானிடத்திலே ஞானோபதேசம் பெறலாம் என விதித்தவிதி பிராமணருக்கேயன்றி மற்றை வருணத்தார்க்கும் பொருந்தும். இவ்விதியினை இகழ்ச்சி அல்ல என்று நினைத்துக் கொள்.

பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருள்ளும் ஞானாசாரியனில்லாது நான்காம் வருணத்தாராகிய சூத்திரருள் ஞானாசாரியனுண்டாயின் அவ்வாச்சாரியனிடத்தே பிராமணர் முதலாயினோர் ஞானோபதேசம் பெறலாம். வைதிகத்திலே பிரம விருடிகளாகிய துர்வாசர் முதலாயினோர் பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருள்ளும் ஞானாசாரியன் இல்லாமையால் நான்காம் வருணத்தானாகிய விதுரனிடத்தில் ஞானோபதேசம் பெற்றார்களென்று பாரத பாகவதங்களில் கூறப்படுகையாலும் சைவத்திலே திருத்துறையூரிலிருந்த ஆதிசைவராகிய சகலாகம பண்டிதர் என்னும் ஏதுப்பெயரையுடைய அருணந்தி சிவாசாரியார் திருவெண்ணைநல்லூரிலிருந்து அருளிய நான்காம் வருணத்தாராகிய மெய்கண்ட தேவரிடத்திலே ஞானோபதேசம் பெறக்காண்கையாலு மென்றறிக.

**சூத்திர ஆசாரியனுக்கு சிறப்புவிதி உணர்த்துகின்றார்.**

***37) சூத்திரனும் தேசிகனா வான்மரூணாந் தந்துறவி சாத்திரத்தின் மூன்றுமுணர்ந் தால்.***

தெளிவுரை: சூத்திரனும் நைஷ்டிக பிரமசாரியாகி சைவாகமங்களில் சொல்லப்பட்ட பசு, பதி, பாசமென்கின்ற த்ரிபதார்த்த லக்ஷணங்களையும் உள்ளபடி அறிந்தான் ஆகில் தேசிகனாவான். சூத்திரனும் என்றவும்மை இறந்து தழீ நின்றது. சூத்திரருள் நைட்டிக பிரமசாரிகட்கே குருத்துவம், கிருகத்தர்களுக்குச் சமயி புத்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதகத்துவமாத்திரங் குருத்துவமில்லையென்று காமிகாகத்தில் கூறுதல் பற்றி இவ்வாறுஉரைத்துள்ளார். சூத்திரர்களுள் கிருகத்தருக்கும் குருத்துவ முண்டென்று வேறுசில சிவாகமங்களில் விதிக்கப்பட்டது. முன்னை விதி நைட்டிகபிரமசரியம் வழுவாது அனுட்டிப்போர் பலருளராகப் பெற்ற முன்னையுகங்களிலும், பின்னை விதி நைட்டிகபிரமசரியம் வழுவாது அனுட்டிப்போர் மிக அரியராகப்பெற்ற இக்கலியுகத்திலும் கொள்ளற்பாலெனவாதலின், விரோதமின்மை தெளிக. நைட்டிகபிரமசரியத்தில் சிறிதாயினும் வழுவிய ஆசாரியரைக் கொண்டு தீக்ஷை பூசை முதலியவை செய்து கொண்டவர். நரகத்தில் மூழ்குதல் தப்பாதென்பது சிவாகமத்துணிவு.

*ஏந்திழையார் தன்சயனத் தெய்தித்தன் மெய்தொடினுங்*
*காய்ந்துவர்த்த லேதுறவு காண்.*

என்னுந் திருக்குறளை நோக்காது பாவத்துக்கஞ்சாது பழிக்கு நாணாது துறவு வேடம் மாத்திரந் தரித்துக் கூடாவொழுக்கம் பூண்டு வேண்டியவாறொழுகும் அநாசாரியாரை ஆசாரியார் எனக் கொள்ளலும், பிறர் மனைவியரையும், வரைவின் மகளிரையும் விரும்பாது பழிபாவங்களைப் பயவாத இல்வாழ்க்கையிலொழுகும் ஆசாரியாரை அநாசாரியரெனத் தள்ளலும் உய்தியில் குற்றமாமென்க.

**முதல் மூன்று வருணத்தாருமோதுதற்குரிய நூல்கள் இவைகள் என்பது உணர்த்துகின்றார்.**

***38) அந்தணர்முன் மூவர்க்கு மாமறையு மாகமுஞ்***
***சந்தையுற வோதுமது சால்பு.***

தெளிவுரை: பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருக்கும் பெருமையாகிய வேதங்களையும் சிவாகமங் களையும் சந்தை இரட்டை முதலாகிய இலக்கணங்கள் பொருந்த ஓதுதல் தகுதியாம்.

**நான்காம் வருணத்தாரோதுதற்குரிய நூல்கள் இவைகள் என்பது**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**உணர்த்துகின்றார்.**

***39) மற்றையவர் சைவாக மத்தை மதித்துணர்வா***
***ருற்றபுரா ணாதிவித மும்.***

தெளிவுரை: நான்காம் வருணத்தாராகிய சூத்திரர் சைவாகமத்தையும் அதன்பால் பொருந்திய பதினெண் புராணம் முதலிய நூல்களையும் ஓதி அவற்றின் பொருளை சிந்தித்தற்கு உரியவர்கள்.

எனவே சூத்திரர் வேதமோதுதற்கு அதிகாரிகளல்லர் என்பது பெறப்பெற்றது. வேத வாக்கியங்களின் அருத்தங்களை ஓதல் வேண்டின் நான்கு வருணத்தாருஞ் சிவதீக்ஷை பெற்றே ஓதல் வேண்டும். பெறாதோதின் அரசருக்கும் உலகத்திற்கும் தீங்கு வருமென்று சிவாகமங்கள் செப்புகின்றன.

சிவதீக்ஷை பெற்றே சிவாகமங்களையோதல் வேண்டும் என்பதற்கு பிரமாணம் சுப்பிரபேதம்

*ஶ்ரீத்த சைவமிதம் தந்த்ரம் நதேயம் நப்ரகாசயேது/*
*தீக்ஷிதஸ்யது தீரஸ்ய ஸிவ பக்தி பரஸ்யச/*
*ஶ்ரீவணீயம் நசாந்யத்ர கதநம் ஹி ப்ரஸஸ்யதே//*

இந்த சுத்த சைவாகமம் எல்லாருக்குங் கொடுக்கத்தக்கது மன்று. தீக்ஷை பெற்றவனாய், நிலையுடையோனாய்ச் சிவபக்திமானாயிருப்பவனுக்கே விளக்கத்தக்கது. ஏனையோருக்கு விளக்கல் குற்றமெனப்படும்.

**வேதாகமங்களின் கருத்து இன்னதென்பது உணர்த்துகின்றார்.**

***40) வேதமுத னூல்கள் பதிபசுபா சம்விளங்க***
***வோதியுணர்த் துஞ்சிற் றுயிர்க்கு.***

தெளிவுரை: வேதசிவாகமங்களானவை சிற்றுயிர்க்குப் பதி, பசு, பாசம் விளங்க ஓதி உணர்த்தும். (சிற்றுயிர்கள்: சிறிது நாள் வாழ்வையுடைய ஆன்மாக்கள்) வேதத்தின் ஞானகாண்டம் சிவாகமத்தின் ஞானகாண்டம் என்னுமிரண்டும் திரிபதார்த்த லக்ஷணங்களையே கூறுவனவாயினும். வேதத்தின் ஞானகாண்டம் மாயாவாதிகள் முதலிய பலர்க்கும் அவரவர்க்கு கன்மாநுகுணமாக பல பொருள்பட கிடத்தலானும், சிவாகமத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானகாண்டம் அவ்வாறாகாது. சத்திநிபாதமுடையார்க்கு உண்மைப் பொருளை தெளித்துணர்த்தலானும், நிருவாண தீக்ஷை செய்யப்பெற்று சிவாகமத்தை ஓதியுணர்ந்தார்க்கன்றி வேதாந்தத்துண்மைப்பொருள் ஒருவாற்றானும் விளங்குதல் கூடாமையானும், சிவாகம மிருபத்தெட்டும் சிவபெருமானுடைய ஊர்த்துவ முகத்தில் தோன்றினமையானும் சிவாகமமே சிறப்புடைத்தென்றறிக. சனகர் முதலிய முனீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரை ஓதியும் ஞானம் நிலை பெறாதவராயினர் என்றும் பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சைவசித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனர் என்றும் ஸ்காந்தத்திலே சங்கர சம்ஹிதையில் கூறியவாற்றானும் இவ்வுண்மை தெளிக.

**திரிபதார்த்த ஞானமுடையாரே ஆசாரியரென்பது முணர்த்துகின்றார்.**

***41) ஐயந் திரிபுமற வாய்ந்தார் பொருண்மூன்றுஞ்***
***சைவரம லன்சொற் றறிந்து.***

தெளிவுரை: அநாதி மல முத்தராகிய சதாசிவ மூர்த்தியுடைய வாக்காகிய வேதாகமங்களை குருமுகமாகக் கேட்டு மனசிலே தரித்து அவைகளிலே சொல்லப்பட்ட திரிபதார்த்தங்களையும் சந்தேக விபரிதமறும்படி ஆராய்ந் தறிந்தவர்களே சைவாசாரியர்களாவர்.
சந்தேகமாவது. ஒரு பொருளை இதுவோ அதுவோ என இரட்டுறக் கருதுதல்.
விபரீதமாவது. ஒன்றை மற்றொன்றாக திரித்துணர்தல்.

**அவயவ தோஷமுடையாராயினும் திரிபதார்த்த ஞானமுடையாரே ஆசாரியரென வற்புறுத்திக் கூறுகின்றார்.**

***42) அற்றிடினு மாக்கைக் குறிகள் பொருண்மூன்றுங்***
***கற்றுணர்ந்தான் றேசிகனே காண்.***

தெளிவுரை: அவயவ இலக்கணங்கள் இல்லை யாயினும் திரிபதார்த்தங்களையும் படித்து உள்ளபடியறிந்தவனே ஆசாரியானென்று அறி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**எல்லா இலக்கணமும் உள்ளோன் ஆயினும் சிவஞான மில்லாதோன் ஆசாரியனாகானென கூறுகின்றார்.**

***43) குறியுங் குணமு முறினு மமல***
***வறிவிலன்றான் றேசிகனோ வன்று.***

தெளிவுரை: நற்குறிகளும் நற்குணங்களும் அமைந்திருப்பினும் சிவஞானமில்லாதவன் ஆசாரியனாவானோ? ஆகான்.

**நான்கு வருணத்தாரல்லார்க்கு மேலைத் திருக்குறளில் எய்தியது விளக்குகின்றார்.**

***44) ஆசறினு மாகத்து மந்நால் வரையல்லார்***
***தேசிகரோ வல்லரெனத் தேறு.***

தெளிவுரை: அந்நான்கு வருணத்தா ரல்லாதார் சரீரத்திலும் மனத்திலும் குற்றமிருப்பினும் ஆசாரியர் ஆவாரோ ஆகார் எனத் தேறு. (அறி)

ஆகத்தும் என்றவும்மையால் மனத்துமென்பது கொள்ளப்பட்டது. மோகத்தால் இழிந்த சாதியாருக்கு நிருவாண தீக்ஷை, சாதகாபிஷேகம், ஆசாரியாபிஷேகம் என்னுமிவைகள் செய்தானும், செய்யப்பெற்றானும், அவனிடத்தே தீக்ஷை பெற்றானும் அரசனுக்கும் உலகுக்குந் தீங்கு விளைவித்து நரகத்தி லாழ்வரென்று சிவாகமம் செப்புமென்றறிக.

**ஆசாரியர்களுக்குரிய முத்திரைகள் இத்துணையவ தென்பதும் அவையிவை என்பதும் இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***45) தேசிகர்க்குச் சின்னமுமைந் துண்டு திருநீறொன்***
***றாசரிக்குங் கண்டியுமொன் றாம்.***

தெளிவுரை: ஆசாரியர்களுக்கு பஞ்ச முத்திரை களுண்டு. விபூதி ஒரு முத்திரை. ஆசரிக்கப்படுகின்ற ருத்ராக்ஷ மாலையும் ஒரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்திரையாம். கண்டிகை என்பது கண்டியெனக் கடைக்குறைந்து நின்றது.

*46) உரித்துப வீதமு முத்தரியந் தானு*
*முரித்துட்டி ணீடந்தா னும்.*

தெளிவுரை: பூணூலும் ஒரு முத்திரையாதற் குரியது. உத்தர்யமும் ஒரு முத்திரையாதற்குரியது. உஷ்ணீஷமும் ஒரு முத்திரையாம்.

உஷ்ணீஷம்: தலைசீலை. உத்தரீயமென்பது உத்தரியமென குறுக்கல் விகாரம் பெற்று நின்றது.

**சூத்திராசாரியருக்கு உரியனவல்லாத முத்திரையுணர்த்து கின்றார்.**

*47) உரித்தல்ல சூத்திரருக் குத்தரிய மென்று*
*முரித்துட்டி ணீடந்தா னும்.*

தெளிவுரை: உத்திரியம் சூத்திரருக்கு என்றும் உரித்தல்ல. மேற்கூறப்பட்ட பஞ்ச முத்திரைகளுள் உத்தரீயஞ் சூத்திராசாரியருக்கு எக்காலத்தும் உரியதன்று. உஷ்ணீஷமும் அவர்களுக்குரியதன்று.

**உபவீதவிலக்கணம் மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

*48) அந்தண ராதிகுலக் கன்னிகைநூற் கும்பருத்தித்*
*தந்துமும்மூன் றாகச் சமை.*

தெளிவுரை: பிராமணர் முதலிய சாதியில் தோன்றிய கன்னியரால் நூற்கப்பட்ட பருத்தி நூலினால் ஒன்பது இழை கொண்டதாக முறுக்கு.

முறுக்கும் விதிஎப்படியெனில், கிழக்கு முகமாகவிருந்து வலக்கையிலே நான்கு அங்குலப் பிரமாணத்திலே தொன்னூற்று ஆறு இழை சுற்றி, இன்னும் அப்படி இரண்டு தரம் சுற்றி, அந்த மூன்று இழையையும் சேர்த்து மேன்முறுக்காக முறுக்கி ஒன்றாக்கி அதனை மூன்றாக மடித்துக் கீழ்முறுக்காக முறுக்கி ஒரு புரியாக்குதலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***49) அந்தநூ‌ரன் மூன்றினையொன் றாக்கிடுக வந்தணர்தா மிந்தநூல் பூண்டிடுக வேழு.***

தெளிவுரை: அப்படி முறுக்கப்பட்ட நூலை மூன்றாக்கி நடுவே பிரம்மக்கிரந்தியென்னும் முடிச்சிட்டு ஓர் பூணூலாக்கு. பிராமணர் இப்படி ஏழுபூணூல் தரிக்கக் கடவர்.

**பூணூல் தரிப்பதற்கு மந்திர முணர்த்துகின்றார்.**

***50) மன்னர்க்கு மூன்றருக மாம்வசிய ருக்கிரண்டா மன்னியருக் கேகமரு கம்.***

தெளிவுரை: அரசர்க்கு மூன்று பூணூல் தரிப்பது தகுதியாம். வைசியருக்கு இரண்டு பூணூல் தகுதியாம். சூத்திரர்க்கு ஒரு பூணூல் தரிப்பது தகுதியாம்.

**பூணூல் தரிப்பதற்கு மந்திரமுணர்த்துகின்றார்.**

***51) பூசுர ராதிபுரு டாதியாற் பூண்கவுரத் தாசறுமே புத்திமுத்தி யாம்.***

தெளிவுரை: பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்கின்ற நான்கு வருணத்தாரும் முறையே தத்புருஷம், அகோரம் வாமதேவம் சத்தியோஜாதம் என்கின்ற நான்கு மந்திரங்களினாலும் பூணூலை மார்பிலே தரிக்கக் கடவர். இப்படி தரிக்கில் அவர்களிடத்தில் உள்ள குற்றங்கள் நீங்கும். போகம், மோக்ஷம் என்னும் இரண்டும் கிடைக்கும்.

**சூத்திரருட்கிருகத்தர் பூணூல் தரித்தற்குறிய காலம் வரையறுத் துணர்த்துகின்றார்.**

***52) தர்பணத்தி லர்ச்சனையி லாகுதியி லுந்தரிக்க விற்பயிலுஞ் சூத்திரரிந் நூல்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இல்லறத்திலொழுகின்ற சூத்திரர் தர்ப்பண காலத்திலும், பூசாகாலத்திலும் அக்கினி காரியத்திலும் இப்பூணூலைத் தரிக்கக்கடவர். உம்மையால் தீக்ஷாகாலம் உற்சவகால முதலியனவுங்கொள்க,

**சூத்திரருள் எக்காலத்தும் பூணுல் தரித்தற்குறியார் இவரென்பதுணர்த்துகின்றார்.**

***53) இவரு ணயிட்டிகனெப் போதுந் தரிக்க***
***வவனியிலு மாசையறுத் தால்.***

தெளிவுரை: இச்சூத்திரருள் நைட்டிக பிரமச்சாரி யானவன், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்கின்ற மூவகை ஆசைகளையும் நீக்கியிருப்பானாகில் எக்காலத்தும் பூணூல் தரிக்கக் கடவன்.

அவனியிலுமென்ற உம்மையால் பொன் பெண் என்பனவுங் கொள்ளப்பட்டன.

**ஆசாரியர்கட்குறிய கர்மங்கள் இவைகளென்பது உணர்த்துகின்றார்.**

***54) நித்தியமு நைமித் திக்கா மியமுமெனு***
***மித்திறம்பாங் காரியர்க்கென் றெண்.***

தெளிவுரை: நித்தியமும் நைமித்திகமும் காமியமும் என்கின்ற இம்மூவகை கர்மங்களும் ஆசாரியர்களுக்கு உரியென என்று அறிக. இம்மூன்றும் நித்தியம் நித்தியாங்கம் என்றும், நைமித்திகம், நைமித்திகாங்கம், காமியம் காமியாங்கம் என்றும் ஒவ்வொன்றும் இவ்விரண்டாய் அறுவகைப்படும்.

**நிறுத்த முறையானே நித்தியகர்மமுணர்த்துகின்றார்.**

***55) புனன்மூழ்கித் தர்ப்பித் தமலனடி பூசித்***
***தனலோம்ப லாதிநித்தி யம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: ஜலத்திலே ஸ்நானம் பண்ணித் தர்ப்பணம் செய்து சிவபெருமானுடைய திருவடிகளை தரிசித்து அக்கினிகாரியம் செய்வது முதலியன நித்திய கர்மங்களாகும்.

**நைமித்திககருமம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***56) பரமப் பிரதிட்டை தீக்கை பணலுங்***
***கருந்திடுங்கா னைமித்தி கம்.***

தெளிவுரை: மேலாகிய பிரதிட்டை தீக்ஷைகள் செய்தலும் ஆராயும்காலத்து நைமித்தக கர்மங்களாம். உம்மையால் சிவோற்சவம், சாந்தி, நவகலசஸ்நபனம், அஷ்டோத்தர சத கலசஸ்நபனம், சஹஸ்ரகலசஸ்நபனம் முதாலாயினவுங் கொள்க.

***57) உரைத்தமலன் வாக்கை யுளங்கொளக்கற் பார்க்கு***
***விரித்தலுநை மித்திகமா மே.***

தெளிவுரை: அநாதிமலமுத்தராகிய சதாசிவ மூர்த்தியுடைய வாக்காகிய திவ்விய ஆகமங்களை மனசிலே பொருந்தக் கற்றற்கு அதிகாரிகளாகிய நன்மாணாக்கர்களுக்கு சொல்லி அவற்றின் பொருளை விரித்துரைத்தலும் நைமித்திககர்மமாம்.

**நிறுத்தமுறையானே காமியகர்மமுணர்த்துகின்றார்.**

***58) சித்தியினை வேண்டியருச் சிக்கை செபம்பணலென்***
***றொத்தவிதங் காமியமென் றோர்.***

தெளிவுரை: சித்தபேதங்களை விரும்பி விஷேச தினங்களிலே விஷேசமாகச் சிவபூஜை செய்தலும் மந்திரங்களை செபம்பண்ணுதலுமென்று அவரவர் பிரீதிக்கிசைந்த இவ்விதமாகிய கர்மங்கள் காமியகர்மங்கள் என்று அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**நால்வகையாச்சிரமிகளுள்ளும் ஆசாரியராதற்கு அதிகாரிகளல்லாத ஆச்சிரமிகளை யுணர்த்துகின்றார்.**

***59) சன்னியாசி பாரியுட னேவனத்திற் றங்குமவ னென்னுமிவர் தேசிகரன் றே.***

தெளிவுரை: சன்னியாசியும் மனைவியுடனே வனத்திலே தங்குகின்றவனாகிய வானப்பிரத்தனுமென்னும் இவ்விருவரும் ஆசாரியராகார்.

சன்னியாசிகள் தபசுவியெனவும் விவிதீஷீ எனவும் வித்துவானெனவும், மூவகையர். வனத்திலே தனித்து மரத்தினிழலே தானிருக்குமிடமாய் கொண்டவனாய் மாணாக்கர்களைத் தேடி அவர்களுக்கு நூல்களைக் கற்பித்தும் தண்டு கமண்டலம் தரிப்பது மின்றி, மணல் முதலிய க்ஷணிகலிங்கத்தையே பூசைப் பண்ணிக்கொண்டு, பாணியே பாத்திரமாக இரந்து பூசித்து, வேறொருவியாபாரமுமின்றி மௌனியாயிருப்பவன் தபசுவி என்னும் சந்நியாசி. வேதசிவாகமங்களை அத்தியயனம் பண்ணலும் பிறர்க்குப் பண்ணுவித்தலும் அவைகளைக்கேட்டலும் சிந்தித்தலும் ஆகிய இவைகளுடனே, மேற்கூறிய கிருத்தியங்களையு முடையவன் விவிதீஷி என்னும் சந்நியாசி ஆசாரியரால் அபிஷேகம் பெற்று மாணாக்கர்களுக்குச் சிவகாம வியாக்கியானம் பண்ணிக் கொண்டு அதனை எப்போதும் சிந்தித்திருத்தலோடு, மேற்கூறிய கிருத்தியங்களைமுடையவன் வித்துவானென்னுஞ் சந்நியாசி. வானப்பிரத்தர் இல்லை விட்டு மனைவியோடு வனத்திற்சென்று பொறிகளையடக்கிச் சிவபூசை அக்கினிகாரியம் குருபூசை யென்னுமிவைகளைச் செய்து கொண்டிருப்பவர், மனைவியோடு கூடாத வானப்பிரத்தருமுளர். மனைவியோடு கூடிய வானப்பிரத்தனுக்கு சபத்தினீகனென்றும். மனைவியோடு கூடாத வானப்பரத்தனுக்கு விபத்தினீகனென்றும் பெயர்.

நான்காம் வருணத்திற் சந்நியாசி யில்லையெனச் சிலர் கூறுவர். சிந்தியவிசுவசாதாக்கியத்திற் பிராமணர் முதற் பத்துச் சாதிக்கும் பிரமசாரியம் கிருஹஸ்தம். வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நான்கு ஆசிரமும் உண்டென விதித்தாலானும், இராமாயணத்திற் கிருதயுக முதலிய நான்கு யுகத்திலும் முறையே பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் தபோ முக்கியத்துவம் சாற்றலானும் பிரமாண்ட புராணத்திற் கிருத யுகத்துக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிராமண சந்நியாசி முக்கியன். திரேதாயுகத்துக்கு க்ஷத்திரிய சந்நியாசி முக்கியன். துவாபரயுகத்துக்கு வைசிய சந்நியாசி முக்கியன். கலியுகத்துக்கு சூத்திரசந்நியாசி முக்கியன் எனப்பகர்தலானும் அவர் கூற்றுப் பொருந்தாதென மறுக்க.

**ஆசாரியராதற்கு அதிகாரிகளாகிய ஆச்சிரமிங்களை யுணர்த்துகின்றார்.**

***60) பிரம சரிகிருகி யென்னவே பேசு***
***மிருவருமே தேசிகரென் றெண்.***

தெளிவுரை: பிரமச்சாரியும் கிருகத்தனும் என்று சொல்லப்படும் இவ்விருவருமே ஆசாரியராதற்குறியரென்று நினை. பிரமசாரிகள் பௌதிகப் பிரமசாரியெனவும் நைட்டிக பிரமச்சாரியெனவும் இருவகையர். பாலியவயது தொடுத்துக் கன்னிகாகல்யாணகாலம் வரையும் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன் பௌதிகப்பிரமசாரி. மரணாந்தம் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன் நைட்டிகப்பிரமசாரி. கிருகத்தர் சாதகன் உதாசீனன் எனவிருவகையர்.

**மேற்கூறிப்போந்த இருவகையாசாரியருள் இன்னான் இன்னது கொடுப்பானென்பது உணர்த்துகின்றார்.**

***61) முத்தி கொடுப்பான் முனிபுத்தி முத்தியும்***
***பத்தியினில் வாழும் பதி.***

தெளிவுரை: பிரமசாரியாகிய ஆசாரியன் தன்னையடைந்த மாணாக்கர்களுக்கு முத்தியொன்றே கொடுத்தற்குரியன். பக்தியுடன் கிருகத்தில் வாழும் ஆசாரியன் புத்தி முத்தி இரண்டையும் கொடுத்தற்குறியன்.

**நான்குவருணத்தாருக்குந் செய்யப்படுந்தீக்ஷை இதுவென்பது உணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***62) குண்டத்தான் மண்டலத்தா னுங்கொடுக்க தீக்கையினை யெண்டிகழு நால்வருக்கு மே.***

தெளிவுரை:. மேற்கூறப்பட்ட இருவகையாசாரியரும் நன்கு மதிக்கப்படுகின்ற பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கு மாத்திரமே விதிப்படி குண்டத்தாலும் மண்டலத்தாலும் இயற்றப்படுவதாகிய ஔத்திரிதீக்ஷையை செய்யக்கடவர்.

ஞானவதியென்றும் கிரியாவதியென்றும் இருவகைப்பட்ட ஔத்திரி தீக்ஷைதான் இன்னும் நிர்ப்பீசதீக்ஷை சபீசதீக்ஷையென வெவ்வேறிரு வகைப்படும்.

அவற்றுள் நிர்ப்பீசதீக்ஷையாவது மலபரிபாக முடையராயவழியும் தீக்ஷைக்குப்பின் ஒருதலையான் வழுவின்றி அநுட்டிக்கக் கடவனாகிய சமயாசாரங்களை அநுட்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினாருக்கு மற்றைக்கருமங்களோடு கூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்தி செய்தொழித்து நித்தியகரும மாத்திரையில் இயன்றமட்டும் அதிகார முடையராகச் செய்வதாம். ஆயினும் சமயாச்சாரங்களைச் சுத்தி செய்தொழித்தமையின் நைமித்திகத்தினும் காமியத்தினும் அதிகாரங்கொடாமையால் இது நிரதிகாரதீக்கையெனவும் பெயர் பெறும்.

இத்தீக்ஷை சமயமும், விசேடமும், நிர்வாணம் என மூவகைப்படும். அவற்றுட் சமயமும், விசேடமும் ஓரோவொன்றேயாம். மற்றை நிருவாணதீக்ஷை அசத்தியோ நிருவாணம் எனவும் சத்தியோ நிருவாணம் எனவும் இருவகைப்படும். அசத்தியோ நிருவாணம் தேகாந்தத்தின் முத்தியைப் பயப்பது. சத்தியோ நிருவாணம் அப்பொழுதே முத்தியைப் பயப்பது. சமயாச்சாரச் சுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அதற்கு அங்கமாயும் சுதந்திரமாயுஞ் செய்யப்படும் சமயவிசேடங்களும் நிர்பீசதீக்ஷை எனக் கொள்க.

இனிச் சபீசதீக்ஷையாவது மலபரிபாகத்தோடு கூடக் கற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினாருக்குச் சமயாசார கன்ம மாத்திர நிறுத்தி மற்றைக் கன்மமெல்லாம் சுத்தி செய்தொழித்து நித்தியகன்ம முதலிய மூன்றினும் பேரதிகாரமுடையச் செய்வதாம். ஆதலின் இது சாதிகார தீக்ஷை எனவும் பெயர் பெறும். இத்தீக்ஷை பேருடையார் தீக்ஷை வேறுபட்டால் சாதகரும் ஆச்சாரியருமென்றிரு திறப்படுவர். இந்த சபீச தீக்ஷைதான் உலோக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தருமிணியும் சிவதருமிணி என்று இருவகைப்படும். இவை முறையே பௌதீகதீக்ஷை நைட்டிக தீக்ஷை எனவும் பரியாயப் பெயர் பெறும். உலோக தருமிணியாவது போககாமிகட்குத் திரோதான சுத்திரூபமாகிய சிகாச்சேதமின்றி செய்வது. சிவதருமிணியாவது முத்திகாமிகட்குத் திரோதான சுத்திரூபமாகிய சிகாச்சேதத்தோடு செய்வது. உலோகதருமிணி அபரமுத்தியாகிய பதப்பிராப்தியைப் பயக்கும். சிவதருமிணி பரமுத்தியைப் பயக்கும். சமயாச்சாரசுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அதற்கங்கமாய்ச் செய்யப்படும் சமய விசேடங்களும் சபீசதீக்ஷை எனக்கொள்க.

**நான்கு வருணத்துப் பெண்களுக்குந் தீக்ஷை செய்யும் முறைமையுணர்த்துகின்றார்.**

***63) கணவ னநுமதிசெய் தாற்கா ரிகைக்கும்***
***பணுகவுப தேசம் பரிந்து.***

தெளிவுரை: பெண்ணுக்கும் அவளுடைய நாயகன் அனுமதி செய்தால் அன்புகொண்டு தீக்ஷை செய்யக் கடவர்.

கன்னிகையாகில் பிதாவின் அநுமதியும், விதவையாகில் பிதாபுத்திரன் அநுமதியும் வேண்டப்படுமென்க. பெண்களுக்கு எக்காலத்தும் தமக்கென அதிகாரமின்மையால் அநுமதி வேண்டிற்றென்க.

**அத்துவசுத்தி பெறுதற்கு அருகரையும் அருகரல்லாதாரையும் உணர்த்துகின்றார்.**

***64) அருகமே நால்வர்க்கு மத்துவ சுத்தி***
***யருகமல மற்றை யவர்க்கு.***

தெளிவுரை: அத்துவ சுத்தியானது நான்கு வருணத்தாருக்குமே உரியது. அவரொழிந்த மற்றைச் சாதியாருக்கு உரியதன்று.

அத்துவ சுத்தியாவது ஆறத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கின்ற போகங்கள் எல்லாவற்றையும் ஏககாலத்திலே புசித்துத் தொலைப்பித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மோக்ஷத்தைக் கொடுத்தலாம். இதுவே நிர்வாண தீக்ஷை எனப்படும். அத்துவா - வழி. நிர்வாணம் - மோக்ஷம். அத்துவாக்களாறாவன: தத்துவாத்துவா, கலாத்துவா, மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா என்பனவாம். இவற்றுள் மந்திரங்கள் பதினொன்று, பதங்கள் எண்பத்தொன்று, வர்ணங்கள் ஐம்பத்தொன்று, புவனங்கள் இருநூற்றிப்பதினான்கு, தத்துவங்கள் முப்பத்தாறு, கலைகள் ஐந்து என்றறிக.

**மற்றைச் சாதியாருக்குப் பாசம் அறுக்கும் முறைமை உணர்த்துகின்றார்.**

**65) அன்னியர்க்குப் பாச மறுத்திடுக பார்வையினாற்**
**றன்னதுகை வைத்துந் தலை.**

தெளிவுரை: ஔத்திரி தீக்ஷைக்கு அருகரல்லாத மற்றை சாதியாருக்கு அவரவர் பக்குவத்திற்கேற்ப சாக்ஷீ தீக்ஷையினாலும் சிவஹஸ்தமஸ்தகசம் யோகமாகிய பரிச தீக்ஷையினாலும் பாசத்தை நீக்கக் கடவர்

உம்மையினாலே வாசிகதீக்ஷை, மானசதீக்ஷை, சாத்திரதீக்ஷை, யோகதீக்ஷை என்னும் மற்றை நான்கும் கொள்ளப்படும். இவ்வாறினுள் சாக்ஷீஷி தீக்ஷையாவது மாந்திரிகன் பாம்பினாற் கடிக்கப்பட்டவனைக் கருட பார்வையினாலே பார்த்து விஷந்தீர்த்தல்போல ஆசாரியர் சீடனைச் சிவபாவனையினாலே பார்த்து பாவ விமோசனம் செய்தலாம். பரிசதீக்ஷையாவது பரிசன வேதியினாலே தாமிராதி லோகங்களைப் பரிசித்துக் களிம்பை நீக்கிப் பொன்னாக்குதல் போல ஆசாரியர் தமது கையைச் சிவன் கையாகப் பாவித்து அங்ஙனமே அர்ச்சனை செய்து அதனைச் சீடனுடைய தலையில் வைத்து எங்கும் பரிசித்து அவனது பாசத்திரயத்தை நீக்கி அவனைச் சிவனாக்குதலாம். வாசிகதீக்ஷையாவது வருணாச்சிரமானுகுணமாகப் பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தலாம். மானசதீக்ஷையாவது ஆசாரியர் தம்முடைய இரேசக வாயுவினாலே புறப்பட்டுச் சீடனுடைய பூரகவாயுவினாலே அவனுடைய இருதயத்திலே பிரவேசித்து சீடரை தன்னியத்தை வாங்கித் துவாதசாந்தபரியந்தம் பிரசாதோசாரண சகிதமாகக் கொண்டுபோய்ப் பின்பு தம்முடைய இருதயத்திலே சிவசைதன்னியத்தடன் கலந்ததாக பாவித்துப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்பு அச்சீடசைதன்னியத்தைச் சீட தேகத்திலே பிரதிட்டை செய்தலாம். சாத்திர தீக்ஷையாவது சைவாகமாதி சிவசாத்திரப் பொருளைப் போதித்தலாம். யோக தீக்ஷையாவது நிராதார சிவயோகத்தை அப்பியாசம் பண்ணுவித்தலாம். இவ்வறுவகை தீக்ஷையும் ஔத்திரி தீக்ஷைக்கு அருகரல்லாதவர்களுக்குப் பண்ணப்படுவன எனவும் ஔத்திரிக்கு அங்கமெனவும் அறிக.

**தீக்ஷை செய்தற்குக் காலபரீக்ஷையுணர்த்துகின்றார்.**

***66) தேர்ந்தறிக பக்குவத்தை நிர்வாண தீக்ஷைக்குத்***
***தேர்ந்திடே லேனையதீக் கைக்கு.***

தெளிவுரை: ஆசாரியர் மாணாக்கனுக்கு நிர்வாணதீக்ஷை செய்யுங்கால் விதித்த காலமளவாயினும் ஒரு வருஷமாயினும் அவனுடைய பக்குவத்தைப் பரீக்ஷித்து அறியக்கடவர். மற்றைச் சமயதீக்ஷை விசேஷதீக்ஷைகளுக்குக் காலம் விசாரிக்க வேண்டுவதில்லை.

**சக்தி நிபாதமுடைய மாணாக்கனது இலக்கணம் மூன்று திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***67) உறினே பருவ முடல்சிறையென் றெல்கி***
***யறுமாறுந் தேடுவனா ராய்ந்து.***

தெளிவுரை: ஒருவனிடத்தே சக்திநிபாதம் உண்டாம் ஆயின் அவன்தான் பூசிமுடித்து அலங்கரித்துப் பொருளென நினைந்து இருந்த தேகத்தைச் சிறைச்சாலையென்று துணிந்து உவர்த்து வருந்தி அது நீங்குநெறி யாதென்று ஆராய்ந்து தேடுவேன்.

***68) மெய்புளக மாகும் விழிபொழியும் வாய்குளறுங்***
***கைதொழூஉங் கூச்சங் களைந்து.***

தெளிவுரை: அவனுக்குச் சிவசரித்திர முதலியன செவி புலப்பட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத்திரத்தே சரீரம் புளகங்கொள்ளும், கண்கள் ஆனந்த வருவி சொரியும், வாக்குத் தழுதழுக்கும். சிவனடியாரைக் கண்ட மாத்திரத்தே குலம் குணம் விசாரியாமல் கூச்சத்தை ஒழித்து வணங்குவான்.

*69) விரும்புந் திருநீறு மெய்க்கணிந்தார் தம்மை*
*யரும்புமவர் தம்பா லருள்.*

தெளிவுரை: விபூதியையும், உருத்திராக்ஷமாலையையுந் திருமேனியிலணிந்த சிவபக்தர்களை விரும்புவன், அவனுக்கு அவர்களிடத்தே அன்பு விளையும்.

**பக்குவனுக்குச் செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.**

*70) இந்தவித மீராறாண் டெண்ணித் திரிவுமறப்*
*பந்தமறுத் தாள்க பரிந்து.*

தெளிவுரை: இந்தப்பிரகாரம் மாணாக்கரை பன்னிரண்டு வருட காலம் உயர்ந்தவனைத் தாழ்ந்த கருமத்தேவியும் தாழ்ந்தவனை உயர்ந்த கருமத்தேவியும் பரீக்ஷித்துச் சந்தேக விபரீதமறத் தெளிந்து பக்குவப்பட்ட மாணாக்கனிடத்தே அன்பு கூர்ந்து அவனுக்கு நிர்வாணதீக்ஷை செய்து பாசத்தை நீக்கியாளக் கடவர்.

**அவ்வவ் வருணத்தாரைப் பரீக்ஷிக்குங் காலவரையறை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*71) பண்ணிடுக தீக்கையினைப் பக்குவம்பார்த் தாறிரண்டு*
*னெண்ணிமும்மூன் றாறின்மூன் றின்.*

தெளிவுரை: பன்னிரண்டு வருஷத்துக்கும் ஒன்பது வருஷத்துக்கும் ஆறு வருஷத்துக்கும், மூன்று வருஷத்துக்கும் பக்குவம் பரீக்ஷித்துத் தெளிந்து நிர்வாணதீக்ஷையைச் செய்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***72) சூத்திர ராதியர்க்குச் சொன்னமுறை யாலாண்டு***
***பார்த்தே யநுக்கிரகம் பண்.***

தெளிவுரை: சூத்திரர், வைசியர், க்ஷத்திரியர், பிராமணரென்னும் நான்கு வருணத்தாருக்கும் மேலைத் திருகுறளிற் சொல்லிய முறையே பன்னிரண்டு முதலிய வருஷ அளவைக் கொண்டு பரீக்ஷித்து நிர்வாண தீக்ஷை செய்.

**அபக்குவனுக்குச் செய்யுமுறைமையுணர்த்துகின்றார்.**

***73) இக்குணத்தி லொன்று மிலனே லவன்றன்னை***
***யக்கணமே நீக்கலழ காம்.***

தெளிவுரை: பரீக்ஷிக்கப்பட்ட மாணாக்கன் இந்த நற்குணங்களுள் ஒன்றாயினும் இலனாகில் அவனைத் தீக்ஷைக்கு அருகனல்ல என்று கருதி அந்நேரமே நீக்குதல் அழகாம்.

**அபக்குவனை நீக்காமையால் வருங்குற்றம் இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***74) அச்சத்தா லார்வத்தா லாடகத்தான் மற்றுமுள***
***விச்சையினாற் றீக்கையியற் றின்.***

தெளிவுரை: இவன் அரசனென்ல் முதலியவற்றால் வரும் அச்சத்தினேனாலும் இவன் பிள்ளையெனல் முதலிய வற்றால் வரும் விருப்பத்தினாலேனும் பொன்னாசையினாலேனும் பிற ஆசையினாலேனும் ஆசாரியன் அபக்குவனுக்கு தீக்ஷை செய்யில்.

***75) வீழ்வர் நிரயத் திருவரும் வீழ்ந்தழுங்கி***
***ஹயாழ்வரவ ரேறலரி தாங்கு.***

தெளிவுரை: அவ்வாசாரியானும், மாணாக்கனுமாகிய இருவரும் நரகத்திலே வீழ்வார்கள். விழுந்து அழுந்தி வருந்துவார்கள். அவர்கள் அவ்விடத்தினின்றும் ஏறுதலரிதாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**மேன்முடிந்தது முடிக்கின்றார்.**

***76) ஆதலினா னீக்கி யபக்குவரை யன்பர்க்குப்
போதிக்க தீக்கை புரிந்து.***

தெளிவுரை: ஆகையால் அபக்குவரை தம்மிடத்து அன்பும் அவர்களிடத்தருளும் கொண்டு தள்ளி பக்குவர்களுக்கு நிர்வாண தீக்ஷை செய்து திரிபதார்த்தங்களை உணர்த்தும் ஞான சாத்திரங்களை உபதேசிக்கக் கடவர்.

சிவாகமத்திற் கருமகாண்டத்துக்கு விசேஷ தீக்ஷை பெற்றோரும், ஞானகாண்டத்துக்கு நிர்வாணதீக்ஷை பெற்றோருமே அதிகாரிகள் ஆவரென்று உணர்க.

**நிர்வாணதீக்ஷை ஒருகாலத்தில் இத்துணையருக்குச் செய்யலாம் என்பதுணர்த்துகின்றார்.**

***77) ஒருவர்க்கே தீக்கை புரிகவொரு காலத்
திருவர்க்கு மாகுமென வெண்.***

தெளிவுரை: ஒருகாலத்திலே ஒருவனுக்கே நிர்வாண தீக்ஷை பண்ணுக. இருவருக்கும் செய்யலாமென்றறி. எனவே ஒருவனுக்குச் செய்தலே உத்தமமென்றாயிற்று.

**மேற்படச்செய்யில் வருங்குற்ற முணர்த்துகின்றார்.**

***78) பலரையொரு காலத்திற் பண்ணிடினே தீக்கை
யலலுறுவ னாரியன்கீ ழாழ்ந்து.***

தெளிவுரை: ஆசாரியன் இருவரல்லாத பலருக்கு ஒரு காலத்திலே தீக்ஷை பண்ணுவானாயின் கீழாகிய நரகத்திலேயழுந்தி வருத்தமடைவன்.

**தீக்ஷைக்கேற்ற காலம் ஐந்து திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

79) ***கார்த்திகையு மைப்பசி வைகாசியுங்கா லோத்தமங்காண்***
***சீர்த்திகழுந் தீக்கை செய்.***

தெளிவுரை: நன்மையை விளங்குந் தீக்ஷையைச் செய்தற்கு கார்த்திகை மாதம், ஐப்பசி மாதம், வைகாசிமாதம் உத்தமகாலங்களாம்.

***80) மத்திமமாம் பங்குனியு மானியோடு மார்கழியு***
***மற்றையதா மாசியல வன்.***

தெளிவுரை: பங்குனி மாதமும், ஆனிமாதமும், மார்கழிமாதமும் மத்திமகாலங்களாம். மாசிமாதமும். ஆடிமாதமும் கனிட்டகாலங்களாம்.

***81) மற்றையமா தங்களொரு நான்கும் வழுவற்று***
***ளூற்றிடுநற் காலங்க ளும்.***

தெளிவுரை: தை, ஆவணி, சித்திரை, புரட்டாசி யென்னும் மற்றை நான்கு மாதங்களும் தீக்ஷைக்கேலாத காலங்களாம். அவைகளுக்குள்ளே தீக்ஷைக்கேற்ற புண்ணிய காலங்களும் வரும். புரட்டாசி, மாசி, ஆடி, மார்கழியென்னும் இந்நான்கு மாதங்களையும் தீக்ஷைக்காகாவென காரணாகமம் விலக்கியிருக்க இந்நூலாசிரியர் பின்னைய மூன்றையும் ஆகுமெனக் கொண்டு முன்னையதைத் தை, ஆவணி, சித்திரையோடு சேர்த்து ஆகாவென விலக்கியது ஆகம பேதத்தாலென வுணர்க.

***82) பற்றிடினே பாம்பு பருதிதனைத் திங்கடனை***
***யற்றையநா ணன்றென் றறி.***

தெளிவுரை: கேது, இராகுக்கள் சூரியனையேனுஞ் சந்திரனை யேனுந் தீண்டுமாயின் அந்நாட்கள் தீக்ஷைக்குரிய நல்ல தினங்களென்றறி.

***83) அயனமிரண் டுஞ்சித் திரையரதி நாளு***
***நயமுறுந்தீக் கைக்கினிய நாள்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தைமாத பிறப்பும், ஆடிமாத பிறப்புமாகிய அயனங்களிரண்டும், சித்திரை விஷூ, ஐப்பசி விஷூ என்னுமிரண்டும் நன்மை பொருந்திய தீக்ஷைக்கு உசிதமாகிய நாட்களாம்.

இந்நாட்களினன்றியும், சிவபெருமானுக்கு கொழுந்து சாத்தும் போதும் பவித்திரோற்சவ நடத்தும்போதும் தீக்ஷை செய்யலாம் என்றறிக.

**இக்கால நியமம் இன்னார்க்கில்லையென்பது இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***84) விளம்பினம் புத்தி விரும்பினர்க்குக் காலம்***
***விளம்பாநூல் கால விதம்.***

தெளிவுரை: போக காமிகளுக்கே இத்தீக்ஷாகால நியமஞ்சொன்னோம். முத்திகாமி அதிபக்குவனாதலால் அவனுக்குச் சைவாகமங்கள் காலநியமஞ்சொல்லா.

***85) முத்தி விரும்பினருக் கெக்கா லமுறையா***
***லுத்தமத்தி லுத்தமமா கும்.***

தெளிவுரை: முத்திகாமிகளுக்கு (முறையால்) ஆசாரியர் அவர்களிடத்துள்ள அதிதீவிர பக்குவத்தை அறிந்த முறைமையினால் எந்தக் காலமும் உத்தமோத்தம காலமாம்.

**தீக்ஷா காலத்திலே மாணாக்கன் உதகஞ் செய்யும் முறைமை உணர்த்துகின்றார்.**

***86) பொருளுட லாவியெனு மூன்றும் புதல்வன்***
***குரவன்கொ ளென்கை குணம்.***

தெளிவுரை: தீக்ஷா காலத்திலே மாணாக்கண் குருமூர்த்தியே என்னுடைய உடல், பொருள், ஆவி என்னும் மூன்றினையும் கொண்டருளுமென்று கொடுத்தலே முறைமையாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான தீக்ஷையில் உடல், பொருள், ஆவி மூன்றையுந் தானஞ் செய்தலாவது முன் செயற்கையாற்றனுடைமையாய் நின்ற இம்மூன்றனையும் தனக்கின்றிச் சிவபெருமானுக்கே உடைமையாகச் செய்தலாம். ஆவியாகிய தன்னைத் தானஞ் செய்தாலாவதுதான் சிவபெருமானுக்குப் பரதந்திரன் என்று உணர்ந்து அவரருளாலல்லது ஒன்றைச் செய்யானாகி நிற்றலேயாம். தானே தனக்குச் சுதந்திரமின்றிச் சிவபெருமானுக்குடைமையாயவழித் தன்னின் வேறாய உடல்பொருள்கள் தன்னுடைமையாமாறு யாண்டையதென்க.

**ஆசாரியன் கொள்ளுமுறைமை இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***87) புதல்வன் கொடுத்த பொருளனைத்துங் கொள்ளே***
***லதனிலிரு மூன்றிலொன்றே யாம்.***

தெளிவுரை: மாணாக்கன் தந்த பொருண்முழுதையும் வாங்காதே. அப்பொருளில் ஆறிலொரு பங்கு மாத்திரமே வாங்கு.

***88) பற்றற் றவன்கொடுக்கும் பண்ட மனைத்தினையும்***
***பற்றுதலுந் தேசிகற்குப் பாங்கு.***

தெளிவுரை: மாணாக்கன் வானப்பிரத்தனாயேனுஞ் சந்நியாசியாயேனும் பற்றற்று இருப்பவனாகில் அவன் தரும் பொருள் முழுதையும் வாங்குதலும் ஆசாரியனுக்கு முறைமையாம்.

நைட்டிகப் பிரமச்சாரி தானாகக் கொடுக்கில் வாங்கலுமாகுமென்று ஆகமமோதுமெனவறிக.

**ஆசாரியனுக்கு வேண்டுவதிதுவென்பது இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***89) அன்னை புதல்வற் களிப்பண் மருந்திரங்கி***
***யின்னமுறை யார்தே சிகர்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: மாதாவானவள் குழந்தைக்கு வந்த நோயினை அறிந்து இரங்கி அதனது பக்குவத்திற்கேற்ப மருந்து கொடுத்து அந்நோயைத் தீர்ப்பாள். இங்ஙனமே மாணாக்கருக்கு வந்த சனனமரண நோயை அறிந்து இரங்கி அவர் பக்குவத்திற்கு ஏற்பத் தீக்ஷை செய்து அந்நோயைத் தீர்க்கும் முறைமை உடையவர்களே ஆசாரியர்கள்.

***90) இரங்கிக் குரவன் பருவமெனில் யார்க்கும்***
***வரங்கொடுக்க நூலின் வழி.***

தெளிவுரை: ஆசாரியன் சக்திநிபாதம் காணப்படுமாயின் அதனையுடைய யாவர்க்கும் பொருளுடையர் இலரென்பது பாராமல் இரங்கி ஆகமவிதிப்படி தீக்ஷை செய்யக்கடவன்.

பக்குவமில்லானுக்கு தீக்ஷை செய்தலும் பக்குவமுடையானுக்குத் தீக்ஷை செய்யாமையுமாகிய இரண்டும் குற்றமேயாமென்க.

**உரைத்ததிது உரைப்பதிதுவென்பதுணர்த்து கின்றார்.**

***91) உரைத்தாமே தேசிகர் தம்மை யினியா***
***முரைப்பாம் புதல்வரையு மோர்.***

தெளிவுரை: நாம் இதுகாறும் ஆசாரியரிலக்கணத்தைச் சொன்னோம். இனி மாணாக்கரிலக்கணத்தையுஞ் சொல்வாம், அதனையறி.

**ஆசாரியரிலக்கணம் முற்றிற்று.**

ஆகத் திருக்குறள் 117.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

## இரண்டாவது

# மாணாக்கரிலக்கணம்

**மாணாக்கராதற்குரிய சென்மதேசமுணர்த்துகின்றார்.**

***1) நவின்றநதி யின்கரைநன் னாட்டுற் பவித்துப்***
***பயின்றவரே தீக்கைபரிப் பார்.***

தெளிவுரை: ஆசாரியரிலக்கணத்திற் சொல்லப் பட்ட நதி தீரங்களிலுள்ள புண்ணியஸ்தலங்களிலே பிறந்து வசிப்பவர்களே தீக்ஷை பெறுதற்கு அருகர்கள்.

**வருணமுணர்த்துகின்றார்.**

***2) அவருள்ளு மந்தண ராதியொரு நால்வ***
***ரிவரே சிறப்புளரென் றெண்.***

தெளிவுரை: அவர்களுள்ளும் பிராமணர் முதலாகிய இந்நான்கு வருணத்தாருமே மாணாக்கராதற்குச் சிறப்புடைய ரென்றறி.

இவர் சிறப்புளரெனவே, சிறப்பிலாதாரும் உளரென்பது பெற்றாம். அவர் அநுலோமர் அறுவரும் பிரதிலோமருள் சூதன் மாகதன் வைதேககன் என்னுமூவரும் அந்தராளருமெனவறிக. அநுலோமர் பிரதிலோமர் வகையும் தோற்றமும் பொதுவிலக்கிணத்திற் கூறுதும். ஆண்டுக் காண்க.

**அவருள்ளும் விதந்துணர்த்துகின்றார்**

***3) அவருள்ளு முள்ளு மவலத்தை யற்றா***
***ரவரருகர் .தீக்கையினுக் கார்ந்து.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அவர்களுள்ளும் காம முதலியமனக்குற்றங்களும் அங்கஹீனத்துவ முதலிய உடற்குற்றங்களும் இல்லாதவர்களே தீக்ஷை பெறுதற்குப் பூரணயோக்கியர்கள்.

**மாணாக்கரது வகையுணர்த்துகின்றார்.**

*4) சமயியெனப் புத்திரகன் சாதகனு மென்ன*
*வமைவரொரு மூவரடை வால்.*

தெளிவுரை: அம்மாணாக்கர்கள் தாம் பெற்ற தீக்ஷை முறைமையால் சமயியென்றும் புத்திரகனென்றும் சாதகனென்றும் முத்திறத்தராயிருப்பார்கள்.

**நிறுத்த முறையானே சமயியதிலக்கணம் இருபது திருக்குறளால் உணர்த்தத் தொடங்கி முதற்கண் அவனுக்குரிய தீக்ஷையுங் கருமமு முணர்த்துகின்றார்.**

*5) தரித்துச் சமயமெனுந் தீக்கை சமயி*
*தெரித்தபடி நித்தியஞ்செய் வான்.*

தெளிவுரை: சமயியானவன் சமயதீக்ஷையைப் பெற்று சிவாகமம் விதிப்படி தனக்குரிய நித்தியகர்மத்தை மாத்திரஞ் செய்வான்.

**அஃதிதுவெனவுணர்த்துகின்றார்.**

*6) தண்ணறலின் மூழ்கியே தர்ப்பணஞ் செய் தேசெபமு*
*முண்ணினைவான் சங்கரன்றா ளும்.*

தெளிவுரை: குளிர்மையாகிய நீரிலே ஸ்நானஞ் செய்து தர்ப்பணமும், செபமும் பண்ணி சிவபெருமானுடைய திருவடிகளையம் ஆசாரியருடைய திருவடிகளயும் மனதினாலே தியானிப்பான். சங்கரன்றாளும் என்ற உம்மையால் ஆசாரி யன்றளுங் கொள்ளப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அவன் செய்தற்குரிய சரியபாதமாகிய சிவபுண்ணியங்களுள் சிவனை வழிபடும் முறைமையை ஐந்து திருக்குறளா லுணர்த்துகின்றார்**

***7) சென்றா லயத்துட் டிருவலகிட் டேமெழுகித் துன்றுமலர் கொய்து தொடுத்து.***

தெளிவுரை: தனக்குரிய நியதியை முடித்துக் கொண்டு வீட்டினின்றும் புறப்பட்டுப் போய்த் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கித் திருக்கோயிலுள்ளே பிரவேசித்துப் பத்திரலிங்கமாகிய பலிபீடத்தையும், இடபதேவரையும் நமஸ்கரித்து மெல்லிய மார்ச்சனியினாலே கிருமிகள் சாவாமல் மேற்படவலகிட்டு ஈன்றணணியதும் நோயினதுமல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன் இலையிலேற்று வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்து வந்த நீருடனே கூட்டித் திருமெழுகுக்குச் சாத்தி திருநந்தவனத்திலே நெருங்கிய பூக்களைக் கொய்து பழுது நீக்கி இண்டை முதலாகப் பலவகைப்படும் திருமாலைகளைக் கட்டி சாணியை கீழே விழுமுன் ஏந்தல் கூடாதபோது சுத்த நிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்படவெடுக்க.

சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்த்திரந்தரித்துச் சந்தியாவந்தனம் முடித்து இரண்டு கைகளையுங் கழுவித் திருப்பூகூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி உயரப்பிடித்துக் கொண்டாயினும் அரைக்கு மேலே கையினாலே பிடித்துக் கொண்டே திருநந்தவனத்திற் போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தனையோடு பத்திர புஷ்பமெடுக்க. கைகளை அரையின் கீழே தொங்கவிடுதலும் கைகளினாலே உடம்பையேனும் வஸ்த்திரத்தையேனுந் தீண்டுதலும் ஆகாவாம் பத்திர புஷ்பமெடுக்கும்போது பேசுதலும், சிரித்தலும், சிவபெருமானுடைய திருவடிகளிலேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தலும், கொம்புகள் கிளைகளை முறித்தலும் பெருங்குற்றங்களாம். பத்திரபுஷ்பமெடுத்தவுடனே, அவைகளை பத்திரத்தினாலே மூடி மடத்தையடைந்து, கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே புகுந்து திருப்பூங்கூடையைத் தூக்கிவிட்டு, திருமாலைக் குறட்டைச்சலத்தினாலலம்பி இடம்பண்ணித் திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுஷ்பங்களை அதில் வைத்துக் கொண்டு, மௌனியாயிருந்து, சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகற்றிவிட்டுத் திருமாலை தொடுக்க.

தாழ்ந்த சாதியர், சிவதீக்ஷை பெறாதவர், ஆசௌசமுடையவர், நித்தியகருமம் விடுத்தவர், ஸ்நானஞ் செய்யாதவர் தூர்த்தர் என்னும் இவரெடுத்த பூவும், அசுத்தநிலம் சுடுகாட்டின் சமீபம் சண்டாள பூமியின் சமீபம் என்னும் இவற்றினுண்டாகிய பூவும், எடுத்து வைத்தலர்ந்த பூவும், தானே வி ழுந்து கிடந்த பூவும், பழம்பூவும், உதிர்ந்த பூவும் அரும்பும், இரவிலே எடுத்த பூவும், கை சீலை எருக்கிலை ஆமணக்கிலை என்பவற்றிற் கொண்டு வந்த பூவும், காற்றினடிபட்ட பூவும், புழுக்கடி, எச்சம், சிலந்தி, நூல், மயிர் என்பவற்றோடு கூடிய பூவும் மோந்த பூவும் , காகம், கோழி, நாய் கழுதை, பன்றி, குரங்கு, பூனை முதலியவை தீண்டிய பூவும் சாத்தலாகாது, திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்திலும் உண்டாகிய பூ ஆன்மார்த்த பூசைக்கு ஆகாது.

சூரியோதய காலத்திலாயினும், விடிய மூன்று நாழிகைக்கு முன்னாயினும், இரண்டு நாழிகைக்கு முன்னாயினும், ஒரு நாழிகைக்கு முன்னாயினும் எடுத்த புஷ்பமே உத்தமம். மத்தியானத் தெடுத்த புஷ்பம் சிவபெருமானுக்கும், தேவர்களுக்கும், பிதிர்களுக்கும், மனிதர்களுக்கும் ஆகாது.

உதயத்தில் நந்தியாவர்த்தப்பூ, வெள்ளெருக்கம்பூ, உத்தமம். மத்தியானத்தில் அலரிப் பூ, தாமரைப் பூ, தும்பைப் பூ, உத்தமம். சாயங்காலத்தில் மல்லிகைப் பூ, கருமத்தம்பூ, சண்பகப் பூ உத்தமம். அர்த்தராத்திரியில் கடப்பம்பூ, பொன்மத்தம்பூ, சிறுசண்பகபூ, பிச்சிப்பூ உத்தமம்.

விநாயகருக்கு துளசியும், சிவபெருமானுக்கு தாழம்பூவும், உமாதேவியாருக்கு அறுகும் நெல்லியும் வைரவர்க்கு நந்தியா வர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணர்க்குத் தும்பையும் ஆகாவாம்.

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணமி, மாசப்பிறப்பு என்னுமிக் காலங்களிலே வில்வமெடுக்கலாகாது. ஆதலின் இவையல்லாத மற்றக் காலங்களிலே வில்வமெடுத்து வைத்துக் கொள்க. வில்வமரத்தினடியை அடைந்து நாடோறும் ஹரஹரவென்னும் ஒலியோடு பிரதக்ஷிணஞ் செய்வோர் பாவத்தினின்று நீங்குவர், மரிக்கும்போது வில்வத்தடி மண்ணை உடம்பிற்பூசினோர் சிவபுரத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைவர். வில்வபத்திரம் சிவபெருமானது இச்சா ஞானக்கிரியை வடிவாயிருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவோண நக்ஷத்திரம், சப்தமி, அட்டமி, துவாதசி, சதுர்தசி, அமாவாசி, பௌர்ணமி, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்னுமிக்காலங்களிலே துளசியெடுக்கலாகாது. ஆதலின் இவையல்லாத மற்றைக் காலங்களிலே துளசியெடுத்து வைத்துக் கொள்க, இரண்டிலை கீழேயுள்ள துளசிக் கதிர் எப்போதும் எடுக்கலாம்.

வில்வமும், கொக்கிறகு மந்தாரையும் ஆறுமாசத்திற்கும் வெண்துளசி ஒரு வருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்க்கும், அலரிப் பூ மூன்று நாளிற்கும் வைத்து சாத்தலாம்.

## *8) ஆதரவி னாலே யமலன் முடிக்கணிவித் தோதித் துதியு முகந்து.*

தெளிவுரை: சிரத்தையினோடும் சிவபெருமானுடைய திருமுடியிலே அவரை தீண்டுதற்கருகராகிய ஆதிசைவரைக் கொண்டு சாத்துவித்து இத்திருத்தொண்டு செய்யும் பெரும்பேறு பெற்றேனேயென்று மனமகிழ்ந்து முப்பத்திரண்டி ராகங்களுள் அவ்வக்காலத்துக் கேற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லி.

முப்பத்திரண்டு இராகங்களாவன: பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, லலிதை, தோடி, வசந்தம், ராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி. காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

வசந்தகாலவிராகம்: காம்போதி, அசாவேரி, தன்னியாசி, அன்றியும் மாலையிராகம் கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி யாமராகம், ஆகரி. விடியலிராகம்: இந்தோளம், இராமகலி, தேசாக்ஷரி, நாட்டை, பூபாளம். உச்சியிராகம்: சாரங்கம், தேசாக்ஷரி. அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளநீக்கி, நின்ற மற்றவை எக்காலத்துக்கும் பொதுமையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகமேலாகிய சிவஸ்தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்னும் அருட்பாக்களைந்துமாம்.

***9) நலங்கொளகி லாலு நறும்புகையுங் காட்டி***
***யிலங்கிடவா னெய் விளக்கு மிட்டு.***

தெளிவுரை: நன்மை பொருந்திய காரகிலினாலும் சந்தனம் முதலிய பிற கந்தவர்க்கங்களினாலும் சுகந்த தூபம் பணிமாற பண்ணி பிரகாசிக்கும்படி கபிலை முதலிய பசுக்களினது நெய்யினாலே திருவிளக்குமிட்டு.

குங்கிலியம் இரண்டு பாகமும், அகிற்பொடி ஒரு பாகமும், சந்தனப்பொடி. மூன்றுபாகமும், சிறிது கர்ப்பூரபொடியோடு கூட்டி நல்ல தழலிலே இட்டுத் தூபம் பணிமாறப் பண்ணுக. இது மீதாரி யெனப் பெயர்பெறும் இங்ஙனமன்றிக் குங்குலியமும் நெய்யுங்கூட்டியேனும்,. குங்குலியமும் வில்வக்கட்டை பொடியுங் கூட்டியேனும், குங்குலியமும், சந்தனப்பொடியும், செங்கழுநீர்க் கோட்டப் பொடியுங் கூட்டி நெய் கலந்தேனும் தூபம் கொடுக்க, இவையெல்லாம் ஒன்றாகக் கூட்டித் தூபம் கொடுத்தலுமாம். எஃகுபொடி ஒரு கூறும், குங்கிலியம் இரு கூறும் சந்தனப்பொடி மூன்று கூறும், சிறிது கர்ப்பூரப் பொடியோடும் தேனோடுங்கூட்டி இடுவது உத்தமதூபம். இலாமிச்சம் வேர்ப்பொடி ஒரு கூறும் குங்கிலியம் இரு கூறும், சந்தனப்பொடி மூன்று கூறும், நெய் தேனோடு கூட்டி இடுவது மத்திம தூபம். குங்குலியமும் நெய்யுங் கூட்டி இடுவது அதமதூபம்.

தீபத்துக்குக் கபிலை நெய் உத்தமத்தினுத்தமம். மற்றை பசுநெய் உத்தமத்தின் மத்திமம், ஆட்டுநெய், எருமைநெய் உத்தமத்தின் அதமம். வெள்ளெள்ளினெய் மத்திமத்தினுத்தமம். மற்றையெள்ளினெய் மத்திமத்தின்மத்திமம். மரக் கொட்டைகளின் நெய் அதமத்தின் அதமம். தாமரை நூல், வெள்ளெருக்குநூல், பருத்திநூல் என்பவற்றுள் இருபத்தோரிழையாலேனும், பதினாறிழை யாலேனும், பதினான்கிழையாலேனும், ஏழிலையாலேனும், கர்ப்பூரப்பொடி கூட்டித் திரிபண்ணுக. திரியிலெரியுஞ் சுடர் நாலங்குலவுயரமாயின் உத்தமம். மூன்றங்குலவுயரமாயின் மத்திமம், இரண்டங்குலவுயரமாயின் அதமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***10) செல்வத்தி னுக்கிசையச் செய்து திருப்பணியு மல்லலறுத் தாளென் றழுது.***

தெளிவுரை: தன்னிடத்துள்ள செல்வத்துக்கேற்பத் திருப்பணியுஞ் செய்வித்து மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்பக் கண்ணீர் சொரியக் காருண்ணிய சொரூபியாகிய சிவபெருமானே அடியேனுடைய சனனமரணத் துன்பங்களை நீக்கி அடியேனை ஆட்கொண்டருளுமென்று பிராத்தித்து அழுது.

சிவபெருமானுடைய திருவடிகளை அடையக் கருதிய செல்வர்கள் தங்களுடைய செல்வத்தை மூன்றுகூறு பண்ணி அவற்றுள் ஒரு கூற்றைத் தங்கள் சீவனத்தின் பொருட்டு வைத்துக் கொண்டு மற்றையிரண்டு கூற்றையுந் திருப்பணியிலே செலவிட வேண்டுமென்று சிவாகமஞ் செப்புதலால், செல்வத்தினுக்கிசைய வென்றார், திருப்பணியுமென்ற உம்மையாற்பூசையுங் கொள்க.

***11) தொழுதே யெழுதித் துகிலாக்கி யுள்ள மழகா ரமலனடி யார்ந்து.***

தெளிவுரை: சிவபெருமானை வணங்கி தன்னுடைய மனதை ஒருபடமாக்கி அதிலே சின்மயமாகியச் சாந்தைப் பூசிப் பாவனையாகிய தூரிகைக் கோலினாலே அந்த சிவ பெருமானுடைய திருவுருவத்தையெழுதி அவருடைய திருவடித் தாமரையினிடத்தாகிய ஆனந்தத் தேனை பருகி.

**குருவை வழிபடுமுறைமை ஏழுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***12) புரிந்தே குரவ னடியிணையும் போற்றிப் பரிந்தே யலர்தூய்ப் பணிந்து.***

தெளிவுரை: ஆசாரியருடைய இரண்டு பாதங் களையும் விரும்பி அன்புடனே புஷ்பஞ்சாத்தி வணங்கித் துதித்து.

***13) ஏவுதன் முன்னே மியற்றிப் பணியறிந்து நாவி னவின்றவனா மம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை : ஆசாரியர் நித்திரை நீங்கி எழுந்திருந்து இன்னது செய்யென்று ஏவுதற்கு முன்னே தானெழுந்திருந்து ஸ்நானம் பண்ணி அநுஷ்டானஞ் செய்து முடித்துக் கொண்டு அவர் முன்னே வந்து நின்று அவருடைய திருநாமத்தைப் பலமுறை நாவினாலுச்சரித்து அவருக்கு வேண்டுந் தொண்டுகளைச் செய்து.

***14) சிந்தனை செய்க சிவனிவனே யென்றுளத்துட்***
***பந்தமறுப் பானைப் பரிந்து.***

தெளிவுரை: பாசத்தை நீக்கும் ஆசாரியரைச் சிவபெருமான் இவரேயென்று மனசிலே அன்பினோடு பாவனை செய்யக் கடவன்.

***15) சிவனைக் குரவனெனச் சிந்தியே லிந்த***
***வவமதியா லாழ்வரவ லத்து.***

தெளிவுரை: சிவபெருமானை ஆசாரியராகப் பாவியாதே. பாவித்தவர் இந்த அவமதியினாலே நரகத் துன்பத்திலழுந்துவர்.

***16) இட்டனெனக் காண்பரவ னேவலரை யேவலரென்***
***றிட்டனையார் காண்பா ரியம்பு.***

தெளிவுரை: தன்னால் விரும்பப்பட்ட நாயகனுடைய ஏவலாளரை அந்த நாயகனாகப் பாவிப்பர்கள் நாயகனை ஏவலாளராகப் பாவிப்பவர் யாவர் சொல்லு.

***17) இதுகொள்கை யல்ல விதனை விடுக***
***மதிநிபுணர் வேண்டில் வரம்.***

தெளிவுரை: சிவபெருமானை ஆசாரியராகப் பாவிப்பது யுக்தமன்று சாஃத்திரத்திலே வல்லவர்கள் நற்கதியையடைய விரும்பில் இந்தப் பொல்லாத புத்தியை விடக்கடவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*18) முன்னூலி னில்லாப் பொருளைமொழி வாரேறா
ரின்னா நிரயத் திழிந்து*

தெளிவுரை: மாணாக்கருக்கு வேதாகமங்களிலே பேசப்படாத பொருளைத் தங்கள் மனசினாலே கற்பித்துச் சொல்லும் ஆசாரியர்கள் துன்பத்தைத் தரும் நரகத்திலே விழுந்து கரையேறாது வருந்துவார்கள்.

**குருபன்னியை வழிபடுமுறைமை இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

*19) ஆசாரி யன்மனைவி யையடிதீண் டாதருச்சி
வாசார் மலர்தூய் மதித்து.*

தெளிவுரை: ஆசாரியருடைய மனைவியாரை மனோன்மனியாராகப் பாவித்து அவருடைய திருவடிகளைத் தீண்டாமல் தன்பெயரைச் சொல்லி மணநிறைந்த பூக்களை பூமியிலே தூவி அருச்சித்து வணங்கு.

வாசமென்பது கடைக்குறைந்து நின்றது. இக்கிருகத்தா சாரியனால் விதிப்படி மணஞ்செய்யப்படாமல் மோகத்தினாலே கொள்ளப்பட்டவளை இங்ஙனம் அருச்சித்தலுஞ் செய்யாது. இகழ்தலுஞ்செய்யாதொழிகவெனச் சிவாகமமோதுமென்றுணர்க.

*20) அந்தயுகந் தோறுமடி தீண்டியருஞ் சிக்கைதகு
மிந்தக் கலியுகத்தே யாது.*

தெளிவுரை: அடிதீண்டிப்பூசித்தல் முந்திய கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்றுயுகங்களிலுந்தகும். இந்த கலியுகத்திலே தகாது.

அடிதீண்டியருச்சிக்கை தகாதெனவே, தலைவகிர்தல் எண்ணெய்வார்த்தல் முழுக்காட்டுதல் கால்பிடித்தல் முதலியனவுந் தகாவென்றாயிற்று. கற்புடைய மகளிரும் அழகிற்சிறந்த ஆண்மக்களைக் காணின் அவர் தங்கள் உறவினர்களாயினும் தங்கள் நிலை கலங்கி அவர்களையும் நிலை குலைப்பாராதலால் இவ்வாறு கூறினார். அது,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*தந்தையா யினும் விழைவிற் றன்னுடனே*
*யொருவயிற்றிற் சார்ந்தாரேனு*
*மைந்தரா யினுமிகவும் வனப்புடைய*
*ரெனிலவர்மேன் மடநல் லார்தஞ்*
*சிந்தை நடந்திடு மதனாற் சாம்பன் மலர்க்*
*கணைவேளிற் செவ்வி வாய்ந்தோன்*
*பைந்தொடியா ரினிதமரு முவளகத்திற்*
*றனிவருதல் பான்மை யன்றே*

என்னும் காசிகாண்டச் செய்யுளாலறிக.

**குருபுத்திரர் முதலாயினோரை வழிபடுமுறைமை லுணர்த்துகின்றார்.**

***21) பணிக புதல்வர் பதமும் பரிவாற்***
***பணிகவவர் சுற்றமும் பார்த்து.***

தெளிவுரை: ஆசாரியருடைய புத்திரரை விநாயகரும், கந்தருமாகப் பாவித்து அவர்கள் பாதங்களை அன்பினோடு வணங்கக் கடவன். அவருடைய சுற்றத்தாரையும் சண்டேசுரராக பாவித்து வணங்கக்கடவன்.

**சிவனடியாரை வழிபடுமுறைமை மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***22) சிவநேசர் பாதம் வணங்கிச் சிறக்க***
***வவரேவல் செய்க வறிந்து.***

தெளிவுரை: புத்திரருஞ்சாதகருமாகிய சிவபக்தருடைய பாதங்களை வணங்கி அவரேவல்களை அவரேவுமுன் குறிப்பாலறிந்து சிறக்கும்படி செய்யக்கடவன்.

சமயிகள் சாமானியசமயி விசேஷ சமயியென இருவகையர். அவருள் ஆசாரியரால் திருநோக்கு முதலிய தீக்கையினாலே தீக்கிக்கப்பட்டுப் புறம்புள்ள சிவகைங்கரியங்களைச் செய்பவன். சாமானியசமயி. ஆசாரியரால் ஆகுதிபண்ணிச் சிவஹஸ்தம் வைக்கப்பட்டவன் விசேடசமயி. இப்படியே புத்திரரும் சாமானிய புத்திரர் விசேட புத்திரரென இருவகையர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதகாசாரியருமிருவகையர். இவ்வறுவரும் உத்தரோத்தர விசிட்டராகையால் அவரவர் தம்மியமுணர்ந்து வணங்கி ஏவல் செய்கவென்பார் அறிந்தென்றார். ஆசாரியர் சந்நிதியிலே சேட்டரிருந்தால் கனிட்டர் வணங்குமுறை எங்ஙனமெனின், அப்பொழுது மானதமாக வணங்கிக்கொண்டு அவர் புறம்பே சென்றபின் காயத்தினால் வணங்கல் வேண்டுமென்றறிக. நைட்டிகாசாரியனைப் பிரமமாகவும்,. கிருகத்தாசாரியனைச் சதாசிவனாகவும் பாவித்தல் வேண்டும்.

***23) ஆராத காதலுற வன்ன மருத்துவித்துப்***
***பேராத வின்னருளைப் பெற்று.***

தெளிவுரை: தெவிட்டாத விருப்பம் பொருந்த அவ்வடியார்களை அன்னாதிகளைப் புசிப்பித்து நீங்காத இனிமையாகிய ஆசீர்வாதத்தைப் பெற்று.

நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த பிராமணர் நூற்றுவரைப் புசிப்பித்த பலம் ஒரு சாமானிய சமயியைப் புசிப்பித்ததனாலாகும். சாமானிய சமயியைப் புசிப்பித்தற் பதின்மடங்குபலம் ஒரு விசேட சமயியைப் புசிப்பித்தலாகும். விசேட சமயியைப் புசிப்பித்தலிற் பதின் மடங்குபலம் ஒரு புத்திரனைப் புசிப்பித்தலாலாகும். புத்திரனைப் புசிப்பித்தற் பதின்மடங்கு பலம் ஒரு சாதகனைப் புசிப்பித்தலாலாகும். சாதகனைப் புசிப்பத்ததினூறு மடங்குபலம் ஓராசாரியரைப் புசிப்பித்தலாலாகும் எனவறிக.

***24) இன்றன்றோ வாக்கை யெடுத்த பலமடைந்தே***
***னென்றுமிசைப் பான்சமயி யே.***

தெளிவுரை: சரீரமெடுத்ததினாலே பெறும் பயனை இன்றல்லவா பெற்றேன். என்றிப்படிச் சற்காரவசனஞ் சொல்பவனே சமயியாவன்.

**நிறுத்த முறையானே புத்திரனதிலக்கணம் நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***25) விருப்பத் துடனே சமய விசேடம்***
***பரித்துப் புனலிற் படிந்து.***

தெளிவுரை: ஆதரவுடனே சமயதீக்ஷையையும் விசேஷ தீக்ஷையையும் பெற்று சலத்திலே ஸ்நானம் பண்ணி.

***26) சிறக்கவே தர்ப்பணத்தைச் செய்துசிவ பூசை***
***மறப்பறவே செய்து மதித்து.***

தெளிவுரை : சிவாகமவிதியை நினைந்து மந்திரதேவர் முதலாயினோர் தர்ப்பணத்தை விதிப்படி செய்து சிவார்ச்சனையை மறப்பின்றி முடித்து.

***27) அங்கியினை யோம்பித் தியானித் ததிதியர்க்கு***
***மங்கலத்தாற் பூசை வகுத்து.***

தெளிவுரை : அக்கினி காரியஞ் செய்து சிவத்தியானம் பண்ணி தமதாச்சிரமத்தின் கண்ணே பசித்து வந்த அதிதிகளுக்குப் பாத்தியாதி தூபதீபங்களால் பூசை செய்து அன்னமூட்டி. அதிதி முன்னொருகாலும் அறியப்படாத பரதேசி. அவன் ஒரு நாளிருந்தாற்றான் அதிதியெனப்படுவன். ஊரிலிருப்பவனையும் வேறொரு நிமித்தத்தினால் வருகின்றவனையும் அன்னத்தின் பொருட்டு ஊர்தோறுந் திரிகின்றவனையும் அதிதியெனக் கொள்ளலாகாது.

***28) வாரமுறத் தேசிகரு மாதவரு மேவியது***
***காரகரே புத்திரகர் காண்.***

தெளிவுரை: ஆசாரியரும் சாதகருமேவியதை அன்பு பொருந்தும்படி செய்பவரே புத்திரரென்றறி.

புத்திரர் சாமனியபுத்திரர் விசேஷபுத்திரர் என இரு வகையர். சமய தீக்ஷையும் விசேஷ தீக்ஷையும் மாத்திரம் பெற்றவர், சாமனிய புத்திரர். அவ்விரண்டோடு நிர்வாண தீக்ஷையும் பெற்றுச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாதகாபிடேகமில்லாதிருப்பவர் விசேட புத்திரர். ஆதிசைவராலே தீக்ஷிக்கப்பட்ட புத்திரன் தனது நித்தியகர்மத்திலும் தனது பிராயச்சித்தத்திலும் தன் பொருட்டுச் செய்யப்படும் நைமித்திகத்திலும் அதிகாரியாவன். பிறர் பொருட்டுச் செய்யப்படும் நைமித்திகத்துக்கு அதிகாரியாகான். பரார்த்தத்திலே பிரதிட்டை கங்கமாகிய ஓமாதியிலும் அங்குரார்ப்பண முதலிய கர்மத்திலும் சாதகர். புத்திரரென்னுமிருவரும் அதிகாரிகளாவரெனவறிக.

**நிறுத்த முறையானே சாதகனதிலக்கணம் ஏழுத்திருக்குறளா லுணர்த் துகின்றார்.**

***29) தரித்துச் சமய விசேடநிரு வாணந்***
***தெரித்தபடி நித்தியமுஞ் செய்து.***

தெளிவுரை: சமயம் விசேடம் நிர்வாணமென்னும் மூன்று தீக்ஷையையும் பெற்று நித்திய கர்மத்தையும் நைமித்திக கர்மத்தையும் சிவாகமம் விதிப்படி பண்ணி.

***30) சித்திவிரும் பிச்செய்து காமியமுந் தேசிகன்றாள்***
***பத்தியினாற் சென்று பணிந்து.***

தெளிவுரை: மூவகைச் சித்திகளையும் விரும்பிக் காமிய கர்மத்தையும் பண்ணி ஆசாரியருடைய திருவடிகளை அன்பினோடு போய் வணங்கி. சித்தி மூன்றாவன: உத்தமோத்த சித்தி, உத்தமசித்தி, கனிட்டசித்தி என்பனவாம். வித்தியேசுரராதலும் உருத்திரராதலும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களாதலும் உத்தமோத்தமசித்தி. தேவர்களுக்கொப்பாகிய சரீரத்தையெடுத்து ஆகாசகமனம் பண்ணி அங்குள்ள போகங்களைப் புசித்துத் திரும்பி வருதல் உத்தம சித்தி. பிலத்துவாரத்தினாலே பாதாளத்திற் பிரவேசித்து. அங்குள்ள போகங்களைப் புசித்துத் திரும்புதல் கனிட்ட சித்தி. இச்சித்திகள் உலகராற் காணப்படாதவனவெனவும் காணப்படுவனவெனவும் பரமெனவும், அபரமெனவும் வருமெனவுணர்க. இவைகளை இங்கே விரித்துரைக்கிற் பெருகும். காமியகர்மமாவது: பும்ரூபம், ஸ்திரீரூபம், ஸ்திரீபும்ரூபம் என்னும் மூவித தேவதைகளையும் செப தர்ப்பண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூசைகளினாலே சாந்நித்தியம் பண்ணிக் கொண்டு அவ்வாறே நாடோறும் அநுட்டித்தலாம். ஆசாரியரையே யன்றிச் சேட்டாசிரியர் முதலியோரையும் வணங்கல்வேண்டுமென்க. அவர்களை வணங்கலாகாக் காலமும் வணங்கும்போது கால் நீட்டலாகாத் திசையும் முறையே

*'வழியிடை நடக்கும் போதும் மலரினைக் கொய்யும் போதும்*
*விழுமியர்க் கீயும் போது முத்தர வினையின் கண்ணு*
*மெழுதிடும் போதும் வாய்மை யியலினை யிதழின் கண்ணே*
*யழகுறு மரசர் பாற்சென் றடைந்தமர் ந்திருக்கும் போதும்'*

எனவும்

*'புனலிடை மூழ்கும்போது நியதியை புரியும்போது*
*மனலினை யோம்பும்போது மருச்சனை செய்யும்போது*
*மனையிடை யருந்தும் போது மலசல மாற்றும் போதும்*
*பனவரைக் குரவர் தம்மைப் பதம்பணி வதுபாங் கன்றே.'*

எனவும்

*'தேசிகன் றன்னைத் தேவர் திருவடி தன்னை யீச*
*னேசரைச் சந்தி தோறு நிறுமலன் றனையர்ச் சிக்கும்*
*பூசுரர் தம்மைத் தந்தை தாய்தமைப் பணியும் போது*
*காசினைக் களைவார் நீட்டல் வடக்கினுங் கிழக்குங்காலே'*

அருணகிரி புராண செய்யுட்களால் அறிக.

**31) *அநுமதியைப் பெற்றேதம் மாச்சிரம மெய்தி யுனியுட் குரவனடி யும்.***

தெளிவுரை: அவ்வாசாரியரிடத்திலே அநுமதியைப் பெற்றுக் கொண்டு தமது ஆச்சிரமத்துக்குப் போய் அவ்வாசாரியருடைய திருவடிகளையும் மனசிலே தியானித்து.

**32) *இரவுபக லில்லா விடத்திரண்டற் றோங்கும் பரமசிவம் பாராமற் பார்த்து.***

தெளிவுரை: கேவலமும் சகலமும் இல்லாத விடத்திலே சாக்கிராதீதமாகிய பரமசிவத்தை ஊனக் கண்ணினாலே பாராமல் ஞானக் கண்ணினால் உள்ளபடி பார்த்து இரண்டறப் புணர்ந்து. ஞானக்கண்ணாற் சிவனை ஆன்மாவிற்காண்டல் வேண்டுமென்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*ஊனக்கண் பாச முணரா துயிர்க்குயிரை*
*ஞானக்கண் ணுனதண் ணாடு.*

என ஆசிரியர் தாமே இறைவனூற் பயனிற் கூறிய வாற்றானுமறிக.

*33) தூங்கி விழித்துலகங் கண்டு சுளித்து டலந்*
*தாங்கு மதற்குச் சலித்து.*

தெளிவுரை: இப்படி நிட்டையிலழுந்தி விழித்த போது உலகத்தைக் கண்டு தமது சரீரத்தை வெறுத்து அதனைத் தரித்தற்கு இளைத்து.

*34) நிற்பதல வாக்கையெனத் தேறிநில நீர்நெருப்பு*
*மற்றுமறு மென்றே மதித்து.*

தெளிவுரை: அந்த சரீரம் நிலையுடைத் தன்றென்று தெளிந்து அதற்கு காரணமாகிய பிருதிவி, அப்ப தேயு, வாயு, ஆகாசம், என்னும் பஞ்சபூதங்களும் அவ்வாறே அழியுமென்றறிந்து.

*35) அமலன் கமல மலரடிக்குற் றார்வந்*
*தமலமறுப் பார்சா தகர்.*

தெளிவுரை : நிருமலராகிய சிவபெருமானுடைய செந்தாரை மலர் போலுந் திருவடிகளிலே அன்பு பொருந்தி தம்மோடு சகசமாயுள்ள ஆணவ முதலிய மும்மலங்களையும் நீக்குவோரே சாதகர்.

சாதகரென்பது இம்மைக்கண்ணே சித்தியையும் மறுமைக் கண்ணே போகத்தையும் மோக்ஷத்தையும் சாதித்தடைதலாற் பெற்ற பெயர்.

**மாணாக்கர் ஞானசாரியரையடையும் முறைமையுணர்த் துகின்றார்.**

*36) ஆய்ந்துகிரி யாவிதிவீ டாயாக் குரவனைவிட்*
*டாய்ந்தறிக வாய்ந்தவற்கா ளாய்.*

தெளிவுரை: கிரியா காண்டத்தை மாத்திரம் ஆராய்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானகாண்டத்தை அராயாத ஆசாரியனை விட்டு அந்த ஞான காண்டத்தை ஆராய்ந்த ஆசாரியரைத் தேடி அடைந்து அவருக்கடிமையாகி அவரிடத்திலே ஆராய்ந்து அறியக் கடவன்.

வண்டுகள் தாம் அடைந்த பூவினிலே மதுவில்லையாகில் அதனை விட்டு மதுவுள்ள பூவைப் தேடியடையுமாறு போல மாணாக்கர்கள் தாம் அடைந்த ஆசாரியனிடத்திலே சிவஞானமில்லையாகில் அவரை விட்டுச் சிவஞானமுள்ள ஆசாரியரைத் தேடியடையலாமென்று சிவாகமஞ் செப்புகையால் இவ்வாறு கூறினார். அது

***விட்டுவிட் டொன்றை யொன்று விரைமலர் வண்டுதேடி***
***மட்டுமட் டுண்டு தாம்பின் மகிழ்தல் போற் குருக்க டம்மை***
***விட்டுவிட் டாகி லும்போய் வியன்குரு மெய்யானந்த***
***மட்டுமட் டுண்டு தாந்தம் வடிவுகாண் பனவு மென்னோ*** என்னும் செய்யுளாலறிக.

**இருவகையாசாரியரையந் தியானிக்குமுறைமை யுணர்த்துகின்றார்.**

***37) முந்திய தேசிகன்றாண் .முந்திநினை பிந்திநினை***
***சந்திதொறு மற்றையவன் றாள்.***

தெளிவுரை: மூன்று சந்தியினும் கிரியை யுபதேசித்த முந்திய ஆசாரியருடைய பாதங்களை முன்னே தியானம் பண்ணு. ஞானமுபதேசித்த பிந்திய ஆசாரியருடைய பாதங்களை அதற்கு பின்னே தியானம் பண்ணு.

**உரைத்ததிது உரைப்பதிதுவென்பதுணர்த்துகின்றார்.**

***38) உரைத்தாம் புதல்வ ரொருமூ வரையு***
***முரைப்பா மினிப்பொதுவு மோர்.***

தெளிவுரை: மூவகைப்படும் மாணாக்கருடைய இலக்கணத்தையும் சொன்னோம். இனி பொதுவிலக்கணத்தையும் சொல்வோம். அதனையறி.

**மாணாக்கரிலக்கணம் முற்றிற்று.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

## மூன்றாவது

# பொதுவிலக்கணம்

ஆசாரியருக்கு இன்றியமையாச்சைவாகமவுணர்ச்சியுணர்த்துகின்றார்

1) ***ஓதுகநா லேழுமிவற் றொன்று முணராதான்***
***போதகனோ வல்லன் புவிக்கு.***

தெளிவுரை: ஆசாரியன் சைவாகமங்கள் இருபத் தெட்டையும் ஓதி உணரக் கடவன். இவைகளும் ஒன்றாயினும் ஓதி உணராதவன் ஆன்மாக்களுக்கு ஆசாரியனாவானோ ஆகான் என்று.

நாலேழு மென்பதன் கண் முற்றும்மையை ***முற்றும்மை யொரோவழி யெச்சமுமாகும்*** என்பதனால் எச்சவும்மையாக்கி வழி நூலாகிய உபாகமங்களும், சார்பு நூலாகிய பிரகரணங்களுமாகிய இவற்றையுங் கொள்க.

2) ***ஒருதந் திரத்தினிரு காண்டத்தின் மூன்று***
***பொருளு முணர்ந்தான் போ தகன்.***

தெளிவுரை: ஓராகமத்தின் கண்ணுள்ள கிரியா காண்டம், ஞான காண்டம் என்னும் இரண்டு காண்டங்களையும் ஓதி அதன் பயனாகிய திரி பதார்த்த லக்ஷணத்தையறிந்தவனே ஆசாரியனாவான்.

3) ***அல்லாற் சுலோக மொருநியுத மாராய***
***வல்லானுந் தேசிகனா வான்.***

தெளிவுரை: அதுவன்றி சுலோகம் ஒரு நியுதம் ஆராய வல்லானும் தேசிகனாவான் சைவாகமங்களிலே கரியா காண்டம் ஞான காண்டம் என்னும் இரண்டினும் ஒரு லக்ஷம் கிரந்தமோதி உண்மை பொருளை உணரவல்லவனும் ஆசாரியனாவான்.

வல்லானும் என்பதன் கண் இறந்தது தழீ இய எச்சவும்மையை இறந்தது எதிரது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தழீ இய எச்சவும்மையாக்கி, ஒரு லக்ஷங்கிரந்தமோத மாட்டதானாயின் ஐம்பதினாயிரங் கிரந்த மோதியவன் மத்திமாசாரியனெனவும், இருபத்தையாயிரங் கிரந்த மோதினவன் கனிட்டாசாரிய னெனவுங் கொள்க.

விசேஷ வித்தையாகிய சைவாகமத்தை யோதல் வேண்டுமெனவே, அவ்வுணர்ச்சிக்கு இன்றியமையாக் கருவியாயுள்ள நிகண்டு, காவியம், வியாகரணம், தருக்க முதலிய சாமானிய வித்தைகளையும் கற்றுணர்தல் வேண்டுமெனக் கொள்க.

அன்றியும் தமிழ் வழங்கு நிலத்தின் கண்ணே ஆசாரியராவோர் வடமொழி பயிற்சி பெரிதுடையராயினுங் கேட்போரெல்லார்க்கும் அஃதுண்மை கூடாமையால் தமிழினும் நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து பஞ்சலக்கணப் பயிற்சியுடையராய் தமிழ் சித்தாந்த சாத்திரம் பதினான்கையும் உணர்ந்தாராகியும் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் பண்ணோடு அத்யயனம் செய்தவராகவும் இருத்தல் வேண்டும் எனவுந் துணிக.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காவன. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃற்றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம். தமிழ் வேதங்களும், தமிழ் சித்தாந்தங்களும் பசுகரண நீங்கி சிவகரணமுற்ற உண்மை நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்டமையால் பதிவாக்கெனவே துணியப்படும். இஃது அறியாது பசுவாக்கென நினைப்பினும் நரகத் துன்பமெய்துதல் சத்தியமென்பது தெளிக.

**ஆசாரியனுக்குரிய கர்ம முணர்த்துகின்றார்.**

***4) இயற்றித்தா நித்தியாங் கத்தினையு மென்று***
***மியற்றுவிப்பான் றேசிகனென் றெண்.***

தெளிவுரை: ஆசாரியனானவன் நித்தியம், நித்தியாங்கம், நைமித்திகம், நைமித்திகாங்கம், காம்யம், காம்யாங்கம், என்னும் கர்ம பேதங்கள் அனைத்தையும் தான் எப்பொழுதுஞ்செய்து சாதகர், புத்திரர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமயி எனும் மூவகை மாணாக்கரையும் அவரவர் அதிகாரானு குணமாகிய கர்மங்களை செய்விப்பான் என்று அறிக.

உம்மையினாலே ஒழிந்த கர்மங்களும் கொள்ளப்பட்டன.

**ஞானானுட்டானிகளுள் கிரியானுட்டானத்தை விடுத்தற் குறியவர் இவர் என்பதும், உரியரல்லாதவர் இவர் என்பது முணர்த்துகின்றார்.**

*5) போதகன் கன்மம் புரிகவிமல ங்கண்டுஞ்*
*சாதகர்விட் டாலுந் தகும்*

தெளிவுரை: ஆசாரியன் ஞானநிட்டையைப் பொருந்தியவன் ஆயினுங் கர்மானுட்டானத்தை விடாது செய்யக்கடவன். சாதகாசாரியர் ஞானநிட்டையைப் பொருந்திற் கிரியானுட்டானத்தை விடினுந் தகும்.

நித்திய கருமத்தை பாலர்போல் அறவொழிவோரும் உன்மத்தர் போல் ஒருகாற்செய்து ஒருகால் ஒழிவோரும், பிசாசர் போல் செயலிழப்பினின்று செய்வோரும் என ஞான நிட்டையுடையோர் மூவியில்பினராயினர். நித்திய கருமாதிகள் ஞான நிட்டையுடையோர்க்கு நித்திரை செய்வோர் கையிற் பொருள்போலத் தாமே தவிரிற் குற்றமில்லை. அங்ஙன மன்றி அவர் தாமே அவற்றைத் தவிர்ப்பாராயின் நரகத்து வீழ்தல் தப்பாதென்க. அது

***'ஞால நீதியு நான்மறை நீதியும்***
***பாலருன்மத்தர் பிசாசரி லெனவும்***
***முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந்***
***தானே தவிரா தானார் புரியா***
***தொழிந்தி டி னிரயத் தழுந்து த றிடமே'***

எனவரும் சங்கற்ப நிராகணத்திற்கு கூறியவற்றானுமுணர்க

**ஆசாரியன் கிரியானுட்டானத்தை விடல் ஆகாமைக்கு காரண முணர்த்துகின்றார்**

***6) விடினே குரவன் வினையினை யாரும்***
***விடுவர் வினையை விரைந்து***

தெளிவுரை: ஆசாரியன் கிரியையை அனுட்டியாது விடின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாணாக்கரெல்லாருங் கிரியையை உடனே விட்டு விடுவர்.

**மேற்கூறிய அதனை வற்புறுத்துகின்றார்**

***7) பெறினு மபேதம் பிரமத் துலகத்***
***துறுதி யுனிச் செய்க வினை யும்***

தெளிவுரை: ஆசாரியன் சிவத்தோடு அத்துவிதமாயிருப்பினும் ஆன்மாக்களுக்கு உறுதியை நினைந்து கிரியையும் விடாது அனுட்டிக்கக் கடவன்.

அத்துவித நிலையாவது ஆன்ம போதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைபட்டு நிற்றல் பிரமமும் ஆன்மாவுமெனப் பொருளிரண்டில்லை ஒன்றே யெனக் கூறுவர் மாயா வாதிகள். சிவமும் ஆன்மாவும் வேறுபொருளெனவும், அவ்விருபொருளே இரண்டென வேற்றுமைப்படாது. அது விதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்குமெனவுங் கூறுவர் சைவ சித்தாந்திகள். அத்துவிதம் என்னும் சொல்லுக்கு இரண்டின்மை எனப் பொருள் கொள்வர் மாயாவாதிகள், இரண்டன்மை யெனப் பொருள் கொள்வர் சைவ சித்தாந்திகள்.

**சிவஞானி விசிட்டம் இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்**

***8) அனாதியம லன்சச்சி தானந்தன் சுத்த***
***னெனாதி சிவனேகனுள னென்று.***

தெளிவுரை: இயல்பாகவே பாசங்கள் நீங்கி நிற்பவனும் உண்மை அறிவின்ப வடிவினனும் பரிசுத்தனும் எனக்கு முதல்வனுமாகிய சிவன் என்னும் ஒருவன் உளன் என்று

***9) அறிந்தே யுமிரா லயத்தின பேத***
***மறிந்தான்மெய்ஞ் ஞானிமல மற்று.***

தெளிவுரை: இவ்வாறாக சிவனை இடைவிடாது தியானித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலவாசனை நீங்கி அந்தச் சிவன் ஆன்மாவாகிய ஆலயத்தினுள்ளே எள்ளினுள் எண்ணெய் போல இரண்டற வியாபித்து நிற்குமுறைமையை உணர்ந்தவனே சத்தியஞானி யாவான்.

**சிவஞானிக்கு சிவன் அனுக்கிரகம் செய்யுமுறைமை யுணர்த்து கின்றார்.**

*10) அறுப்பன் மலத்தின் வலியனைத்து மெல்லா*
*மறுக்கு நாண் ஞானிக் கரன்*

தெளிவுரை: சிவபெருமான் சர்வ சங்கார காலத்திலே அந்தச் சிவஞானிக்கு மல மாயாகர்மங்களின் வலியனைத்தையுங் கெடுத்து அவனைச் சுவானந்தானு பூதிமானாக்குவர்.

**சிவனுக்கு அரன் என்னும் பெயர் வந்தமைக்கு காரணமும் உணர்த்துகின்றார்.**

*11) உயிர்க்குண் மலமொடுக்க லாலே யுயிரு*
*ளுயிர்க்கு மரனெனும்பே ருண்டு.*

தெளிவுரை: ஆன்மாவோடு சகஜமாகிய மலத்தை பக்குவமறிந்து சங்கரித்தலால் உயிர்க்குயிராகிய சிவபெருமானுக்கும் அரனெனும் பேருண்டு.

உம்மையால் பஞ்ச கிருத்தியஞ் செய்தல் பற்றி முத்தராகிய அனந்தே சுரர் முதலாயினோர்க்கும் அப்பெயருண்டெனவறிக.

**நிறுத்த முறையானே நித்யாங்கம் பத்துத் திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

*12) பதினான் கிருநான்கு பஞ்சதசி தையின்*
*முதனாள் சயித்திரத்தின் முன்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: கிருஷ்ண சதுர்த்தசியும் சுக்லபட்சசதுர்த்தசியும், கிருஷ்ணாஷ்டமி சுக்லாஷ்டமியும், அமாவாசை, பௌர்ணமியும், தை மாதப்பிறப்பும் சித்திரை மாதப்பிறப்பும்.

13) *ஆடிமுத னாளைப்பசி முதனாள் பேரொளியைக்*
*கூடியர வங்கொள்ளு நாள்.*

தெளிவுரை: ஆடிமாதப் பிறப்பும் ஐப்பசி மாதப் பிறப்பும் சூரிய சந்திர கிரகணங்களும்.

14) *ஆறைந்தின் மாதத் ததிகநாள் குன்றுநாள்*
*கூறுஷட சீதி முகம்.*

தெளிவுரை: பன்னிரண்டு மாதத்தும் முப்பது நாளின் அதிகப்பட்டநாளும் குறைந்த நாளும் ஷடசீதி முகமென்னுங் கால விசேடமும்.

மாதத் தேதி வரையறை

*'கன்னியே றாடுசிங்கங் கடகமே முப்பத் தொன்றா*
*மன்னிய தண்டெண்ணான்கு மகரந்தே னிருபத் தொன்பான்*
*சொன்னமீ னிறைசால் வில்லுச் சோர்விலா முப்பதாகு*
*மன்னமென் னடையினாளே யாதித்த னொடுங்கி நாளே'*

என்னுஞ் செய்யுளாலறிக.

15) *ஆனி முதனா ளசீதிபுரட் டாதிமுத*
*லேனையவிற் பங்குனியு மே.*

தெளிவுரை: ஷடசீதி முகமாவது ஆனி மாதப் பிறப்பும், புரட்டாசி மாதப்பிறப்பும், மற்றை மார்கழி மாதப் பிறப்பும் பங்குனி மாதப் பிறப்புமாம்.

16) *என்ற விவற்றி னிருகுணிதஞ் செய்திடுக*
*வன்றைக் கடனனைத்து மார்ந்து.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: என்று சொல்லப்பட்ட இப்புண்ணிய காலங்களிலே நீராடல் சிவ பூசை ஓமம் செபம் தியானம் முதலாகிய நித்திய கர்மங்களெல்லாவற்றையும் அன்பு பொருந்தி இருமடங்கு செய்க.

ஷடசீதி முகம் நான்கினும் மாசம் பிறந்த பதினாறு நாழிகை புண்ணிய காலம் கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாச சங்கிரகமும் விஷ்ணுபதியெனப்படும். இவைகளிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். தக்ஷிணாயனமாகிய ஆடி மாச சங்கிரமத்திலே மாசம் பிறக்கு முன் பதினாரு நாழிகை புண்ணியகாலம் உத்தராயணமாகிய தை மாச சங்கிரமத்திலே மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சித்திரை விஷீ ஐப்பசி விஷீ என்னும் இரண்டினும் மாசம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும் புண்ணிய காலம், சூரிய கிரகணத்திலே பரிச காலம் புண்ணிய காலம், சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம்.

உரையிற் கோடலால், வியாதிபாதம், சிவராத்திரி, அர்த்தோதயம் மஹோதயம் முதலாகிய பிற புண்ணிய காலங்களுங் கொள்க.

*17) பதிநான் கிருநான்கிற் பட்டினி யுற்றே*
*விதியனைத்துஞ் செய்கவிரத் தன்.*

தெளிவுரை: விரத்தனானவன் சதுர்த்தசியிலும் அஷ்டமியிலும் உபவாசியாயிருந்தே சிவ பூஜை முதலிய கருமங்களெல்லா வற்றையும் செய்யக் கடவன்.

விரத்தனென்பது சந்யாசியையும் பிரம்மசாரியையும்

*18) புசிக்க பயற்றினையு மில்வாழ்வான் போனம*
*புசிக்கலுமா நத்தமெனும் போது.*

தெளிவுரை: இல்வாழ்வானானவன் அவ்விரண்டு திதியினும் பயற்றைப் புசித்திருக்கக் கடவன். அது கூடாதாகில் நத்தமென்னுங் காலத்திலே அன்னம் புசித்தலுந் தகும்.

இல்வாழ்வானென்றது இல்வாழ்வானையும் வானப் பிரத்தனையும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

### 19) *உப்பு மிளகு மொழித்துண் பதுதானே யப்பொழுதைக் கேயருக மாம்*

தெளிவுரை: அக்காலத்திலே உப்பும் மிளகுங் கூட்டாமல் அவிசாகப் பொங்கிப் புசித்தலே தகுதியாம்.

### 20) *அட்டமியிற் பூசை யறிந்துவிதி யாலியற்றி முட்டா ததனை முடி.*

தெளிவுரை : கிருஷ்ணாஷ்டமி விரதத்தை சிவாகம விதியை யுணர்ந்து அவ்விதிப்படி தவறாமல் அனுட்டித்து ஆறு வருஷம் சென்றபின் அதனை உத்தியாபனம் பண்ணு.

ஒரு நாளிலே அறுபது நாழிகையுமிருக்கும் அட்டமி உத்தமம் அட்டமியோடு சில நாழிகை நவமியும் வந்து கூடில் அது அபரவித்தை. மத்திமம் சில நாழிகை சப்தமி நின்று அதன் மேல் அட்டமி வந்து கூடில் அதுபூர்வவித்த அதமம். பிரதோஷ காலத்திலே காலமாத்திரம் அட்டமி வந்து கூடில் அன்று கொள்க. இந்தக் கிருஷ்ணாஷ்டமி ஒரு மாதத்திலே இரண்டு முறை வரில் அவ்விரண்டினும் பூசிக்க. இவ்வட்டமி விரதத்திலே சூதகம் வரில் அன்றைக்கு உபவாசியாயிருந்து அடுத்த மாதத்து அட்டமியில் முன்னைய மாதத்திற் பூசையும் அம்மாதத்திற் பூசையையுமாகிய இரண்டும் ஒருங்கு நிறைவேற்றுக. ஒரு மாதத்திலே கிருஷ்ணாஷ்டமி வராதொழியில், மற்ற மாதத்திலே முந்திய அட்டமியில் அம்மாதத்துப் பூசையும் பிந்திய அட்டமியிலே பூர்வத்திலட்டமியில்லா மாதத்துப் பூசையும் செய்க பெண்கள் இருதுவாகில் தாமுபவாசிகளாயிருந்து நாயகரைக் கொண்டாயினும் புத்திரரைக் கொண்டாயினும் பூசை செய்விக்க.

### 21) *அத்தமயத் தின்முன் பதினா றடிநிழலை நத்தமெனுங் காலமென நாடு.*

தெளிவுரை: சூரியாஸ்தமனத்துக்கு முன் கிழக்கே பதினாறடி நிழலாயின் அதனை நத்தம் எனும் காலமென்றறி.

**நித்தியாங்கத்தால் வரும் பயனுணர்த்து கின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*22) நித்திய வங்க மிவை நிகழ்த்தப் பாவமறும்
வைத்தபரி காரஞ்செய் வார்க்கு.*

தெளிவுரை: சிவாகமத்தில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்து கொள்ள வேண்டினோர்க்கு இந்த நித்தியாங்கங்களை அனுட்டிக்கவே பாவம் நீங்கும்.

நித்தியாங்கங்களாவன நித்ய கர்ம லோபம் வந்த போது அதற்குப் பரிஹாரஞ் செய்தலும், அட்ட பந்தன சலனம் வந்தால் மீளவும் அவ்வட்ட பந்தனம் சாத்தலும் மார்கழி மாதத்தில் கிருதாபிஷேகம் முதலாக பன்னிரெண்டு மாசத்திலும் மாத பூசை பண்ணுதலும் ஸாம்வத்ஸரிக பிராயச்சித்தமாக பவித்திரஞ் சாத்தலும் முதலாயின.

**நிறுத்த முறையானே நித்திய கருமமுணர்த்தத் தொடங்கிச் சிவத்தியான முணர்த்துகின்றார்.**

*23) எழுக வருணனெழு முன்கடிகை யைந்திற்
றொழுகசிவன் தாளைத் துதித்து.*

தெளிவுரை: சூரியனுதிக்கு முன் ஐந்து நாழிகை யுண்டென்னுங் காலமாகிய பிராமீ முகூர்த்தத்திலே நித்திரை விட்டெழுந்து இயன்ற சரீர சுத்தி செய்து விபூதி தரித்துக் கொண்டு தத்தமக்கு அதிகாராநு குணமாகச் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து துதித்து வணங்கக் கடவர்.

இவ்வைந்து நாழிகை உத்தமமெனவும், மூன்றே முக்கால் நாழிகை மத்திமமெனவும், உதயம் அதமமெனவும் அறிக, இச்சந்தியா காலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன், அவன் ஒரு கர்மத்துக்கும் யோக்யனாகான். அவன் தான் செய்த புண்ணியத்தை இழப்பான். அவன் வீடு மயானத்துக்கொக்கும் அதிகாரானுகுணமாகத் தியானித்தலாவது, சரியாவான் உருத்திர மூர்த்தியையும் கிரியாவான் சதாசிவ மூர்த்தியையும், யோகி நாதத்தையும் விந்துவையும் தியானித்தல் ஞானி சிவோகம் பாவனை பண்ணுக.

**அவசிய கரும முணர்த்துகின்றார்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

## 24) மோசித் திரவியெழு முன்மலத்தைக் கொம்பினால் வாய்சுத்தி செய்கை வழக்கு.

தெளிவுரை : சூரியனுதிக்கும் முன் மல சல விசர்க்கம் பண்ணிச் சௌசாசமனங்கள் செய்து தந்த காஷ்டத்தினாலே தந்த சுத்தி செய்தல் முறையாம்.

**மலமோசனவிதி:** தண்டு கமண்டலங்களை அகத்திலேனும் நீர்க்கரையிலேனும் வைத்துவிட்டு, திருக்கோயிலெல்லைக்கு நூறு விற்கிடை தூரத்தினதாய், ஈசான திக்கொழிந்த திக்கின் கண்ணதாய், வழி குழி நீர் நிலை கோமய விடம், சாம்பரிடம், சுடலை பூந்தோட்டம் உழுத நிலம் அறுகம்பூமி மர நிழல் நாற்சந்தி முச்சந்தி களர்நிலம் கடற்கரை நதிக்கரை பசுமந்தை நிற்குமிடம் இடிவீழிடம் காற்றுச்சுழலிடம் புற்று அருவிபாயுமிடம் மலை என்னும் இவைகளல்லாததாய் உள்ள ஒரே காந்தத் தலத்தையடைந்து. மௌனம் பொருந்தி, உபவீதத்தை வலக்காதிலே சேர்த்து, தலையையும் காதையும் வஸ்த்திரத்தினாலே சுற்றிச் சரீரத்தை அரையளவும் போர்த்து, பகலிலும் சந்தியாகாலங்களிலும் வடக்கையும் இரவிலே தெற்கையும் நோக்கி, புல் விரிந்த நிலத்திலே அவ்விடத்துள்ள தேவர் முனிவர் கணர் முதலியோரை அப்பாற் போகும்படி சொல்லி அவர்கள் போகும்பொருட்டு மூன்றுதரங் கை தட்டி யாகத்துக்காகாத புல்லிட்டு, தேவாலயத்தையும் சூரியனையும், சந்திரனையும், அக்கினியையும், பசுவையும், பிராமணரையும், சிவசின்னதாரிகளையும், ஸ்திரீகளையும், ஆண்குறியையும், சட்டத்தையும் பாராமல், நாசிநுனியைப் பார்த்துக் கொண்டிருந்து, கொட்டாவி தும்மல் உமிழ்தல் செய்யாது, மலசலமோசிக்க.

சலபாத்திரத்தை கையில் வைத்துக் கொண்டு சலமல விசர்க்கஞ் செய்யின் அந்தச்சலம் மூத்திரத்துக்கு சமமாகும். அதனாற் சௌசஞ்செய்யிற் சாந்திராயண விரதமநுட்டிக்க. உபவீதத்தைத் காதில் வைத்துக் கொள்ளாது விசர்க்கஞ் செய்யிற் சௌச ஆசமனஞ் செய்தபின்பு ஸ்நானம் செய்து புனஸ்நானம் பண்ணி முன்பு தரித்த உபவீதத்தைக் களைந்துவிட்டுப் புதிய உபவீதந்தரிக்க,

ஈரவஸ்த்திரத்தோடு விசர்க்கஞ்செய்யிற் புனஸ்நானம் செய்து மூன்று பிராணாயாமம் பண்ணுக. சலமிருக்குமிடத்தைப் பாராது விசர்க்கஞ்செய்யிற் ஜலம் அகப்பட்ட பின்பு சௌசஞ்செய்து சசேலஸ்நானம் பண்ணுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்திரீயத்தைத் தலையிற்கட்டிக் கொள்ளாது சலமலவிசர்க்கஞ் செய்வோனுடைய தலை நூறாக வெடிக்கக்கடவதென்று தேவர்கள் சபிக்கின்றனர்.

**சௌசவிதி:** ஓமத்துக்காகாத கோலினாலாதல் ஓடு துரும்பு முதலியவற்றினாலாதால் இடக்கையாற் குதத்தைத் துடைத்து, இடக்கையினாலே குறியைப் பிடித்து கொண்டு, வலக்கையிலே புற்று மண்ணையேனும் சுத்த நிலத்து மிருதுவாகிய மண்ணையேனுந் தரித்துக் கொண்டு, சிவதீர்த்தமல்லாத நீர்க்கரையை யடைந்து, நீருக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு, மண்ணை நீரிலே நனைத்துக் கரையிலே வலப்புறத்தில் வைத்துக் கொண்டு, மூன்றுவிரலாலள்ளிய மண்ணினாலும் நீரினாலும் குறியை ஒருதரமும், குதத்தை ஐந்துதரமும், .இடக்கையை இடையிடையே ஒவ்வொருதரமும், பின்னும் இடக்கையைப் பத்துதரமும், இருகையையுஞ் சேர்த்து ஏழுதரமுஞ் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கைகளையும் கால்களையும் முழங்கை முழங்கால் வரையும் ஒவ்வொரு தரம் மண்ணினாற் கழுவிச் சுத்தி செய்து, சௌசஞ்செய்த இடத்தைச் சலத்தினால் அலம்பிவிட்டு, அவ்விடத்தினின்று நீங்கி, வேறோர் துறையிலே போய், வாயையும், கண்களையும், நாசியையும், காதுகளையும் கை கால்களின் நகங்களையுஞ் சுத்தி செய்து, எட்டுத்தரம் நீர் வாயிற்கொண்டு இடப்புறத்திற் கொப்பளித்து, வேட்டியை அரையிலுடுத்து, தலைக்கட்டின்றி, உபவீதத்தை, முன்புபோலத் தரித்து, குடுமியை முடித்து, கிழக்கையேனும் வடக்கையேனும் நோக்கிக் குக்குடாசனமாக இருந்து, இரண்டு முழங்கால்களுக்கும் இடையே கைகளை வைத்துக் கொண்டு, மந்திரங்களுக்குச் சரியாமல் ஒருதரமும், மந்திரங்களுக்குச் சரித்து ஒருதரமுமாக இரண்டுதரம் ஆசமனம் பண்ணுக. குக்குடாசனமாவது இரண்டு பாதங்களையும் கீழே வைத்துக் குந்திக்கொண்டிருத்தல், மேற்கூறிய சௌசம் கிருகத்தன் செய்க. அதனிரண்டு மடங்கு பிரமசாரியும், மூன்று மடங்கு வானப்பிரத்தனும் நான்கு மடங்கு சந்நியாசியுஞ் செய்க.

சல விசர்க்கஞ் செய்யின், மண்ணினாலும், நீரினாலும், குறியை ஒரு தரமும், இடக்கையை ஐந்துதரமும், இரண்டு கையையுஞ் சேர்த்து மூன்று தரமும், இரண்டு கால்களையும் ஒவ்வொரு தரமும் சுத்தி செய்து, நான்கு தரங் கொப்பளிக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும், நின்று கொண்டும், பக்கத்தைப் பார்த்துக் கொண்டும், குடுமியை அவிழ்த்துக் கொண்டும், குனிந்து கொண்டும், படுத்துக் கொண்டும், காலை நீட்டிக் கொண்டும், முழங்காலுக்கு வெளியே கையை வைத்துக் கொண்டும், தலையில் வேட்டியைக் கட்டிக் கொண்டும், காதில் உபவீதத்தை வைத்துக் கொண்டும், காலில் பாதுகையை இட்டுக் கொண்டும், மேற்குத்திக்கையேனும், தெற்குத்திக்கையேனும் பார்த்துக் கொண்டும் ஆசமனம் பண்ணலாகாது. தடாக முதலியவற்றில் ஆசமனஞ்செய்யின், முழங்காலளவினதாகிய சலத்திலே நின்று இடக்கையினாலே சலத்தைத் தொட்டுக் கொண்டு வலக்கையினாலே ஆசமனம் பண்ணுக. முழங்காலளவினதாகிய சலத்திற் குறைந்தால் கரையையலம்பி அதிலிருந்து கொண்டு ஆசமனம் பண்ணுக.

வேதாத்தியயனம் தேவபூசை பிதிர்காரியம் ஓமம், செபம் ஸ்நானம் போசனம், பானம், என்பவவைகளுக்கு முன்னும் பின்னும் ஆசமனம் பண்ணுக, சலமலவிசர்க்கஞ்செய்து சௌசம் பண்ணினும், தூங்கினும், தும்மினும், எச்சிலுமிழினும், மூக்குநீர் சிந்தினும், புதிதாக உபவீதந் தரிக்கினும், எண்ணெயாயினும், நெய்யாயினும் கலந்த மருந்துட் கொள்ளினும், மனைவியோடு கூடினும், எச்சில் படினும் தன்னிற்றாழ்ந்தவரைத் தீண்டினும், பூனை எலி பெருச்சாளி முதலியவற்றைத் தொடினும் அசுத்தப் பொருள்களைப் பார்க்கினும் சண்டாளர் முதலாயினாரோடு பேசினும், வஸ்த்திரந் தரித்துக்கொள்ளினும், கோபம் கொள்ளினும், கொடுமொழி பேசினும், பொய் கூறினும், வீதிக்குப் போய் வரினும், பதிதன் பரசமயி முதலாயினோரைப் பார்க்கினும், ஆசமனம் பண்ணுக.

***25) செய்யினு தித்தபின் றேவர் முகம்பாரார்***
***செய்கபரி காரந் தெளிந்து.***

தெளிவுரை: சூரியனுதித்தபின் தந்தசுத்தி பண்ணில், தேவரும் முனிவரும் பிதிரரும் அவன் செய்யுங் கன்மத்தைப் பிரசன்னராய்க் கைக் கொள்ளாமற் பராமுகராயிருப்பார்கள். ஆதலால் அக்குற்றம் தீரும்படி பிராயச்சித்தத்தை அறிந்து செய்க.

**முத்திகாமிக்குத் தந்தகாட்டமுந் திக்குநியமும் இரண்டு**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*26) பெருவாகை நொச்சி பெருங்குமிழ் புன்கு*
*மிருநால் விரலுயர மெண்.*

*27) கருங்காலி யாயின் மருதுமிலங் கைத்தார்*
*பரிந்து வடதிசையைப் பார்த்து.*

தெளிவுரை: இல்லறத்தை வெறுத்த முத்திகாமிகள் பெருவாகையும் நொச்சியும், பெருங்குமிழும் புன்கும் கருங்காலியும் ஆயிலும் மருதுமாகிய இவைகளிலொன்றை எட்டங்குலமுள்ளதாக கொண்டு அன்பினோடு வடக்குதிக்கை நோக்கியிருந்து தந்த சுத்தியைப் பண்ணக்கடவர்.

போககாமிக்குத் திக்குநியமமுணர்த்துகின்றார்.

*28) பண்ணிடுக தந்தசுத்தி பூர்வதிசை யைப்பார்த்தே*
*பண்ணிடுக வில்லினிருப் பார்.*

தெளிவுரை: இல்லறத்திற்கும் போககாமிகள் கிழக்குத்திக்கை நோக்கியிருந்து தந்த சுத்தியைப் பண்ணக்கடவர்கள்.

தந்த காட்டத்தை இருதய மந்திரத்தினாலே கழுவி, மௌனம் பொருந்திக் குக்குடாசனமாக இருந்துகொண்டு, மேல்வாய்ப் பல்லின் நடுத்தொடங்கி இடப்புறத்தை முன்னே சுத்தி செய்து, பின் அந்தச் சேடத்தையும் முறையே சுத்திசெய்து, கீழ்வாய்ப்பல்லை வலப்புறந் தொடங்கி இடப்புறமீறாகச் சுத்திசெய்து முடிக்க. அதன்பின் வேறோரு கழியை. அளவிற்பிளந்து, பிளப்பு மூன்றாக ஆறுபிரகாரம் உண்ணாவளவாகவோட்டி நாக்கை வழித்து இடப்புறத்தில் எறிந்துவிட்டுப் பன்னிரண்டு தரம் கொப்பளிக்க, தந்ததாவனம் பண்ணும்போது, சரியாவான் அஸ்திர மந்திரத்தை சிந்தித்து கொண்டும், கிரியாவான் பாசுபதாஸ்திர மந்திரத்தை சிந்தித்துக் கொண்டும் யோகி அசபாமந்திரத்தைச் சிந்தித்துக் கொண்டும், ஞானி உள்ளதென்று தியானித்துக் கொண்டும் பண்ணுக..

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**போககாமிக்குத்தந்தகாட்ட விதிமூன்றுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.**

29) *மருதிறலி மாச்சாதி சம்புமகி ழாத்தி*
*கிருகிக் குரித்தின்னுங் கேள்.*

தெளிவுரை : இல்வாழ்வானுக்கு மருதும் இத்தியும் மாவும் தேக்கும் நாவலும் மகிழும் ஆத்தியும் உரியனவாம். இன்னும் கேள்க.

30) *கடம்பு விளா நாயுருவி பிண்டிகுருக் கத்தி*
*படர்ந்தெழுபூல் வேல்சம் பகம்.*

தெளிவுரை: கடம்பும் விளாவும் நாயுருவியும் அசோகும் குருக்கத்தியும் படர்ந்து எழுகின்ற பூலும் வேலும் சண்பகமும் உரியனவாம்.

31) *பன்னிரண் டங்குல நீளம் பருமைதா*
*னுன்னிற் சிறுவிரல்போ லும்.*

தெளிவுரை : இவைகள் பன்னிரண்டங்குல நீளம் உளவாதல் வேண்டும் இருவருக்கும் கூறிய தந்த காட்டங்களுக்குப் பருமை ஆராயுங்காற் சிறுவிரல் அளவாம்.

தந்த காட்டம் நேரியதாய்த் தோலோடு பசப்புள்ளதாய்க் கணுவும் துளையும் இடைமுறிதலும் இல்லாததாயிருத்தல் வேண்டுமென அறிக.

**தந்தசுத்தி செய்யும்போது பார்த்தற்காகாதவை யுணர்த்துகின்றார்.**

32) *இட்டமுடன் றந்த மிலக்கிடும்போ திற்பாரேல்*
*கட்டநாய் நீசர் கரம்*

தெளிவுரை : பிரீதியோடு தந்தசுத்தி செய்யும்போது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலத்தையும், நாயையும், நீசரையும் கழுதையையும் பாராதே.

இன்னும் எலும்பையும் ஆட்டையும் இருதுமதியையும் கருப்பவதியையும் பார்க்கலாகாதென்க.

**பெண்களுக்குத் தந்தகாட்டவிலக்கணமும் தந்தகாட்ட மாகாதன இவையென்பதும் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***33) நாலங் குலநீள நாரியர்க்கெல் லாமருகம்***
***பாலுளநா லாதியெலாம் பாற்று.***

தெளிவுரை: நான்கு வருணத்துப் பெண்களும் இல்வாழ்வானுக்குக் கூறிய தந்தகாட்டங்கள் நாலங்குல நீளமுள்ளனவாய்த் தந்தசுத்தி செய்தற்குரியனவாம். நாற்பான் மரங்கண் முதலாயினவெல்லா வற்றையும் தந்த சுத்தி செய்தற்குக் கருவியாகாவெனத் தள்ளு.

***34) அத்தி பராய்தில்லை யாலும்பா லுள்ளமரஞ்***
***சுத்தமல வென்றே துனி.***

தெளிவுரை : அத்தியும், பராயும் தில்லையும் ஆலும் பாலுள்ள மரங்களாம். இவைகள் சுத்தமுடையன அல்ல என்று துணி. இன்னும் தந்த சுத்திக்கு கருவியாகாதன யவம், அரசு, நறுவிலி, நீர்வஞ்சி, தருப்பை, நெல்லி, ஆவிரை, வேம்பு, நாணல், முருங்கை, ஆமணக்கு, நமை, பேயத்தி, பட்டமரம், கைவிரல், செங்கல் சாம்பல், மணல் என்பனவாம்.

**போககாமி தந்தசுத்தி செய்யலாகாத நாட்கள் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***35) சங்கிரமத் தின்னுபரா கம்விதிபா தாதியினுந்***
***தங்குமவ ரில்லந் தனில்***

***36) முந்து திதியாறு மும்மூன்று மைம்மூன்றுந்***
***தந்தசுத்தி செய்யாமை சால்பு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இல்லறத்திருப்பவர்கள் பன்னிரெண்டு மாச சங்கிரமத்திலும் சந்திர சூரிய கிரகணங்களிலும் விதிபாதம் முதலிய யோகங்களிலும் பிரதமையிலும், ஷஷ்டியிலும், நவமியிலும், பௌர்ணமி, அமாவாசைகளிலும் தந்த சுத்தி பண்ணாமை முறைமை யாகும்.

**விலக்கிய நாட்களில் தந்தசுத்தி செய்து வழிப்படுங் குற்றமுணர்த்துகின்றார்.**

***37) விலக்கியநா ளிற்பல் விளக்கிற் குலமே***
***மூலக்கணுறு மென்றே யறி***

தெளிவுரை: போக காமியானவன் மேல் விலக்கிய நாட்களில் தந்த சுத்தி செய்வனாயின். அவனுடைய வம்சத்திலே உள்ளவர்கள் ஏழுதலைமுறை நரகத்திலே கிடந்து துயருறுவார்கள் என்றறி.

**விலக்கிய நாட்களிலே தந்தசுத்தி செய்யும்முறைமை யுணர்த்துகின்றார்.**

***38) துய்யவிலை யாற்றந்த சுத்திசெய்து நாவழித்துத்***
***துய்யபுன லாற்சுத்தி செய்.***

தெளிவுரை: பரிசுத்தமாகிய அம்மரத்து பழுப்பு இலைகளினாலே தந்த சுத்தி பண்ணி நாக்கை வழித்து சுத்தமாகிய ஜலத்தினாலே வாயைச் சுத்தி பண்ணுக.

**அவ்விலக்குக்குரிய ரல்லாரை உணர்த்துகின்றார்.**

***39) துறவிதா னெந்நாளுந் தந்தசுத்தி செய்க***
***மறுவிதனா லேவாரா து.***

தெளிவுரை: முக்தி காமி எந்நாட்களிலும் தந்த காட்டங்கொண்டு தந்த சுத்தி செய்யக் கடவன் இதனாலே அவனுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குற்றமுண்டாகாது.

**வாய்ச் சுத்தி செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.**

***40) மலமோசித் தாற்சுத்தி வாயினுக் கெண்காற்
சலமோசித் தாற்பாதி தான்.***

தெளிவுரை: மலங்கழித்தால் கைகால் சுத்தி பண்ணிய பின்னர் எட்டுத் தரங்கொப்பளித்தால் வாய்க்குச் சுத்தியாகும். சலங் கழித்தால் நான்கு தரம் கொப்பளித்தால் சுத்தியாம்.

**அதோ வாயுவை மோசிக்குமுறை யுணர்த்துகின்றார்.**

***41) விளையேல் விசர்க்கம் வினைபுரியுங் காலைக்
களைகபுறத் தெல்லை கலந்து.***

தெளிவுரை: அனுட்டானம் முதலிய கருமங்களைச் செய்யும்போது அதோ வாயுவைக் கழிக்காதே புறத்து எல்லையிலே போய் கழிக்க.

**சுத்தி செய்யும் முறைமை யுணர்த்துகின்றார்.**

***42) மண்ணாலு நீராலும் வாய்க்கவே சுத்தியினைப்
பண்ணியபி ன்னாசமனம் பண்***

தெளிவுரை : மண்ணினாலும் நீரினாலும் வாய்க்கும்படி மூன்று தரஞ்சுத்தி செய்த பின்னர் ஆசமனம் பண்ணு. வேஷ்டியும் கௌபீனமும் கீழே விழுந்தால் அவைகளைத் தோய்க்க

**ஸ்நானம் பண்ணு முறைமை இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***43) ஒப்பரே நாயினுக்கங் கூனுடலின் மண்பூசி
முப்பொழுது மூழ்கார் முயன்று.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தசை பொருந்திய சரீரத்திலே நவத்துவாரத்தினும் புறப்படுவன மலமாதலால் அதனைச் சுத்தி செய்தற்பொருட்டு விதிப்படி சந்தியா கால மூன்றினும் முயன்று மண் பூசி ஸ்நானம் பண்ணாதவர்கள் நாயினுக்கு ஒப்பாவார்கள்.

மலையருகு, ஆற்றங்கரை, புண்ணிய பூமி, பிரம விருக்ஷத்தினடி, தருப்பையினடி முதலிய சுத்த ஸ்தானத்தினாலே எட்டங்குலவளவின் கீழே அஸ்திர மந்திரத்தினாலே கிரகித்துக் கொண்ட மிருத்திகையே ஸ்நான முதலியவற்றிற்குரியது.

***44.) நிசிதனினீ ராடற்க நீராடலு மாஞ்***
***சசிதனைச்சர்ப் பம்பரிசித் தால்***

தெளிவுரை: இரவிலே வாருணஸ்நானம் பண்ணாது ஒழிக. சந்திர கிரகணம் வருமாயின் வாருண ஸ்நானம் செய்யலுமாம்
யக்ஞம் மாசப்பிறப்பு மகப்பேறென்பவற்றினும் இராத்திரி ஸ்நானம் செய்தற் பாலது என்றறிக.

**இரவிலே நீரெடுக்கு முறையிரண்டு குறளாலே யுணாததுகின்றார்.**

***45) பகலெடுத்த நீர்நிசியிற் பானாதிக் காகும்***
***பகலெடா தார்க்குரைப்பாம் பாங்கு.***

தெளிவுரை : பகலிலெடுத்த நீரே இரவிலே பானம் பண்ணுதல் பாகம் பண்ணுதல் சிவ பூசை முதலியவைகளுக்கு உரித்தாகும் பகலில் எடுக்காதவர்களுக்கு உபாயஞ் சொல்வாம்.

***46 ) காட்டிப் புனன்முன் கனலினைநீர் கொள்செம்பொன்***
***காட்டியுங்கொள் பொன்னுமிலாக் கால்.***

தெளிவுரை : இரவிலே சல சமீபத்தில் விளக்கைக் காட்டி அவ்வொளியின் சந்நிதியிலே நீரெடு விளக்கில்லையாயில் பொன்னை காட்டியும் எடுக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

47) *ஆயாமஞ் செய்தாருமுன் றன்னீர் கொளலுமாம்*
*வாயாற் சொலிமந் திரம்*

தெளிவுரை: பொன்னுமில்லையாகில் பதினொரு மந்திரங்களையும் வாயாற் சொல்லி மூன்றுதரம் பிராணாயாமம் செய்து இரவிலே ஜலம் எடுக்கலும் ஆகும். (ஆயாமம் - தடுத்தல்)

**அவ்வாறு எடுக்காததால் உண்டாகும் குற்ற முணர்த்துகின்றார்.**

48) *இந்தமுறை யிற்கொளா நீரிரத்த மீசனுக்கு*
*மந்தணர்க்கு மாகா த்து.*

தெளிவுரை: இரவிலே நதியும் நதி பாய்ந்த குளம் முதலியனவும் விருத்திராசுரனுடைய இரத்தமாகும் என்று சிவாகமஞ் செப்புதலால் விதிப்படி எடுக்காத ஜலம் ஈசனுக்கும் அந்தணர்க்கும் ஆகாது.

எனவே இந்த விதிப்படி எடுக்கும் ஜலம் இரத்தமாகாது சுத்தம் என்பது ஆயிற்று. விருத்திராசுரனுடைய இரத்தமாயிருத்தல் பொழுதடங்குதல் தொடங்கி விடிய ஐந்தேகால் நாழிகை வரைக்கும் என்று அறிக.

**ஸ்நானஞ் செய்தற்கு அஞ்சினால் ஏற்படும் குற்றமுணர்த்துகின்றார்**

49) *போர்க்கஞ்சும் பூபதிபோற் கீழ்ப்புகுவ ரேகுளிர்ந்த*
*நீர்கஞ்சு மாதவரு நெக்கு.*

தெளிவுரை: யுத்தஞ் செய்தற்கு அஞ்சுகின்ற அரசரைப் போல குளிர்ந்த ஜலத்தினாலே ஸ்நானம் பண்ணுதற்கு அஞ்சுகின்ற பெருந்தவத்தினரும் நரகத்திலே விழுந்துருகுவார்கள்.

**வியாதியாளர் ஸ்நானம் பண்ணு முறைமை இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***50) பொன்னினைவெண் ணீரதனிற் போட்டதனின் மூழ்கவுடற்***
***கின்னலுடை யார்பிணிக ளேய்ந்து.***

தெளிவுரை: சரீரத்திலே வியாதிகள் பொருந்தப் பெற்று அதனாலே துன்பத்தை அனுபவிக்கின்றவர்கள் உஷ்ண ஜலத்திலே பொன்னைப் போட்டு அதிலே ஸ்நானம் பண்ணக் கடவார்கள்.

***51) மந்திரிக்க வேகா தசமந்தி ரந்தனைப்பின்***
***சந்தியினை செய்கதவ றாது.***

தெளிவுரை: ஸ்நானம் செய்தவுடன் ஸம்ஹிதா மந்திரங்களாகிய பதினோரு மந்திரங்களையும் உச்சரித்துப்பின் சந்தியா வந்தனத்தை தவறாது செய்ய வேண்டும்.

**ஸ்நானம் செய்வதற்கு அஞ்சலாகாது என்று மேலும் வற்புறுத்துகின்றார்.**

***52) ஆதலினால் சீதத்துக் கஞ்சாதே நீராடன்***
***மாததவர்க் கென்றும் வரம்.***

தெளிவுரை : வியாதியாளர்க்கு மாத்திரம் உஷ்ண ஜல ஸ்நானம் சொல்லப்பட்டிருக்கிறது ஆதலினால் எக்காலத்தும் குளிருக்கு அஞ்சாமல் நீராடுதலே பெருந்தவத்தினர்க்குச் சிறந்த தாகும்.

**ஈரம் துவட்டும் முறையை உணர்த்துகின்றார்.**

***53) மாற்றுகமெய்ந் நீருலர்ந்த வத்திரத்தீ ரத்துகிலான்***
***மாற்றுத லென்றும் வழு.***

தெளிவுரை: ஸ்நானம் செய்த பிறகு சரீரத்தில் உள்ள ஈரத்தை தோய்த்து உலர்த்திய வஸ்திரத்தினாலே துவட்ட வேண்டும். ஈர வஸ்திரத்தினாலே துவட்டுதல் என்றும் குற்றமாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறு துவட்டாத வழிப்படுங் குற்ற முணர்த்துகின்றார்.

*54) ஈரத் துகினாயி னாவுக் கிணையுடலி*
*னீரத்தை மாற்று மிடத்து.*

தெளிவுரை: சரீரத்தில் உள்ள ஈரத்தைத் துவட்டுமிடத்து ஈர வஸ்திரமானது நாயினது நாக்குக்கு ஒப்பாகும்.ஈர வஸ்திரம் தரித்துக் கொண்டு சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கருமஞ்செய்யினுங் குற்றமாகும். இக்குற்றங்கள் மறுபடியும் ஸ்நானம் செய்தலால் நீங்குமென்றறிக.

அது

*"ஈரத் துகிலுடுத்துச் செய்கரும நிட்பலமே*
*வாரியின்மூழ் கிற்சுசியா வர்"*
*"காய்ந்ததோர் கோவணங் கைக்கொண்டு தரித்திடுக*
*காய்ந்தகலிங் கத்தினையு மே"*

என்னும் நித்ய கரும நெறி திருக்குறளால் உணர்க. நைட்டிகனும், சந்நியாசியும் முற்றும் யாசகராய் வேறு வஸ்திரம் இல்லாதிருப்பின் ஈர வஸ்திரத்தை சூரிய குரூர மந்திரத்தினாலே உலர்ந்ததாக அபிமந்திரித்துப் பஞ்சாக்ஷரத்தால் ப்ரோக்ஷித்துக் கவசத்தினாலே தலையில் போட்டு மஹா முத்திரையுந் தேனு முத்திரையுங்காட்டி அஸ்திரத்தினாலே தலையையும் இருதயத்தினாலே மற்றை அங்கங்களையும் துவட்டில் குற்றமில்லை யென்ற றிக.

காபில ஸ்நானம் இது வென்று உணர்த்துகின்றார்.

*55) காபிலமா நானந் தலைதொடங்கிக் காலளவு*
*ஈரஉடை யாற்றுவட்டி னே.*

தெளிவுரை: வியாதியினால் ஸ்நானம் செய்ய இயலாதவர்கள் தலை தொடங்கிக் கால் வரையில் ஈர வஸ்திரத்தினாலே துவட்டிக் கொள்ளுதல் காபில ஸ்நானம் என்று சொல்லப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**ஒரு வஸ்திரந் தரிக்கலாகா காலமுணர்த்துகின்றார்**

***56) நீரா டுதலி னியதியிற் பூசனையி***
***லோராடை யாகாதென் றோர்.***

தெளிவுரை: நீராடும் போதும் சந்தியாவந்தனஞ் செய்யும் போதும் சிவபூசை செய்யும் போதும் ஒரு வஸ்திரந் தரிக்கலாகா தென்றறிக. எனவே இரண்டு வஸ்திரந் தரித்தல் வேண்டும் என்றாயிற்று. மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்தியால் போஜனம் செய்யும் போதும் யோகம் புரியும் போதும் இரண்டு வஸ்திரமே தரித்தல் வேண்டு மெனக் கொள்க. வஸ்திரம் இரண்டும், சுத்தமாய் கிழியாதனவாய் வெள்ளியனவாய் உலர்ந்தனவாயிருத்தல் வேண்டும். நக்கினனாயும் (வஸ்திரம் இல்லாதவனாயும்) கௌபீனமாத்திர முடையனாயும் ஒரு கருமமுஞ்செய்யலாகாது. கௌபீணந் தரிக்காது செய்யும் கருமங்கள் பயனற்றவை ஆகும்.

**கூர்மாதனம் செய்யுமுறைமை நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***57) இருப்பைகருங் காலிவில்வாதி யினாற் செய்க***
***தருப்பணம்போற் கூர்மா தனம்.***

தெளிவுரை: இருப்பை, கருங்காலி, வில்வம், முதலிய மரங்களினாலே கூர்மாதனத்தை கண்ணாடி போல் செய்யக் கடவர்.

***58) உன்னத நாலங் குலமென் றுணர்ந்திடுக***
***பன்னிரெண்டென் றேவிரிவைப் பார்.***

தெளிவுரை: அந்த கூர்மாதனத்திற்கு உயரம் நான்கு அங்குலமென்று அறிக. விசாலம் பன்னிரெண்டங்குலம் என்றறிக.
நக்கினன்: வஸ்திரமில்லாதவன்

***59) முகமும் பதநான்கு முட்டியள விற்செய்***
***யகமதனுக் குக்குழிபோ லாக்கு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அவ்வாசனத்தின் முகத்தையும் கால்கள் நான்கினையும் முஷ்டியாகப் பிடித்தால் எவ்வளவு உண்டோ அந்த அளவினதாக செய். அதனுள்ளே குழி போலத் தோண்டுக.

*60) பருமைதா னேழங் குலம்பகர்ந்த முட்டிக்*
*குரிமைமா னாங்குலமென் றோர்.*

தெளிவுரை: சொல்லப்பட்ட முட்டியளவாகச் செய்யப்படும் ஐந்துறுப்புகளுக்கும் சுற்றுப் பருமை ஏழங்குலமாகும். இதற்குரிய அங்குலம் மானாங்குலமென்றறிக.

இந்த மானாங்குலமானது உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகைப்படும். எட்டு நெல்லுக் குறுக்கே கொண்டது உத்தமம். ஏழு கொண்டது மத்திமம். ஆறு கொண்டது அதமம்.

**அனுஷ்டானத்துக்குத் திக்கு நியமம் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*61) இருந்துகம டாதனத்தி லேவடபா னோக்கித்*
*திருந்தியிட வேநியதி செய்.*

தெளிவுரை: இந்தக் கூர்மாதனத்திலே வடக்கு நோக்கியிருந்து அனுஷ்டானத்தை விதிப்படி செய்க.

*62) பூர்வதிசை நோக்கிப் புரியலுமா மற்றிரண்டா*
*லார்வமுறச் செய்கைவிதி யன்று.*

தெளிவுரை: கிழக்கு நோக்கிச் செய்தலுந் தகும். விருப்பம் பொருந்தத் தெற்கும் மேற்குமாகிய மற்றையிரண்டு திக்கை நோக்கிச் செய்தல் விகிதமன்று. தெற்கு நோக்கி ஆசமனஞ் செய்யில் மீளவும் நீராடிற் சுத்தியாம். மேற்கு நோக்கி ஆசமணம் செய்யில் மீளவும் சுத்தாசமனம் செய்யிற் சுத்தியாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அனுஷ்டானத்திற்குரிய ஜலமுணர்த்து கின்றார்.**

***63) நுரைகுமிழி நுண்புழுவு மில்லாத நீராற்***
***கருமம் புரிகை கடன்.***

தெளிவுரை : நுரையும், குமிழியும், நுண்ணிய புழுவும் இல்லாத ஜலத்தினாலே அனுட்டானம் பண்ணுதல் முறைமையாம்.

உம்மையால், வடித்தெடாத நீர், இழிகுலத்தார் தீண்டிய நீர், கலங்க நீர், பாசி நீர், உவர் நீர், வெந்நீர், பழநீர், சொறிநீர்,கூவனீர் முதலியனவையும் ஆகாவாம்.

**ஆசமனவிதி இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***64) ஆசமனஞ் செய்க பவித்திரம்பூண் டங்கையினர்***
***லாசமன முச்சிட்ட மன்று.***

தெளிவுரை: தருப்பையினாலே செய்யப்பட்ட பவித்திரத்தையிட்டு அழகிய கையினாலே சுத்தாசமனம் பண்ணுக. அவ்வாசமனத்தினாலே அந்த பவித்திரம் உச்சிட்ட தோஷமடையாது.

பவித்திரம் அநாமிகையின் முதலிறைக்கும் இரண்டாம் இறைக்கும் நடுவே தரிக்க இரண்டாம் இறைக்கு மேற்படத் தரிக்கலாகாது. பவித்திரந் தரியாது செய்யுங் கருமங்களெல்லாம் அசுத்தமாகும். பவித்திரந் தரித்துக் கொண்டு செய்யும் கருமங்களெல்லாம் ஒன்று ஆயிர மடங்காகப் பயன்படும் கருமம் நிறைவேறிய பின் பவித்திரத்தை அவிழ்த்துக் கீழே போடுக. முடிச்சோடு கீழே போட்டால் உபவாசஞ் செய்க, பொன்னாலாயினும், ஒன்றாகச் சேர்க்கப்பட்ட பொன், வெள்ளி, தாமிரம் என்னும் மூன்றினாலுமாயினும் பவித்திரஞ் செய்து எப்போதும் அநாமிகையில் தரித்துக் கொள்க. பவித்திரத்துடனே போஜனஞ் செய்யில் அந்த பவித்திரம். உச்சிஷ்ட தோஷமடையும் என்றறிக.

***65) செய்பிரம தீர்த்தத்தா லாசமனஞ் செப்பியே***
***யுய்யவந்த தத்துவ மூன் றும்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தோன்றிய ஆன்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம், என்னும் மூவித தத்துவங்களாலும் சுத்தியாகும் பொருட்டு அம்மந்திரங்களை உச்சரித்து பிரம தீர்த்தமாகிய அங்குட்டத்தினடி அதரத்திலே படும்படி ஆசமனம் பண்ணுக.

**ஒப்பின் முடித்தலால் பஞ்சவித தீர்த்தம் உணர்த்துகின்றார்**

*66) பஞ்சவித தீர்த்தத்தைப் பாங்காக வேயறிந்*
*தெஞ்சாதே கன்ம மியற்று.*

தெளிவுரை: ஐந்து வகையான தீர்த்தங்களை நன்றாக பகுத்துணர்ந்து அவ்வவற்றினால் செய்ய வேண்டிய கருமங்களை வழுவாவண்ணம் செய்க.

பஞ்ச தீர்த்தங்களாவன தேவதீர்த்தம், ஆரிட தீர்த்தம், மானுடதீர்த்தம் பூததீர்த்தம், பிதிர் தீர்த்தம், என்பவைகளாகும். அவற்றுள் தேவதீர்த்தமானது கைந்நுதி ஆரிட தீர்த்தமாவது விரல்களினிறைச் சந்தி, மானுட தீர்த்தமாவது கனிஷ்டிகை மூலம் பூத தீர்த்தமாவது மணிக்கட்டு, பிதிர் தீர்த்தமாவது தர்ஜனி அங்குட்டங்களிநடு இவைகளாகும் இவைகளால் தருப்பணம் செய்யவேண்டும்.
(தருப்பணம் - உவப்பித்தல்)

**அனுஷ்டான கிரமத்தையறிந்து செய்கவென உணர்த்துகிறார்.**

*67) மற்றைய கன்மங்க ளெல்லாம் வழுவறச்செய்*
*பற்றறுக்கு மீசனுரை பார்த்து*

தெளிவுரை: மற்றைய அனுட்டான கருமங்கள் எல்லாவற்றையும் உட்பற்றுப் புறப்பற்றுகளை அறுக்கும் சிவபெருமான் அருளிச் செய்த சைவாகமத்தினால் ஆராய்ந்து குறைவறச் செய்க.

**சந்தியா காலங்களை நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*68) உத்தமமா தாரகைவா னென்றவுத கங்கொடுக்கை*
*மத்திமம்வா னத்துமறை யின்.*

தெளிவுரை: பிராதகாலத்திலே ஆகாயத்திலே நக்ஷத்திரங்கள் தோன்றும் போதே தருப்பணஞ் செய்தல் உத்தமமாம். அவைகள் ஆகாயத்திலே மறைந்த பின் தருப்பணஞ்செய்தல் மத்திமமாம்.

*69) கனிட்டங் கதிருதிக்குங் காலமந்திக் கந்தக்*
*கனிட்டம் விசிட்டமெனக் காண்.*

தெளிவுரை: சூரியன் பாதி உதயம் செய்யும் போது தருப்பணம் செய்தல் கனிட்டமாம்,. சாயங்காலம் சந்திக்கு சூரியன் பாதி மறையும் போது தருப்பணம் செய்தல் உத்தமம் என்று அறிக.

*70) இடைதா ரகைவிண் ணிலங்காத போது*
*கடையா முடுவிளங்குங் கால்.*

தெளிவுரை: அஸ்தமயமானபின் ஆகாயத்திலே நக்ஷத்திரங்கள் தோன்றுமுன் தருப்பணஞ் செய்தல் மத்திமமாம். நக்ஷத்திரங்கள் தோன்றும்போது தருப்பணஞ் செய்தல் கனிட்டமாம்.

*71) உச்சிக்கு முன்மத் திமமுத்த மமுச்சி*
*யுச்சிக்குப் பின்கனிட்ட மோர்.*

தெளிவுரை: மத்தியான சந்திக்கு மத்தியானத்துக்கு முன் ஒரு நாழிகையிலே தருப்பணஞ்செய்தல் மத்திமாம். பதினைந்து நாழிகை ஆகிய மத்தியானத்திலே தருப்பணஞ் செய்தல் உத்தமமாம். மத்தியானத்துக்கு பின் ஒரு நாழிகையிலே தருப்பணஞ் செய்தல் கனிட்டமாம் என்று அறிக.

சந்திகளை அதிகார பேதத்தினாலே பிரித்து மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

72) சந்திதா னென்றே சமயிக்குப் புத்திரற்குச்
சந்தியிரண் டந்தியொடு தான்.

தெளிவுரை: சமயிக்குப் பிராதக்காலசந்தி ஒன்றே உரியது. புத்திரனுக்குக் கீழ்போன பிராதக்கால சந்தி யேயன்றிச் சாயங்கால சந்தியுங் கூட இரண்டு சந்திகளுக்கு உரியனவாம்.

73) சந்தியொரு மூன்றாகுஞ் சாதகற்குத் தேசிகற்குச்
சந்தியொரு நான்கெனவே தான்.

தெளிவுரை : சாதகனுக்குக் கீழ்ப்போன அவ்விரண்டு சந்திகளே அன்றி மத்தியான சந்தி யோடு மூன்று சந்திகளுக்கு உரியனவாம். ஆசாரியனுக்குக் கீழ்போன மூன்று சந்திகளேயன்றி அர்த்தராத்திரி சந்தியோடும் நான்கு சந்திகள் உரியனவாம்.

74) நள்ளிருளி னர்ச்சிக்க நான்கா வதுசந்தி
யுள்ளத் தமலனடி யோர்ந்து.

தெளிவுரை: ஆசாரியன் அர்த்தராத்திரியிலே நான்காம் சந்தியை முடித்து மனதிலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துப் பூஜை செய்து பின்பு நித்திரை பண்ணக்கடவன். சந்திதோறும் தியானிக்கற்பாலராகிய சந்தியா சத்திகளைச் சொல்வாம். சந்தியா என்பது செவ்வே தியானிக்கப் படுவதெனப் பொருள்படும். (சம்: செவ்வே, தியா: தியானித்தல்) அக்கினியோடு உட்டணம் போலச் சிவத்தோடு அபின்னையாய்ச் சகலகருமசாக்ஷிணியாய் இருக்கும் சிவசத்தியே சந்தியை எனப்பெயர் பெறும். அச்சிவசத்தி அபரை. பராபரை, பரை, என முத்திறப்படும். அபரை பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரி என மூன்றுவிதப்படும். பிராமி நூறு கோடியோசனை விசாலங்கொண்ட இரத்த மண்டலத்திலே சகல லோகங்களையும் சிருஷ்டித்தலுக்கு காரணமாய் இருப்பவள். வைஷ்ணவி இரண்டுகோடி யோசனை விசாலங்கொண்ட சுவேத மண்டலத்திலே சகல லோகங்களையும் இரக்ஷித்தலுக்கு காரணமாக இருப்பவள். ரௌத்ரி மூன்று கோடி யோசனை விசாலங்கொண்ட விந்துமண்டலத்திலே சங்கரித்தலுக்கு காரணமாக இருப்பவள், பராபரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞானசக்தி. கிரியா சக்தி. இச்சாசக்தி என மூன்று வகைப்படும், பரை இரத்தை. சுக்கிலை. அசிதை. கிருஷ்ணை என நான்கு வகைப்படும், சமயி பிராதக் காலத்திலே பிராமியை இருதயத்தில் தியானிக்க, புத்திரன் பிராதக் காலத்திலே பிராமியை இருதயத்திலும். சாயங்காலத்திலே ரௌத்ரியைப் பிரம்மரந்திரந்திலும் தியானிக்க, நிருவாணதீக்ஷைப் பெற்றுச் சாதகாபிஷேகமில்லாதிருக்கும் புத்திரன் பிராதக் காலத்திலே பிராமியை இருதயத்திலும். மத்தியான காலத்திலே வைஷ்ணவியை விந்துவிலும். சாயங்காலத்திலே ரௌத்ரியைப் பிரம்மரந்திரத்திலும் தியானிக்க, சாதகாசாரியன் பிராதக்கால முதலிய மூன்றிலும் பராபரையின் பேதமாகிய ஞானசக்தி. கிரியாசக்தி. இச்சா சக்திகளை முறையே இருதயம். விந்து. பிரம்மரந்திரங்களிலே தியானிக்க, ஆசாரியன் பிராதக் கால முதல் அர்த்தராத்திரி ஈராகிய நான்கு காலங்களிலும் பரையின் பேதமாகிய இரத்தை சுக்கிலை அசிதை கிருஷ்ணை என்னும் நால்வரையும் முறையே இருதயம். விந்து. பிரம்மரந்திரம். துவாதசாந்தங்களிலே தியானிக்க. சந்தியைகள் எனப்படும் சிவசக்திகளைத் தியானித்த பின்னர் அவைகளினுடைய வர்ணகிரண மண்டலத்தினுள்ளே தமது ஆன்மாவும். சரீரமும் பொருந்தி அந்தர்ப்பவித்தனவாகச் சிந்தித்து அதன்மேற் செய்யப்படும் கருமம் சந்தியாவந்தனம் எனப்படும்,

**சிவபூசை செய்தபின்னன்றி யாதொருகாரியமும் செய்ய வாகாதென்பதுணர்த்துகின்றார்,**

***75) சிவபூசை செய்யுமுன் மற்றொன்றுஞ் செய்யேல்***
***சிவபூசை செய்தபின் செய்,***

தெளிவுரை: யாதொரு காரியத்தையும் சிவபூஜை செய்யும் முன் பண்ணாதே, சிவபூஜை செய்தபின் பண்ணுக,

அரிபிரம்மமேந்திராதி தேவர்கள் முன்பு சிவபெருமானைப் பூசித்தே பின்பு தங்கள் தங்கனதிகாரக் கிருத்தியங்களைச் செய்வர்கள் என அறிக,

**பரார்த்த பூசைக்கு காலவரையறை உணர்த்துகின்றார்,**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

76) *அல்லும் பகலுமருச் சிக்கயா மந்தோறும்*
*வல்லாரல் லாரியன்ற வாறு,*

தெளிவுரை: உத்தமபூசை செய்யவல்லவர்கள் இரவினும். பகலினும் சந்தி உபசந்திகளின் பேதத்தை அறிந்து பரார்த்த பூசை செய்யக் கடவர்கள். உத்தமபூசை செய்ய வல்லவர் அல்லாதவர்கள் தங்களால் இயன்றபடி மத்திமபூசையேனும் கனிட்ட பூசையேனும் செய்யக் கடவர்கள்.

**ஆன்மார்த்தபூசைக்குக் காலவரையறை யுணர்த்துகின்றார்.**

77 ) *திரிகாலத் தும்பூசை செய்கவிட்ட லிங்கத்*
*தொருகா லிருகாலத் தும்,*

தெளிவுரை: இஷ்டலிங்க பூசையை மூன்றுகாலத்தினும் அது கூடாதாயின் இரண்டு காலத்தினும் அதுவும் கூடாதாயின் ஒரு காலத்தினும் பண்ணக் கடவர்.

**சிவபூசாதிகளுக்குச் சைவர் கொள்ளவேண்டுஞ்சாத்திரவிதி. இதுவென்பது உணர்த்துகின்றார்.**

78) *கொள்க சிவாகமத்திற் கூறுநெறி பூசாதி*
*கொள்ளல்புற நூல்விதியெல் லாம்,*

தெளிவுரை: சைவர்கள் சிவபூசை முதலிய கருமங்களுக்குச் சைவாகமத்தில் விதித்த விதியையே கைகொள்ளக் கடவர்கள். அதற்கு அன்னியமாகிய வைதீக சாத்திர விதிகள் அனைத்தையும் கொள்ளாது ஒழியக் கடவர்கள்.

**மேலெய்தியதொருமருங்கு விலக்கிச் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.**

79) *அன்னிய நூலின் விதியவி ரோதமே*
*லுன்னேல் பழுதென் றுளத்து*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அன்னியமாகிய வைதீக சாத்திர விதிகள் சைவாகமத்துக்கு விரோதமாகாதனவும் அதில் சொல்லப் படாதனவுமாய் இருப்பின் அவைகளைக் குற்றமென்று மனத்திலே நினையாமல் கைக்கொள்.

**சிவலிங்க பேதம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***80) மண்சுட்ட மண்மரங்கல் வண்செம் பெழுவாயு
மொண்மை யிரத்தினந்தா னும்.***

தெளிவுரை: பச்சைமண்ணால் ஆகிய இலிங்கமும் சுட்டமண்ணால் ஆகிய இலிங்கமும் மரத்தால் ஆகிய இலிங்கமும் கல் சிலையால் ஆகிய இலிங்கமும் அழகிய செம்பு முதலிய உலோகங்களால் ஆகிய இலிங்கமும் ஒளிபொருந்திய இரத்தினத்தால் ஆகிய இலிங்கமும் என்று,

***81) மணிவாண லிங்கமிர தஞ்சுயம்பு தானு
மெணிலிவையொன் றுக்கொன்றேற் றம்.***

தெளிவுரை: மணிலிங்கமும் வாணலிங்கமும் இரசலிங்கமும் சுயம்புலிங்கமும் ஆகிய இந்த இலிங்கங்கள் ஆராயும்காலத்து உத்தரோத்தர விசிட்டமாம்,

பச்சைமண் இலிங்கத்தினும் சுட்டமண் இலிங்கம் பத்து மடங்கு அதிகம், அதினும் தாருலிங்கம் பத்துமடங்கு அதிகம், அதினும் சைலலிங்கம் பத்துமடங்கு அதிகம், அதினும் உலோகலிங்கம் நூறுமடங்கு அதிகம், அதினும் இரத்தினலிங்கம் அனந்த மடங்கு அதிகம், அதினும் மணிலிங்கம் இலக்ஷமடங்கு அதிகம், அதினும் வாணலிங்கம் கோடிமடங்கு அதிகம், அதினும் இரசலிங்கம் கோடிமடங்கு அதிகம், அதினும் அதிகம் சுயம்புலிங்கம்,

ஆயிரம் சாளக்கிராமத்துக்கு சமம் ஒரு சிவநாபம், ஆயிரம் சிவநாபத்துக்குச் சமம் ஒரு படிகலிங்கம், பன்னிரண்டு லக்ஷம் படிக லிங்கத்துக்குச் சமம் ஒரு வாணலிங்கம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**வாணலிங்கவிலக்கணம் முன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

*82) நன்மதை கங்கை யமுனை யெனநவிலு*
*மின்னவித நன்னதியி லேய்ந்து.*

தெளிவுரை: நருமதை கங்கை யமுனை என்று சொல்லப்படும் இவ்விதமாகிய புண்ணிய நதிகளிலே தோன்றி.

*83) அயனரியு மண்டரு மற்றசுரர் தாமும்*
*பயனடையப் பூசைபணி னார்.*

தெளிவுரை: பிரம்மாவும், விஷ்ணுவும், தேவர்களும் அசுரர்களும், இஷ்டசித்திகளைப் பெறும் பொருட்டு அந்த இலிங்கங்களைப் பரார்த்தமாக தாபித்துப் பூசித்தார்கள்.

*84) சிவலிங்கந் தன்னிலவர் சின்னமுறு மந்தச்*
*சிவலிங்கத் தன்னிலது தேர்.*

தெளிவுரை: அவரவராலே பூசிக்கப்பட்ட சிவலிங்கத்திலே அவரவருடைய ஆயுதத்தின் அடையாளம் இருக்கும் அதனை அந்தச் சிவலிங்கத்திலே பார்த்தறிக.

**வாணலிங்க மென்னும் பெயர்க் காரணம் உணர்த்துகின்றார்.**

*85) வாண னெனுமசுர னர்ச்சித்தான் மந்திரத்தால்*
*வாணலிங்க மாகுமது மன்.*

தெளிவுரை : ஆயிரம் கைகளை உடைய வாணாசுரன் ஓர் உழுந்து முதல் முழும் ஈறாகவுள்ள இலிங்கங்களை மந்திரத்தினாலே பூசித்தான். அந்த இலிங்கமே வாணலிங்கம் எனப் பெயர் பெறும்.

மன்-அசை நிலை. அவன் பூசித்த தானங்களாவன இலிங்காத்திரி, காளிகாகர்த்தம். ஸ்ரீகிரி. கன்னிகாச்சிரமம், கன்னியாதீர்த்தம், நேபாளம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகேந்திரகிரி, அமரேசுவரம், முதலியனவாம்.

**வாணலிங்கத்தைப் பரிக்ஷிக்கு முறைமை யுணர்த்துகின்றார்.**

***86) துலையினிறுத் தான்முக்காற் பேதித்துத் தோன்றி***
***னிலையையம் வாணலிங்க மென்.***

தெளிவுரை: துலைத்தட்டில் இட்டு மூன்றுதரம் நிறுத்தால் சமமாக இல்லாமல் பேதமாகத் தோன்றுமாயின் அது வாணலிங்கம் என்று அறிக. அதற்குச் சந்தேகமில்லை.

எனவே சமமாயிருந்தால் வாணலிங்கம் அன்று என்பதாயிற்று இங்ஙனமன்றியும் நருமதையிலே மூழ்கி எடுத்த இலிங்கத்தைத் திரும்பப் போட்டு எடுக்க பின்னும் அதுவே வந்தால் வாணலிங்கம் என்று அறிக.

**வாணலிங்க பேதத்தை இரண்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***87) உத்தமமே நீர்க்குமிழிக் கொத்தெழுந்த வாணலிங்க***
***மத்திமமண் டத்திணையா வந்து.***

தெளிவுரை: நீர்க்குமிழியைப் போல் எழுந்த வாணலிங்கம் உத்தமம். முட்டையைப் போல் வந்தெழுந்த வாணலிங்கம் மத்திமம் என்று அறிக. நுனியுமடியும், உருண்டு, சிறுகியிருத்தலால் முட்டையை உவமித்தார்.

***88) ஏற்றின்குட் டேறேற் கனிட்ட மிடையெழுவா***
***யேற்றங் கனிட்டமிழுக் கீங்கு.***

தெளிவுரை: இடபத்தினது குட்டேற்றைப் போல் எழுந்த தாயின் அது கனிட்டமாம். இங்கே சொல்லப்பட்ட மூன்றினுள்ளும் உத்தமலிங்கமும், மத்தமலிங்கமும் சிறப்பு உடையனவாம். கனிட்டலிங்கம் சிறப்பில்லாததாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்குவருணத்தார்க்கும் அதிகாரானுகுணமாக வாணலிங்க பேதமுணர்த்துகின்றார்.

*89) வெண்மை சிவப்பு விளங்கியிடும் பொன்கருமை*
*யென்னுமிவை யந்தணர்முன் னெண்.*

தெளிவுரை: வெண்ணிற இலிங்கம், செந்நிற இலிங்கம், விளங்கா நின்ற பொன்னிற இலிங்கம் கருநிற இலிங்கம் என்னும் இந்நான்கும் முறையே பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் உரியனவாம் என்று அறிக.

விதிப்படி கிடையாவழிக் கொள்ளுமுறைமை யுணர்த்துகின்றார்.

*90) அரிதேற்பொன் னந்த மனைவர்க்கு மாகுங்*
*கரியசிவ லிங்கமெனக் காண்.*

தெளிவுரை: வெண்ணிறஇலிங்கம் முதல் பொன்னிற இலிங்கம் இறுதியாகிய மூன்றினுள் ஒன்றாயினும் கிடைத்திலதாயில் கருநிற இலிங்கமே சகலர்க்கும் உரித்தாம் என்று அறிக.

நான்கு வருணத்தார்க்கும் இலிங்கபீட பேத முணர்த்துகின்றார்.

*91) எட்டிருமுன் றிரிரண்டு கோணமந்த ணாதியர்க்கு*
*வட்டமுறும் பீடமுழு வர்க்கு*

தெளிவுரை: அட்டகோண பீடமும், ஷட் கோண பீடமும், சதுட்கோண பீடமும், முறையே பிராமணர் முதல் மூவர்க்கும் உரியனவாம். வட்டமாகிய பீடம் சூத்திரர்க்குரியதாம்.

விதிப்படி கிடையாவழிக்கொள்ளுமுறைமை யுணர்த்துகின்றார்.

*92) கிட்டாதேற் கோணங் கிழமை யனைவர்க்கும்*
*வட்டமுறும் பீடம் வரம்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: பிராமணர் முதலிய மூவர்க்கும் உரிமையாகிய கோண பீடங்கள் மூன்றினுள் ஒன்றாயினும் கிடையாதாயின் வட்டமாகிய பீடமே எல்லாருக்கும் உரித்ததாம்.

**வாணலிங்க மகிமையுணர்த்துகின்றார்.**

***93) நீங்காதே வாணலிங்கத் தன்னிலுறு நின்மலன்றான்***
***பாங்காகப் பூசையினைப் பண்.***

தெளிவுரை: நிருமலராகிய சிவபெருமான் மற்றலிங்கங்களிற் போல் வாணலிங்கத்தில் ஆவாகனாதி வேண்டாமல் அனவரதமும் நீங்காதேயிருப்பார். ஆதலால் அவ்வாணலிங்கத்திலே சிவபெருமானை உரிமையோடு பூசை செய்க.

**நான்குவருணத்தார்க்கும் சிவலிங்க பரிமாணம் நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***94) பன்னிரண்டு பத்தொன்று பத்தங் குலவிலிங்க***
***மன்னுமறை யோர்க்கருக மாம்.***

தெளிவுரை : பன்னிரண்டும், பதினொன்றும் பத்துமாகிய மூவித அங்குல உயரத்தை உடைய இலிங்கம் நிலைபெற்ற பிராமணர்க்குரியதாம்.

***95 ) ஒன்பானெட் டேழரையர்க் கோராறைந் தீரிரண்டு***
***மன்பார் வசியர்க்கே யாம்***

தெளிவுரை : ஒன்பதும் எட்டும், ஏழுமாகிய மூவகை அங்குல உயரத்தையுடைய இலிங்கம் அரசர்க்கு உரித்ததாம். ஆறும், ஐந்தும், நான்குமாகிய மூவகை அங்குல உயரத்தையுடைய இலிங்கம் அன்பு பொருந்திய வைசியர்க்கு உரித்தாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*96) சூத்திரர்க்கு மூன்றிரண்டோ ரங்குலம் பீடந்தொடங்கிப் பார்த்தளக்கை யெவ்விடத்தும் பாங்கு.*

தெளிவுரை : மூன்றும் இரண்டும், ஒன்றுமாகிய மூவகை அங்குல உயரத்தையுடைய இலிங்கம் சூத்திரர்க்கு உரித்ததாம். இங்ஙனம் கூறிய நான்கிடத்தினும் இலிங்கத்தைப் பீடந்தொடங்கிப் பார்த்து அளத்தலே விதி.

*97 ) முந்தியநான் குத்தமமே மூன்றொன்று மத்திமநள் ளந்தியத்து நான்குமத மம்.*

தெளிவுரை: நான்கு வருணத்தார்க்கும் முறையே முதற்கட் கூறிய பன்னிரண்டு, ஒன்பது, ஆறு, மூன்று என்னும் நான்கும் உத்தமமாம் இடைக்கட் கூறிய, பதினொன்று எட்டு, ஐந்து, இரண்டு என்னும் நான்கும் மத்திமமாம். (அந்தியத்து நான்கும் அதமம்) கடைக்கட் கூறிய பத்து, ஏழு, நான்கு, ஒன்று என்னும் நான்கும் அதமமாம். இவற்றின் மேற்பட்ட இலிங்கத்தைப் பரார்த்தமாக தாபித்து பூசிக்க.

**பூசித்த இட்டலிங்கத்தை விடுத்தவழிப்படுங்குற்றம் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*98) கைக்கொண்ட லிங்கத்தைக் கைத்தழகு கூரிலிங்கங் கைக்கொள்ளல் வேண்டிற் கதி.*

தெளிவுரை: முக்தி பெற வேண்டுவையாகில் நீ ஆசாரியரிடத்திலே எழுந்தருளப் பண்ணிய இலிங்கத்தை வெறுத்துவிட்டு அழகு பொருந்திய வேறு இலிங்கத்தை எழுந்தருளப் பண்ணாதே.

*99) கொண்டானை விட்டுருவங் கூர்ந்தானைக் கூடியிடு மொண்டொடிக்குண் டோமே லுலகு.*

தெளிவுரை : தன்னை விவாகம் செய்த நாயகனை அழகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லையென்று வெறுத்துவிட்டு அழகு பொருந்திய வேறொருவனைப் புணரும் பெண்ணுக்கு மேலுலகம் கிடைக்குமோ? கிடைக்காது.

தான் கைக்கொண்ட இலிங்கத்தைச் சிறப்புடையதன்றென்று வெறுத்துவிட்டு சிறப்புடைய வேறுலிங்கத்தை பூசிப்பவனுக்கு முக்தி கிடைக்குமோ? கிடைக்காது என்னும் பொருள்பட நின்றமையால் இது **பிறிது மொழிதல் என்னும் அணி.**

**பூசித்த இலிங்கத்தை விடாது வேறிலிங்கமும் பூசிக்கும் முறைமையுணர்த்துகின்றார்.**

***100) மற்றையொரு முலிங்கத்தின் வாஞ்சையுறின் முன்னிலிங்கப்
பற்றொழியேன் மூன்றிலிங்கம் பாங்கு.***

தெளிவுரை: சிறப்புடைய வேறு இலிங்கத்திலே விருப்பம் உண்டாயின் முன்னே எழுந்தருளப் பண்ணிய இலிங்கத்தை விட்டுவிடாதே அந்த லிங்கத்தோடு விரும்பிய இலிங்கத்தையும் வேறொரு லிங்கத்தையும் கூட்டி அம்மூன்று இலிங்கத்தையும் பூசித்தலே தகுதி.

**பூசிக்கலாகும் இலிங்கத் தொகையும் பூசிக்கலாகாத இலிங்கத்தொகையும் கூறுகின்றார்.**

***101) ஒன்றுமூன் றுறைந்து முரித்தர்ச் சனைக்குநான்
கென்றுமிரண் டும்பிணிக்கு மேது.***

தெளிவுரை: சிவபூசைக்கு ஓரிலிங்கமும், மூன்று லிங்கமும், ஐந்து லிங்கமும் உரித்தாகும். நான்கு லிங்கமும் இரண்டு லிங்கமும் என்றும் வியாதியை உண்டாக்குவனவாம்.

ஓரிலங்கம் பூசிக்கில் முக்தியுண்டாகும். இரண்டிலிங்கம் பூசிக்கில் வியாதி உண்டாகும். மூன்று இலிங்கம் பூசிக்கில் புக்தி முக்தி இரண்டு முண்டாகும். நான்கிலிங்கம் பூசிக்கில் ஆயவும் செல்வமும் கீர்த்தியும் நசிக்கும். ஐந்திலிங்கம் பூசிக்கில் பஞ்சமா பாதங்கள் நீங்கும். ஆறிலிங்கம் பூசிக்கில் மரணமுண்டாகும். ஏழிலிங்கம் பூசிக்கிற் பவநாசமுண்டாகும் எட்டிலிங்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூசிக்கில் வியாதியும் சத்துருவும் உண்டாம். ஒன்பதிலிங்கம் பூசிக்கின் இட்டமும் சிவலோகமும் சித்திக்குமாம்.

**ஆசாரியனையும் சிவலிங்கத்தையும் ஆராயுங் காலமுணர்த்துகின்றார்.**

***102) தேசிகன் றன்னைச் சிவலிங்கந் தன்னையுமின்***
***னாசறவா ராய்ந்ததன்பின் கொள்.***

தெளிவுரை: தீக்ஷை பெறுதற்கு முன்னும் சிவபூசை யெழுந்தருள பண்ணிக் கொள்ளுதற்கு முன்னும் ஆசிரியனையும், சிவலிங்கத்தையும் குணங் குற்றங்களை பெரியோர் பலருடன் சந்தேக விபரீதமற ஆராய்ந்து கொண்டே அதன் பின்பு சற்குரு என்று துணியப்பட்டவனிடத்தில் தீக்ஷைபெற்று, நல்லலிங்கமென்று துணியப்பட்ட உடையவரை எழுந்தருளச் செய்து கொள்க.

**கொண்டபின் இகழ்ந்த வழிப்படுங்குற்றமுணர்த்துகின்றார்**

***103) கொண்டதன்பி னாய்ந்துருவ மின்மைகுண மின்மையுங்***
***கண்டுவிடு வார்க்குண்டோ கற்பு***

தெளிவுரை : சிவலிங்கத்தையும் ஆசாரியனையும் முன்னர் ஆராய்ந்து கொள்ளாமல் கொண்டதன்பின்பு ஆராய்ந்து அங்கஹீனத்துவத்தையும் குணஹீனத்துவத்துயும் கண்டு இகழ்வார்க்கு கதியுண்டோ ? இல்லை.

சுயம்பு லிங்கம் பின்னப்படினும் அதனையே வைத்து பூசிக்குமாப் போல ஆசாரியன் எப்படி இருப்பினும் அவனையே இகழாது வழிபடுக. கட்டுத் தறியினையும் கிவபெருமானேயென்று கொண்டு பக்தியோடு பூசித்தாற்போல் இலிங்கம் எப்படி இருப்பினும் அதனையே இகழாது பூசிக்க. தான் பூசித்து வந்த சிவலிங்கம் அக்னியினாலே பழுதுபடின் அதனை இகழாமல் மனநொந்து கை விட்டு வேறொரு லிங்கத்தை கைக் கொள்ளுமாறு போல தன்னுடைய ஆசாரியன் சிவநிந்தை, சிவ திரவியாபகாரம், கொலை, களவு, பிறன்மனை நயத்தல் முதலிய பெரும்பாவங்களை செய்து கெடுவானாயின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவனையிகழாது மனநொந்து கைவிட்டு வேறோராசாரியனை அடைந்துவழிபடுக. உடையாத ஓடமேயன்றி உடைந்தஓடம் யாதொன்றினையுங் கரையேற்ற மாட்டாதவாறு போலச் சற்குருவேயன்றி அசற்குரு யாவரொருவரையும் முக்தி யடைவிக்க மாட்டான்.

**இலிங்கக் குற்றங்களையும் அவற்றைப் பூசித்த வழிப்படுங் குற்றத்தையும் ஆறு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***104) சரசரத்த வாணலிங்கந் தாரத்தைக் கொல்லு***
***முருகவுளம் புத்திரரை யும்.***

தெளிவுரை: சரசரத்தி திருமேனி யுடைய வாணலிங்கமானது மனமுருகும்படி மனைவியையும் புத்திரரையும் நாசமாக்கும்.

***105) உச்சிக் குழியி லொடுக்குமுயி ரைக்கோணி***
***லிச்சையுறு மில்லிழப் பிக்கும்.***

தெளிவுரை: உச்சியிலே குழி விழுந்து இருக்குமாயின் உயிரைப் போக்கும் மேல்பாகம் வளைந்ததாகில் விருப்பம் பொருந்திய வீட்டினை இழப்பிக்கும்.

***106) களங்கங் கயரோகங் காட்டுங்காக் கைக்கால்***
***களைந்துவிடு மேகழுத்தைக் காய்ந்து.***

தெளிவுரை: களங்கமுள்ள இலிங்கம் க்ஷய ரோகத்தை உண்டாக்கும், காக்கை கால் போல கீரல்களை உடைய இலிங்கமானது கழுத்தைக் கோபித்துப் போக்கும். களங்கம் மூன்று வகையாகும். அவை மயினிறமும், கறுத்த அப்பிரகக் கன்னிறமும், நீலக்கன்னிறமுமாகும்.

***107) இட்டங் கெடுக்கும்விந் துத்தா னிரேகைதான்***
***வெட்டுவிக்கும் வாளால் விரைந்து.***

தெளிவுரை: விந்துவினையுடைய இலிங்கம் அபீஷ்டத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கெடுக்கும். இரேகை யினையுடைய இலிங்கம் விரைந்து வாளினாலே வெட்டு விக்கும்.

விந்துவானது இளம்பெண்களுடைய முலைக் கண்ணிறத்தை யுடையதும், நாவற்பழ நிறத்தையுடையதும் என இருவகைப்படும். இரேகையானது ஆகாயத்தினின்று விழும் மழைத்துளித்தாரை போன்றதும் பூமியிலெற்றிய கயிறு போன்றதும் பலவாகச் சிதறிய சூரிய கிரணம் போன்றதும் என மூன்று விதமாகும்.

***108) அதிதூல லிங்கத் தருச்சனை செய்யே***
***லதிநுண்மை யுஞ்சிறந்த தன்று.***

தெளிவுரை: மேலே சொல்லப்படும் பஞ்ச சூத்திரத்துக்கு ஒவ்வாமல் மிகப் பருத்திருக்கும் சிவலிங்கத்தை பூசை செய்யாது தவிர்த்தல் வேண்டும். அவ்வாறே மிகச் சிறிய இலிங்கமும் சிறப்புடையதன்று.இக்குற்றங்கள் எல்லாம் போககாமிகளுக்கே முக்திகாமிகளுக்கு அன்று.

***109) ஆயு வழியு மதிக மிலிங்கமெனின்***
***வீயுநிதி பீட மிகின்.***

தெளிவுரை : சிவலிங்கத்தை எண்ணிக்கை அதிகமாக வைத்து பூசை செய்யில் வயது குன்றும் பீடம் அதிகமாகில் திரவியங்குன்றும்.

**பஞ்ச சூத்திர விதியை மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***110) லிங்கத்தைச் சூழ்ந்துபுடை மிற்பருமை யெண்ணிடுக***
***வங்கதுபீ டத்தினக லம்.***

தெளிவுரை முதற்கண் இலிங்கத்தைச் சுற்றி அதனது சுற்றுப்பருமையை அளந்து அது எவ்வளவோ அவ்வளவே பீடத்தின் அகலமாகக் கொள்ளவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*111) ஐந்துகூ றாக்கவத னைப்பீடத் துன்னதநான்*
*கொன்றுசிவ லிங்கோன் னதம்.*

தெளிவுரை: அந்தச் சுற்றுப் பருமையை ஐந்து கூறாக்குக. அவற்றுள் நான்கு கூறு பீடத்தின் உயரமும் ஒரு கூறு சிவலிங்கத்தின் உயரமுமாகக் கொள்க.

*112) ஐந்துகூற் றிற்பாதி கோமுகைகண் டப்பருமை*
*யைந்துமதன் பாதியுமே யாம்.*

தெளிவுரை: பீடத்தின் வட்டத்தை விட்டுக் கோமுகையின் நீளம் இரண்டரை கூறும் பீடத்தினது கண்டப் பருமை ஏழரைக் கூறுமாகக் கொள்க.

**பஞ்சசூத்திரவிதி பாரா வழிப்படுங்குற்ற முணர்த்துகின்றார்**

*113) பஞ்சவித சூத்திரத்தைப் பார்த்துலிங்கத் தர்ச்சனைசெய்*
*யெஞ்சலதி கம்பழுதென் றெண்.*

தெளிவுரை: சிவலிங்கத்திலே இங்ஙனம் கூறிய பஞ்ச சூத்திரங்களை முன்னே பார்த்து அவைகள் குறையினுமாகினுங் குற்றமுண்டாகும் என்றறிந்து அவைகள் சரியான அளவை உடையின வாயின் அவற்றில் பூசை செய்க.
குறையில் வியாதியும் மிகிற் சத்ரு பீடையுமும் உண்டாகுமென்று அறிக.

**வாணலிங்கத்துக்கு அடி முடி வரையறுத் துணர்த்துகின்றார்**

*114) முடிதூல மாமுக முன்னதமாஞ் சூக்க*
*மடிவாண லிங்கத்தென் றார்.*

தெளிவுரை: வாணலிங்கத்திலே தூலமாயிருக்குமிடம் முடியென்றும் உயர்ந்திருக்குமிடம் முகமென்றும் குவிந்திருக்குமிடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடியென்றும் நூலோர்கள் கூறினார்கள். இங்ஙனம் பகுத்துணர்ந்த இலிங்கத்தை ஐந்து கூறாகச் செய்து மேலே மூன்று கூறுகளை நிற்க கீழிரண்டு கூற்றையும் உள்ளே பதித்து அஷ்ட பந்தனம் சாத்துக. இடவிதாயிருந்தாலும் குவிந்திருந்தாலும் எவ்விடம் அழகு பெற்றுள்ளதோ அவ்விடமே திருமுடியெனக் கொள்ளலும் ஆகும்.

படிக இலிங்க விலக்கணம் மூன்று குறளாலுணர்த்துகின்றார்.

115) *சூரியகாந் ததன்னைச் சூழ்ந்துறும் பஞ்சினைத்தான்*
*சூரியன் முன்னே சுடும்.*

தெளிவுரை: சூரிய காந்தமானது மததியானத்திலே சூரியனுக்கு முன்னே தன்னை வைத்து தன் கீழ் பஞ்சை வைக்கில் அதனிடத்தே அக்கினியை பிறப்பிக்கும்.

116) *சந்திரகாந் தந்தனைச்சூழ் பஞ்சுதனிற் றண்புனலைச்*
*சந்திரன் முன்னே தரும்.*

தெளிவுரை: சந்திர காந்தமானது சந்திரனுக்கு முன்னே தன்னைப் பிடித்து தன் கீழ் பஞ்சை வைக்கில் அதனிடத்தே குளிர்ந்த ஜலத்தைத் தரும்.

117) *இவ்விரண்டு மல்லா ததுபடிக மென்றெணுக*
*வவ்விரண்டி னோடொன்றே யாம்..*

தெளிவுரை: இவ்விரண்டு மல்லாதது படிக மென்று அறிக.

அவ்வியத்தம் முதலிய இலிங்கங்களின் பெயரும் தொகையும் உணர்த்துகின்றார்.

118) *அவ்வியத்த மற்றை வியத்தம்வியத் தாவ்வியத்த*
*மிவ்விதத்தான் மூன்றிலிங்க மென்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிவலிங்கமானது அவ்வியத்தம், வியத்தம், வியத்தாவ்வியத்தம் என்று மூன்று வகைப்படும்.

**அவ்வியத்தலிங்கமும் வியத்திலிங்கமு முணர்த்துகின்றார்**

***119) அவ்வியத்தம் பீடலிங்க மங்கமனைத் தும்விளங்கு மவ்விலிங்க மேவியத்த மாம்.***

தெளிவுரை: பீடமுஞ் சிவலிங்கமுமாக இருப்பது அவ்வியத்த லிங்கம் என்றும் கர சரணாதி அவயவங்கள் எல்லாம் விளங்கும் இருபத்தைந்து விக்ரஹ பேதங்களும் வியக்த லிங்கம் என்றும் சொல்லப்படும். அவ்வியத்த லிங்கம் சர்வதோ பத்ரம், வரகுத்த மானம், சைவாதிகம் ஸ்ரீ ராசிகம் என நான்கு வகைப்படும். அவை ஒவ்வொன்றும் நான்கு நான்காக பதினாறு வகைப்படும். அவை ஒவ்வொன்றும் நான்கு நான்காக அறுபத்தி நான்கு வகைப்படும். இருபத்தைந்து விக்கிரகங்களாவன சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, ஜலந்தராரி, மாதங்காரி, வீரபத்ரர், ஹரியர்த்தர் அர்த்தநாரீஸ்வரர், கிராதர் கங்காளர். சண்டேசானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகாபாதர், சுகாசீனர், நீலகண்டர், சக்ர பிரதர், கஜமுகானுக்கிரகர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர் என்பவைகளாகும்.

**வியத்தா வியத்த லிங்க முணர்த்துகின்றார்.**

***120) விளங்கின் முகமே வியத்தாவ் வியத்த மிலிங்கந் தனிலென்றே யெண்.***

தெளிவுரை: இலிங்கத்திலே முகமும் தோள்களும் விளங்கி தோன்றிடின் அவை வியத்தாவ்வியத்த லிங்கம் எனப்படும்.

வியத்தம்: எல்லா உறுப்புக்களும் வெளிப்பட்டிருப்பது அவ்வியத்தம், அவை வெளிப்படாதிருப்பது வியத்தாவியத்தம். சில உறுப்புகள் வெளிப்பட்டும் மற்றவை வெளிப்படாமலிருப்பதும் ஆகும். வியத்தாவ்வியத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லிங்கஞ் செய்யுமிடத்து உருத்திர பாகத்தை மூன்று கூறாக பிரித்து நடுக்கூற்றில் ஒரு முகமேனும், மூன்று முகமேனும், நான்கு முகமேனும் செய்க. மேற்கூற்றிலே திருமுடியுங் கீழ்க் கூற்றிலே கழுத்துந் தோண் முலைமட்டும் செய்க. கீழுள்ள கைகள் செய்யலாகாது. முகமொன்றாயின் வியாதியை நீக்கும், மூன்றாயின் சாந்தியை பண்ணும், நான்காயிற் சுகத்தைக் கொடுக்கும், இரண்டாயினும் ஐந்தாயினும் அரிட்டங் கொடுக்கும்.

**அசல முதலிய இலிங்கங்களின் பெயரும் தொகையும் உணர்த்துகின்றார்.**

***121) அசலஞ் சலனஞ் சலாசல மற்றை***
***யசலசல மென்றொருநான் காம்.***

தெளிவுரை: சிவலிங்கமானது அசலம், சலனம், சலாசலம், அசலசலம் என்று நான்கு வகைப்படும்.

**அசல லிங்கமுஞ் சலனலிங்கமு முணர்த்துகின்றார்.**

***122) கோபுர மாதி யசலங் குறிப்பினுள்ளே***
***தாபிதலிங் கஞ்சலனந் தான்.***

தெளிவுரை: கோபுரம் முதலியன அசல லிங்கமெனவும் தனக்கு வேண்டியதொரு நிறத்திலே இருதயத்திலே கற்பித்துப் பூசிக்கப்படுஞ் சிவலிங்கம் சலனலிங்கமாம்.

ஆதியென்றதனால் விமான முதலியனவும் கொள்க. போக்குவரவின்மையால் அசலமெனவும் போக்குவரவு உள்ளபடியால் சலனமெனவும் சொல்லப்பட்டது.

**சலாசல லிங்கமும் அசலசல லிங்கமும் உணர்த்துகின்றார்**

***123) வாணலிங்க மற்றுஞ் சலாசலமே மண்டலமுங்***
***காணி சைலசலங் காண்.***

தெளிவுரை: வாணலிங்கம், இரத்தினலிங்கம் முதலியன சலாசல லிங்கங்களாகும் வேதிகையிலே மண்டலமிட்டு பூசிக்கின் அவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசல சலமாகும் என்று அறிக.

வாண லிங்கம் முதலாயின இஷ்டலிங்கமாகவும், பரார்த்தத்திலே சிவ சன்னதியில் அங்கலிங்கமாக பூசிக்கப்படுகின்ற படியால் சலம் எனவும் பரார்த்தமாக தாபிக்கபடின் அசலமாகவும் நிற்றலால் சலாசலமெனப்பட்டன. அனந்த, விஜய முதலிய தொண்ணூற்றாறு மண்டல லிங்கங்களுள் யாதொன்று தீக்ஷைக்குச் சொல்லியபடி வேதிகையிட்டுப் பூசிக்கப்படின் அசலமெனவும் இட்டலிங்கமாக நாள்தோறும் பூசிக்கபடின் சலமெனவும், நிற்றலால் அசல சலமெனப் பட்டன.

**சிவ பூசைக்கு அருகரல்லாதார்க்குப் பூசாவிதி மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***124) உயர்ந்தகுலத் தோருட் பழுதுறுப்பி னோரு***
***முயர்ந்தாரை யல்லாதா ரும்.***

தெளிவுரை: உயர்வாகிய நான்கு வருணத்தாருள் உறுப்புக் குறைந்தவர்களும் நான்கு வருணத்தாரல்லாத சங்கர ஜாதியானும்.

***125) குறித்து மறுமை குரவன் பதத்தைக்***
***குறித்தவன்செய் தீக்கைதகக் கொண்டு.***

தெளிவுரை: மறுமை இன்பத்தை விரும்பி ஆசாரியருடைய திருவடிகளை அடைந்து தங்கள் தங்கள் அதிகாரனு குணமாக அவர் பண்ணிய தீக்ஷையைப் பெற்று.

***126) குறித்துச் சிவனெனக் கோபுரத்தைப் பூவும்***
***பறித்தருச்சித் தேத்துகபாங் கால்.***

தெளிவுரை: திருக்கோபுரத்தைச் சிவபெருமானாக பாவித்து பத்திர புஷ்பங்களைப் பறித்து விதிப்படி பூஜித்து துதிக்கக் கடவர்கள். தூபியையும் அவ்வாறே அர்ச்சிக்க.

**தூல முதலிய மூவித லிங்கங்களை யுணர்த்துகின்றார்**

***127) தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க***
***மேலும் பலிபத் திரம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிகரம் தூலலிங்கம் என்றும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்ஷம லிங்கம் என்றும், அதற்கு முன்னே பொருந்திய பலி பீடம் பத்ர லிங்கம் என்றும் சொல்லப்படும்.

**அந்தரி யாக பூஜை உணர்த்துகின்றார்.**

***128) தம்முள்ளத் துற்ற சலனசிவ லிங்கத்துந்***
***தம்மன்பா லர்ச்சிக்க தாம்.***

தெளிவுரை: தம்முடைய இருதயத்தை எட்டிதழ்த் தாமரையாகக் கருதி அதை ஆசனமாக்கி அதில் எட்டங்குல உயரமும் தமக்கு வேண்டியதொரு நிறமுள்ளதாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கத்தில் புறப்பூசை செய்வதை போல அகப்பூசையைக் கொல்லாமை முதலிய அஷ்ட புஷ்பங்களால் அன்போடு பூசை செய்க.

அஷ்ட புஷ்பங்களாவன, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பனவாகும்.

**இம்முறை செய்யமாட்டாதற்கு வேறோரு விதியுணர்த்து கின்றார்.**

***129) இரவியுளத் தென்று மிலங்கு மமலன்***
***கரமலரா லர்ச்சிக்க கண்டு.***

தெளிவுரை: நிருமலராகிய சதாசிவமூர்த்தி ஆதித்த மண்டலத்தின் கண் அனவரதமும் எழுந்தருளியிருப்பாரெனக் கருதி ஆசன மூர்த்தி மூலங்களை உச்சரித்து அவருக்கெதிராகக் கைகளினாலே புஷ்பங்களைத் தூவி அருச்சனை செய்யக் கடவர்கள்.

**பூசைசெய்யாதார்க்கு கதியில்லையென்றுணர்த்துகின்றார்.**

***130) தமக்கருக மோருருவிற் பூசை சமையார்***
***தமக்குத் துணையாதோ தான்.***

தெளிவுரை: தங்கள் தங்கள் வருணத்துக்கு அருகமாகிய ஓருருவினிடத்தில் சிவபூசை செய்யாதவருக்கு யாது துணையுமுண்டோ இல்லையாம். தத்தமக்கு அருகமல்லாத பூசைகளைச் செய்தால் உலகத்துக்கும் அரசனுக்கும் தீங்கு விளைவித்துத் தாமும் நரகத்தில் முழ்குவரென சிவாகமம் செப்புமென்றறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*"திருக்கோயிலில்லாத திருவிலூருந் திருவெண்ணீரணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிகளில்லா வூரும்
விருப்போக வெண்சங்கம் ஊதா வூரும் விதானமும் வெண் கொடியு மில்லாவூரு
மருப்போடு மலர் பறித்திட் டுண்ணாவூரும் அவையல்லா மூரல்ல வடவிகாடே"*
என்றும்
*"திருநாமமஞ் செழுத்தும் செப்பாராகில் தீவண்ணார் திறமொருகால் பேசாராகில்
ஒரு காலுந் திருக்கோயில் சூழாராகில் உண்பதன் முன் மலர் பறித்திட்டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறனியா ராகில் அளியற்றார் பிறந்தவாறே தோவென்னிற்
பெருநோய்கண் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"*
என்றும் வரும் திருநாவுக்கரசு நாயனார் திருவாக்காலு முணர்க.

**131) சிவபூசைக்கின்றியமைய யாச் சிவசின்ன முணர்த்துகின்றார்.**

***பூணாமற் கண்டிசிவ பூசைபுரி வார்பலத்தைக்
காணார்பூ ணாய்கண்டி கை.***

தெளிவுரை: உருத்திராக்ஷந் தரியாமற் சிவ பூசை செய்வோர் அதனால் வரும் பயனைப் பெறமாட்டார்கள். ஆகையால் உருத்திராக்ஷந் தரித்துக் கொண்டே சிவ பூசையை செய்க.

சிவ பூசையைக் கூறவே சிவமந்திரசெபம் சிவாலய சேவை முதலிய பிற சிவ புண்ணிய சேவைகள் செய்யும் போதும் உருத்திராக்ஷந் தரித்தல் வேண்டுமென்பது தானே பெறப்படும்.

**உருத்திராக்ஷந் தரிக்கக் கூசிய வழிப்படுங் குற்ற முணர்த்துகிறார்.**

***132) பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காண்பதற்குக் கூசுமரன் கைத்து.***

தெளிவுரை : உருத்திராக்ஷத்தை தரிப்பதற்கு கூசுகின்ற கீழ்மக்களை சிவபெருமான் வெறுத்துப் பார்ப்பதற்கு கூசுவர்.

**உருத்திராக்ஷத்தின் விசிட்ட முணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

### 133) உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளுங் கண்டி விசிட்டமெனக் காண்

தெளிவுரை: உருத்திராக்ஷமணி, தாமரைமணி, பளிங்குமணி, புத்திர தீபமணி, சங்குமணி, எனப் பலவகை மணிகளுண்டு. அவைகளெல்லாவற்றுள்ளும் உருத்திராக்ஷமே விசிட்டம் என்று அறிக.

உருத்திரனது கண்ணில் தோன்றியமையால் உருத்திராக்ஷமெனப் பெயர் பெற்றது. தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்து கொண்ட பொழுது திருக்கைலாசபதி ஆயிரந் தேவவருடம் தம்முடைய மூன்று திருக்கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப அவைகளினின்றும் நீர் பொழிந்தன.

சூரிய ரூபமாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு ருத்ராக்ஷமரமும் சந்திர ரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினாறு ருத்ராக்ஷ மரமும் அக்னி ரூபமாகிய நெற்றிக்கண் பொழிந்த நீரிலே பத்துருத்திராக்ஷ மரமும் தோன்றின. வலக்கண்ணில் இருந்து கபில நிற ருத்ராக்ஷமமும், செந்நிற ருத்ராக்ஷமமும் பொன்னிற ருத்ராக்ஷமும் தோன்றின. இடக்கண்ணின்று வெண்ணிற ருத்ராக்ஷம் தோன்றிற்று. நெற்றிக் கண்ணின்றும் கரு நிறவுருத்திராக்ஷம் தோன்றியது. வெண்ணிறமணி பிராமணராலும், கபில நிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்ரியராலும், பொன்னிறமணி வைசியராலும், கருநிறமணி சூத்திரராலும் தரிக்கற் பாலன வாகும்.

**உருத்திராக்ஷத்திற்கு முக நியமமுணர்த்துகின்றார்.**

### 134) ஒன்றிரண்டு மூன்று நான் கைந்தாறே ழெட்டொன்பா னொன்றொன்பான் மற்றுமுக முண்டு.

தெளிவுரை: அந்த உருத்திராக்ஷத்தில் ஒரு முகம், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, அதற்கு மேற்பட்ட முகமணியு முண்டாகும்.

பதினாறு வரைக்கும் உண்டென அறிக. ஒரு முக மணி சிவனுக்கும் இரண்டு முக மணி சக்திக்கும், மூன்று முகமணி தரிக்கில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிமூர்த்திகளுக்கும் நான்கு முகமணி தரிக்கிற் பிரமாவுக்கும், ஐந்து முகமணி தரிக்கில் சதாசிவ மூர்த்திக்கும்,ஆறுமுகமணி தரிக்கிற் சுப்பிரமணியருக்கும், ஏழு முக மணி தரிக்கில் சப்த மாதர்களுககும், எட்டு முகமணி தரிக்கில் அஷ்ட வித்யேஸ்வரர்களுக்கும் ஒன்பது முக மணி தரிக்கில் கங்கை முதலான நவதீர்த்தங்களுக்கும் பத்து முக மணி தரிக்கில் பத்து திக் பாலகர்களுக்கும் பதினொரு முகமணி தரிக்கில் பதினொரு ருத்திரர்களுக்கும் பன்னிரண்டு முகமணி தரிக்கில் விஷ்ணு மூர்த்தியாகிய வாசுதேவர் முதலிய பன்னிரு மூர்த்திகளுக்கும் பதின் மூன்று மணி தரிக்கில் சத ருத்திரர்களுக்கும், பதிநான்கு முக மணி தரிக்கில் அசுவினி தேவதைகளுக்கும் பதினைந்து முகமணி தரிக்கில் சந்திரன் வருணன் முதலான தேவர்களுக்கும் பதினாறு முகமணி தரிக்கில் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் பிரம்மா விஷ்ணு சிவன் எல்லோருக்கும் பிரீதியாகும் என்று அறிக.

இந்தப் பிரகாரமின்றி மற்றொரு பிரகாரம் சிவாகமத்தில் கூறப்படும் ஒரு முக மணிக்கு அதிதேவதை பரமசிவன். அது பிரம்மகத்தியைப் போக்கும். இரண்டு முகமணிக்கு அதிதேவதை ஸ்ரீகண்ட பரமசிவன். அது கோகத்தியைப் போக்கும். மூன்று முகமணிக்கு அதிதேவதை அக்கினி, அது ஸ்திரிகத்தியை போக்கும். நான்கு முகமணிக்கு அதிதேவதை பிரம்மா. அது நரகத்தியை போக்கும். ஐந்து முகமணிக்கு காலக்கினி ருத்திரர். அது புணர்தற்பாலரல்லாதாரைப் புணர்ந்த பாவத்தையும் புசிக்கற் பாலன வல்லாதனவற்றைப் புசித்த பாவத்தையும் போக்கும். ஆறுமுக மணிக்கு அதிதேவதை சுப்பிரமணிய கடவுள். அது பிரம்மகத்தி முதலிய பாவங்களைப போக்கும். ஏழுமுகமணிக்கு அதிதேவதை ஆதிசேஷன் அது கோகத்தியையும் பொற்களவையும் போக்கும். எட்டுமுக மணிக்கு அதிதேவதை விநாயகக்கடவுள். அது குருபன்னியைப் புணர்ந்த பாவத்தையும் பொற்களவையும் துலாதான முதலிய தானங்கள் வாங்கிய பாவத்தையும் பிறரன்னத்தைக் கவர்ந்துண்ட பாவத்தையும் போக்கும். ஒன்பது முக மணிக்கு அதிதேவதை வைரவக்கடவுள். அது ஆயிரம் பிராணகத்தியையும், நூறு பிரமகத்தியையும் பூதம், பிசாசும், சர்ப்பம் முதலியவற்றால் ஆகும் விக்கினங்களையும் போக்கி சித்தி முத்திகளை கொடுக்கும். பத்துமுகமணிக்கு அதிதேவதை விஷ்ணு. அது நாள், கோள், பேய், பூதம், பிரம்மராக்ஷத முதலியவற்றால் உண்டாகிய தீங்குகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாவற்றையும் போக்கும். பதினொரு முகமணிக்கு அதிதேவதைகள் பதினொரு ருத்திரர். அது ஆயிரம் அசுவமேத பலத்தையும் நூறு வாசபேய பலத்தையும் இலக்ஷம் கோமேத பலத்தையும் கொடுக்கும். பன்னிரண்டு முகமணிக்கு அதிதேவதைகள் பன்னிரண்டு ஆதித்தர்கள். அது கோமேத பலத்தையும், அசுவமேத பலத்தையும் சுவர்ண தான பலத்தையும், கொடுக்கும். பதிமூன்று முகமணிக்கு அதிதேவதை சுப்ரமணியக்கடவுள். அது சர்வாபீஷ்டத்தையும், சர்வசித்தியையும் கொடுக்கும். மாதாவையும் பிதாவையும் சகோதரரையும், புத்திரரையும் கருவையுங்கொன்ற பாவங்களைப் போக்கும். பதினான்கு முகமணிக்கு அதிதேவதைகள் சிவமும் சக்தியும். அது தன்னைத் தரித்தோர்க்குத் தேவர் முனிவர் முதலாயின எல்லோரையும் வசப்படுத்தும் சிவபதத்தைக் கொடுக்கும். அது கிடைப்பதரிது. ஆறுமுகமணி வலப்புயத்தினும், ஒன்பது முகமணி இடப்புயத்தினும் பதினொரு முகமணி சிகையினும், பன்னிரண்டு முகமணி காதுகளினும், பதினான்கு முகமணி சிரசிலும் தரிப்பது உத்தமம்.

**செபமாலைக்கு மணி கொள்ளுமாறுணர்த்துகின்றார்**

***135) ஒருவிதமே கோவைக் குறுதியஃ தன்றிப்
பலவிதத்தா மாலை பழுது.***

தெளிவுரை: செபமாலைக்கு உருத்திராக்ஷமணி கொள்ளுமிடத்து எல்லாம் ஒரே விதமான முகங்களை யுடையனவாகக் கொள்ளுதலே தகுதி. அவ்வாறு இன்றி பலவிதமாகிய முகமணிகளையும் கலந்து கோர்த்த செபமாலை குற்றமுடையது என்று அறிக. செபமாலைக்கு இரண்டுமுகமணியும், மூன்றுமுகமணியும், பன்னிரண்டு முகமணியும் பதின்மூன்று முகமணியும் ஆகாது என்று அறிக.

**செபமாலைப் பிரதிட்டை ஐந்து திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***136) சத்தியோ சாதத் தபிடேகஞ் சாதிக்க
வுத்தரத்தான் மத்திக்க வோர்ந்து.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: விதியை ஆராய்ந்து சத்தியோஜாத மந்திரத்தினாலே எண்ணெய்க் காப்பு முதலியவற்றால் அபிஷேகம் பண்ணி வாமதேவ மந்திரத்தினாலே குச்சுப்புல்லு சார்த்தி, இருதய மந்திரத்தினாலே கந்த புஷ்பஞ் சாத்துக.

**உத்தரதிசையை நோக்கும் வாமதேவத்தை உத்தரமென்றார்.**

***137) கொடுத்திடுக தூப மகோரமனுக் கூறித்***
***துடைத்திடுக தற்புருடஞ் சூழ்ந்து.***

தெளிவுரை: அகோரமந்திரத்தை உச்சரித்துத் துபம்,,தீபம் கொடுத்து தற்புருடமந்திரத்தை உச்சரித்துத் திருவொற்றாடை சாத்துக.

***138) தனித்தனியே யீசானத் தாலே சதக***
***மெணிக்குறையா மேசெபிக்க வேய்ந்து***

தெளிவுரை: ஒவ்வொரு மணியையும் தொட்டு ஈசானமந்திரத்தினாலே நூறு நூறு உருவிற்கு குறையாமல் அபிமந்திரிக்க.

***139) நாயகத்தைத் தொட்டு நவில்க பிரமமெலா***
***மேய சதங்குறையா தே.***

தெளிவுரை: நாயகமணியைத் தொட்டு பஞ்சபிரமத்தினாலே பொருந்திய நூறுஉருவிற்கு குறையாமல் அபிமந்திரிக்க, பஞ்சபிரமமாவன ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம் சத்தியோசாதம் என்பனவாம்.

***140) பரமசிவ னைப்பூசை பண்ணுமுறை போலப்***
***பரமமா நாயகத்திற் பண்.***

தெளிவுரை: நித்திய கர்மத்திலே பரமசிவனைப் பூசிக்குமுறைமை போல சக்தியாதிசக்திபர்யந்தமாக மேலாகிய நாயகமணியிலே பூசை பண்ணு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இப்படிப் பிரதிட்டை செய்யப்பட்ட செபமாலைக் கொண்டு செபிக்கினன்றிப் பெரும்பயன் எய்தாதெனச் சிவாகமங்கள் கூறுகின்றன.

**உருத்திராக்ஷந்தரிக்கு முறைமை மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***141) சிரத்தி னுரத்திற் றிணிதோ டிரண்ட***
***கரத்தினும்பூ ணாய்கண்டி கை.***

தெளிவுரை : உருத்திராக்ஷமாலையை தலையினும், மார்பினும், திண்மை கொண்ட புயங்களினும், திரண்ட கைகளினும் அததற்குச் சொல்லிய மந்திரங்கொண்டு தரிக்க.

உம்மையால் காது கழுத்துச் சிகை உபவீதங்களினும் எனக்கொள்க. சிகையிலும், சிரசிலும், ஈசானமந்திரத்தினாலும் காதுகளில் தத்புருட மந்திரத்தினாலும். கழுத்திலும் அகோர மந்திரத்தினாலும் மார்பில் வியோமவியாபினி மந்திரத்தினாலும், புயங்களிலும், கைகளிலும் பிராசாத மந்திரத்தினாலும் தரிக்க. சயனத்தினும், மலசல மோசனத்தினும் புணர்ச்சியினும், நோயினும், சனனாசௌசு மரணசௌசங்களினும் உருத்திராக்ஷதாரணம் கூடாது. சிகையினும் காதுகளினும் உபவீதத்தினும் எப்போதும் உருத்திராக்ஷம் தரித்துக் கொள்ளலாம்.

உருத்திராக்ஷம் தரித்துக்கொண்டு மாமிசபோசனம், மதுபானம் முதலானவை செய்தவர் தப்பாது நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

***142) கரத்தி னளவுகர மாலைசிர மாலை***
***சிரத்தி னளவென்றே தேறு.***

தெளிவுரை: கைம்மாலை கைபருமை அளவின தாகவும் தலைமாலை தலைப்பருமை அளவினதாகவும் இருத்தல் வேண்டுமென்றறிக.

***143) உரமாலை நாபியந்த மென்றுணர்க வன்றி***
***யுரமாலை யுஞ்செயலா கும்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை : மார்புமாலை பிடர்முதல் கொப்புழ் வரையினதாக இருத்தல் வேண்டுமென அறிக. அவ்வாறு இன்றி பிடர்முதல் மார்புவரையினதாகவும் மார்புமாலை செய்யலாம். வெவ்வேறு தானங்களில் தரிக்கப்படும். உருத்திராக்ஷ மாலைகளுக்கு மணியளவு எண்ணளவு எனவும் (எல்லை) எல்லையளவு எனவும் இருவகைப்படும். அவற்றுள் இந்நூலில் கூறப்பட்டது எல்லையளவு. உரையிற்கோடலென்னு முத்தியினால் எண்ணளவு சிவாகமத்திற் கண்டபடி கூறுதும்: சிகையிலே ஒரு மணியும் தலையிலே முப்பத்தாறுமணியும் காதுகளிலே ஒவ்வொரு மணியும் அல்லது ஆறுமணியும், கழுத்திலே முப்பதிரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறுமணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியும் கொண்ட மாலை தரிக்கலாம் என்று உணர்க. உருத்திராக்ஷங்களை, வெள்ளி, பொன், முத்து, பவளம், இடைஇடையே இட்டு முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக் கோர்த்துத் தரிக்க.

**செபமாலையிலக்கணம் நான்கு திருக்குறளாலுணர்த்து கின்றார்.**

***144) செய்கசெப மாலைநூற் றெட்டினாற் பாதியுறச்***
***செய்யலுமாம் பாதத்துஞ் செய்.***

தெளிவுரை: செபமாலையினை நூற்றெட்டு மணியினாலே செய்க.

அதில் பாதியாகிய ஐம்பத்தினான்கு மணியினாலே செய்தலுமாம். கால்பங்காகிய இருபத்திஏழு மணியினாலும் செய்க.

போககாமி இம்மூவகைச் செபமாலைகளுள் ஒன்றினால் செபிக்க. முத்திகாமி இருபத்தைந்து மணி கொண்ட செபமாலையினால் செபிக்க. செபத்துக்கு விரலினும் விரலிறை எட்டுமடங்கு அதிகம். அதினும் புத்திரதீபமணி மாலை பத்துமடங்கு அதிகம். அதினும் சங்குமணி மாலை நூறு மடங்கு அதிகம். அதினும் பவளமணி மாலை ஆயிரம் மடங்கு அதிகம். அதினும் படிகமணிமாலை பதினாயிரம் மடங்கு அதிகம். அதினும் முத்துமாலை இலக்ஷமடங்கு அதிகம். அதினும் தாமரை மணி மாலை பத்து இலக்ஷம் மடங்கு அதிகம் அதினும் பொன் மணிமாலை கோடிமடங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிகம். அதினும் தர்ப்பைப் பவித்திர முடிச்சுமாலை பத்துகோடிமடங்கு அதிகம். அதினும் உருத்திராக்ஷ மாலை அநந்த மடங்கு அதிகம். உருத்திராக்ஷ மாலையை தரிசித்தவருக்கு இலக்ஷ மடங்கு பலம். பரிசித்தவருக்கு கோடிமடங்கு பலம். சரீரத்திலே தரித்தவருக்கு ஆயிரம் கோடி மடங்கு பலம். கையிற் கொண்டு செபித்தவருக்கு அநந்த மடங்கு பலம்.

***145) இடையின் முடிக முகமுகத்தை யெய்த***
***வடியடியை யொன்றச்செய் தாய்ந்து.***

தெளிவுரை: ஆராய்ந்து மணிகளை ஒன்றோடு ஒன்று கூடாமல் முகம் முகத்தைப் பொருந்தவும் அடி அடியைப் பொருந்தவும். வெண்பட்டிலேனும் பருத்தியிலேனும் இருபத்து ஏழு இழையினாலாக்கிய சூத்திரத்தினாலே கோர்த்து இடையிடையே நாகபாசம், பிரம்மக்கிரந்தி. சாவித்திரி என்பவைகளுள் இயன்றதொரு முடிச்சை இடுக.

***146) ஒன்றியுற நாயகந்தா னுச்சிதனிற் செய்திடுக***
***வென்றும் வரமே யிது.***

தெளிவுரை: செபமாலை வட நுனி இரண்டையும் ஒன்றாகக் கூட்டி அதிலே நாயகமணியை ஏறிட்டுக் கோர்த்து முடிக. இது எக்காலத்தினும் சிறப்புடையது.
நாயகம் என்பதும் மேரு என்பதும் ஒக்கும் (ஒன்றாகும்)

***147). இலங்கியா தேநா யகமேற்றிச் சொல்க***
***விலங்கிற்றேற் பாவமுறு மே.***

தெளிவுரை : செபிக்கும் போது நாயகமணிக்கு அடுத்த முகம் மேனோக்கிய மணியை முதலாக தொட்டுச் செபித்து பின்பு நாயகமணி கைப்பட்டதாகில் அதனைக் கடவாமல் திரும்ப மறித்து வாங்கி அதனைத் திரும்பக் கரத்திலே ஏறிட்டுச் செபிக்க. நாயகமணியைக் கடந்து செபிக்கிற் பாவம் உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயகமின்றியுஞ் செபமாலை செய்யுமுறைமை யுணர்த்து கின்றார்.

*148) பாவமு மில்லை பலனு மதிகமிலை*
*கோவையினை மேருவறக் கொள்.*

தெளிவுரை: செபமாலையை நாயகமணியின்றியும் செய்து கொள்க. அதனால் பாவமும் இல்லை பலனும் அதிகமில்லை என்று அறிக.

செபமாலை கொண்டு செபிக்கு முறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*149) பரர்பார்வைப் பட்டாற் பலியா செபங்கள்*
*பரர்பாரா வண்ணம் பரி.*

தெளிவுரை: செபிக்கும் போது செபமாலை பிறர் கண்ணுக்குப் புலப்பட்டால் செபங்கள் பயன்படாதாம். ஆதலால் செபமாலையைப் பிறர் காணாவண்ணம் பரிவட்டத்தால் மூடிக் கொண்டு செபிக்க.

*150) ஓசையுறிற் பாவ முறுமதனான் மாலைதனி*
*லோசையுறா மற்செபிக்க வோர்ந்து.*

தெளிவுரை : செபிக்கும்போது செபமாலையில் மணிகள் ஒன்றோடு ஒன்று ஓசைப்பட்டால் பாவமுண்டாகும். அதனால் ஓசை வராமல் செபிக்க.

மந்திரோச்சாரண பேதம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.

*151) மானத மந்தமுரை யென்னவொரு மூன்றாகு*
*மானதநெஞ் சிற்செபிக்கு மாறு.*

தெளிவுரை : மந்திரோச்சாரண மானது மானதம் எனவும், மந்தம் எனவும், ஒலிஎனவும், மூவகைப்படும். அவற்றுள், மானதமாவது நா நுனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதழைத் தீண்டாமல் ஒருமை பொருந்தி மனசினாலே செபித்தலாம்.

***152) மந்தந் தனதுசெவி கேட்கச் சொலுமாற்ற
மந்தம் பிறர்செவிக்கு மாம்.***

தெளிவுரை: **மந்தமாவது** தன் காது மாத்திரம் கேட்கும்படி நாநுனி இதழைத் தீண்ட மந்தமாக செபித்தலாம். இறுதியிற் கூறிய ஒலியாவது அருகிலிருக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி செய்தலாம்.
மந்தத்தை உபாஞ்சு எனவும் ஒலியை வாசகமெனவும் கூறுவர்.

**மந்திரோச்சாரணங்களுக்கு விரனியமம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***153) தர்ச்சனி யாதி தனிற்செறிக்க மாலையினை
முற்றுமொலி யாதி மொழிக்கு.***

தெளிவுரை: முடிக்கின்ற ஒலி, மந்தம், மானதம் என்னும் மூவித செபங்களையுஞ் செய்யும் இடத்து செபமாலையை முறையே தர்ச்சனி, மத்திமை, அநாமிகை என்னும் மூவிரல்களிலும் வைத்து செபிக்க.

***154) அங்குட்டத் தாலே யனைத்து மியற்றிடுக
வெங்கும் பொதுவென் றெணி.***

தெளிவுரை: மூவிரலினும் செபமாலையைத் தள்ளுதற்கு இதுவே பொதுவென்று நினைத்து மூவித செபங்களையும், செபமாலையைப் பெருவிரலினாலே தள்ளிச் செபிக்க.

**செபபலம் உணர்த்துகின்றார்.**

***155) முற்று மொலியின் முதிர்ந்தபல மந்தவொலி
மற்றைமன மேலாம் வரம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை : ஒலியாகச் செபித்தலினும் அதிகமாகிய பலம் மந்தமாகச் செபித்தலினால் உண்டாகும். மானதசெபமே எல்லாவற்றினும் மேலாகிய பலனைத் தரும்.

வாசகம் நூறுமடங்கு பலமும், மந்தம் பதினாயிரம் மடங்கு பலமும், மானதம் கோடி மடங்கு பலமும் தரும் என்று அறிக.

**செபகாலத்திலே தியானமும் வேண்டுமென்பதுணர்த்துகின்றார்.**

*156) உன்னிச் செபிக்க வுளத்து ளமலனடி*
*யன்னிய முந்தாழ்ந்தபல மாம்.*

தெளிவுரை: செபஞ் செய்யும்போது சிவபெருமானுடையத் திருவடிகளை மனதிலே தியானித்துக் கொண்டு செபிக்க. அப்படித் தியானமின்றிச் செய்யப்படும் செபம் அதனினும் தாழ்ந்த பலத்தைத் தரும்.

**புத்திமுத்தி யடையும் பொருட்டுச் செபிக்குமுறைமை யுணர்த்துகின்றார்.**

*157) வெறுத்தா னுடன்மாலை மேற்புரிக போகம்*
*பொறுத்தான்கீழ் நோக்கிப் புரி.*

தெளிவுரை: சரீராதிகளை வெறுத்த முத்திகாமி செபமாலையை மேனோக்கித் தள்ளி செபிக்க, போககாமி கீழ்நோக்கித் தள்ளிச் செபிக்க.

**வாயு வசத்தாற் செபிக்க முறைமையுணர்த்துகின்றார்.**

*158) சுழுனையிற்சொல் லாமிரண்டுஞ் சுத்ததனு வாமத்*
*தழிவில்லா முத்திவலத் தாம்.*

தெளிவுரை: பிராணவாயுவானது சுழுமுனைநாடியில் ஓடும் போது செபிக்கிற் புத்திமுத்தி இரண்டும் உண்டாம். இடைநாடியில் ஓடும்போது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செபித்தால் சுத்தமாயா போகம் உண்டாம். பிங்கலை நாடியில் ஓடும்போது செபித்தால் எப்போதும் அழியா மோக்ஷம் உண்டாம்.

வீட்டினின்று செபித்தால் ஓர் உருவேயாகும். பசுக்கோட்டத்தினிருந்து செபித்தால் ஓர் உரு நூறாகும். திருநந்தவனத் தினிருந்து செபித்தால் ஒன்று ஆயிரமாகும். பருவதத்தின் மேலிருந்து செபிக்கின் ஒன்று பதினாயிரமாகும். நதிக்கரையலிருந்து செபித்தால் ஒன்று இலக்ஷமாகும். சிவாலயத்தினிலிருந்து செபித்தால் ஒன்று கோடியாகும். சிவசந்நிதியிலிருந்து செபித்தால் ஒன்று அநந்தமாகும். மரப்பலகை, வஸ்திரம், கம்பளம், மான்தோல், புலித்தோல், தருப்பை, என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றிலே முழந்தாள் இரண்டையும் மடக்கிக் காலோடு காலை அடக்கி இடத்தொடையின் உள்ளே வலப்புறம் காலை வைத்து இரண்டு கண்களும் நாசி நுனியைப் பொருந்த இருந்து கொண்டு, செபிக்க. சட்டையிட்டுக் கொண்டும் சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக் கொண்டும், குடுமியை விரித்துக் கொண்டும், கௌபீனம் தரியாதும், விரலிலே பவித்திரம் தரியாதும், பேசிக் கொண்டும், இருளிலிருந்தும் கொண்டும், நாய், கழுதை பன்றி, முதலியவற்றையும் புலையர் முதலாயின எல்லோரையும் பார்த்துக் கொண்டும். செபிக்கலாகாது. செபம் செய்யும் போது கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாதாம்.

**ஒப்பின் முடித்தலென்னும் முத்தியினால் அருந்தல் பொருந்தல் களுக்குங் காலமுணர்த்துகின்றார்.**

***159) அருந்திடுக பிங்கலையி லோடி லனிலன்***
***பொருந்துகவேய்த் தோளியைப் போது.***

தெளிவுரை: பிராணவாயுப் பிங்கலை நாடியில் இயங்கும்போது போசனம் பண்ணுக. அக்காலத்தில் தானே மூங்கில் போன்ற தோளினையுடைய பெண்ணைக் கூடுக.

**காலமறிந்து கூடிய வழிப்படும் பயனுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*160) கற்புடையா டோள்கணவன் காலமறிந் தேபுணரிற்*
*சற்புத் திரனுதிப்பன் றான்.*

தெளிவுரை: நாயகன் கற்பினையுடைய மனைவியினது தோள்களைக் காலம் அறிந்து சேரில் சற் புத்திரன் பிறப்பான்.

**சகலவினைக்குஞ் சிறந்த கால முணர்த்துகின்றார்.**

*161) எல்லா வினைக்கு மினிது சுழுனையெனச்*
*சொல்லாய்வார் கொள்க துணிந்து.*

தெளிவுரை: சிவாகமங்களை ஆராய்வோர் சமஸ்த கர்மங்களுக்கும் சிறந்த காலம் சுழுமுனை நாடியிலே பிராணவாயு இயங்கும் காலமென்று துணிந்து கொள்ளக் கடவர்.

**சிவசின்னங்களிவையென்பதுணர்த்துகின்றார்.**

*162) பரம சிவனமலன் பக்தர்க்குச் சின்ன*
*முருவுடலிற் கண்டியுநீ றும்.*

தெளிவுரை: நிருமலராகிய சிவபெருமானுடைய அடியார்களுக்குரிய அடையாளங்களாவன உருவாகிய சரீரத்திலே தரிக்கப்படும் உருத்திராக்ஷமும், விபூதியுமாகும்.

**விபூதி இத்தனை வகைப்படுமென்பதுணர்த்துகின்றார்.**

*163) கற்பமநு கற்பமுப கற்ப மெனும்விதத்தா*
*லற்புதநீ றெண்ணிடின்மூன் றாம்.*

தெளிவுரை: ஆச்சரியகரமாகிய விபூதியானது ஆராயுங்கால், கற்பமும், அநுகற்பமும், உபகற்பமும் என்று சொல்லப்படும் பேதத்தினாலே மூன்றுவகைப்படும். இம்மூன்றும் அல்லாதது அகற்பம் எனப்படும்..

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறுத்தமுறையானே கற்பக விலக்கணமுணர்த்தத் தொடங்கி அதற்குக் காரணமாகிய பசுவினது இலக்கணம் மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*164) பிறந்திளைய கன்று பெறாக் கன்னி பிணியா*
*லிறந்தகன்று மாகா விழுக்கு.*

தெளிவுரை: கன்று பிரசவித்துப் பத்துநாட் சூதகமுடைய பசுவும் கன்று பிரசவியாததாகிய கிடாரியும் வியாதியுடைய பசுவும் தன் கன்று சாவப்பெற்ற பசுவுமாகிய இவற்றின் கோமயம் குற்றமுடையனவாம். ஆதலால் அவை விபூதிக்கு ஆகாதாம்

*165) மூப்பு மலடு முடைமலந் தின்பதெனு*
*மாத்தானுந் தூய்தலாவா கா.*

தெளிவுரை: கிழப்பசுவும், மலட்டுப்பசுவும், துர்கந்தம் பொருந்திய மலத்தைத் தின்னும் பசுவும், விபூதிக்கு சுத்தமுடையவனல்ல. ஆதலால் வவை ஆகாவாம்.

*166) சொன்னவிவை யல்லாச் சுரபி விதமெல்லா*
*நல்லனவே யென்றுளத்து ணாடு.*

தெளிவுரை: சொல்லப்பட்ட இவைகளல்லாத மற்றைப் பசுக்கள் எல்லாம் கோமயம் கொள்ளுதற்கு நல்லவைகளென்று மனதிலே நினைக.

பிராமணர் முதலிய நான்குவருணத்தார்க்கும் முறையே வெள்ளை, சிவப்பு, பொன்மை, கறுப்பு என்னும் நிறங்களையுடைய பசுக்களின் கோமயத்தைக் கொள்க.

கோமயம் கொள்ளுதற்கு காலம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.

*167) பங்குனி மாதம் பசானத்தாணத் மேய்ந்தபசு*
*மங்கலமாங் கொள்கோ மயம்.*

தெளிவுரை: பங்குனி மாதத்தினிலே பசான மென்னும் நெல்லினது நெல்லினது தாளை மேய்ந்த பசுக்களே நல்லனவாகும். அவைகளின் கோமயங்களைக் கொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***168) இருநான்கு பஞ்சதசி யேழிரண்டு தன்னில்
வரமாகுங் கொள்கோ மயம்.***

தெளிவுரை: அட்டமியிலேனும், அமாவாசை, பௌர்ணமியிலேனும் சதுர்த்தசியிலேனும். கோமயத்தைக் கொள்க. இதுவே உத்தமமாம்.

பசுக்களையடைந்து வணங்கிக் கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச் செய்து அதன்பின்பே கோமயம் கொள்ளல் வேண்டுமென்க.

**கற்பவிதி பத்துத் திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***169) ஏற்றிடுக சாதத்தா லானின் மரையிலையின்
மாற்றிடுக மேலை வழும்பு.***

தெளிவுரை: கோமயத்தைப் பூமியிலே விழுமுன் சத்தியோ சாத மந்திரத்தினாலே தாமரை இலையில் ஏற்று மேலுள்ள வழும்புகளை நீக்கி நடுவின் மயத்தைக் கொள்க.

கோமயங்கொள்ளுதல் சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். கோமயம் இடும்போது பசுவின் பிற்றட்டிலே கை வைத்தேற்பது சாந்திகம். பூமியின் விழுமுன் தாமரை இலையில் ஏற்பது பௌட்டிகம். பூமியில் விழுந்த பின் எடுப்பது காமதம். இம்மூன்றினுள் இந்நூலில் கூறப்பட்டது பௌட்டிகம்.

***170) பெய்ததனிற் கவ்வியத்தை வாமத்தி னாற்பிசைக
பைய வகோரம் பகர்ந்து.***

தெளிவுரை: அந்தக் கோமயத்திலே பஞ்ச கவ்வியத்தை வாம மந்திரத்தினாலே வார்த்து மெல்ல அகோரமந்திரத்தை உச்சரித்து பிசைக.

***171) உருட்டிப் புருடத்தோ, மாங்கிதனில் வைக்க
திரட்டிப் பதர்மேற் செறித்து.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அகோர மந்திரத்தினாற் தானே உண்டைபண்ணி பதரை விரித்து அதன்மேல் தற்புருட மந்திரத்தினாலே வைத்து சிவாக்கினியைக் கற்பித்து அதினாலே தகனம் பண்ணுக.

நித்தியாக்கினி செய்பவர்களாகில் அவ்வக்கினியில் தானே விளைவிக்க.

*172) அன்றெடுத் தன்றுருட்டி யன்றழலின் வைத்திடுக*
*வன்றியுலர்த் திச்சுடலு மாம்.*

தெளிவுரை: அன்றைக்கே எடுத்து அன்றைக்கே உண்டைபண்ணி அன்றைக்கே சிவாக்கினியினாலே தகனம் பண்ணுக. இங்ஙனமன்றி உலர வைத்துத் தகனம் பண்ணுதலுமாகும்.

*173) விளைந்த துணர்ந்து விளம்பியீ சான*
*மளைந்தே யெடுக்கவவை யாய்ந்து.*

தெளிவுரை: அவ்விபூதி நன்றாக விளைந்ததை அறிந்து ஆராய்ந்து அதிலே கருகல் முதலியவற்றைத் தள்ளி நல்லதைப் பார்த்து ஈசானமந்திரத்தை உச்சரித்து எடுக்க.

*174) கறுப்புச் சிவப்புக் கடியதொரு தூமம்*
*வெறுப்புடனே பீதம் விடு.*

தெளிவுரை: கருநிற விபூதியையும் செந்நிற விபூதியையும் கடுமையாகிய புகை நிற விபூதியையும் பொன்னிற விபூதியையும் வெறுப்புடனே தள்ளுக.

கருநிற விபூதி வியாதியை உண்டாக்கும். செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்கும். புகை நிறவிபூதி ஆயுளைக் குறைக்கும். பொன்னிற விபூதி சம்பத்தைக் கெடுக்கும். வெண்ணிற விபூதி அளவில்லாத புண்ணியத்தை விளைவிக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*175) வடித்திடுக தூயநவ வத்திரத்தி னாலே*
*யெடுக்கநவ கும்பத் தினிது.*

தெளிவுரை: அவ்விபூதியைப் பரிசுத்தமாகிய புதுவஸ்த்திரத்தினாலே வடித்து நவபாண்டத்திலே நன்றாக எடுத்து வைக்க

*176) திருநீற்றின் காயத் திரிமந் திரத்தால்*
*வரமான பூதலத்தில் வை.*

தெளிவுரை: அந்தப்பாண்டத்தை விபூதி காயத்திரி மந்திரத்தை உச்சரித்து சுத்த பூமியிலே கொண்டு போய் வை.

*177) கந்தமலர் பெய்துவாய் கட்டிநவ வத்திரத்தா*
*லெந்தனமீ தென்றே யெணி.*

தெளிவுரை: மல்லிகை முல்லை, பாதிரி சிறுசண்பக முதலிய சுகந்த புஷ்பங்களை எடுத்துச் சத்தியோசாத மந்திரத்தினாலே அதினுள்ளே போட்டு புது வஸ்த்திரத்தினாலே அதன்வாயைக் கட்டி இதுவே நம்முடைய திரவியமென்று கருதுக.

*178) அணிக தினமு மறையு முறையி*
*னெணுகவிது தான்கற்ப மென்று*

தெளிவுரை: நாள்தோறும் சிவாகமத்திலே விதித்தபடி சிவமந்திரத்தினாலே யெடுத்துத் தரிக்க. இதுவே கற்பமென்னும் விபூதியென்றறிக.

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் முறையே ஒரு கழஞ்சு ஒன்றரைக் கழஞ்சு, இரண்டு கழஞ்சு,இரண்டரைக் கழஞ்சு, விபூதி கொள்க.

**அநுகற்பவிதி நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*179) கட்டுரைத்தாங் கற்ப மினியநுகற் பந்தனையு
மிட்டமுறக் கூறுவங்கே ளீங்கு.*

தெளிவுரை: கற்பவிதியைச் சொன்னோம். இனி அநுகற்பவிதியையும் நன்மை உண்டாகும்படி இங்கே சொல்வோம் கேள்.

*180) வனந்தனிற் சித்திரை மாதத்திற் சென்றே
யுலர்ந்தமயங் கொண்டோ ரிடத்து.*

தெளிவுரை: சித்திரை மாசத்திலே பசுக்கள் நின்ற மந்தையிலே போய் உலர்ந்துகிடந்த கோமயங்களை எடுத்து ஓரிடத்திலே குவிக்க.

*181) வைத்திடித்துத் தூளாக்கி வார்த்ததனிற் கோசலத்தைக்
கைத்தலத்தி னாலே கலந்து.*

தெளிவுரை: உரலிலே போட்டு இடித்துத் தூளாக்கி அதிலே கோசலத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்துக் கையினாலே கலந்து.

*182) அள்ளிப் பிசைந்துருட்டி யங்கிதனில் வைத்தெடுத்துக்
கொள்கமுனஞ் சொன்னமனுக் கொண்டு.*

தெளிவுரை: அகோர மந்திரத்தனாலே அள்ளி நன்றாகப் பிசைந்து உருண்டை பண்ணி பதரை விரித்து அதன்மேலே தற்புருட மந்திரத்தினாலே வைத்து சிவாக்கினியிலே தகனம் பண்ணி ஈசானமந்திரத்தினாலே எடுத்துக் கொள்க.

உபகற்பவிதி நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*183) இதுதா னநுகற்ப மென்பருப கற்ப
மதுதனையுஞ் சொல்வா மறி.*

தெளிவுரை: இதுவே அநுகற்பமென்னும் விபூதியென்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லுவார்கள். இனி உபகற்பவிதியையும் சொல்வோம் அறிந்து கொள்க.

*184) வன்னிவனந் தன்னி லுறவியல்பாய் வாய்த்தபொடி*
*தன்னை யெடுத்திடுக தான்.*

தெளிவுரை: வனத்தின் கண்ணே மரத்தோடு மரம் இணைந்து தானேயுண்டாகிய அக்கினியினாலே வெந்து விளைந்த சாம்பலை எடுக்க. செயற்கையாயுள்ள செங்கற் சூளை குயவன்சூளை முதலியவற்றின் சாம்பலையும் எடுக்கலாம் என அறிக.

*185) வார்த்திடுக வானைந்து மற்றதனிற் கையாலே*
*சேர்த்திடுக பாகந் தெரிந்து.*

தெளிவுரை: அதிலே பஞ்சகவ்வியத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்து பாகமறிந்து கையினாலே கலந்திடுக.

*186) அள்ளிப் பிசைந்துருட்டி யங்கிதனில் வைத்தெடுத்துக்*
*கொள்கமுனஞ் சொன்னமனுக் கொண்டு.*

தெளிவுரை: அகோர மந்திரத்தினாலே அள்ளி நன்றாக பிசைந்து உருண்டை பண்ணி பதரை விரித்து அதன் மேலே தற்புருடமந்திரத்தினாலே வைத்துச் சிவாக்கினியினாலே தகனம் பண்ணி, ஈசான மந்திரத்தினாலே எடுத்துக் கொள்க.

இடிவிழுந்த இடத்தில் உண்டாகிய திருநீறும் மலை உச்சியிலும் பூமியிலும் யாதொரு காரணத்தினால் விளைந்த திருநீறும் அகற்பம் எனப்படும். அதனை மூலமந்திரம் கலா மந்திரங்களினாலே சுத்தி செய்து தரிக்கலாம்.

**விபூதி பையினதிலக்கணம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

*187) வத்திரத்தி னாற்புலித்தோன் மான்றோலி னாலுமாம்*
*பத்தரணி யும்பூதிப் பை.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அன்பர்களணியும் விபூதி வைக்கும் பை வஸ்த்திரத்தினாலும், புலித்தோலினாலும், மான்தோலினாலும் செய்யலாம். இவற்றுள், தோலிரண்டும் நைட்டிக பிரம்மசாரிக்கும், சந்நியாசிக்கும் என அறிக.

பையினன்றி வில்வ குடுக்கை சுரைகுடுக்கைகளினும் விபூதி வைத்துத் தரிக்கலாம். குடுக்கைகளினன்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது. கவிழ்த்தவர் ரௌரவநரகத்தின் வீழ்வர்.

***188) எட்டங் குலமகல மீரா றுயரமாம்***
***வட்டம்பூ திப்பைக்கு வாய்.***

தெளிவுரை: விபூதிபைக்கு அகலம் எட்டங்குலமும், உயரம் பன்னிரண்டு அங்குலமும் வாய் வட்டமுமாக இருத்தல் வேண்டும்.

**திருநீறு தரித்தற்கு விரனியமம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***189) அங்குட்ட மத்திமைய நாமிகையா னீறணிக***
***தங்காது மாபா தகம்.***

தெளிவுரை:பெருவிரல் நடுவிரல் ஆழிவிரல் என்னும் மூன்று விரலினாலும் அநுலோமப் பிரதிலோமமாக விபூதி தரிக்க. இப்படித் தரிக்கின் மகாபாதகஞ் சேராது.

அநுலோமப் பிரதிலோமமாகத் தரித்தலாவது நடுவிரல் ஆழி விரல்களினால் இடப்பக்கந் தொடுத்திழுத்துப் பெருவிரலினால் வலப்பக்கந் தொடுத்து இழுக்கலாம். உத்தூளனஞ்செய்தன்றித் திரிபுண்டரம் சாத்தலாகாது.

***190) அணியலுமா குங்கனிட்டை யங்குட்ட மின்றி***
***யெணுமூன்றி னாலுமென வெண்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிறுவிரலையும் பெருவிரலையும்ஒழித்து எண்ணப்பட்ட நடுவிரன் மூன்றினாலுந் தரித்தலுமாகும் என்று அறிக. நடு விரன் மூன்றுங்கூடிற் திருநீற்று முத்திரை எனப்படும் என்று அறிக.

**திருநீறு தரிக்குந் தானங்கள் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***191) சிரநெற்றி காது திரண்ட கழுத்தி***
***னுரந்தோளி னாத்தனி லும்.***

தெளிவுரை: உச்சியிலும், நெற்றியிலும், காதுகளிலும், திரண்ட கழுத்துகளிலும், மார்பிலும், புயங்களிலும், உந்தியிலும் என்று அறிக.

***192) இரண்டுமுழங் கையி னிரண்டுமணி மந்தத்***
***திரண்டுமுழந் தாண்முதுகி னும்.***

தெளிவுரை: முழங்கைகள் இரண்டிலும், மணிக்கட்டுகள் இரண்டிலும், முழந்தாள்கள் இரண்டிலும், முதுகிலும் விபூதி தரிக்கப்படும்.

**அதற்குபரிமாணம் வரையறுத்துணர்த்துகின்றார்.**

***193) நெற்றியுரந் தோளணிக நீறிருமூன் றங்குலத்தின்***
***மற்றவற்றொன் றென்றே மதி.***

தெளிவுரை: விபூதியைத் திரிபுண்டரமாக நெற்றியிலும் மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளம் பெருத்தத் தரிக்க. மற்றையுறுப்புகளில் ஒவ்வோரங்குல நீளம் பொருந்தத் தரிக்க.

திரிபுண்டரமாவது முக்குறித் தொகுதி, முக்குறிகளின் இடைவெளி ஒவ்வொரங்குல அளவினதாய் இருத்தல் வேண்டும். அவை, ஒன்றை ஒன்று தீண்டினும், மிகவகலினும், வளையினும், இடையறினும், குற்றமாம் என்று அறிக. திரிபுண்டரம் விதித்த நீளத்திற்குறையின் ஆயுள் குன்றும். மிகிற்றவங்கெடும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**அதற்கு மந்திரம் வரையறுத்துணர்த்துகின்றார்**

***194) தரிக்கதலை யாதியந்தஞ் சானுவீ சாதி***
***தரிக்கமற்றெல் லாஞ்சாதத் தால்***

தெளிவுரை: தலை, நெற்றி, மார்பு, நாபி, முழந்தாள் என்னும் ஸ்தானங்களின் முறையே ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம்,. சத்தியோசாதம் என்னும் மந்திரங்களினாலே தரிக்க. மற்றை உறுப்புகள் எல்லாவற்றிலும் விபூதியை சத்தியோசாத மந்திரத்தினாலே தரிக்க.
விபூதியை இடக்கையில் வைத்துச் சம்ஹிதா மந்திரத்தால் அபிமந்திரித்து வலக்கைப் பெருவிரல் அணிவிரல்களினாலே சலத்தையள்ளி வார்த்துக் குழைத்து தரிக்க. தோண் முதலிய தானங்களிலே முன்னர் வலப்பக்கத்திலும் பின்னர் இடப்பக்கத்திலும் தரிக்க.

**விபூதி தரித்தற்கு வேறோர் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.**

***195) திரிசூலத் தாலுந் திருநீ றணிவா***
***ரொருவார் சிவலோகத் துற்று.***

தெளிவுரை: செம்பு முதலியவற்றினாலே திரிசூலம் செய்து அதினாலே தோண் முதலிய தானங்களிலே விபூதி தரிப்பவர்கள் சிவலோகத்திலே ஒருகாலும் நீங்காது வாழ்ந்திருப்பார்கள்.

**விபூதி தரிக்குமுறைமை இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***196) நீருடனே சந்திதொறு நீறணிக தீக்கையுளார்***
***நீரறவே பூசுகவெண் ணீறு.***

தெளிவுரை: சிவதீக்ஷையுள்ளவர்கள் முக்காலமும் சலங்கூட்டித் திருநீறு தரிக்கக் கடவர்கள். மற்றைக் காலங்களில் சலங் கூட்டாமலே திருவெண்ணீறு தரிக்கக் கடவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றைக் காலங்களிலே நீர் கூட்டித் தரிக்கின் அந்நீர் பனைநீரை ஒக்கும் மென்று ஆகமங்கள் கூறுகின்றன.

*197) மாதரும தீக்கிதரு மத்தியா னோத்தரத்தில்*
*வேதியர்தம் முள்விரத்த ரும்.*

தெளிவுரை: சிவதீக்ஷையில்லாத ஆடவர்களும், சிவதீக்ஷையில்லாத பெண்களும், வைதீக வழி யொழுகும் சந்நியாசிகளும், மத்தியானத்துக்கு பின் சலங்கூட்டாமல் விபூதி தரிக்க கடவர்கள்.

விரத்தருமென்ற உம்மையாற் பிரம்மசாரியும். வானப்பிரத்தனும், கன்னிகையும் கொள்க.

இவ்வருணத்தார்க்கு இவ்விபூதியாமென்பது மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்

*198) அந்தணர்முன் மூவர்க்கு மாஞ்சிவயா கந்தன்னில்*
*வெந்துவிளங் குந்திருவெண் ணீறு.*

தெளிவுரை: சிவபெருமானது யாகசாலையிலே உற்சவ முதலிய காலங்களிலே வெந்து விளங்கிய திறுவெண்ணீறு பிராமணர் முதலிய் மூன்று வருணத்தாருக்கும் தரித்தற்க்கு உரியதாம்.

*199) திருமடைப் பள்ளி தனிற்பாகஞ் செய்த*
*திருநீறே சூத்திரர்க்குத் தேறு.*

தெளிவுரை: திருக்கோயிலிலும், திருமடத்திலும் உள்ள திருமடைப் பள்ளியிலே பாகம் செய்ததனால் உண்டாகிய திருநீறு சாமானிய சூத்திரர்க்குத் தரித்தற்க்கு உரியதாம் என்று அறிக.

*200) மற்றையருக் கெல்லாம் வனத்தினியல் பாய்விளைந்த*
*நற்றிருநீ றாகுமென நாடு.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: காட்டுத் தீயினாலே இயல்பாய் விளைந்த நல்ல திருநீறு நான்கு வருணத்தாரர் அல்லாத மற்றையனைவருக்கும் தரித்தற்க்கு உரியது என்று அறிக.

**நான்கு வருணத்தாருந் திருநீறு தரிக்கு முறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***201) பண்ணுகபா தாந்தம்பார்ப் பாருத்தூ ளம்மரையர்***
***வெண்ணீறு நாபிக்கு மேல்.***

தெளிவுரை: வெண்மையாகிய விபூதியைப் பிராமணர் தலை தொடங்கிக் காலளவும் நீருடனே உத்தூளனம் பண்ணக்கடவர். அரசர் கொப்பூழுக்கு மேலே அப்படி உத்தூளனம் பண்ணக் கடவர்.

***202) பட்டம்போ ணீறனிக பார்வசியர் மூன்றுவிர***
***லிட்டெழுதல் சூத்திரர்க்கா மீங்கு.***

தெளிவுரை: பூமியிலுள்ள வைசியர்கள் விபூதியைப் பட்டமாகத் தரிக்கக் கடவர் சூத்திரர்க்கு மூன்று விரலினாலே திரிபுண்டரமாக தரித்தல் உரியதாம்.

ஈங்கு என்ற மிகையினால், அநுலோமர் வைசியரைப் போலவும் பிரதிலோமர் சூத்திரரைப் போலவும், தரித்தல் வேண்டும் எனக் கொள்க.

**திருநீற்றுக்குள்ள பெயரும் அப்பெயர்க் காரணமும் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்**

***203) பூதியினைத் தான்கொடுக் கையாற்பூதி என்னும் பே***
***ரோதுவர்வெண் ணீற்றினுக்கென் றோர்.***

தெளிவுரை: தன்னைத் தரித்தவர்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலினாலே திருவெண்ணீற்றுக்குப் பூதியென்னும் பெயரைச் சொல்வார்களென்றறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***204) இரக்கிக்கை யாலே யுயிரினை யெல்லா
மிரக்கையெனும் பேரா மிதற்கு***

தெளிவுரை: தன்னைத் தரித்த ஆன்மாக்களுக்களை எல்லாம் காத்து ரக்ஷிப்பதாலே இந்த திருநீற்றுக்கு இரக்கை என்னும் பேருண்டாம்.

இவ்விரண்டேயன்றிப் பசிதம், பசுமம், க்ஷாரம் என்னும் பெயர்களுமுண்டு. சிவத்துவத்தை விளக்கலால் பசிதம் எனவும், உயிர்களது மலத்தைக் கழுவுவதால் க்ஷாரமெனவும் பாவங்களை நீராக்குதலால் பஸ்மம் எனவும் பெயர் பெற்றது.

**விபூதியை தரையில் வீழ்த்த வழிப்படுங் குற்ற முணர்த்துகின்றார்**

***205) பூதியணு மாத்திரம்வீழ்த் தார்பூ தலந்தன்னில்
வாதைநர கத்துளூறு வார்.***

தெளிவுரை: விபூதியை எடுக்கும்போதேனுந் தரிக்கும் போதேனுங் கைதவறி யேனுங் பரமானுவளவாயினந் தரையிலே சிந்தினவர்கள் நரகத்திலே விழுந்து துயருறுவார்கள்.

விபூதி கீழே சிந்தினால் அதனையெடுத்து அந்த தலத்தைச் சுத்தி செய்து தாளத்திரயம் பண்ணிச் சங்கார முத்திரையினாலே அதனைத் தன்னிடத்தொடுக்கல் வேண்டும்.

**விபூதி தரிக்கலாகா இடங்களுணர்த்துகின்றார்**

***206) அணியற்க நின்மலன் முன்னழலின் முன்னு
முணர்வுதவுந் தேசிகன்முன் னும்.***

தெளிவுரை: சிவபெருமான் முன்னும் சிவாக்கினியின் முன்னும் அறிவைத் தருங் குருவின் முன்னும் விபூதி தரிக்கலாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்விடங்களிலே முகத்தை மாறியிட்டுக் கொள்க. இங்ஙனம் இன்றிச் சண்டாளர் முன்னும் பாவிகள் முன்னும் அசுத்த நிலத்தும் வழி நடக்கும் போதும் தரிக்கலாகாதென உணர்க. ஒரு கையால் வாங்கிய விபூதியும் விலைக்குக் கொண்ட விபூதியும் சிவதீக்ஷையில்லாதார் தந்த விபூதியும் தரிக்கலாகாது. வாயங்காந்து கொண்டும், தலை நடுக்கிக் கொண்டும், கவிழ்ந்து கொண்டும் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும் ஒரு கையாலேனும் தரிக்கலாகாது. வடக்கு நோக்கியாயினும் கிழக்கு நோக்கியாயினும் இருந்து மௌனம் பொருந்திச் சிவபெருமானையும் ஆசாரியாரையுஞ் சிந்தித்து அண்ணாந்து மூன்று விரலினாலே விபூதி தரிக்க. மலசல மோசனம் பண்ணிச் சௌசஞ் செய்து ஆசமித்த பின்னும் பானஞ் செய்து ஆசமித்த பின்னும், போஜனம், பிக்ஷை, நித்திரை என்னும் மூன்றுக்கும் முன்னும் பின்னும் சந்தியா காலங்களிலும் விபூதி தரிக்க. விபூதி தரியார்தார் முகம் சுடுகாட்டுக் கொக்கும். விபூதி யணிந்தே புறத்திற் புறப்படுக. விபூதியணியாதொழிந்த போது அற்றைக்கு உபவாசியாயிருந்து பஞ்ச கவ்வியத்தை உட்கொண்டு அகோர மந்திரத்தை இருநூறு தரஞ் செபிக்க.

**சிவபெருமான் முதலாயினோரைச் சேவிக்கக் போமிடத்து ஓர் சிறப்பு விதியுணர்த்துகின்றார்.**

***207) இயன்றதே தேனு மிவர்திருமுன் வைத்துப்***
***பயந்துபணிந் தேத்தவறும் பற்று.***

தெளிவுரை: சிவபெருமான், ஆசாரியன். சேட்டாசாரியன் சிவாக்கினி என்னும் இவர்களை தரிசிக்கப் போமிடத்து வெறுங்கையுடனே போகாமல் தன்னாலே கொடுப்பதற்கு இயன்ற பதார்த்தத்தை இவர்கள் சன்னதியில் வைத்து பயந்து வணங்கிக் துதிக்க இருவகைப் பற்றுகளும் நீங்கும்.

**யாதொரு காரியத்துக்கும் ஆசாரியனை ஏவவொண்ணா தென்பது உணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***208) தேசிகனை யேவற்க தேசிகன்றன் காரியத்து***
***மீசன் பணிதன் னிலும்.***

தெளிவுரை: ஆசாரியனுடைய காரியத்திலேனும் சிவபெருமானுடைய காரியத்திலேனும் ஆசாரியனை ஏவாதொழிக.

**ஆசாரியனிடத்திலே விண்ணப்பஞ் செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.**

***209) கைகுவித்து மெய்வளைத்துக் கண்ணியருங் காரியமும்***
***பையப் பகர்க பயந்து.***

தெளிவுரை: ஆசாரியனுக்கு முன்னே கைகளைக் குவித்துச் சரீரத்தைச் சற்றே வளைத்து வாய் புதைத்து நின்று தனக்கு செய்யவேண்டிய சாந்தி முதலிய காரியங்களைத் தன்மனதிலே கருதிப் பயந்து மெல்ல விண்ணப்பம் பண்ணுக.

**ஆசாரியனை வணங்கு முறைமையுணர்த்துகின்றார்.**

***210) ஒருகையி னாலே தொழுகை யொழிக***
***விருகையுங் கூப்பி லினிது.***

தெளிவுரை: ஒரு கையினாலே அஞ்சலி பண்ணுவதை ஒழித்து இரண்டு கைகளையும் குவித்து வணங்குதல் நன்று.
ஒரு கையினால் அஞ்சலி செய்யின் முன் செய்த புண்ணியங்கள் எல்லாம் போய்விடும் என்று அறிக. திருப்பள்ளித் தாமங்கையிலிருந்தால் வலக்கையை முட்டியாக பிடித்துத் தலையிலே வைக்கின் இரண்டங்கமாமாதலால் குற்றமில்லை எனக் கொள்க.

**தேவர்களை வணங்குமுறைமை யுணர்த்துகின்றார்.**

***211) தேவரடி முன்றொழுக சென்னிமிசை கைகுவித்துப்***
***பாவவினை தன்னையறுப் பார்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தாங்கள் செய்த பாவகருமங்களை நீக்க விரும்புவோர்கள் தேவர்களுடைய பாதங்களை அவர்கள் சந்நிதானத்திலே இரண்டு கைகளையும் சிரசின் மேலே குவித்து வணங்கக் கடவர்கள். இங்ஙனம் செய்வது திரயாங்க நமஸ்காரம் எனப் பெயர் பெறும்.

**ஆசாரியர் முதலாயினோரை அஞ்சலி பண்ணுமுறைமை யுணர்த்துகின்றார்.**

***212) குளத்திற் குவிகை யிணைகுரவற் கன்பர்க்***
***குரத்திற் குவிகை யுகந்து.***

தெளிவுரை: ஆசாரியனுக்கு வணக்கம் செய்யுமிடத்து இரண்டு கைகளையுங் கூப்பி நெற்றியிலே அஞ்சலி பண்ணு. சாதகர் முதலிய சிவபக்தர்களுக்கு வணக்கம் செய்யுமிடத்து மனமகிழ்ந்து மார்பிலே அஞ்சலி பண்ணு.

**ஒருவன் தன்னைப் பிறர் வணங்கும் வணக்கத்தைப் புத்தி பண்ணுமுறைமையுணர்த்துகின்றார்.**

***213) உன்னை வணங்கி லொருவரெம துள்ளுறையு***
***நின்மலனுக் கென்றே நினை.***

தெளிவுரை: யாரொயினும் ஒருவர் உன்னை வணங்கும்போது இவ்வணக்கம் ஆன்மாவாகிய நமக்கு அன்று. நம்மிடத்திலிருக்கும் நிருமலராகிய சிவபெருமானுக்கு மட்டுமே என்று புத்தியில் உணர்க.

**ஒருவன் தான் பிறரை வணங்கும்போது அதனைப் புத்திபண்ணு முறைமையுணர்த்துகிறார்.**

***214) மற்றொருவர் தம்மை வணங்கும் பொழுதவரு***
***ணிர்க்குணனைப் பார்பரிந்து நீ.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: நீ உன்னை ஒத்தாராயேனும் உன்னினுயர்ந்தாரே யேனும் உள்ள மற்றொருவரை வணங்கும்போது அவ்வணக்கம் அவருக்கு என்று புத்தி பண்ணாமல் அவரிடத்திலிருக்கும் சிவபெருமானுக்கேயாம் என்று புத்திபண்ணி அன்பினோடு வணங்குக.

**எவ்வுயிரினும் அன்பு செய்தற்கு காரணமுணர்த்துகின்றார்.**

***215) எவ்வுயிரு நீங்கா துறையு மிறைசிவனென்***
***றெவ்வுயிர்க்கு மன்பா யிரு.***

தெளிவுரை: பதியாகிய சிவபெருமான் சரமசரமென்னும் எவ்வுயிர்களினும் நீங்காமல் வியாபித்து இருப்பர் என்று துணிந்து ஒருயிருக்கும் வாதை செய்யாமல் எவ்வுயிர்களினும் அன்பு உடையவனாயிருக்க.

**பெரியோர் கண்முன் பேசுமுறைமையுணர்த்துகின்றார்.**

***216) குதர்க்கவுரை கூறேல் குணத்தார்முன் னென்றும்***
***விதர்க்கம் விரும்பி விளம்பு.***

தெளிவுரை: ஆசாரியர் முதலிய பெரியோர்களுக்கு முன்னே ஒரு காலமும், ஒழுங்கில்லாத தருக்க வார்த்தைகளைப் பேசாதே. உண்மைப் பொருளை ஆராய்தற்குரிய தருக்க வார்த்தைகளை விரும்பிப் பேசுக.

**பெரியோரிடத்துக் கொடுக்கும் முறைமையும் வாங்கும் முறைமையும் உணர்த்துகின்றார்.**

***217) தன்னிருகை யாலுங் கொடுத்திடுக தாழ்ந்தேற்க***
***தன்னிற் பெரியோர்கைத் தான்.***

தெளிவுரை: ஒருவன் தன்னிலும் பெரியோர்களுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கையிலே ஒன்றைக் கொடுக்கும் போது தன்னுடைய இரண்டு கைகளினாலும் கொடுக்கக் கடவன். ஒன்றை வாங்கம்போது பணிந்து இரண்டு கைகளினாலுமே வாங்கக் கடவன்.

**இடக்கையினாலே செய்யாலாகாதவை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***218) இடக்கையி னாலேது மிட்டருந்தேல் யார்க்கு***
***மிடக்கையா லீயேலே லேல்.***

தெளிவுரை: போசனம் பண்ணும்போது யாதாயினும் இடக்கையினால் இட்டு புசியாதே. யாவருக்காயினும் இடக் கையினாலே கொடுக்காதே. யாவரிடத்தாயினும் இடக்கையினாலே வாங்காதே.

***219) தீண்டே லிடக்கையி னாலே சிவலிங்கந்***
***தீண்டற்க நின்முகமுஞ் சேர்த்து.***

தெளிவுரை: சிவலிங்கத்தை இடக்கையினாலே தீண்டாதே. உன் முகத்தையும் இடக்கையினாலே தீண்டாதே.

**தீண்டலாகாத் தானமுணர்த்துகின்றார்.**

***220) கடிக்கீழ்த் தொடிற்கை கழுவுக பாத***
***மிடக்கையா லன்றித்தீண் டேல்.***

தெளிவுரை: அரையின் கீழே தீண்டினால் கையைக் கழுவுக. கால்களை இடக்கையினாலன்றி வலக்கையினாலே தீண்டாதே.

**தலைசொறியு முறைமையுணர்த்துகின்றார்.**

***221) இருகையி னாலுந் தலைசொறியே லென்று***
***மொருகை சொறிகை யொழுங்கு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: ஒரு போதும் இரண்டுகையினாலும் தலை சொறியாதே. ஒரு கையினாலே தலை சொறிதல் முறைமையாகும். தலை உத்தமாங்கமாதாலானும், அதனை இடக்கையினாலே சொறியின் வறுமையுண்டாமென வசன முண்மையானும், வலக்கையினாற் சொறிதல் வேண்டுமென்க.

**போசனகாலத்திற் றரித்த ஆடையுடன் சந்திசெய்ய லாகாதென்பதுணர்த்துகின்றார்.**

*222) அருந்திய வாடையுட னாடுகநீர் பின்னைத்*
*திருந்தவே சாயானஞ் செய்.*

தெளிவுரை: போசனம் பண்ணியபோது தரித்திருந்த வஸ்திரங்கள் இரண்டோடும் ஸ்நானம் பண்ணி பின்பு விதிப்படி சாயங்கால சந்தியைப் பண்ணுக.

இங்கே ஸ்நானமென்றது சிரஸ்நானம், கண்டஸ்நானம், கடி ஸ்நானம் என்னும் மூன்றினுள் இயன்ற தொன்றை.

**பெண்களைப் புணர்தலாகாக் காலம் நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*223) ஆடையற நீராடு மாயிழையா ரைப்பாரேல்*
*கூடேல் பகலவர்தோள் கூர்ந்து.*

தெளிவுரை: வஸ்திரமின்றி நீராடுகின்ற பெண்களைப் பாராதே. அவர்களுடைய தோள்களை விரும்பிப் பகற்காலத்திற் புணராதே. பி ற ர் மனைவியரை இச்சித்துப் பார்த்த கண்ணிலே யமதூதர்கள் முளையடித்து வருத்தம் செய்வார்கள் என்று சிவதர்ம உத்தரம் செப்புதல் என்று அறிக. பகற்புணர்ச்சி செய்தாருக்கு வயசு குன்றுமென்க.

*224) மிகத்தெளிந்தா ரோதி விதிநிசித்த மெல்லாம்*
*பகற்பொழுது பாரார் பகம்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சாத்திரவிதி விலக்குகள் எல்லாவற்றையும் படித்து மிகத் தெளிந்தவர்கள் யோனியைப் பகற்காலத்திற் பாரார்கள்.

***225) அட்டமி சட்டி பதினான்கைம் மூன்றினுந் தொட்டிடே லில்லவள்வேய்த் தோள்.***

தெளிவுரை: மனைவியினுடைய மூங்கில் போலும் தோள்களை அட்டமியினும் சஷ்டியிலும், சதுர்த்தசியிலும் அமாவாசை, பௌர்ணமிமைகளிலும் புணராதே என்று அறிக.

***226) சென்மமொரு மூன்றுந் திருவா திரையோண மின்னுமிவை தம்மினுந்தீண் டேல்***

தெளிவுரை: சென்மத் திரயங்களிலும் திருவாதிரை திருவோணம் என்னம் இந்நக்ஷத்திரங்களிலும் புணராதே.

சென்மத்திரயங்களாவன: பிறந்த நக்ஷத்திரமும், அதற்குப்பத்தாவது நக்ஷத்திரமும், அதற்கு பத்தாவது நக்ஷத்திரமும் ஆகும். ஏகாதசி, திரயோதசி, மகம், மூலம் விதிபாதயோகம் மாசப் பிறப்பு, விரததினம், சிரார்த்த தினம்,சிரார்த்த தினத்துக்கு முதற் தினம், சிரார்த்த தினத்துக்கு மற்றைத் தினம், சந்தியா காலங்கள், அர்த்த ராத்திரி என்பவைகளும் புணர்ச்சிக்கு விலக்கப்பட்டன என்று அறிக.

பிரமசாரியும் வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் புணர்ச்சியை நினைத்தல் கூட ஆகாது. இல்வாழ்வான் மாதத்தில் ஒரு நாள் இராத்திரி காலத்திலே தன் மனைவியோடு மாத்திரங்கூடல் வேண்டும். இப்படிக் கூடினால் தாய்க்கும், தந்தைக்கும், அவருக்கு உற்பவிக்குங் குழந்தைக்கும் சரீரம் திடமாயிருக்கும். வியாதி வராது. வந்தாலும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும். வயதினாலே தன்னின் மூத்தவளோடும், பிறன் மனைவியோடும், பொதுப் பெண்ணோடும் கூடினும், தன் மனைவியோடு மாதத்திற்கு ஒரு தரமின்றி பலதரம் கூடினும் வியாதி உண்டாகும். மாதத்திற்க்கு ஒரு நாள் என்றதும் ருது காலத்து உட்பட்டதாயும், விலக்கப்பட்ட நாள் அல்லதாயும் இருத்தல் வேண்டும்.

பெண்கள் வீட்டுக்கு விலக்காகும் நாள் முதல் பதினாறு நாள் வரையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ள காலம் ருது காலம் எனப்படும். அக்காலத்தில் ஐந்தாம் நாள் முதற் பதினாறாம் நாள் வரையும் உள்ள பன்னிரண்டு நாளுமே கருத்தரிக்கும் காலம் ஆகும். இந்த பன்னிரண்டு நாளினுள்ளும் புணர்ச்சிக்கு ஆகாவென விலக்கப்பட்ட நாள்களை ஒழித்து மற்றை நாட்களிலே மனைவியோடு கூடல் வேண்டும். இரட்டித்த நாட்களில் கூடிற் புத்திரனும், ஒற்றித்த நாட்களில் கூடில் புத்திரியும் பிறப்பர். ஆதலினாலே புத்திர விருப்ப முடையவர்கள் இரட்டித்த நாட்களில் கூடல் வேண்டும்.

கருத்தரிக்கும் காலத்துள் விதித்த நாளிலே புணராதவன் கருச்சிதைத்த பாவத்தை அடைவான். காம மிகுதியினால் ஆகாத நாட்களிலே கூடினான் ஆயின், அவன் செய்த சந்தியாவந்தனம் , செபம், பூசை முதலிய கருமங்கள் அவனுக்குப் பலங்கொடுக்காது. பிதாநரகத்தை அடைவர். பிள்ளை சயரோக முதலிய வியாதிகளை அடையும்.

புணர்ச்சி செய்தவர் குறியை ஒன்பது தரமும், இடக்கையை பதினைந்து தரமும், இரண்டு கைகளையும் சேர்த்து ஒன்பது தரமும் இரண்டு கால்களையும மும்மூன்று தரமும், மண்ணும் நீரும் கொண்டு செளசம் செய்து நீர் வாயிற் கொண்டு முப்பத்திரண்டு தரம் கொப்பளித்து ஆசமனம் செய்து ஸ்நானம் பண்ணுக.

**சயனநியமம் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***227) சிரந்துயிலிற் றென்றிசையிற் சேர்க்கவிரத் தன்றான்***
***வரம்பூர்வ திக்கில்வாழ் வாற்கு.***

தெளிவுரை: நித்திரை செய்யும் போது முத்திகாமன் சிரத்தைத் தெற்குத் திக்கிலே வைக்கக்கடவன். புத்திக்காமனுக்குக் கிழக்குத்திக்கிலே வைத்தலே சிறப்பாகும்.

***228) வடதிசையில் வையேற் றலைமற்றை யூரிற்***
***குடதிசையில் வைக்கை குணம்.***

தெளிவுரை: ஒருபோதும் வடக்குத் திக்கிலே தலை வைக்கக் கூடாது. பிறவூரிலே போனால் மேற்குத் திக்கிலே தலை வைத்து நித்திரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்தல் முறைமையாகும்.

வடக்கே தலை வைத்து சயனித்தால் வியாதி உண்டாகும். புத்திகாமன் சயன ஸ்தானத்திலே தான் தலை வைக்கும் திக்கிலே சோமாஸ்கந்தர் முதலிய விக்கிரஹங்களுள் ஒன்றைச் சித்திரமாக எழுதி அவரை நமஸ்கரிக்கும் பாவனையிற் சயனிக்க, முத்தி காமன் சிவத்தோடு இரண்டறக் கலக்கும் உண்மை நிலையைச் சிந்தித்துக் கொண்டு சயனிக்க.

**இருக்கலாகாத நிழல்களுத்துணர்த்துகின்றார்**

229) *எருக்குக் களிதான்றி யேரண்டத் தின்கீ*
*ழிருக்கை யினைவழுவென் றெண்.*

தெளிவுரை: எருக்கும், கள்ளியும், தான்றியும், ஆமணக்குமாகிய இம்மரங்களினிலே இருத்தலை குற்றமென்று நினைக்க.

இந்நிழல்களிலே இருத்தல் பகற்காலத்தும், விளாநிழலிலும் அரச நிழலிலும் இருத்தல் இராக்காலத்தும், ஆகாது என அறிக. இன்னும் நீசர் நிழலும் விளக்கு நிழலும் ஆகாது என அறிக.

**சைவாசாரத்தை அநுட்டித்தோர் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

230) *சரித்தார்க்குச் சைவ சமய நெறியி*
*னுரித்தாங்கு புத்திமுத்தி யும்.*

தெளிவுரை: தீக்ஷை செய்யும்போது தங்கள் தங்கள் அதிகார நுகுணமாக ஆசாரியனாலே போதிக்கப்பட்ட சைவசமய ஆசாரங்களை வழுவற அநுட்டித்த மாணாக்கர்களுக்கு மேற்பட்ட போகமும், மோக்ஷமும் உரியனவாம்.

**அப்படி அநுட்டியாதோர் பெறும் பயனுணர்த்துகின்றார்**

231) *இந்த்நெறி தன்னி லியங்கார் பிசாசாவ*
*ரந்தவினை போம்பரிகா ரத்து.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இந்தப் பிரகாரம் அநுட்டியாதவர்கள் புத்திதத்துவத்தில் பைசாச புவனத்திற் பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை நூறு ரிஷி வருடம் புசிப்பர்கள். தீக்ஷை பெற்றபின் ஆசாரத்தில் வழுவிய பாவங்களுள் புத்தி பூர்வமாக செய்த பாவம். பிராயச்சித்தத்தினாலும் அபுத்திபூர்வமாகச் செய்த பாவம் அந்தியேட்டிமுதலிய கிரியைகளினாலும் நீங்கும்.

அந்தியேட்டி முதலிய கிரியைகளாவன: அந்தியேட்டி, பாஷாணஸ்தாபனம், உதகதானம், பிண்டதானம், நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தர விருத்திபோசனம், நவ சிராத்தம், ஏகோத்திட்டம், பஞ்சதச்சசிராத்தம், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம் என்பனவாம். இக்கிரியைகள் செய்யாவழி அப்பாவங்கள் புசித்தே தீர வேண்டும் என்று அறிக. சமயாசாரத்தில் வாஞ்சையுற்றும் பற்றற்றுமிருக்கும் நைட்டிகனும் சந்நியாசியும் சமயாசாரத்திலே சிலலோபம் வரின் அந்தியத்தில் பஞ்சாக்ஷரத்திலே பதினோராயிரம் உரு செபிக்கவும். அன்றேல் ஒரு சிவஞானிக்குப் பூசை செய்க.

**ஆசாரியர் முதலாயினோரை வழிபடுமுறைமை ஐந்து திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***232) தேசிகர் தம்மைச் சிவநேசர் தம்மையு***
***மீசனென வேயுளத்து ளெண்.***

தெளிவுரை: ஆசாரியரையும், சாதகர் முதலிய சிவபக்தர்களையும் மானுடெரனக் கருதாது. சிவபெருமான் எனவே மனதிலே கருதி வழிபடு.

சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சம்ஸ்காரதீக்ஷையினாலே வாகீஸ்வர வாகீசுவரிகளிடத்துத் தோன்றினமையால், அவர்களைமானுடர்களெனக் கருதலாகாதென்க. சமயிகளை நிந்தித்தவன் பிரமதினம் பதினைந்து செல்லும்வரையும் நரகத்திற் கிடப்பான் புத்திரரை நித்தித்தவன் விஷ்ணுதினம் ஐந்து செல்லும்வரையும் நரகத்திற் கிடப்பன். சாதகரை நிந்தித்தவன் உருத்திரதினம் மூன்று செல்லும்வரையும் நரகத்திற் கிடப்பான். ஆசாரியரை நிந்தித்தவன் சாதாக்கிய தத்துவ வருடம் மூன்று செல்லும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரையும் நரகத்திற் கிடப்பான். சாதகருள் நைட்டிகனைப் பரம்பொருளென்றும், சந்நியாசியைத் தக்ஷிணாமூர்த்தி என்றும், வானப்பிரத்தனை உருத்திரர் என்றும் இல்வாழ்வானை மகேசுரன் என்றும், ஏனையரைப் பொதுவில் சிவனென்றும் வழிபடுக.

*233) ஆதனந் தன்னைச் சிவாயவென வங்குதவு*
*மாதவர்வந் தாலுன் மனைக்கு.*

தெளிவுரை: அந்தப் பெரியோர்கள் உன் வீட்டுக்கு வந்தார்களாயின் நீ சீக்கிரம் எழுந்து எதிர்கொண்டு சிவபெருமானே வடிவு கொண்டு எழுந்தருளி வந்தாரென்று கருதி அவர்களை அழைத்து வந்து அவர்களுக்குச் சிவாயவென்று சொல்லி ஆசனத்தைக் கொடுத்து அதிலே அவர்களை இருத்திப் பூசை பண்ணுக.

*234) அன்புட னீக சிறிதேது மதுபயனா*
*மன்பிலா ரென்பெறுவா ராங்கு.*

தெளிவுரை: உன்னால் இயன்றது ஏதேனும் அற்பமாயினும் அன்புடனே கொடு. அதுவே பயனைத் தரும். அன்புடனே கொடாதவர்கள் யாதொரு பயனையும் பெறமாட்டார்கள். (ஆங்கு - ஆசை).

*235) போம்பொழுது பின்னே பதினான் கடிபோக*
*நாம்பெற்றோ மென்றெண்ணி நன்று.*

தெளிவுரை: இவர் நமது கிருகத்துக்கு எழுந்தருளிவருகையால் நாம் நன்மையைப் பெற்றோம் என்று நினைக்க. அவர்கள் போகும் பொழுது அவர்களுக்குப் பின் பதினான்கு அடி போய் வழிவிடுக.

சுற்றத்தாரையும் உளப்படுத்தற்கு நாம் பெற்றொமெனப் பன்மையாற் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***236) ஒடே லியங்கிடினு மொற்றியடி வைத்திடுக***
***வீடுமுயிர் கீடவித மென்று.***

தெளிவுரை: வழிவிடச் செல்லும்போது விரைவாக செல்லாதே, மெல்ல நடக்கினுங் கீட முதலிய செந்துக்கள் மரிக்கும் என்று நினைத்து மெல்ல அடியை வைத்துப் பின் செல்.

இராக்காலத்திலும் பயமுள்ளவிடத்தினும் அவர்களுக்கு முன் செல்லல் வேண்டும் என்று அறிக.

**இரவிலே செய்யலாகாதவையுணர்த்துகின்றார்.**

***237) இரவிற் றனித்தூரப் புறத்தியங்கேல் செல்க***
***விருவரருந் தற்கவிருட் டின்.***

தெளிவுரை: இராக்காலத்திலே ஊருக்கு புறத்தில் ஒரு போதும் தனித்துப் போகாதே. போக வேண்டின் ஒருவரைக் கூட்டிக் கொண்டுபோ. இருளிலே போசனம் செய்யாதே.

இருளிலே புசிக்கலாகாது, எனவே விளக்கிலே புசிக்கலாம் என்று ஆயிற்று.

**போசன காலத்தில் விளக்கவியிற்பரிகாரம் மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***238) அருந்தேல் விளக்கவியி லங்கையிற்றொட் டன்னந்***
***திருந்தவுரை காயத் திரி.***

தெளிவுரை: இரவிலே போசனம் பண்ணும் போது விளக்கவியிற் போசனம் பண்ணாமல் அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி விளக்கேற்றி வரும்வரை சிவ காயத்திரியை விதிப்படி உச்சரித்துக் கொண்டிருக்கவேண்டும் என்று அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***239) அருகரலர் காயத் திரிக்கஞ் செழுத்தை***
***யுரைசெய்க வீசனைக்கண் டுள்.***

தெளிவுரை: சிவகாயத்திரிக்கு உரியரல்லாதவர் சிவபெருமானை இருதயத்திலே தியானித்துப் பஞ்சாக்ஷரத்தை செபிக்கக் கடவர்.

***240) ஆக்கிவிளக் குண்ணந்த வன்னம் பினைப்பெய்யே***
***லாக்கியபாண் டத்தோ தனம்.***

தெளிவுரை: விளக்கேற்றுவித்து பின்பு பானையில் அன்னத்தை இடுவித்துக் கொள்ளாமல் அந்த அன்னத்தையே புசித்து எழுந்திருக்க.

**புசிக்கலாகாத அன்னம் எட்டுத்திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***241) அருந்த லதிபாத காதிய ரன்ன***
***மருந்தவத்தார் வந்தியன மாசு.***

தெளிவுரை: அதிபாதக முதலிய பாதங்களைச் செய்பவர்களுடைய அன்னமும் மலடிகளுடைய அன்னமும் குற்றமுடையவனவாம். ஆதலால் அவைகளை அருமையாகிய தவத்தினையுடையவர்கள் புசியாதொழியக் கடவர்கள்.

அதிபாதங்களாவன: சிவநிந்தை, சிவத்திரவியம் புசித்தல், கூலிக்குப் பூசித்தல், குருநிந்தை, குருத்திரவியம் புசித்தல், சிவனடியார் நிந்தை, வேதாகமநிந்தை என்பனவாம். ஆதி என்ற அதனாற் பஞ்சமகாபாதகமும் உபபாதகமும் கொள்க. அவைகளைச் சிவதருமோத்திரத்தில் காண்க.

மலடிகள்: சென்மமலடி, வழிமலடி, காமமலடி, மிருதமலடி என நால்வகையர். இவருள் பெற்ற பிள்ளைகளை சாவக் கொடுத்தவள் வழிமலடி. இவள் அன்னம் மாத்திரம் குற்றமுடையதன்று. மலடிகள் காமமலடி, கன்னிகாமலடி, சூதிகாமலடி, மிருதமலடி., சென்மமலடி என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐவகையர் என கூறலுமொன்று. அவர்களுள் சொப்பணம் கண்டு கருப்பம் நசிக்கப்பெறுமவள் காமமலடி. பெற்ற ஆண் பிள்ளைகள் இறந்து போகப் பெண்பிள்ளைகள் எல்லாம் இருக்கப் பெறுபவள் கன்னிகாமலடி, மூன்று நாழிகை மூன்று நாள், மூன்று மாதம், மூன்று வருடம் என்னும் இவைகளுள் ஒன்றிலே கருப்பம் நசிக்கப் பெறுபவள் சூதிகாமலடி. பிறந்த பிள்ளைகள் எல்லாம் சாவக் கொடுப்பவள் மிருதமலடி. ஒருகாலும் பிள்ளை பெறாதவள் சென்மமலடி. இன்னும் பிள்ளை பெறும் முன் கணவனை இழந்தவள் அன்னமும் பிள்ளைப் பெற்றுக் கணவனைக் குறித்து விதவாவிரதத்தை அநுட்டியாது பலவுங்கொண்டு விற்பவளன்னமும் குற்றமுடையன என்று அறிக.

*242) அருந்தல் பதித ரனங்கொள்ளு மன்ன*
*மருந்தற்க வேசியரன் னம்.*

தெளிவுரை: விரதபங்கருடைய அன்னத்தையும் விலைக்குக் கொண்ட அன்னத்தையும் புசியாது ஒழிக. வேசியர்களுடைய அன்னதையும் புசியாதொழிக.

*243) உண்ணே லுடலிலுறுப் பற்றார்சோ றந்தியசர்*
*வண்ணார் முதலோர் மனை.*

தெளிவுரை: அங்கஹீனரும், புலையரும், வண்ணாருமென்று சொல்லப்படும் இவர் முதலாயினாருடைய வீட்டில் அன்னத்தைப் புசியாது ஒழிக. முதலோற் என்ற அதனால், ஆட்டுவாணிகன், எண்ணெய் வாணிகன், கழைக் கூத்தாடி, பூவிற்பான், எண்ணெய் கொண்டு விற்பான். தச்சன், சொக்கிடுவான் என்பவர்களுடைய அன்னமும் குற்றமுடையன என்று அறிக.

*244) மணத்தினா லாநாள்சீ மந்தா தியினு*
*முணற்கசிராத் தந்தன்னி லும்.*

தெளிவுரை: விவாகத்தினும், நாலா நீர்ச்சடங்கினும், சீமந்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பும்ஸவனம் முட்டுக்கல்யாணம் முதலியவைகளினும், சிராத்தத்தினினும் அந்த கோத்திரத்தாற் அல்லாதவர் புசியாது ஒழியக்கடவர்.
இழவு, சபிண்டீகரணமுங் கொள்க.

***245) அருந்தெல் விடலி பதிமனையி லன்ன***
***மருந்தேல் கணிகைகணான் னம்.***

தெளிவுரை: விடலிபதியினுடைய வீட்டில் அன்னத்தைப் புசியாது ஒழிக. கணிகையுங் கணனுமென்று சொல்லப்படும் இவர்களுடைய அன்னதையும் புசியாதொழிக.

***246) மனைவி பிறர்முகம் பார்க்கவும்வாஞ் சிக்கும்***
***பனவன் விடலி பதி.***

தெளிவுரை: தன்னுடைய பாரியானவள் சோரநாயகரோடு கூடுதலை அறிந்திருந்தும். அவளைத் தள்ளாது. இச்சித்து புணரும் பார்ப்பானே விடலிபதியென்று சொல்லப்படுவர்.

***247) மரித்திடலுங் காந்தன்பின் மற்றையனால் வாய்த்த***
***கருத்தனைமயாத் தாள்கணிகை காண்.***

தெளிவுரை: தன்னுடைய கணவன் இறக்கவும் பின்பு வேறொரு புருஷனால் உண்டாகிய கருப்பத்தைச் சிதைத்தவளே கணிகை என்று சொல்லப்படுவள்.

***248) கணனந் தணர்முதலோர் தம்பொருள்கைக் கொள்வான்***
***மணிமுதலெல் லாந்திருடு வான்.***

தெளிவுரை: பிராமணர் முதலியோருடைய பொருள்களைக் கைக் கொள்வானாகி இரத்தினாதிகள் எல்லாவற்றையும் திருடுவோன் கணண் என்று சொல்லப்படுவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**புசித்தற்கேற்ற அன்னமுணர்த்துகின்றார்**

***249) அருந்துக தக்கா ரணமவர் வாஞ்சித்***
***தருந்துவிப்பார் நல்லதத னால்***

தெளிவுரை: நூல்வழி வழுவாது ஒழுகும் தன்மையை உடையோர் அன்பு கொண்டு புசிப்பிப்பர். அதனால் அவர் அன்னமே நன்மையுடையது. ஆகையால் அவ்வன்னத்தைப் புசிக்கக்கடவர்கள்.

**புத்திகாமன் முத்திகாமன் இருவருக்கும் போசனகாலம் வரையறுத்துணர்த்துகின்றார்.**

***250) ஐம்மூன்று நாழிகைமே லல்லருந்த லில்வாழ்வா***
***ரையாறுண் முத்தரந் தார்.***

தெளிவுரை: கிருகத்தர் இராத்திரியில் எட்டு நாழிகைக்கு மேலே புசியாதொழியக் கடவர். முத்திகாமர் இராத்திரி முப்பது நாழிகையுள்ளும் புசியார். ஐம்மூன்று என்பது உம்மைத் தொகை. கிருகத்தர் எட்டு நாழிகையினுள்ளே புசிக்கின் உத்தமம். பதினொரு நாழிகை அளவேல் மத்திமம். பதினான்கு நாழிகையளவேல் அதமம். அதற்கு மேல் புசியாதொழிக.

**சிவபூசை செய்யாதுண்டவழிப்படும் குற்ற முணர்த்துகின்றார்.**

***251) அலரினைச்சூட் டாதமலன் றாளினருந் தன்ன***
***மலமாம் பிணமுமா மாசு.***

தெளிவுரை: சிவபெருமானுடைய பாதத்திலே பூவைச் சூட்டாமல் புசிக்கும் அன்னம் மலமுமாம், பிணமுமாம், பெரும்பாவமுமாம்.

**ஆசௌசத்திற் பூசிக்குமுறைமையுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***252) செனனமர ணத்தாசௌ சத்தினுஞ்செய் பூசை யுனியரனை யீரவுடை யோடு.***

தெளிவுரை: சனன சௌசத்தினும், மரணசௌசத்தினும் ஈர வஸ்த்திரத்தைத் தரித்துக்கொண்டு நாட்தோறும் வழுவாது சிவபெருமானை தியானித்துப் பூசை செய்க.

இங்ஙனம் செய்வது திட பக்தியினாலே பாசத்தாரோடு கூடாது தனியே பாகம் செய்து புசித்துக் கொண்டிருப்பானென்க. இதனைச் சிவதருமோத்தர வுரையில் காண்க. உம்மை இழிவு சிறப்பு. ஸ்நானம் செய்தமைமுதற் பூசாந்தம் வரையும் தாமரை இலையில் நீர்போல் இவரை ஆசௌசஞ் சாராது என்று அறிக. திடபத்தியில்லாதவர் ஆசௌசம் நீங்கும்வரையும் தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும் தம்மோடு ஒத்தவரைக் கொண்டாயினும் பூசிப்பித்துப் பூசா அந்தத்திலே தாம் புறமண்டபத்தில் நின்று புட்பாஞ்சலித்திரயம் செய்து நமஸ்காரம் பண்ணக்கடவர்.

**பூசை செய்தற்கு இயலாவழிச் செய்யுமுறைமை உணர்த்துகின்றார்.**

***253) செய்விக்க தன்னோடொத் தாராற் சிவபூசை கைகால் செயலற்றக் கால்.***

தெளிவுரை: ஒருவன் வியாதியினாலே தன் கை கால்கள் தன் வசமாகாது இருப்பின் (தன்னோடு ஒத்தாரால் சிவபூசை செய்விக்க) அப்பொழுது தன்னோடு ஒத்த தீக்ஷையும், ஆசாரமும், வருணமும் உடையவரைக் கொண்டு விதிப்படி சிவபூசை செய்விக்க கடவன்.

**இராசபய முதலியவற்றாற் பூசை தவறிற் செயற்பாலது இதுவென்பது இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***254) அரசர்பயத் தால்சோர ராலருநோ யாலு மொருவிற் சிவபூசை யும்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இராச பயத்தினாலும் சோர பயத்தினாலும் பெரிய வியாதியினாலும் சிவபூசையும் அநுட்டான செபங்களும் தவறின்.

*255) ஆகுமே பாவமென் றஞ்சேல்பின் றேசிகனா*
*லாகுமுறை யாற்பூசை யாக்கு.*

தெளிவுரை: பாவம் வரும் என்று அஞ்சாதே, பின்பு ஆசாரியனைக் கொண்டு ஒரு கால பூஜை முதலியவை தவறின்அததற்கு ஏற்ற பரிகாரம் செய்விக்க. சிவலிங்கம் காணா விடத்து அந்தரியாக பூஜை செய்து பால்பழம் முதலியவற்றை உண்டு நாற்பது நாள் இருக்க. அந்தலிங்கம் வாராதொழியின் வேறோரிலிங்கத்தை ஆசாரியர் தர கைக்கொண்டு பூசை செய்க. அதன்பின் வந்ததாயின் அவ்விலிங்கத்தையும் விடாது பூஜை செய்க. அங்கீனனாயேனும் வியாதியுடையனாயேனும் இருப்பின் நாற்பதுநாளினுள் வந்ததில்லையாயின், வேறோர் லிங்கத்தைக் கைக்கொள்ளாது மரணபரியந்தம் அந்தரியாகமே ஆசாரியனாலே அனுமதி பெற்றுக் கொண்டு செய்க.

**சிவபெருமானுக்கு நிவேதித்தே புசித்தல் வேண்டுமென்று உணர்த்துகின்றார்.**

*256) மருந்தற லாதிநிவே தித்துயிர்மா தேவர்*
*சுருந்திடுக சுத்தமவை யாம்.*

தெளிவுரை: மருந்து தண்ணீர் முதலிய பதார்த்தங்களை உண்ணுமிடத்து ஆன்மநாயகராகிய சிவபெருமானுக்கு நிவேதித்தே உண்ணுக. நிவேதிக்கப் படித்தால்தான் அவைகள் சுத்தமாகும்.
நிவேதியாமல் உண்டால் பாவமென்று அறிக.

**இனிப் போசனவிதியை உணர்த்தத் தொடங்கிப் பிச்சை வகையுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*257) சாந்தா னிகபிச்சை தக்ககண மாதுகிரி*
*யாய்ந்தார்க் கயாசகமு மாம்.*

தெளிவுரை: சிவாகமங்களை ஆராய்ந்த பெரியோர்களுக்குரிய பிச்சையானது சாந்தானிகம் பிச்சையும், தக்க கணபிச்சையும், மாதுகரி பிச்சையும், அயாசகபிச்சையும் என நான்கு வகைப்படும்.

ஆசாரிய முதலாயினார் பத்தரிடத்தாயினும், சீடரிடத்தாயினும் மடம், மடப்புற முதலியவற்றைச் சந்தானபரம்பரையாக அநுபவிக்கும்படி வாங்குவது சாந்தானிகபிச்சை. இல்வாழ்வான் தெருவிலே புறப்பட்டு வீடுதோறும் தண்டுல பிச்சை வாங்குவது கணபிச்சை. வண்டானது ஒரு பூவை வாதை பண்ணாது பல பூக்களினும் சென்று மதுவை வாங்குமாறு போல விரத்தனானவன் ஒருவரை வாதை பண்ணாது பலரிடத்தும் சென்று எளிதாக அன்னபிச்சை வாங்குவது மாதுகரி பிச்சை விரத்தியின் முதிர்ச்சியினாலே நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கேயிருப்பினும் சிவபெருமான் புசிப்பிப்பார் என்று துணிந்து இருந்த விடத்திற் தானே ஒருவன் தானாகக் கொண்டு வந்துதந்ததை வாங்கிப் புசிப்பது அயாசகபிச்சை.

**நிறுத்தமுறையானே சாந்தானிக பிச்சாபோசன விதியை அறுபத்தேழு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*258) தக்கோர் கருணையுடன் றாமே தருந்தனமுந்*
*தக்கதென வன்பாற் றரித்து.*

தெளிவுரை: ஆசாரியன் தகுதியை உடையவர்களாகிய மாணாக்கர் அரசர் முதலாயினோர் அன்பினோடு தாமே தரும் பூமி முதலிய தனங்களை தக்கது என்று அவர்கள் மேல் வைத்த அன்பினாலே வாங்குக.

*259) தாங்கி யுபயோகந் தன்னையுந்தா னேசமைக்க*
*பாங்குறவீ சற்கென்றன் பால்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அதற்கு வேண்டும் கிருக முதலிய உபயோகங்களையும் வாங்கி சிவபெருமான் முதலாயினோருக்கு என்று உரிமை பொருந்த அன்பினாலே தானே பாகம் பண்ணக்கடவன். மனைவி புத்திரரும் சமைத்தற்குரியர். அங்ஙனமாயின், இங்கே சொல்லாதது என்னவென்றால் மனைவி கணவனுடைய சரீரத்தில் பாதிஎனவும், புத்திரன் பிதாவின் உருவமே எனவும், சுருதி கூறுகையால் பிரித்துக் கூறாது ஒற்றுமை பற்றித் தானே என்றார். எட்டுப்படி சமைப்பது உத்தமம்.

***260) அன்னந் தனைக்குறித்தே யாக்குமவ னந்தணன்***
***றன்னைவதைத் தானுக்கொத் தான்.***

தெளிவுரை: தனக்கெனக் குறித்து அன்னத்தை பாகம் பண்ணுவோன் பிராமணனைக் கொன்றவனுக்கு ஒப்பாவான் என்று அறிக.

***261) தேவ ரதிதியன ரேசிகர்க்கென் றட்டவனந்***
***தேவருல கத்திலமிர் தென்.***

தெளிவுரை: தனக்கெனக் குறியாது தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் சிவாக்கினிக்கும் ஆசாரியருக்கும் எனக் குறித்துப் பாகம் பண்ணப்பட்ட அன்னம் தேவருலகத்திலுள்ள அமிர்தம்போலுமென்றறிக.

***262) தன்னுடனே யொத்தசுத்த சைவர் தகச்சமைத்த***
***வன்னந்தா னும்பரிசுத் தம்.***

தெளிவுரை: தன்னோடு ஒத்த சுத்தசைவர்கள் தகும்படி சமைத்த அன்னமும் பரிசுத்தமாம். சுத்த சைவராவார் உயர்ந்த வருணத்தாராய்ச் சிவதீனக்ஷ பெற்றோராய்ச் சைவாசாரம் உடையராயுள்ளவர் சுத்தசைவரென்றமையால், மிச்சிரசைவரும் அசுத்த சைவரும் உண்டு என அறிக. உம்மை இறந்ததுதாழீ இய வெச்சவும்மை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***263) பரமசிவ னுக்கதனிற் பாதிநிவே திக்க
உரிமையினோ டிட்டலிங்கத் துள்.***

தெளிவுரை: சமைத்த அன்னத்திற்பாதியை தான்பூசிக்கும் இட்டலிங்கத்துனுள் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு உரிமையினோடு நிவேதிக்கக் கடவர்.

மற்றப்பாதியை இரண்டு கூறாக்கிப் பலி ஓமத்துக்கு ஒரு கூறும் தான் புசித்தற்கு ஒரு கூறும் கொள்க.

***264) முறைமையுற வேயிரண்டாஞ் சந்திமுடித் துள்ளத்
திறைவனடி கண்டுற் றெழுந்து.***

தெளிவுரை: விதிப்படி இரண்டாம் சந்தியாகிய மத்தியான சந்தியை நிறைவேற்றி சிவபெருமானுடைய திருவடிகளை இருதயத்திலே தியானித்து எழுந்து.

***265) கழுவியே நீரினாற் கால்கரமும் வாயு
மழகிய வெண்ணீ றணிந்து.***

தெளிவுரை: வாயையும் கால்கையையும் தண்ணீரினாலே சுத்திபண்ணி சுத்த ஆசமனம் செய்து அழகிய திருவெண்ணீற்றைத் தரித்து.

***266) சுல்லி யுரலுலக்கை யம்மி சுளகலகு
வல்வாள்வாய் தற்பலிகள் வைத்து.***

தெளிவுரை: அடுப்பினும், உரலினும், உலக்கையினும், அம்மியினும், சுளகினும் திருவலகினும் வலிய அரிவாண்மனையினும், வாயிலினும் அவ்வவற்றிற்குரிய அதிதேவதைகளை நமோந்தமாகப் பூசித்துச் சுவாகாந்தமாகப் பலியிட்டு.

***267) அகத்தின் புறத்துற் றதிதியிர் தம்மை
யுகப்போ டெதிர்கொண் டுளத்து.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: வீட்டின் புறத்திலே போய் அதிதிகளை மனமகிழ்ச்சியோடும் எதிர்கொண்டு.

பரமசிவனும் பார்வதி அம்மையும் முருகக்கடவுளும் விஷ்ணுவும், பிரமாவும், தருமதேவதையாகிய சகலரும் கூடி ஒரு வடிவு கொண்டு அதிதிரூபமாய் வருதலால், அவர்களைப் பூசித்தல் வேண்டுமென்று அறிக.

***268) இருத்தியே யாதனத்தி னிட்டப் படியே***
***யருத்துகவன் னாதி யவர்க்கு.***

தெளிவுரை: வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவந்து ஆசனத்தில் இருத்தி பூசைப்பண்ணி அவர்களுக்குப் பிரீதிப்படி அன்னம் முதலியவற்றை ஊட்டுக.

***269) தேசிகர் பூர்வ திசைநோக் குகவடதிக்***
***காசறுக்குஞ் சாதகர்க்கே யாம்.***

தெளிவுரை: போசனம் செய்யும்போது ஆசாரியர் கிழக்குத் திக்கை நோக்கியிருக்கக் கடவர். குற்றத்தை நீக்கும் சாதகர்க்கு வடக்குத் திக்கை நோக்கியிருந்தால் உரித்தாம்.

***270) மற்றையர்க்குப் பச்சிமமே மாண்புபொதுப் பூருவந்***
***தெற்கருந்த லாகாத திக்கு.***

தெளிவுரை: புத்திரகர் சமயிகள் என்னும் மற்றையிருவருக்கும் மேற்குத்திக்கை நோக்கியிருத்தலே சிறப்பு. மேற்கூறிய நால்வருக்கும் பொதுக் கிழக்குத் திக்காம். தெற்குத்திக்கு ஒருவரும் நோக்கியிருந்து புசிக்கலாகாத திக்காம்.

சாதகர் தெற்கு நோக்கியும், சமயிகள் வடக்கு நோக்கியும் இருந்து புசிக்க எனச் சிவாகமங்கள் சில கூறுமென்க. இருக்கும் போது சமான வருணரும் தீக்ஷிதரும் பந்திபாவனருமாகிய சனங்களோடன்றிப் பிறரோடு இருக்கலாகாது என்று அறிக.

***271) ஆகும் பிணிதென் றிசைபார்த் திருந்தினார்க்***
***காகந் தனிலென் றறி..***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: தெற்குத் திக்கை நோக்கியிருந்து புசித்தவருக்கு சரீரத்திலே நோயுண்டாம் என்று அறிக.

***272) முடக்கியிரு காலு முழந்தாண் மிசையே***
***யிடக்கர மூன்றி யிரு.***

தெளிவுரை: இரண்டு கால்களையும் முடக்கி இட முழந்தாளின் மேலே இடக்கையை ஊன்றிக் கொண்டிருக்க.

***273) அன்றியே வீரா தனமும்பாங் காமிடக்கா***
***றென்றொடைமே லொன்றச் செறி.***

தெளிவுரை: அஃதன்றி வீராதனமும் உரித்தாம், இடக்காற்பரட்டை வலத்தொடையிலே பொருந்த வைத்திரு இதுவே வீரா சனமாம்.

***274) தலத்தை மெழுகியது தன்னி லிரேகை***
***யிலக்குகநேர் நான்காதி யெண்.***

தெளிவுரை: போசன சாலையிலே திருமெழுக்கினாலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முழ அளவை சதுரச்சிரமாகப் புள்ளியின்றி மெழுகி அதன்மேல் விபூதியினாலேனும், வெண்பொடியினாலேனும் ஆசாரியர் முதலிய நால்வருக்கும் முறையே நான்கு முதலிய எண் கொண்ட இரேகைகளை அடையாளமாகக் கீறுக.

எனவே ஆசாரியர்க்கு நான்கு இரேகையும், சாதகருக்கு மூன்று இரேகையும், புத்திரர்க்கு இரண்டு இரேகையும் சமயிகளுக்கு ஓர் இரேகையுமாம் எனக் கொள்க. அவரவர் இருக்கும் ஆசன பலகைக்கும் இவ்வாறே அடையாளமிடுக.

வைதீகப் பிராமணர் மாத்திர மன்றிச் சைவ பிராமணரேயாயினும் வாகீசுவரி வாகீசுவரர் இடத்தில் உற்பவிக்கும் சிவதீக்ஷையும் சமயாசாரமும் உடையரல்லராயின், அவர்காண இந்நால்வரும் புசிக்கலாகாது என அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***275) சுத்திபண்ணாத் தானத்திற் சோற்றினிர தங்கொண்டு துய்க்கும் பிசாசாதி சூழ்ந்து***

தெளிவுரை: சுத்திபண்ணாத இடத்திலே புசிக்கப்படும். அன்னத்தின் சுவையை பிசாசு முதலியவைகள் சூழ்ந்து வந்து புசிக்கும்.

புள்ளியின்றிச் சுத்தி செய்த மண்டலத்தில் அன்னத்தை ஆதித்தன், உருத்திரன், பிரமன் முதலிய தேவர்கள் புசிப்பர் என அறிக.

***276) அருங்கனக பாத்திரத்தை வைக்க வதன்மே லுரம்பெறுமொள் வெள்ளிமுத லும்.***

தெளிவுரை: அதன்மேல் அருமையாகிய பொற்பாத்திரத்தையேனும் வலிமை பொருந்திய ஒள்ளிய வெள்ளி முதலியவற்றினாற் செய்த பாத்திரத்தையேனும் வைக்கக் கடவர்.

**முதலென்றதனால் வெண்கலமுங் கொள்க..**

***277) கதலிபலாப் புன்னை கமுகுமாத் தும்பி மதுகம் பலாசம் வரம்.***

தெளிவுரை: வாழையிலையும், பலாவிலையும், புன்னையிலையும், கமுகமடலும், மாவிலையும், சுரையிலையும், இருப்பையிலையும், பலாசிலையும் போசனம் செய்தற்கு விசிட்ட பாத்திரங்களாம்.

***278) பாதிரியுஞ் சண்பகம்வெட் பாலைபது மந்தானுங் கோதிலாப் பாத்திரமாங் கொள்.***

தெளிவுரை: பாதிரியிலையும், சண்பகவிலையும், வெட்பாலையிலையும், தாமரையிலையும் குற்றமில்லாத பாத்திரங்களாம், ஆதலின் அவற்றையுங் கொள்க. இவற்றுட் பலாசுந் தாமரையும் வைதீகருக்கு ஆகாது என அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

279) *அரம்பையிலை தண்டுரியே லாதிவலப் பாலிற்*
*பொருந்தியிடப் பூமிதனிற் போடு.*

தெளிவுரை: வாழையிலையைத் தண்டுரித்து போடாதே. அதனடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி பூமியிற்போடு.

**280)** *தருச்சேக் கவிரா மணக்கத்தி தான்றி*
*யெருக்கரசா லாதியிலுண் ணேல்.*

தெளிவுரை: சேங்கொட்டை மரத்திலையும், முருக்கிலையும், ஆமணக்கிலையும், அத்தியிலையும், தான்றியிலையும், எருக்கிலையும், அரசிலையும், ஆலிலையுமாகிய இவை முதலிய இலைகளிலே புசியாதே. ஆதியென்றதனால் இறலி, தாழை, வேங்கை, தேக்கு என்பனவும் ஆகாவெனக் கொள்க.

**281)** *தனித்தனியே தைத்துச் சமைத்துறுங் கல்லை*
*தனித்தனியே போடுகமுன் றான்.*

தெளிவுரை: விதித்த மரங்களில் ஒரு மரத்திலை கொண்டே ஒரு கல்லை முழுதும் தைத்து அப்படித் தைக்கப்பட்ட கல்லைகளை ஆசாரியர் முதலிய நால்வர் முன்னும் தனித்தனியே போடுக.

**282)** *அருகமல் லாத விலையி லருந்தி*
*னுரைமூல மந்திரநூ றோர்ந்து.*

தெளிவுரை: போசனத்துக்கு உரியனவல்லாத இலைகளில் புசிக்கின் அக்குற்றம் போம்படி மூலமந்திரத்தின் பகுதியை அறிந்து நூறு உரு செபிக்க.

**283)** *செய்து புனிதஞ் சிறந்த பரிகலத்திற்*
*பெய்திடுக வன்னம் பிற.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சிறந்த பரிகலத்திலே நெய்யினாலே புரோக்ஷித்துச் சுத்தி பண்ணி அன்னத்தையும் கறி முதலிய பிறவற்றையும் ஒரு காலே படைக்க.

பின்பு படைக்கப்படும் அன்னம் கறி முதலியவற்றுள் ஒவ்வொரன்னத்துக்கு ஒவ்வொரு பாவமும் கறி முதலியவற்றுள் ஒவ்வொரு கழஞ்சுக்கு ஒவ்வொரு பாவமும் அமுது செய்விப்பானுக்கு உண்டு என்று அறிக.

***284) சலத்தின் மிருத்துஞ் சயத்தைச் செபிக்க***
***வலக்கை யினையதன்மேல் வைத்து.***

தெளிவுரை: வலக்கையைச் சலபாத்திரத்தின் மேலே வைத்து சலத்திலே மிருத்தியுஞ்சய மந்திரத்தை வௌஷடமந்தமாக ஏழுதரம் அபிமந்திரிக்க.

***285) வளைத்திடுக பாத்திரத்தை மந்திரித்த நீரா***
***லுளத்தாற் கவச முரைத்து.***

தெளிவுரை: அபிமந்திரிக்கப்பட்ட சலத்தை வலக்கையில் வாங்கி அதினாலே மனப்பூர்வமாக கவச மந்திரத்தை உச்சரித்து அன்னபாத்திரத்தை வளைக்க.

286) ***அத்திரத்தா லந்நீ ரமிர்திற் புரோக்கிக்க***
***வத்தத் தநாமிகையி னால்.***

தெளிவுரை: அப்பாத்திரசலத்தை வலக்கையினாழி விரலினாலே தொட்டு அவ்வன்னம் சுத்தியாகும் பொருட்டு அதன்மேல் அஸ்திரமந்திரத்தினாலே புரோக்ஷிக்க.

***287) செபிக்க மிருத்துஞ் செயமேழு வார***
***மவிக்கருக மாமோ தனம்.***

தெளிவுரை: அவ்வன்னத்தைத் தொட்டு மிருத்தியுஞ்சய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரத்தினால் ஏழுதரம் அபிமந்திரிக்க. அங்ஙனம் அபிமந்திரிக்கப்பட்ட அன்னம் பிராணாக்கினி காரியம் செய்தற்கு உரித்தாம்.

***288) வலப்பான் மெழுகியே வைத்திடுக வந்தத்***
***தலத்திற் சிறிதோ தனம்.***

தெளிவுரை: வலப்பக்கத்திலே மண்டலமாக மெழுகி அரைப்பிடிஅன்னம் அள்ளி அந்தக் தலத்திலே நாகாதி பஞ்சவாயுக்களுக்கும் ஒருங்கே வைக்க.

இவ்வாறன்றித் தான்றிக் காயளவு அன்னமாக அள்ளி நடுவினும் நான்கு கோணத்தினும் பஞ்சவாயுக்களுக்கும் தனித்தனியே பலியிடுதலே சிறந்ததாம்.

***289) ஏற்றுச் சலங்கை யிறங்கச் சிறுவிரலா***
***லூற்றுகநா காதி யுரைத்து.***

தெளிவுரை: வலது உள்ளங்கையிலே சலத்தை ஒருவர் வார்க்க வாங்கி அப்பாத்திரத்தை ஈசான மந்திரத்தினாலே சுற்றி முன் பலியிட்ட இடத்திலே நாகாதிபஞ்சவாயு மந்திரத்தாற் சிறுவிரல் நுனியினாலே அச்சலத்தை விடுக.

பஞ்சவாயுக்களாவன: நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பனவாம்.

***290) உழுந்தமிழ்ந்து நீர்வைத் துளங்கைமி லோமென்***
***றெழுந்தவொலி யாதி மிசைத்து.***

தெளிவுரை: எல்லாச்சலத்தையும் விட்டுவிடாது உள்ளங்கையிலே உழுந்தமிழ்ந்தத் தக்க சலத்தை வைத்து பிரணவ முதலாகவுடைய பத்ததியில் விதித்த மந்திரத்தைச் சுவாகாந்தமாக உச்சரித்து உட்கொள்க.

அம்மந்திரத்திற்கு அருகரல்லாதவர் தத்புருட மந்திரத்தை உச்சரிக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*291) அருந்தும்போ தந்நீ ரனபாத் திரத்தைத்*
*திருந்தவிடக் கையாலே தீண்டு.*

தெளிவுரை: அந்தச் சலத்தை உட்கொள்ளும்போது அன்ன பாத்திரத்தைத் திருத்தமாக இடக்கையினாலே தொட்டுக் கொள். சலபான முடிந்தவுடனே அதை விடல் வேண்டுமென்றறிக.

*292) அங்குட்டத் தான்மத் திமையா லநாமிகையாற்*
*றங்க வமிர்தந் தரித்து.*

தெளிவுரை: பெருவிரலினாலும் நடுவிரலினாலும் ஆழிவிரலினாலும் பொருந்தும்படி அவ்வன்னத்தில் சிறிதள்ளி, இம் மூன்று விரலும் கூடின் மிருகமுத்திரை எனப்படும்.

*293) பல்லிற் படாதே பலியிடுக செந்தழலி*
*னொல்லைப் பிராணாதிக் கு.*

தெளிவுரை: அஸ்திர மந்திரத்தினாலே உதரத்திலுள்ள சாடராக்கினியைச் சொலித்ததாகப் பாவித்து அவ்வக்கினி இடத்தே பிராணாதி பஞ்ச வாயுக்களுக்கும் பல்லிலே படாமல் உள்ளே அம்முத்திரையினாலே தனித்தனியே சடிதியில் பலியிடுக.

ஆன்மாவிடத்துப் பிராணனும், பூதயோனிகளிடத்து அபானனும், தேவர்களிடத்து உதானனும், பிதிர்களிடத்துச் சமானனும், மானுடரித்து வியானனும், விசேடித் திருக்கையால் இப்பஞ்ச வாயுக்களுக்கும் பலியிடிற் பஞ்சமகா யஞ்ஞும் செய்ததாம் என்று அறிக.

*294) பருகிடுக நாபியழற் குண்டத்திற் பாய*
*வெரியத் திரத்திலக்கி யே.*

தெளிவுரை: குண்டத்தானமாகிய நாபியிலே பொருந்திய உதராக்கினியை அஸ்திரமந்திரத்தினாலே சொலிப்பித்துப் பிராணாக்கினி கோத்திரம் செய்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***295) சேடித்த வன்னஞ் சிவனுக்கு மூலத்தைப்
பாடித்தே யாகுதியைப் பண்.***

தெளிவுரை: நாபி குண்டலத்திலிருக்கும் சிவபெருமானுக்கு மூலமந்திரத்தைச் சுவாகாந்தமாக உச்சரித்து முன்னே பலியிட்டு எஞ்சிய அன்னத்தைப் பசி தீருமளவும் புசித்தலாகிய ஆகுதியைப் பண்ணுக.

***296) உள்ளிவெள் ளுள்ளி யுதும்பரஞ் செம்முருங்கை
வள்ளிபச ளைம்மதுக்கோ வை.***

தெளிவுரை: உள்ளியும், வெள்ளுள்ளியும், அத்தியும், செம்முருங்கையும், வள்ளியும், பசளையும், மதுவும், கொவ்வையும்.

***297) வெண்கத் தரிக்காய்தேற் றாங்காய்வில் வக்காயு
முண்பதல கொம்மடிக்கா யும்.***

தெளிவுரை: கோழி முட்டையைப் போல் வெண்கத்திரிக்காயும், தேற்றாங்காயும், வில்வக்காயும், கொம்மடிக்காயும், உண்ணலாகாத பதார்த்தங்களாகும்.

***298) எண்ணெய்ப்பிண் ணாக்குப் பெரும்பீர்க் கெனுமிவையு
முண்ணே லுருண்டசுரை யும்.***

தெளிவுரை: எண்ணெய் பிண்ணாக்குப் பெரும்பீர்க் கென்று சொல்லப்படும் இவைகளையும் உருண்ட சுரைக்காயும் உண்ணாதே.

எட்பொடி கூட்டிற் குற்றமில்லையென்றறிக.

***299) என்னு மிவைமுதலா மெல்லா மொழித்தருந்து
மன்ன மமுதமே யாம்.***

தெளிவுரை: இங்கே சொல்லப்பட்ட இவை முதலாகிய பதார்த்தங்கள் எல்லாவற்றையும் நீக்கிப் புசிக்கும் அன்னமானது அமுதமே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***300) பாலினொடுப் புப்படினு நெய்படினு முச்சிட்டத்
தேல விருதயநூ றெண்***

தெளிவுரை: அறியாமையினாலே பாலினோடு உப்புக் கூடினும் எச்சிலிலே நெய் வார்க்கப்படினும் புசித்தபின் அக்குற்றம் போகும்படி இருதயமந்திரத்தை நூறுதரம் செபிக்க.

***301) அன்னங் கறியுப்பு நெய்யகப்பை யாலிடுக
வின்னவை கையா லிடேல்.***

தெளிவுரை: அன்னத்தையும், கறியையும், உப்பையும், நெய்யையும் அததற்குரிய அகப்பையினால் இடுக.இவைகளை ஒருபோதும் கையினால் இடாதே.

***302) கையினா லூறுகா யாதியிடு சேடநீர்
சைவ ரருந்துவரோ தான்.***

தெளிவுரை: ஊறுகாய், ஆதி முதலியவைகளைக் கையினால் தானே பரிமாறுக. சைவர்களாயினோர் ஒருவர் குடித்து மிகுந்த சலத்தை ஒருபோதும் குடிக்கக் கூடாது.

ஆதியென்றதானால், பச்சடி, வற்றல், வடகம், பணியார முதலியன கொள்க.

***303) அருந்தினா லற்றைக் குபவசியாய்ப் பின்னா
ளருந்திடுகு பஞ்சகவ்வி யம்.***

தெளிவுரை: மிகுந்த சலத்தை ஒருவன் குடிப்பானாயின் அன்றைக்கு உபவாசியாயிருந்து. மற்றை நாளிலே விதிப்படி தாபித்துச் சிவபெருமானுக்கு ஆட்டிப் பாத்திரத்திலே சேடித்த பஞ்சகவ்வியத்தை உட்கொள்க. போசனத்தின் பின் குடித்தானாயின், மற்றை நாள் உபவாசியாயிருந்து. மூன்றாம் நாளிலே கவ்வியம் உட்கொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***304) தண்ணீ ரருந்தேன் முகந்தாழ்த்தள் ளிக்கையா***
***லுண்ணேலந் நீரை யுகந்து.***

தெளிவுரை: முகத்தைத் தாழ்த்துத் தண்ணீர் குடியாதே. ஆறு. குளம் முதலியவற்றிற் சென்று அந்நீரைக் கையால் அள்ளி மகிழ்ந்து பானம் பண்ணாதே. சலத்தை ஒரு பாத்திரத்தில் வார்த்து இருந்து கொண்டு வலக்கையினால் எடுத்து மேல் நோக்கிக் குடிக்க. விரத்தன் புசிக்கும் போது அவ்விடத்தில் ஒருவருமில்லையாயிற் சலபாத்திரத்தை இடக்கையினால் எடுத்து வலக்கையிலுள்ள அன்னம் எல்லாவற்றையும் பரிகலத்தில் உகுத்துவிட்டு முன்கையினாலே தாங்கிப் பானம் பண்ணுக.

***305) உரையே லசனத் துபயோக மல்ல***
***விரையதிக மாகவருந் தேல்***

தெளிவுரை: போசனம் பண்ணும் போது அதற்கு உபயோகமல்லாத பிறவார்த்தைகளைப் பேசாதே முக்கால்வயிற்றுக்கு மேற்படப் போசனம் பண்ணாதே.
கால்வயிற்றுக்குச் சலத்தையும் வாயுவையும் பூரிக்க.

***306) மாற்றிமயிர் மற்றும் விரவிற் புறம்புனலா***
***னீற்றாலுஞ் சுத்தி நிறை.***

தெளிவுரை: புசிக்கும் போது அன்னத்தில் மயிர் முதலியவை கிடக்கின் அவற்றைச் சிறிது அன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டு கை கழுவிக் கொண்டு ஜலத்தினாலும் திருநீற்றினாலும் சுத்தி பண்ணிப் புசி. மற்றும் என்றது ஈ, எறும்பு, கொசு, நகமுதலியனவற்றை, பாகம் பண்ணும் போது கூடிக் கிடந்து பாகம் பண்ணப்பட்டதெனின், மயிரொழிய மற்றவையாகில் புசிக்கலாகாது. பசுக்களுள் மலந்தின்னும் பசுக்களுக் கூட்டுக.

***307) ஈனர் புலைய ரிருதுமதி நாய்பன்றி***
***யேனையவும் பாரா விடத்து.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: ஈனசாதியாரும், புலையரும், இருதுமதியும், நாயும், பன்றியும், பிறவும் பாராதவிடத்தில்.
ஏனையவும் என்ற உம்மையால் கோழி, காகம், பருந்து, கழுகு முதலாயின கொள்க.

*308) இருந்தா குதிசெய் யிவற்றொன்று பார்க்கிற்*
*சொரிந்திடக்கக் குண்டகறி சோறு.*

தெளிவுரை: இருந்து போசனம் பண்ணு, இவற்றுள் ஒன்று பார்க்கும், ஆயின் உண்ட கறிச்சோற்றைச் சொரியும்படி கக்கு.
பூனை, எலி, மூடிகம் பல்லி, ஊர்க்குருவி என்னும் இவற்றுள் ஒன்று பார்க்கின், அதனை யோட்டித் திருநீற்றினாலும், சலத்தினாலும் சுத்தி செய்து புசிக்க.

309) *முரசாதி தன்னை முழக்க வவற்றி*
*னரவஞ் செவியினுறா மல்.*

தெளிவுரை: போசனம் செய்யும்போது முற்கூறிய உயர்திணை அஃறிணைப் பொருள்களின் சத்தங்கள் செவியிற்கேளாதபடி முரசமுதலிய வாத்தியங்களை ஒலிப்பிக்க.

*310) முற்றியபின் னாகுதிதான் முன்னூன் முறையுறவே*
*சற்றுநீ ரங்கை தரித்து.*

தெளிவுரை: முன்னூல் விதிப்படி பிராணாக்கினி ஆகுதி முடிந்தபின்னர் சிறிது சலத்தை உள்ளங்கையில வாங்கி.

*311) உச்சரித்தோ மாதிமனு வுண்க வதன்பின்னை*
*யெச்சில் சிறிதள்ளி யே.*

தெளிவுரை: பிரணவத்தை முதலாகவுடைய பத்ததியில் விதித்த மந்திரத்தைச் சுவாகாந்தமாக உச்சரித்து அச்சலத்தை உட்கொள்ளுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதன்பின் உச்சிட்டமான அன்னத்திலே சிறிதள்ளி.

அம்மந்திர முச்சரித்தற்கு அருகரல்லாதவர் தற்புருடமந்திரம் உச்சரிக்க.

***312) பெய்க நிலத்துப் பிரேதநர காயவென***
***வுய்வரது தன்னையவ ருண்டு.***

தெளிவுரை: தமது கோத்திரத்தில் அந்தியேட்டி முதலிய கருமம் செய்து ஆசாரியனால் யோசிக்கப்படாது நரகத்திலே கிடப்பவர்களுக்குப் பிரேதநரக வாசிப்பிய சுவாகா என்று உச்சரித்து அவ்வன்னத்தைத் தரையிலே பலியிட்டு அம்மந்திரத்தினாலே சுளுகோதகங் கொடுக்க. அந்நரக வாசிகள் அதனையுண்டு பசிநோய் நீங்குவார்கள். இங்கே யமனுக்கும் சித்திரகுப்தருக்கும் பலியிடுக வெண்பாருமுளர்.

***313) புசித்தமனை யுட்கை கழுவுகை தன்னை***
***நிசித்த மெனவே நினை.***

தெளிவுரை: புசித்த போசன சாலையினுள்ளே கை கழுவிச் சுத்தாசமனஞ் செய்தலை விலக்கப்பட்டது என்று அறிக.
அங்ஙனம் செய்யின் அச்சலம் மூத்திரத்துக்கு ஒக்கும் என்று அறிக.

***314) புறத்திற் கழுவிக்கை கொப்பளிக்க வாமப்***
***புறத்தீரெண் கானீர் புரிந்து.***

தெளிவுரை: வீட்டிற்கு புறத்திலே போய் முன் வலக்கையைக் கழுவிக் கொண்டு பதினாறுதரம் தண்ணீர் வாயிற் கொண்டு இடப்புறத்திலே கொப்பளிக்க.

***315) அன்னமலாப் பண்ட மருந்தினர்தாங் கொப்பளிக்க***
***நன்னீரா லெண்கா னயந்து.***

தெளிவுரை: அன்னமல்லாத பயறு பணியாரம் முதலிய பண்டங்களைப் புசித்தவர் எட்டுத் தரம் தண்ணீர் வாயிற்கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொப்பளிக்க. இங்ஙனமன்றித் தமக்குச் சுத்தியாகும் மட்டும் கொப்பளித்தலும் ஆகும் என்று அறிக.

***316) வலப்பாலிற் கொப்பளித்தால் வன்னிநர கம்புக்***
***கலற்படுவ னென்றே யறி.***

தெளிவுரை: அறியாமையாலேனும், விரைவினாலேனும், தேவர்கள், எப்பொழுதும் வசிக்கும், வலப்புறத்திலே ஒருவன் கொப்பளித்தான் ஆயின் அக்கினி நரகத்திலே விழந்து துயருறுவனென்று அறிக.

***317) கழுவிப் பினுங்கையுங் காலும் புசித்த***
***வழுவறு மாறு மதித்து***

தெளிவுரை: கொப்பளித்த பின்பு புசித்தபொழுது கைகால்களில் எச்சில் தெறித்த குற்றம் போகும்படி நினைத்து கைகால்களை முழங்கை முழங்கால் வரையும் கழுவிக் கொண்டு.

***318) கழுவிச் சிறந்தவலக் கைமுட்டி யாக்கி***
***யொழுகப் பெருவிரனீ ரும்.***

தெளிவுரை: இங்ஙனம் சுத்தி செய்யப்பட்டுச் சிறந்த வலக்கையை முட்டியாக்கிக் கீழ் நோக்கிப் பிடித்து அதன் பெருவிரனுனியினின்று விழுகின்ற சலத்தை.

பிரமதீர்த்த முதலிய சகலதீர்த்தங்களும் சகல தேவதைகளும் இடையறாதிருக்கையால் சிறந்த வலக்கையெனச் சிறப்பித்தார்.

***319) வார்க்கவலக் காலங்குட் டத்திற்கா லாங்கிமனு***
***நாக்கி னுறவே நவின்று.***

தெளிவுரை: காலாக்கினி ருத்திரருடைய மந்திரத்தைச் சுவாகாந்தமாக நாவிலே பொருந்த உச்சரித்து வலக்கால் பெருவிரலிலே வார்க்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலக்கினிருத்திரர் வலக்காற் பெருவிரலில் எப்பொழுதும் அக்கினியைச் சொலிப்பித்துக் கொண்டு எழுந்தருளியிருப்பர். அவ்வக்கினி சாந்தமாதற்பொருட்டு அபிஷேகம் செய்வதாகப் பாவித்தே வார்க்க.

***320) தொடவலக்கை யங்குட்டந் துண்டங் கனிட்டை***
***தொடவிடக்கை யங்ட்குட்டத் தோடு.***

தெளிவுரை: வலக்கைப் பெருவிரல் மூக்கைத் தொட பின்பு அதன் சிறுவிரல் இடக்கைப் பெருவிரலைச் சாணளப்பது போலத் தொட.

***321) வைக்ககனிட் டாக்கிரத்தை நாபியிலூண் மாசுதனைக்***
***கைக்கும் பரிகையாங் காண்.***

தெளிவுரை: அவ்விடக்கை சிறுவிரல் நுனியை நாபியில் வைக்க இது ஆகாரத்தால் வந்த குற்றத்தைப் போக்கும் பரிகையென்னும் முத்திரையாம் என்று அறிக.

***322) பரிகையெனு முத்திரையைப் பண்ணிடுக மெய்யிற்***
***றிருநீ றணிந்து சிறந்து.***

தெளிவுரை: இங்ஙனம் பரிகாரமுத்திரையைப் பண்ணி அதன்பின் சரீரத்தில் விபூதியைச் சிறப்புறத்தரித்து.

***323) பண்ணி நியாதம் பரம சிவன்பாத***
***முண்ணினைக தேசிகன்றா ளும்.***

தெளிவுரை: சகளீகரணம் பண்ணி பரமசிவனுடைய பாதங்களையும் ஆசாரியனுடைய பாதங்களையும் உள்ளே தியானிக்க.

***324) உரைத்தே யகோர வுரையேழு வாரம்***
***விரைத்தே மவுனம் விடு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அகோர மந்திரத்தை ஏழு தரம் உச்சரித்து மௌனத்தை சடிதியில் விடு.

**மௌனம் வேண்டுங் காலங்களுணர்த்துகின்றார்.**

***325) பிறரொடுபே சற்கநீ ராட னியதி***
***பொறியழலோம் பல்பூசை யில்.***

தெளிவுரை: ஸ்நானம் செய்யும் போதும். அனுட்டானம் செய்யும் போதும் பொறி பொருந்திய அக்கினி காரியம் செய்யும் போதும் பூசை பண்ணும் போதும் பிறரோடு பேசாது ஒழிக. அன்றியும் செபகாலத்தும் மலசல மோசன காலத்தும் யோகம் சாதிக்கும் காலத்துக்கும் மௌனம் வேண்டுமென்க.

***326) புனிதமுற வாக்குப் புசிக்கதாம் பூல***
***மினிமையுறத் தின்கை யிழுக்கு.***

தெளிவுரை: கிருகத்தர் போசனம் செய்தபின்னர் வாக்கு சுத்தியாகும் பொருட்டுத் தாம்பூலம் புசிக்கக் கடவர். அப்படியின்றி விருப்பம் வைத்துப் புசித்தல் குற்றமாகும். விரத்தராயினோர் கிராம்பு, ஏலம், கடுக்காய், சுக்கு அசமதாக முதலியவற்றள் இயன்ற தொன்றைப் புசிக்க.

**சைவாகமாதிகளை ஆராயுமுறைமையுணர்த்துகின்றார்.**

***327) அதன்பி னமாலா கமமாய்ந் தறிக***
***வதன்வழியுஞ் சார்புமா ராய்ந்து.***

தெளிவுரை: அதன்பின்பு நிருமலராகிய சிவபெருமான் அருளிச் செய்த முதன் நூலாகிய சைவாகமங்களை ஆராய்ந்தறிக. அன்றியும் அவற்றின் வழி நூலாகிய உபாகமங்களையும் சார்பு நூலாகிய அட்டப்பிரகரண முதலியவற்றையும் ஆராய்ந்து அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அட்டப்பிரகரணங்களாவன: தத்துவ பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், போக காரிகை, மோக்ஷ காரிகை, நாத காரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை, இரத்தினத் திரயம் என்பனவாம்.

**சைவாகமங்களினுற்பத்தி எட்டுத்திருகுறளா லுணர்த்துகின்றார்.**

***328) சாதாக் கியமென்னுந் தத்துவத்தில் வீற்றிருந்து***
***சாதா சிவனமலன் றான்.***

தெளிவுரை: நிருமலராகி அதிபரமாப்தராயுள்ள சதாசிவ மூர்த்தி சாதாக்கிய தத்துவத்தில் எழுந்தருளியிருந்து. அவரினும் பிரமா மேலாகிய ஆப்தர், ஆப்தர் உள்ளது கூறுவோர். சாமானியமனுடரினும், விசேட மனுடர் மேலாகிய ஆப்தர், அவரினும் இருடிகள் மேலாகிய ஆப்தர், அவரினும் தேவர்கள் மேலாகிய ஆப்தர், அவரினும் விஷ்ணு மேலாகிய ஆப்தர் அவரினும் உருத்திரர் மேலாகிய ஆப்தர், அவரினும் மகேந்திரர் மேலாகிய ஆப்தர், அவரினும் சதாசிவர் மேலாகிய ஆப்தர், அவரின் மேலாகிய ஆப்தரின்மையால் அவர் அதிபரமாப்தர் எனப்படுவர்.

***329) நயந்தா ருயிரெல்லா நண்ண வறமாதி***
***யியம்பினா னாகமநா லேழு.***

தெளிவுரை: நிறைந்த ஆன்மாக்கள் எல்லாம் அறம். பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள் நான்கையும் விரும்பியடையும் பொருட்டு இருபத்து எட்டு ஆகமங்களை அநுட்டுப்புச்சந்தசாக அருளிச் செய்தார்.

***330) இருக்கு மிவையெல்லாஞ் சுத்தவித்தை தன்னிற்***
***பரக்குமுல கெங்குமெனப் பார்.***

தெளிவுரை: இவ்வாகமங்கள் எல்லாம் ஞானோதயத்துக்கு காரணமாகிய சுத்தவித்தியாதத்துவத்திலிருக்கும் அதிலிருந்து பரம்பரையாக மகாமேருவில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்திறங்கி அதினின்றும் உலகமெங்கும் பரம்புமென்றறிக.

இவற்றின் தோற்றம் உற்பத்திக்கிரமம் எனவும். சங்காரக்கிரமம் எனவும் இருவகைப்படும் அவற்றுள் உற்பத்திக்கிரமமாவது ஈசானமுதற் சத்தியோஜா மீறாகக் கூறுவது. சங்காரக் கிரமமாவது சத்தியோசாத முதல் ஈசானமீறாகக் கூறுவது.

இவை சதாசிவனால் அநந்தேசுரருக்கும், அநந்தேசுரரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும் தேவர்களால் முனிவருக்கும், முனிவர்களால் மானுடருக்கும் மானுடரால் மானுடருக்கும், உபதேசிக்கப்படும், இங்ஙனம் உபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம்பந்தம், மகாசம்பந்தம், அந்தராள சம்பந்தம், திவ்விய சம்பந்தம், திவ்வியாதிவ்விய சம்பந்தம்,. அதிவ்வியசம்பந்தம் எனப்பெயர் பெறும்.

***331) சத்தியோர் சாதத்திற் காமிக மாதியைந்து***
***முற்பவித்து நீடுமென வோர்.***

தெளிவுரை: சதாசிவ மூர்த்தியுடைய ஐந்து முகங்கள் உள்ளும், சத்தியோசாத முகத்தினின்றும், காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம் என்னும் ஐந்து ஆகமங்களும் தோன்றி வழங்கும் என்று அறிக.

இவை கௌசிகவிருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின் படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடி கோத்திரம் சிவகோசரமெனப்படும். கோத்திரம் எனினும் கோசர மெனினுமொக்கும்.

***332) தீத்தமுத லைந்துந் திகழ்வாம வத்திரத்தில்***
***வாய்த்தன வென்றே மதி.***

தெளிவுரை: விளங்காநின்ற வாமதேவ முகத்தினின்றும் தீப்தம், சூக்குமம்., சகச்சிரம், அஞ்சுமான். சுப்பிரபேதம் என்னும் ஐந்து ஆகமங்களும் தோன்றின என்று அறிக

இவை காசிப விருடியின் பொருட்டுத் தோன்றின, இவற்றின் படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசுரன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூமியின் கண் இவ்விருடி கோத்திரம் சிகாகோசரம் எனப்படும்.

***333) விசயமுத லைந்தும் விகிர்தவகோ ரத்தி***
***லிசையவுதித் தேயிலங்கு மென்.***

தெளிவுரை: அச்சத்தைத் தரும் அகோரமுகத்தினின்றும் விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என்னும் ஐந்தாகமங்களும் பொருந்தத் தோன்றி விளங்குமென்றறிக.

இவை பாரத்துவாசவிருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசானன். பூமியின்கண் இவ்விருடிகோத்திரம் சோதி கோசரம் எனப்படும்.

***334) தற்புருடத் தேரௌர வாதியைந்துஞ் சாதமா***
***யற்புதமாய் நீடு மறி.***

தெளிவுரை: தற்புருடமுகத்தினின்றும் ரௌரவம். மகுடம், விமலம், சந்திரஞானம்., முகவிம்பம் என்னும் ஐந்தாகமங்களுந் தோன்றி ஆச்சரியகரமாய் வழங்குமென்றறிக. இவை கௌதமவிருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை பிரமமூர்த்தி, பூமியின் கண் இவ்விருடிகோத்திரம் சாவித்திரகோசரம் எனப்படும்.

***335) ஈசானந் தன்னிற் புரோற்கீத மாதியெட்டுந்***
***தேசார வேயுதிக்குந் தேறு.***

தெளிவுரை: ஈசான முகத்தினின்றும் புரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம், என்னும் எட்டு ஆகமங்களும் ஞானபிரகாசம் பொருந்தத்தோன்றின என்றறிக.

இவை அகஸ்திய ருஷியின் பொருட்டு தோன்றின . இவற்றின் படியே இவருக்கு தீக்ஷை செய்யப் பெற்றது. இவற்றிற்கு அதிதேவதை நடேச மூர்த்தி. பூமியின் கண் இந்த ருஷி கோத்திரம் வியோம கோசரம் எனப்படும்.

இந்த இருபத்தெட்டு ஆகமங்களுள்ளும் காமிகம் முதலிய பத்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விக்ஞானகலருள் பரமசிவனது அனுக்ரஹத்தைப் பெற்ற பிரணவர் முதலிய பத்து சிவன்களுக்கும் அருளிச் செய்யப்பட்டவை. ஆகையால் சிவபேதம் எனவும். விஜயம் முதல் வாதுளம் ஈறாக உள்ள பதினெட்டு ஆகமங்களும் பரமசிவன் பால் உபதேசம் பெற்ற அநாதி ருத்திரர் முதலிய பதினெட்டு ருத்திரர்களுக்கும் அருளிச்செய்யப் பட்டமையால் உருத்திரபேதம் எனவும் சொல்லப்படும்.

இச்சிவாகமங்கள், சித்தாந்தமெனவும், மாந்திரமெனவும் தந்திரமெனவும் பெயர்பெறும்.

இவ்வாகமங்களுக்குக் கிரந்த சங்கியை சொல்வாம்: காமிகத்துக்குப் பரார்த்தம், யோகஜந்து இலக்ஷம் சிந்தியத்துக்கு இலக்ஷம். காரணத்தக்குக் கோடி. அஜிதத்துக்கு நியுதம். தீப்தத்துக்கு நியுதம். சூக்ஷமத்துக்குப் பதுமம். சஹஸ்ரத்திற்கு சங்கம். அம்சுமானுக்கு ஐந்து இலக்ஷம். சுப்பிரபேதத்துக்கு மூன்று கோடி. விஜயத்துக்கு மூன்று கோடி. நிர்வாஸத்துக்குக் கோடி. சுவாயம்புவத்துக்கு ஒன்றரைக் கோடி. ஆக்கினேயத்திற்கு முப்படினாயிரம். வீரத்துக்கு நியுதம். ரௌரவத்திற்கு எட்டர்புதம். மகுடத்திற்கு இலக்ஷம். விமலத்துக்கு மூன்றிலக்ஷம். சந்திர ஞானத்திற்கு மூன்று கோடி. முகபிம்பத்திற்கு இலக்ஷம். புரோத்கீதத்திற்கு மூன்றிலக்ஷம். இலளிதத்துக்கு எண்ணாயிரம். சித்தத்துக்கு ஒன்றரைக்கோடி. சந்தானத்துக்கு ஆறாயிரம். சர்வோக்தத்திற்கு இரண்டு இலக்ஷம். பாரமேஸ்வரத்திற்கு பன்னிரண்டு இலக்ஷம். கிரணத்துக்கு ஐந்துகோடி. வாதுளத்திற்கு இலக்ஷம்.

இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்களுடையனவாயிருக்கும்.

இவற்றுள் ஞானபாதத்தில் பரம சிவனுடைய சொரூபமும் விக்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும் ஆணவம், மாயை, கன்மம், பைந்தவம், திரோதானசக்தி என்னும் பாசங்களின் சொரூபமும்., சக்தியின் சொரூபமும். சிவதத்துவம் முதல் பிருதிவி தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களுற்பத்தியும் இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியா முறையும் புவனங்கள் புவனேசர் சொரூபமும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும் அதமப் பிரளயம், மத்யமம் பிரளயம் மகாபிரளயங்களின் சொரூபமும் அந்தப் பிரளயங்களின் பின் சிருட்டியா முறைமையும் பாசுபதம். மகாவிரதம், காபால முதலிய மதங்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொரூபமும் கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில் மந்திரங்களினுத்தாரணஞ் சந்தியா வந்தனம், பூசை, ஜெபம், ஹோமங்களும், சமய விசேட, நிருவாண ஆசாரியாபிஷேகங்களும், புக்தி முக்திகளுக்கு உபாயமாகிய தீக்ஷையுங் கூறப்படும்.

இனியோக பாதத்தில் முப்பத்தாறு தத்துவங்களும் தத்வேஸ்வரரும், ஆன்மாவும், பரமசிவனும் சக்தியும் ஜகத்துக்குக் காரணமாகிய மாயை மகாமாயைகளை காணும் வல்லமையும் அணிமாதி சித்திகள் உண்டாகும் முறைமையும், இயமம், நியமம், ஆஸனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம் தாரணை சமாதிகளுனுடைய முறைமையும் மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிச் சரியா பாதத்ததில், பிராயச்சித்தவிதியும், பவித்திரவிதியும் சிவலிங்க லக்கணமும், உமா மகேசுவர முதலிய வியக்தாவியக்தலிங்களிலக்கணமும், நந்தி முதலிய கணநாதரிலக்கணமும் செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டலம் முதலியவற்றிணிலக்கணமும் அந்தியேட்டி விதியும், சிராத்தவிதியுங் கூறப்படும்.

சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகஜம் கனணக் கால்களும், சிந்தியம், திருவடிவிரல்களும், காரணம் கெண்டைக் கால்களும் அஜிதம் முழந்தாள்களும், தீப்தம் தொடைகளும் சூக்ஷ்மம் குஹ்யத்தானமும், சஹஸ்ரம் கடிஸ்தானமும், அம்சுமான் முதுகும்.,சுப்பிரபேதம், கொப்பூழும், விஜயம் உதரமும் நிச்சுவாசம் நாசியும், ஸ்வாயம்புவம் முலைகளும் ஆக்கினேயம் கண்களும் வீரம் கழுத்தும் ரௌரவம் செவிகளும் மகுடம் திருமுடியும் விமலம் கைகளும் சந்திரஞானம் மார்பும், முகபிம்பம் திருமுகமும் புரோத்கீதம் திருநாக்கும் இலளிதம் கபோலங்களும் சித்தம் திருநெற்றியும் சந்தானம் குண்டலமும் சார்வோக்தம் உபவீதமும் பாரமேஸ்வரம் ஆரமும் கிரணம் இரத்தினாபரணங்களும் வாதுளம் திருப்பரிவட்டமும் காலோத்தரம் திருமேற்பூச்சும், மற்றை உபாகமங்கள் எல்லாம் பரிமளத் திரவியங்களும் புஷ்பங்களும் சைவ சித்தாந்தம் நைவேத்யமுமாகும்.

***336) இருபது மெட்டுமே மூலமுப பேத***
***மிருநூறு மேழுமென வெண்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் சிவபெருமானிடத்தினின்றும் முதற்றோற்றினமையால் மூலஆகமம் எனப்படும். இவற்றின் வழித் தோன்றிய உபாகமங்கள் இருநூற்றேழாம் என்று அறிக.

காமிகத்துக்கு உபபேதம் மூன்று. யோகஜத்துக்கு உபபேதம் ஐந்து சிந்தியத்துக்கு உபபேதம் ஆறு. காரணத்துக்கு உபபேதம் ஏழு. அசிதத்துக்கு உபபேதம் நான்கு. தீப்தத்துக்கு உபபேதம் ஒன்பது. சூக்சுமத்துக்கு உபபேதம் ஒன்று, சகச்சிரத்துக்கு உபபேதம் பத்து. அஞ்சுமானுக்கு உபபேதம் பன்னிரண்டு. சுப்பர பேதத்திற்க்கு உபபேதம் ஒன்று. விசயத்துக் உபபேதம் எட்டு, நிச்சுவாசத்துக்கு உபபேதம் எட்டு. சுவாயம்புவத்துக்கு உபபேதம் மூன்று. ஆக்கினேயத்துக்கு உபபேதம் ஒன்று. வீரத்துக்கு உபபேதம் பதின்மூன்று. ரௌவத்துக்கு உபபேதம் ஆறு. மகுடத்துக்கு உபபேதம் இரண்டு. விமலத்துக்கு உபபேதம் பதினாறு. சந்திரஞானத்துக்கு உபபேதம் பதினான்கு முகவிம்பத்துக்கு உப்பேதம் பதினைந்து, புரோற்கீதத்துக்கு உபபேதம் பதினாறு. இலளிதத்துக்கு உபபேதம் மூன்று. சித்தத்துக்கு உபபேதம் நான்கு. சந்தானத்தக்கு உபபேதம் ஏழு. சர்வோத்தத்துக்கு உபபேதம் ஐந்து. பாரமேசுவரத்துக்கு உபபேதம் ஏழு. கிரணத்துக்கு உபபேதம் ஒன்பது. வாதுளத்துக்கு உபபேதம் பன்னிரண்டு, இவற்றின் பெயர்களை காமிக முதலியவற்றிற் காண்க.

**மூலாகமங்களைத் தனித்தனி கேட்டவர்களது தொகையை யுணர்த்துகின்றார்.**

***337) அறுபத் தறுவர் பிரணவ ராதி***
***யறிவுறக்கேட் டாராக மம்.***

தெளிவுரை: மூலாகமங்களை அறிவு பொருந்தக் கேட்டவர்கள் பிரணவர் முதலாக அறுபத்தறுவர்கள்.

சிவபேதம் பத்தையும் கேட்டவர் ஒருவரிடத் தொருவராக ஒவ்வோராகமத்துக்கு மும்மூன்றுபேராய் அணுசதாசிவ அருட்தலைவராகிய பிரணவர் முதன் முப்பதின்மராவர். அவர் பெயர் வருமாறு. காமிகம் கேட்டவர் பிரணவர், திரிகலர், ஹரர், யோகஜம் கேட்டவர் சுதாக்கியர்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஸ்மர், விபு, சிந்தியம் கேட்டவர் சுதீப்தர், கோபதி, அம்பிகை, காரணம் கேட்டவர் காரணர், சர்வருத்திரர், பிரசேசர். அசிதங்கேட்டவர் சுசிவர், சிவர், அச்சுதர், தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர், சூக்குமங்கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர். சகச்சிரங்கேட்டவர் காலர், வீமர், தருமர் அஞ்சுமான் கேட்டவர் அப்பு, உக்கிரர், ஆதித்தியர். சுப்பிரபேதம் கேட்டவர் தேசேகர், விக்கினேசர், சசி.

உருத்திரபேதம், பதினெட்டையங்கேட்டவர் ஒருவரிடத்து ஒருவராக ஒவ்வோர் ஆகமத்துக்கு இவ்விரண்டு பேராய் அநாதிருத்திரர் முதன் முப்பத்தறுவராவார். அவர் பெயர் வறுமாறு. விசயங்கேட்டவர் அநாதிருத்திரர், பரமேசர், நிச்சுவாசம் கேட்டவர் தசார்ணர், பார்ப்பதி. சுவாயம்புவம் கேட்டவர் நிதனேசர், பத்மபூ. ஆக்கினேயம் கேட்டவர் வியோமர். உதாசனர், வீரங் கேட்டவர் தேசர், பிரசாபதி, ரௌரவங்கேட்டவர் பிரமேசர், நந்தி கேசர், மகுடம் கேட்டவர் சிவர், மகாதேவர், விமலம் கேட்டவர் சருவாத்மர், வீரபத்திரர், சந்திரஞானம் கேட்டவர் அநந்தர், பிருகஸ்பதி, முகவிம்பங் கேட்டவர் பிரசாந்தர், ததீசி. புரோற்கீதங் கேட்டவர் சூலி கவசர். இலளிதங்கேட்டவர் ஆலயேசர். இலளிதங் சித்தங்கேட்டவர் விந்து, சண்டேசர். சந்தானங்கேட்டவர் சிவநிஷ்டர் , அசம்பாதர். சருவோத்தம் கேட்டவர் சோமதேவர், நிருசிங்கர். பாரமேசுரம் கேட்டவர் சீதேவி, உசனர். கிரணங்கேட்டவர் தேவ விபு, சம்வர்த்தர். வாதுளங்கேட்டவர் சிவர், மகாகாளர்.

**சிவாகமோற்பத்தி சில ஆகமங்களிலே பேதித்துக் கூறப்படுமென்பது இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***338) உதிக்கு முறைதன்னைப் பேதமுற வோது***
***மதித்தே சிலவாக மம்.***

தெளிவுரை: சில ஆகமங்கள், ஆகமங்கள் தோன்றிய முறைமையை ஆராய்ந்து பேதம் பொருந்தச் சொல்லும்.

ஊர்த்துவ முகமாகிய ஈசானத்தினின்றும் காமிக முதலிய சிவாகமம் இருபத்து எட்டும், அதோ முகங்கணான்கினுள்ளும் தற்புருடத்தினின்றும். இருக்கு வேதமும், அகோரமுகத்தினின்றும் யசுர்வேதமும். வாமதேவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகத்தினின்றும் சாமவேதமும், சத்தயோஜாத முகத்தினின்றும் அதர்வணவேதமும் தோன்றின. இருக்கு வேதம் இருபத்தொரு சாகையும் யசுர்வேதம் நூறு சாகையும் சாமவேதம் ஆயிரம் சாகையும், அதர்வணவேதம் ஒன்பது சாகையும் உடையனவாம். இவ்வேத நான்கும் பிரமகாண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமாகிய கரும காண்டமும் உணர்த்துவனவாம். பிரமகாண்டம் உபநிடதம் எனவும் வேதாந்தம் எனவும், வேத சிரசு எனவும் பிரபல சுருதி எனவும் பெயர்பெறும்.

வேத சிவாகமம் இரண்டும் சிவபெரு. மானிடத்தே தோன்றினமையால் முதனூலெனப்படும். வேதத்துக்கு வழிநூல் பதினெட்டுப் புராணங்களும் பதினெட்டு மிருதிகளுமாம். சார்பு நூல் சிக்ஷை கற்பசூத்திர முதலிய வேதங்களாகும்.

வேதம் யஞ்ஞாதி கருமங்களைச் செய்து புண்ணியலோகங்களை அடைய விரும்பும் உலகர்கள் பொருட்டும் ஆகமம் சிவசாலோக்கிய சிவசாமீப்பிய சிவசாரூப்பிய சிவசாயுச்சிங்களை அடைய விரும்பும் சக்தி நிபாதம் உடையார் பொருட்டும், அருளிச் செய்யப்பட்டன. இன்னும் சத்தியோசாதம். வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம். எனும் ஐந்து முகங்களினும் முறையே லௌகீகம், வைதீகம், அத்தியான்மகம், அதிமார்க்கம், மாந்திரம். என்னும் ஐந்தும் தோன்றின எனச் சில ஆகமங்கள் கூறும் லௌகீக நூல் ஆயுள்வேதமும் தண்டநீதியு முதலாயின வைதீக நூல் மீமாஞ்சையும், நியாயமும், வைசேடிகமுமாகிய மூன்றுமாம். அத்தியான்மகநூல் சாங்கியமும், பாதஞ்சலமும், வேதாந்தமுமாகிய, மூன்றுமாம், அதிமார்க்க நூல், பாசுபதமும், காபாலமும், மகாவிரதமுமாகிய மூன்றுமாம். மாந்திரநூல் சிவாகமமாகிய சித்தாந்தசாத்திரமாம். லௌகிகத்தினுயர்ந்தது வைதிகம், அதினுயர்ந்தது அத்தியான்மகம், அதினுயர்ந்தது அதிமார்க்கம். அதினுயர்ந்தது மாந்திரம்.

***339) பலவாஞ் சிருட்டி பகரா கமமும்***
***பலவிதமாய்த் தோன்றுமெனப் பார்.***

தெளிவுரை: சிருட்டி பலபேதப்படுமாதலால் சிவபெருமான் அருளிச் செய்த ஆகமங்களும் பலவிதமாய்த் தோன்றின என்று அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாகமங்களைப் படிக்குமுறைமை மூன்று திருக்குறளால் உணர்த்துகின்றார்.

***340) புனிததலத் திற்புனித னாகிப் படிக்க***
***வினிய வியலை யிருந்து.***

தெளிவுரை: இனிமையாகிய சிவ சாத்திரத்தை ஓத விரும்பினோன் சரீரசுத்தி பண்ணித் திருமெழுக்கினாற் சுத்தி செய்த தலத்திருந்து படிக்கக் கடவன் என்று அறிக.

ஆசாரியர் கிழக்கு முகமாகவாயினும் வடக்குமுகமாக வாயினும் இருக்க. மாணாக்கர் அவருக்கெதிர் முகமாக விருக்க.

***341) அலர்சூட் டுகவாத மத்திற் குரவன்***
***மலரடிக்குஞ் சூட்டு மலர்.***

தெளிவுரை: படிக்கத் தொடங்குமுன் சைவாகமத் திருமுறையை விதிவழி செயப்பட்ட ஞானாசனமாகிய சரஸ்வதி பீடத்திலே பட்டுப் பரிவட்டம் விரித்து அதன்மேல் எழுந்தருளப் பண்ணிப் புஷ்பத்தினால் அருச்சித்து பின்பு ஆசாரியருடைய தாமரைமலர்போலும் பாதங்களிலும் பூச்சூட்டுக.

உம்மையால், அருகே அறிவாலுயர்ந்த சேட்டசாரியர் இருக்கின் அவரடியினும் பூசித்தல் வேண்டுமென்றறிக.

***342) படிக்கும் பொழுது பணிகுர வன்றான்***
***முடிக்கும் பொழுது முயன்று.***

தெளிவுரை: ஆசாரியரிடத்திலே நாடோறும் படிக்கத் தொடங்கும் பொழுதும், படித்து முடிக்கும் பொழுதும் அந்த ஆசாரியருடைய திருவடிகளை முயன்று வணங்குக.

இங்ஙனம் செய்யாவழிப்படுங்குற்றம்

**"புத்த கத்தினைப் பூசை புரிகிலார்**
**சித்தங் கூர்தரத் தேசிகன் றன்னையு**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*மத்த கைப்பல நீங்குவ ரன்றியுங்*
*கொத்தை சேர்நர கக்குழி கூடுவார் "*

என்னும் சிவதருமோத்தர செய்யுளாலறிக.

**படிக்கலாகாத நாட்களை நான்கு திருக்குறளாலுணர்த்து கின்றார்.**

***343) பக்னான் கிருநான்கிற் பஞ்சதசி தன்னிற்***
***பதிபகர்ந்த வாமகமம்பன் னேல்.***

தெளிவுரை: சதுர்த்தசியிலும், அட்டமியிலும், அமாவாசை, பௌர்ணமிகளிலும், சிவபெருமான் அருளிச் செய்த சைவாகமங்களைப் படியாதே.

***344) ஆதி திதியி லயனா தியிலரவஞ்***
***சோதிதனைத் தீண்டினுஞ்சொல் லேல்.***

தெளிவுரை: பிரதமையிலும், அயன முதலிய காலங்களிலும் சந்திரசூரிய கிரகண காலங்களிலும் படியாதே.

அயனாதி என்ற அதனால் விஷீசங்கிரமங்களும், ஆசாரியர் தன்னிடத்து எழுந்தருளிவந்த காலமும், உயர்ந்த சேட்டாசாரியர் எழுந்தருளி வந்த காலமும், பெரியோர்களுக்கு ஆபத்து வந்த காலமும், ஒருவர் மரித்த காலமும் கொள்க.

***345) சந்தியா காலந் தனிற்சிறந்த காலத்து***
***மெத்தையரு ளாகமமோ தேல்.***

தெளிவுரை: சந்தியா காலங்கள் மூன்றினும் இன்னும் நூல்களில் விதந்த காலங்களினும் நமது பிதாவாகிய சிவபெருமான் அருளிச் செய்த சைவாகமங்களைப் படியாதே.

இன்னும் நூல்களில் விதந்த காலங்களாவன: பூனை, பாம்பு, காட்டோணான் குறுக்கே போன காலமும், குறைக் கொள்ளி விழுந்த காலமும், அக்கினி பட்ட காலமும், கொள்ளையென்ற காலமும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள்ளரென்ற காலமும், இருவர் சண்டையென்ற காலமும், ஒருவரை அடிக்கும் காலமும், படையென்ற காலமும், பரிவேட மிட்ட காலுமும், பூமியதிர்ந்த காலமும், ஏரியுடைந்ததென்ற காலமும், ஓடமுடைந்து விழுந்த தென்ற காலமும், சிவாலயத்திற்குத் தீங்கு செய்கின்றார்கள், தேசிகருக்குத் தீங்கு செய்கின்றார்கள், சிவவேடத்தாருக்குத் தீங்கு செய்கின்றார்கள் என்ற காலமுமாம்.

### *346) உற்பத்தி நாசமெனு மாசௌசத் துஞ்சிவன்ற னுற்சவத்தி னும்மியலோ தேல்.*

தெளிவுரை: சனன மரணா செளசங்களிலும் சிவபெருமான் உற்சவ நிமித்தம் புறப்பட்டருளுங் காலங்களிலும் சைவாகமங்களைப் படியாதே.

மகோற்சவ நாள் பத்தினுள், முதனாள் விழாத் தூலநீக்குதற் பொருட்டும், இரண்டாம் நாள் விழாத் துலசூக்கும நீக்குதற் பொருட்டும், மூன்றாம் நாள் விழா மூவினையும் முப்புத்தியம் முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும் முப்பற்றும் நீக்குதற்பொருட்டும் நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத் தோற்றமும் நீங்குதற்பொருட்டும் ஐந்தாம்நாள் விழா ஐம்பொறியும் ஐந்தவத்தையும் ஐந்துமலமும், நீக்குதற்பொருட்டும், ஆறா நாள் விழாக் காமாதியாறும் கலையாதியாறும் வினைக்குணமாறும் பதமுத்தியாறும் நீக்குதற் பொருட்டும். ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகளேழும் மாயாமல குணமேலும் நீக்குதற்பொருட்டும், எட்டாம்நாள் விழா எண்குணமும் விளக்குதற்பொருட்டும், ஒன்பதாம் நாள் விழா மூன்றுருவும் முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும், இலையெனற் பொருட்டும், பத்தாநாள் விழாப் பரானந்தமா கடலில் அழுந்துதற் பொருட்டுஞ் செயப்படுதலால், சிவோற்சவகாலத்துப் படிக்கலாகாது என்றார்.

இவையெல்லாம் விம்பதந்திரத்திற் சிவோற்சவபடலத்திற் காண்க. உம்மையால் சிவவிரத காலங்களும் சிவதீர்த்த காலங்களும் கொள்க. சனன மரண செளசமுடையானும் மூழ்கா வியாதியா செளசமுடையானும் ஒழியுமட்டும் ஓதாதொழிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**மற்றச் சந்திரண்டு முடிக்கும் முறைமை யுணர்த்துகின்றார்.**

***347) அதன்பின்பு மூன்றா வதுசந்தி யாக்க***
***வதன்பின்பு நான்கா வதும்.***

தெளிவுரை: இப்படிச் சிவாகமங்களை ஓதியபின்பு உரிய காலத்திலே மூன்றாம் சந்தியைப் பண்ணுக. ஆசாரியனாயின் அதன்பின்பு நான்காம் சந்தியையும் பண்ணுக.

**கணபிச்சாவிதிக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.**

***348) உரைத்தாமே சாந்தா னிகபிச்சை யோர்க***
***வுரைப்பாங் கணபிச்சை யும்,***

தெளிவுரை: சாந்தானிகபிச்சா விதியைச் சொன்னோம். கணபிச்சாவிதியையும் சொல்வோம். அதனை அறிக.

அற்பமாக வீடுதோறும் வாங்குகையால், கணபிச்சை எனப்பட்டது.

**கணபிச்சாவிதியை இருபத்தாறு திருக்குறளால் உணர்த்துகின்றார்**

***349) முந்திய சந்தி முடித்தமலன் றாளிணையுஞ்***
***சிந்தித்துத் தாழ்த்துச் சிரம்.***

தெளிவுரை: சாதகர் புத்திரகர் முதலாயினோர் காலசந்தியை முடித்துக் கொண்டு வறியவராயிற் சிவபெருமானுக்கு நைவேத்திய நிமித்தம் தண்டுல பிச்சை பண்ணப் புறப்படும் போது சிவபெருமானுடைய உபய பாதங்களையும் மனசினாலே தியானித்துத் தலையினால் வணங்கி. (உம்மையாற் குருபாதங்களுங் கொள்க.)

***350) பாங்காகுஞ் செம்பிரும்பி னாற்பண்ணும் பாத்திரத்தா***
***னோங்குபலா சாதியிலை யும்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: செம்பினாலேனும், இரும்பினாலேனும், செய்யப்பட்ட பாத்திரம் பிச்சை பண்ணுதற்கு உரியதாம். அஃதன்றி வளர்ந்த பலாசு முதலிய மரங்களாலேனும் அவற்றின் இலைகளாலேனும் செய்யப்பட்ட பாத்திரமும் உரியதாம்.

ஆதி என்ற அதனால், மா, இருப்பை, கடம்பு முதலியன கொள்க. விரத்தனாயின் மிருத்திகையினாற் பண்ணிய பாத்திரத்தை அமாவாசை, பூரணைகளில் ஆறு குளங்களிற் கொண்டுபோய் அமிழ்த்தி விட்டுப் புதுப்பாத்திரம் வாங்கிக் கொள்க. விரத்தருக்கு மேற்கூறிய மரவிலைப் பாத்திரங்களும் சுரைப் பாத்திரமும் மானாங்குலம் இருபத்தைந்து கொண்ட ஆடையும் ஆகும் என்று அறிக.

*351) ஆறிரண் டங்குல மாமகலம் பாத்திரத்துக்*
*காறுமிரண் டும்முயர மாம்.*

தெளிவுரை: பிச்சாபாத்திரத்துக்கு அகலம் மானாங் குலத்தினாலே பன்னிரண்டு அங்குலமாம். உயரம் எட்டு அங்குலமாம்.

*352) இன்னமுறை யாற்பயிக்கத் துக்கிசைத்த பாத்திரத்தி*
*னுன்னியுளத் தத்திரத்தை யோது.*

தெளிவுரை: இந்தப் பிரகாரம் பிச்சை பண்ணுதற்குச் செய்யப்பட்ட பாத்திரத்தைக் கழுவி அதனடுவே அத்திரஞ் சொலிப்பதாக மனசினாலே பாவித்து அதனைத் தொட்டு அந்த அத்திரமந்தரத்தை அபிமந்திரி.

*353) அதன்பி னிரீக்கண மாதிபுரிந் தாடை*
*யதன்வாயிற் சேர்கவசத் தால்.*

தெளிவுரை: அதன்பின்பு நீரீக்கண முதலாயின் செய்து அப்பாத்திரத்தின் வாயிலே கவசமந்திரத்தினால் வஸ்திரத்தை இடுக.

**நிரீக்கணாதி செய்யுமுறைமை இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*354) புரிமூலத் தாலே நிரீக்கணம்பு ரோக்கி*
*யருகமத்தி ரந்தா டனத்து.*

தெளிவுரை: மூல மந்திரத்தினாலே நிரீக்கணம் செய்து அத்திரமந்தரத்தினாலே புரோக்கணம் பண்ணுக. அதன்பின் செய்யப்படும் தாடனத்துக்கும் அத்திரமந்திரமே உரித்ததாம்.

இவற்றுள் நீரிக்கணம் திவ்விய முத்திரையினாலும், புரோக்கணம் நிமிர்த்திய பதாகை முத்திரையையுடைய கைத்தலத்தினாலும், தாடனம் சுட்டுவிரல் நீட்டிய கையினாலும் செய்க.

*355) அருகங் கவசந்தா னப்பியுக்க ணத்தென்*
*றுரைசெய்வர் முன்னூலோர்ந் தோர்.*

தெளிவுரை: அப்பியுக்கணத்துக்குக் கவசமந்திரமே உரியதென்று சொல்லுவர் சைவாகமங்களை அறிந்தோர்.
அப்பியுக்கணம் கவிழ்ந்த பதாகை முத்திரையை உடைய கைத்தலத்தினாற் செய்க.

ஆதித்தன் அக்கினி சந்திரன் என்னும் மூவரும் முறையே வலக்கண்ணும் நெற்றிக்கண்ணும் இடக்கண்ணும் ஆவராதலால், வலக்கண்ணினாலே அதனை உலர்த்தினதாகவும் நெற்றிக்கண்ணினாலே, தகித்ததாகவும், இடக்கண்ணினாலே அமுதம் கொண்டு நனைப்பதாகவும் பாவிப்பது நிரீக்கணமாம். இங்ஙனம் நிரீக்கணம் செய்யப்பட்டது சுத்தியாதற்பொருட்டுத் தெளிப்பது புரோக்கணமாம். ஒருவன் கல்லையடிக்கும் போது அதனிடத்துப் பொறி தோன்றுமாறுப் போலச் சடமாகிய இந்தப் பதார்த்தத்தனிடத்துச் சித்துண்டாதற் பொருட்டுத் தட்டுவது தாடனமாம். அந்தப் பதார்த்தத்தனிடத்துத் தோன்றிய சித்தினது பிரகாசமானது தன்னுடைய தானத்தை விட்டு நீங்காமல் இருக்கும் பொருட்டு மூடுவது அப்பியுக்கணமாம்.

**தண்டினிலக்கணம் ஆறு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

*356) வேணுப் பலாசல்லால் வேத்திரமுந் தண்டாக்கிக்*
*கோணுமறத் தன்னுயரங் கொள்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: பிராமணன் மூங்கில் பலாசு பிரம்பென்னும் இவைகளுள் ஒன்றை கோணுதல் துளை முதலிய குற்றமின்றித் தண்டாக்கி அதற்குயரந் தன் உயரமாகக் கொள்க.

அரசன் கருங்காலித்தண்டை, மார்பளவு உயரமும் வைசியன் அத்திக் தண்டை அவ்வளவுயரமும், சூத்திரன் அந்தத் தண்டை நாபியளவு உயரமுமாக கொள்க.

*357) தேசிகரா திக்குச் சிரமே குளம்புருவ*
*நாசிவரை தண்டுயர நாடு.*

தெளிவுரை: ஆசாரியர் சாதகர் புத்திரகர் சமயிகள் என்னும் நால்வருக்கு உரிய தண்டுகளுக்கு உயரம் முறையே தலையும் நெற்றியும் புருவமும் நாசி நுனியுமாகிய இவற்றின் அளவினதாகக் கொள்க.

*358) எட்டுக் கணுத்தண் டினிதேழு தீமையா*
*மிட்டமுறு மாறுகணு வேல்.*

தெளிவுரை: எட்டுக்கணுத்தண்டு நன்மை தீரும், ஏழுக்கணுத்தண்டு தீமை தரும், ஆறுகணுத்தண்டு சர்வ சித்திகளையும் தரும். மூன்று கணுத்தண்டும் நன்மை தரும் என்று அறிக.

*359) அடிக்கணுவிற் கீழிருநான் கங்குலங்கொ ளாறு*
*மடுக்குமே நான்குமூன் றாங்கு.*

தெளிவுரை: அந்தத்தண்டுக்கு அடிக்கணுவிற்கீழ் எட்டு அங்குலம் விட்டு நறுக்க ஆறங்குலம் விட்டு நறுக்கினும் பொருந்தும். எட்டு அங்குலம் ஆயிற் ஆனியமும் நாலங்குலமாயின் நல்ல மாதரும் மூன்றங்குலமாயின் தனமும் உண்டாமென்றறிக.

*360) அடியிரட்டி யங்குல மாகு முடிக்க*
*ணடிக்கிருநான் கின்மிகையின் னாது.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: நுனிக்கணுவின் மேல்உயரம் அடியில் இருமடங்கு அங்குலமாயிருத்தல் வேண்டும். அடிக்கணுவின் கீழ் எட்டு அங்குலத்தின் மேல்படுதல் தீதாம்.

*361) அங்குட்ட மன்ன பருமை யுறவதனை*
*யங்கையிற்றீண் டத்திரத்தி னால்.*

தெளிவுரை: பெருவிரலுக்கு ஒத்த பருமையுளதாகக் கொண்டு அந்தத் தண்டை அத்திரமந்திரத்தினாலே வலக்கையால் தொட்டு ஏழுதரம் அபிமந்திரிக்க.

*362) பரிக்க வலக்கரத்திற் பாத்திரந் தண்டைத்*
*தரிக்க விடக்கரத்திற் றான்.*

தெளிவுரை: பிச்சா பாத்திரத்தை வலக்கையிலே தரிக்க தண்டை இடக்கையிலே தரிக்க.

*363) உன்னிச் சிவன்றா ளுளத்துளெழுத் தோரைந்தும்*
*பன்னி மவுனம் பரித்து.*

தெளிவுரை: சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து பஞ்சாக்ஷரத்தை மானதமாக உச்சரித்து வேறொரு வார்த்தையும் பேசாது மௌனம் பொருந்துக.

364) *சென்றூர்த் தெருவிற் சிறந்தார் மனைதெரிந்து*
*முன்றிலொன்றித் தாழ்த்து முகம்.*

தெளிவுரை: தனது ஆச்சிரமத்தினின்று புறப்பட்டு ஊர்த்தெருவிலே போய் சிறப்பினையுடைய பிராமணத்தார் முதலிய நான்கு வருணத்தார் வீடறிந்து முற்றத்திற் சென்று முகத்தைத் தாழ்த்துக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*365) வலக்காற் பெருவிரலில் வைத்திருதன் கண்ணுந்
தலத்துறத்தண் டூன்றித் தரித்து.*

தெளிவுரை: தனது இரண்டு கண்களையும் வலக்கால் பெருவிரலிலே தானே வைத்து பூமியிலே பொருந்தத் தண்டை ஊன்றிக் கொண்டு நிற்க.

*366) திடகற் புளாயையந் தேகியெனச் செப்பி
யிடுமரிசி பாத்திரத்து ளேற்று.*

தெளிவுரை: திடமாகிய கற்பினையுடையவளே எனக்குப் பிச்சையிடுவாயாக என்று சொல்லி அவள் கொண்டு வந்திடும் அரிசியை அத்திரம் சொலியா நிற்கும் பாத்திரத்துள் வாங்குக.

*367) இன்னமுறை யிற்றொறுஞ்சென் றையமிசைத் தேற்றியங்கித்
தன்னதெலை தன்னைத்தான் சார்ந்து.*

தெளிவுரை: இந்தப் பிரகாரம் வீடுதோறும் போய் முன் சொல்லியவாறே சொல்லிப் பிச்சைவாங்கி தனது ஆசிரமத்தை சென்று அடைக

*368) பாத்திரமும் வைத்துப் பரம சிவன்பதமு
மேத்தியுளத் தெண்ணி யிருந்து.*

தெளிவுரை: பாத்திரத்தையும் தண்டையும் தரையில் வையாது ஆதனத்தில் வைத்து கை கால்களைக் கழுவிக் கொண்டு வந்து பாத்திரத்துக்கு அருகே இருந்து சிவபெருமானுடைய திருவடிகளையும் குருவினுடைய திருவடிகளையும் மனதிலே தியானித்தத் துதிக்க.

மத்தியான சந்தி முடிக்குமுறைமையுணர்த்துகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*369) தண்புனலின் மூழ்கிச் சமைத்து நியதியினை*
*யெண்பெருக நாமமெணி யே.*

தெளிவுரை: குளிர்ந்த சலத்திலே ஸ்நானம் பண்ணி மத்தியான சந்தியை முடித்து பஞ்சாக்ஷரத்தில் ஆயிரம் உரு செபிக்க.

மற்றைச் சந்திகளுக்கும் இவ்வாறே செபிக்க

*370) புக்கு மனையுட் சிவனுக் கெனப்போனம்*
*பக்குவம் பண்ணிப் பரிந்து.*

தெளிவுரை: மடைப்பள்ளியின் உள்ளே புகுந்து சருவைச் சிவபெருமானுக்கு என்று அன்பினுடனே சமைக்க.

பாத்திரத்தில் அரிசியைவிட்டு, வடித்தெடுத்த சலத்தை அவ்வரிசிக்கு ஒன்றரைக் கூறு அப்பாத்திரத்தில் வார்த்து வார்த்து சடங்க மந்திரத்தினால் ஆறுதரம் கழுவிக் கழுவி சத்தியோஜாத மந்திரத்தினால் கழுநீரை ஊற்றிவிட்டு, இருதயத்தினால் கல்வாரி, அரிசியின், இருமடங்கு சலம்பூரித்துக் கவசத்தினால் மூடி, பின்பு கோமயத்தினால் மெழுகப்பட்ட மடைப்பள்ளியிலே தருமாதரும சொரூபமாகிய இரண்டு கைகளையுடைய அடுப்பை அரிசி கொண்டு இருதயத்தினால் அருச்சித்து பின்பு அப்பாத்திரத்தை வாமதேவத்தினால் எடுத்து இருதயத்தினால் அடுப்பின் மேல் வைத்து, அகோரத்தினால் அக்கினியிட்டு, தற்புருடத்தினால் புழுக்கள், பூச்சிகள், எறும்புகள் இல்லாதனவும் பொறி பறவாதனவுமாகிய காட்டங்களிலே குழலைக் கொண்டேனும் தருப்பைப் புல்லைக் கொண்டேனும் வாயுவைக் கிளர்வித்து அக்கினியைச் சொலிப்பித்து மயிர் உமி கன் முதலியவை கூடாமலும், அபக்குவம் அதிபக்குவமாகாமலும், வேறுநிறமும், துர்கந்தமும் வாராமலும், நன்றாக சமைத்து, இருதயத்தினால் இறக்கி, முக்காலியில் வைத்து, பொங்கி வடிந்ததைச் சுற்று மந்திரத்தினால் கழுவி, அன்னத்தின் நடுவே இருதயத்தினால் ஒரு பத்திரம் வைத்து ஈசானத்தினால் ஒரு புஷ்பம் சார்த்தி, பாத்திரத்தின் கழுத்தடியிலே நான்குதிக்கினும் தற்புருட முதலிய நான்கு மந்திரங்களினாலும் விபூதி சாத்துக, நைவேத்தியத்தில் உமி கிடந்தால் வறுமையும், கல்கிடந்தால் வியாதியும் மயிறு கிடந்தால் மரணமும் உண்டாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*371) செய்துசிவ பூசை சிவனுக் கதன்பாதி*
*பெய்துநிவே தித்ததற்குப் பின்*

தெளிவுரை: சிவபூசையைப் பண்ணி அவ்வன்னத்தில் பாதியை ஒரு பாத்திரத்தில் இட்டு சிவபெருமானுக்கு நிவேதிக்க.

*372) இயற்றியே மற்றை விதியினை யெல்லா*
*மயர்ச்சி மனத்தி லறுத்து.*

தெளிவுரை: தூப தீப முதலிய உபசாரங்கள் எல்லாவற்றையும் மனசிலே மறவியின்றிக் கொடுக்க.

*373) நிறைந்த வதன்பின் சமாதி நிலையி*
*னுறைந்துவிழித் தேகண் டுலகு.*

தெளிவுரை: பூசா கருமங்கள் எல்லாம் நிறைவேறிய பின்னர் சமாதி நிலையிலே பொருந்தியிருந்து அதன்பின் விழித்து உலகத்தைக் காண்க.

*374) முன்னம் பகர்ந்த முறையி னருந்திடுக*
*வென்னதியா னென்கை யிழித்து.*

தெளிவுரை: எனது யானென்கின்ற சுட்டுப் போதத்தை ஞானாக்கினியினாலே வாட்டிச் சிவபெருமானே புசிப்பிக்கின்றாரென்று தெளிந்து நிவேதனசேடத்தை முற்கூறிய விதிப்படி புசிக்க.

*375) இழித்தாரே யானீ யிவனவனு மென்கை*
*கழித்தார் மலமமலங் கண்டு.*

தெளிவுரை: இத மகிதங்கள் தம்மாலே பிறருக்குச் செயப்படும் வழியும் பிறராலே தமக்குச் செயப்படும் வழியும் நான் நீ இவன் அவன் என்று சுட்டுதலையொழித்துச் சிவபெருமானே தம் முன்னின்றும் அவருணின்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்கின்றாரென்று தெளிந்து அச்சிவபிரானருளையல்லது ஒன்றனையுங் கருதாராய்த் தம்மையிழந்து நின்றவரே ஆணவமுதலிய மலங்களைப் போக்கி நிருமலராகிய சிவத்தைத் தரிசித்தவராவர்.

**மாதூகரி பிச்சாவிதிக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.**

***376) உரைத்தாமில் லாளிகண பிச்சை விரத்தற்***
***குரைப்பாமா தூகரியை யோர்.***

தெளிவுரை: கிருகத்தனுக்குரிய கணபிச்சாவதியைச் சொன்னோம். இனி விரத்தனுக்கு மாதூகரி பிச்சாவிதியைச் சொல்வோம் அதனையறிக.

விரத்தர் ஒருகாலும் ஏகான்னம் புசிக்கலாகாது என்ற அறிக.

**மாதூகரி பிச்சாவிதியை இருபத்து எட்டு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

***337) முடித்திரு சந்தி முடையுடலின் கூலி***
***கொடுக்கு மதனைக் குறித்து.***

தெளிவுரை: விரத்தன் காலசந்தியையும், மத்தியான சந்தியையும் முடித்து முடை நாற்றத்தையுடைய சரீரத்துக்கு சிவபூசை முதலிய கருமங்களைச் செய்யும் பொருட்டுக் கூலி கொடுக்க நினைந்து.

***378) ஆரியனைத் தான்வணங்கிப் பிச்சைக் கநுமதிபெற்***
***றாருயிருள் ளானடியு மார்ந்து.***

தெளிவுரை: உயிர்க்குயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளையும் ஆசாரியாரையும் அன்போடு வணங்கி பிச்சைக்குப் புறப்படுதற்கு அனுமதி பெறுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***379) வெண்கல மாதி விதங்கள் விரத்தனுக்***
***குண்கல மன்றென் றொழித்து.***

தெளிவுரை: வெண்கல முதலியவற்றினாலே செய்யப்பட்ட பாத்திரங்கள் விரத்தனுக்குப் போசன பாத்திரங்கள் ஆகாவென்று என்று அறிக. புற்றுமட்கலம் சில ஆகமங்களில் ஆகுமென்றும் சில ஆகமங்களில், ஆகாது என்றும் சொல்லப்படும்.

***380) பண்ணியுறத் தும்பிபலா சாதியிலைப் பாத்திரத்தைத்***
***திண்ணமுற முன்முறையுஞ் செய்து.***

தெளிவுரை: பிச்சா பாத்திரத்தை, சுரையிலை பலாசு இலை, முதலிய இலைகளினாலே முந்திய பிரமாணப்படி செய்து திண்ணம் பொருந்த முற்கூறிய முறைகளையும் பண்ணுக.

***381) பரிக்க வலக்கரத்திற் பாத்திரந் தண்டு***
***தரிக்க விடக்கரத்திற் றான்.***

தெளிவுரை: பிச்சாபாத்திரத்தை வலக்கையிலே தரிக்க, தண்டை இடக்கையிலே தரிக்க,

***382) முன்னம் பகர்ந்த முறையுறச்சென் றிற்றோறும்போ***
***யன்ன மிரக்கைதக வாம்,***

தெளிவுரை: முன்னே சொல்லிய விதிப்படி புறப்பட்டு வீடுதோறும் போய் அன்னமியாசித்தல் தகுதியாம்.

***383) பாகம் பணுமுன் பலிக்குச் செலேல்செல்லிற்***
***பாவமறு நூறுபக ரின்.***

தெளிவுரை: மத்தியான மாவதற்கு முன்னே பிச்சைக்குப் புறப்படாதே. காலம் அறியாது புறப்படின் அகோரத்திலே நூறுரு செபிக்கின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்குற்றம் போகும்.

***384) இருக்கையிலு மில்லையன மென்றான் புணியம்***
***பரிக்கை யதிதிக்குப் பாங்கு.***

தெளிவுரை: அன்னம் பாகம் பண்ணப்பட்டிருக்கையினும்., பிச்சை இல்லை என்று சொன்னவனுடைய புண்ணியத்தை கவர்தல் பிச்சைக்கு வந்த அதிதிக்கு உரித்தாம்.

***385) தனக்கென்னக் காசுதனந் தானியமுந் தீண்டான்***
***றனக்கன்ன மேற்கை தகும்.***

தெளிவுரை: தனக்கு என்று காசையும் பணத்தையும் தானியத்தையும் தீண்டாதவனுக்கே இவ்வன்னபிச்சை பண்ணுதல் தகும்.

***386) ஈட்டித் தனத்தையிரந் திற்றொறுஞ்சென் றுண்பானை***
***நாட்டிற் கிராதனென நாடு.***

தெளிவுரை: திரவியத்தைத் தேடியும் அதனைச் செலவழியாது வைத்துக் கொண்டு வீடுதோறும் போய்ப் பிச்சை வாங்கிப் புசிப்பவனை நாட்டினுளிருக்கும் வேடனெனக் கருதுக.

***387) இரவே லிதிபாத காதிய ரில்லத்***
***திரவே லிழிகுலத்தா ரில்.***

தெளிவுரை: அதிபாதக முதலிய பாதகங்கள் செய்தவர் வீட்டிலே பிச்சை வாங்காதே. இழிந்த வருணத்தார் வீட்டிலும் பிச்சை வாங்காதே.

**தீக்ஷை** பெறாதார் வீட்டிலும், பெற்றும் சமயாசாரம் அநுட்டியார் வீட்டிலும் இரக்கலாகதென்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***388) மலினவுடை யாண்மலடி கர்ப்பிணி தாதி***
***பலியிடிற் கொள்கை பழுது.***

தெளிவுரை: அழுக்குப்புடவை உடுத்தியவளும் மலடியும் கருப்பிணியும் வெள்ளாட்டியும் பிச்சை தரின் வாங்குதல் குற்றமாகும்.

நற்குணமில்லாதவள், எண்ணெயிட்டுக் கொண்டவள், தாம்பூலம் தரித்தவள், கணவனுக்கு முன் உண்பவள், அருவருப்பானவள், உறுப்புக் குறைந்தவள், கருங்குட்ட முதலிய நோயுடையவள், விதிப்படி சௌசாதி செய்யாதவள் முதலியோர்களிடத்திலும் பிச்சை வாங்கலாகாதென்றறிக.

***389) நீங்கிய பின்னழைக்கி னின்றேற்க சென்றேற்கை***
***பாங்கல்ல வென்றொழிகை பண்பு.***

தெளிவுரை: பிச்சைக்குப் போனால் ஒரு பசுக்கறக்கு நேர நிற்க, அதுகாறும் பிச்சை வாராதொழியின் மற்றை வீட்டுக்குச் செல்லுக. செல்லும்போது பிச்சையிடக் கொண்டு வந்தவர். அழைக்கின் அவ்விடத்திற்றானே நின்று வாங்குக. திரும்பிப் போய் வாங்குதல் உரிமையன்று என்று விடுத்தலே தகுதி.

***390) உற்றாச் சிரமத்தை யூர்க்குச் சுபமுனியுட்***
***பொற்றாள் விளக்கிப் புகுந்து.***

தெளிவுரை: தனது ஆசிரமத்தை அடைந்து இந்தக் கிராமத்துக்கு நன்மை உண்டாகுக என்று ஆசீர்வாதம் பண்ணி கால் கை கழுவி உள்ளே புகுக.

***391) பாத்திரமும் வைத்துப் பரம சிவன்பதமு***
***மேத்தியுளத் தெண்ணி யிருந்து.***

தெளிவுரை: பாத்திரத்தையும் தண்டையும் குடையையும் வைத்து அப்பாத்திரத்துக்கு அருகே இருந்து கொண்டு சிவபெருமானுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவடிகளையும் குருவினுடைய திருவடிகளையும் மனசிலே தியானித்துத் துதிக்க.

*392) பாத்திரத்தி லன்னத்தி லுண்டேற் பழுதறலிற்*
*றோய்த்தெடுக்கச் சுத்தமுறுஞ் சோறு.*

தெளிவுரை: பிச்சாபாத்திரத்தன்னத்தில் ஈ முதலிய குற்றங்கள் உண்டாயின் பாத்திரத்துடனே அன்னத்தைச் சலத்திலே தோய்த்தெடுக்கின் அது சுத்தியாகும்.

அதற்குமுன் மயிர் முதலியனவும், உள்ளி, வெள்ளுள்ளி, இங்கு முதலிய இட்டகறிகளும், ஊறுகாய்களும் விலக்கிய பதார்த்தங்களும் இருந்தனவாயின் அவைகளை எடுத்துச் சலத்திற்போடுக. பிராமணருள் அதீக்ஷிதரொழிய மற்றயைமூவருள் அதீக்ஷிதரும், நால்வருள்ளும் அதிபாதக முதலிய பாதகங்களைச் செய்தவரும், பதிதரும், சமயாசாரம் இல்லாதவரும், பரிசித்தால். தான் தரித்த வஸ்த்திரத்தோடும் அன்னப்பாத்திரத்தோடும் முழுகிற் சுத்தியாம். சனன மரண கௌசமுடையாரும், இருதுவாயினாரும், இழிந்த வருணத்தாரும், நாய், பன்றி, கோழி, கழுதை முதலியனவும் தீண்டினும், இட்டலிங்க நிர்மாலியம் பாரார்த்தலிங்க நிர்மாலியம் இடப்படினும், பிறர்க்கு ஊட்டுவியாது வஸ்த்திரத்தோடும் தண்டோடும் மார்பளவினதாகிய சலத்திலே வடக்கு நோக்கி நின்று முழுகி, இருந்து கொண்டு தண்டை இடப்புறத்தில் ஊன்றி, இருகையினாலும் பெய்த பாத்திரம் மிருத்துவாயினும் இலையாயினும் அதனோடு வைக்க. பின் இடக்கையினாலே தண்டையும் பாத்திரத்தையும் ஒருங்கு பிடித்துக் கொண்டெழுந்து, கரையில் வந்து, தலை முதலியவற்றைத் துவட்டாது வடக்கு நோக்கி இருந்து சுத்தா சமனம் செய்து. கவிழ்ந்த முகத்தோடு தனது ஆசிரமத்தின் கண் வந்து, தலை முதலியவற்றைத் துவட்டி, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துத் கொண்டு, வடக்கு நோக்கியிருந்து விபூதிதரித்து, அகோரத்தை ஆயிரம் தரம் செபித்து முடித்து, ஒரு பசுக்கறக்குங்காலம் சமாதி பொருந்தி நீங்கி, பின்பு ஒரு படிசலத்தை நிவேதித்து, ஏறாமற் குறையாமற் புசிக்க, அறியாது புசித்தாலும், புசிக்கும் போது அறிந்தாலும். மற்றதைப் புசியாது பூமியில் புதைத்து விட்டு, மற்ற நாள் அகோரத்தை இரண்டாயிரம் தரம் செபித்து., அன்னத்துக்குள்ள பசுவின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோசலத்தை ஒரு படிசமனாகப் புசிக்க.

***393) தனக்கருக பாத்திரத்தைச் சாதித்துச் சுத்தி யனத்தை யமைத்திடுக வாங்கு.***

தெளிவுரை: தனக்குத் தகுதியாகிய பாத்திரத்திலே தண்ணீர் தெளித்து மந்திரத்தினாலே சுத்தி செய்து அன்னத்தை அதிலே படைக்க.

***394) ஆக்கிப் புனிதநீ ரந்நீரி னால்வளைக்க நாக்காலீ சான நவின்று.***

தெளிவுரை: முன்போலச் சலத்தை மந்திரத்தினாலே சுத்தி பண்ணி அச்சலத்தினால் ஈசானமந்திரத்தை நாவினால் உச்சரித்துக் கொண்டு அன்ன பாத்திரத்தைச் சூழ வளைக்க.

***395) அத்திரத்தி னாலே புரோக்கிக்க வன்னத்தைச் சுத்திசெய்க மும்முறையுஞ் சூழ்ந்து.***

தெளிவுரை: பெருவிரல் அணிவிரல்களினாலே அச்சலத்தைக் கொண்டு அத்திரத்தை உச்சரித்து அன்னத்தைப் புரோக்ஷித்து முற்கூறிய விதியை அறிந்து சுத்தி பண்ணுக.

***396) இருகூறு செய்க விருகூற்றின் முந்து மொருகூறு தன்னை யுகந்து***

தெளிவுரை: அவ்வன்னத்தை இரண்டு கூறு பண்ணுக, அவ்விரு கூற்றின் உள்ளும் முந்திய ஒரு கூற்றை மனம் மகிழ்ந்து.

***397) நின்மலன் றன்னை நினைந்து நிவேதிக்க வன்னியத்தை யாரியனுக் காக்கு.***

தெளிவுரை: நிருமலராகிய சிவபெருமானைக் குறித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிவேதனம் பண்ணுக. மற்றைக் கூற்றை ஆசாரியனுக்கு நிவேதனம் பண்ணுக.

*398) உள்ளங்கை தன்னி லுழுந்தமிழ்ந்து நீர்வார்த்தே*
*யுள்ளேகொ டற்புருட மோர்ந்து*

தெளிவுரை: உள்ளங்கையில் உழுந்தமிழ்ந்தத் தக்க சலத்தை வார்த்து, தற்புருடத்தை உச்சரித்து உட்கொள்க.

*399) குன்றாதே யேறாதே கொள்ளுள்ளே கொள்ளும்போ*
*தொன்றாதே லோசை யொழுங்கு.*

தெளிவுரை: உழுந்தமிழ்ந்து நீரிலே குறையாமலும் கூடாமலும் உட்கொள்க. உட்கொள்ளும்போது ஓசை உண்டாகாமையே முறைமையாம். கூறிய பிரமாணத்திற் குறைவாயினும் கூடவாயினும் உட்கொள்ளின், அந்நீர் கள்ளுக் கொக்குமென்க.

*400) அருந்துக வந்த விருகூறும் பின்னு*
*மருந்துகநீர் முன்முறையா லாய்ந்து.*

தெளிவுரை: சிவபெருமானுக்கும் ஆசாரியருக்கும் நிவேதித்த அவ்விருகூற்றையும் புசிக்க. பின்பும் சலத்தை ஒருவர் வார்க்கத் தற்புருட மந்திரத்தை உச்சரித்துப் பருகுக.

*401) முன்னம் பகர்ந்த முறையின் முடித்திடுக*
*வன்னிய மெல்லா மறிந்து.*

தெளிவுரை: மற்றக் கருமங்கள் எல்லாவற்றையும் முற்கூறிய விதிப்படி அறிந்து முடிக்க.

*402) அறவெறுத்தா னாக்கையன மங்கையேற் றுண்க*
*வறவும் பகையு மொழித்து.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: உறவையும் பகையையும் விட்டுச் சரீரத்தைச் சிறைச்சாலையாகக் கருதி மிக வெறுத்தவன் இரண்டாம் சந்தி முடித்துச் சமாதி நிலையின் நீங்கிய உடனே குருவைத் தியானித்து அநுமதி பெற்றுக் கொண்டு நாபிகுண்டத்தில் அக்கினியைப் பஞ்சாக்ஷரத்தாற் சொலிப்பித்து ஆகுதிநிமித்தம் வீடுதோறும் சென்று வலக்கையே பாத்திரமாக அன்னம் வாங்கி வேண்டுமட்டும் புசிக்க.

இருகையும் கூட்டி வாங்குதலும் கையோடு கைத்தட்டலுமாகிய இவையிரண்டும் வைதிகருக்கும் வீர சைவருக்கும் சமணருக்குமாகும். சைவருக்காகாவென்றறிக. விரத்தன் பிச்சை கொண்டவிடத்தில் விழுந்த சேடமெடுத்து உண்பவருக்கு வினை கெடுமென்று ஆகமங்கூறுமென்க.

***403) சடையாற்கை யேற்றுணலாற் சாம்பராற் றோலி***
***னுடையாலுந் தீரா துடல்.***

தெளிவுரை: சடையினாலும் கையேற்றுண்டலினாலும் சாம்பரினாலும் தோலுடையினாலும் பிறவி நீங்காது.

***404) உறவுபகை யாசைவெறுப் புள்ளச் சழக்கு***
***மறினே பிறவி யறும்.***

தெளிவுரை: உறவும் பகையும் விருப்பும் வெறுப்பும் மற்றுள்ள மனக்குற்றங்களும் நீங்கின் பிறவி நீங்கும்.

**அயாசித பிச்சாவிதிக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.**

***405) உரைத்தாமே மாதூ கரியை யுணர்க***
***வுரைப்பா மயாசிதமு மோர்.***

தெளிவுரை: மாதுகரி பிச்சாவிதியைச் சொன்னோம் அதனையறிக அயாசித பிச்சா விதியையுஞ் சொல்வாம் அதனை அறிக.

**அயாசிதபிச்சாவிதியைப் பதினொரு திருக்குறளால் உணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***406) பிணிக்கும் பனிக்கும் பிறர்செய்யுஞ் சேதந்***
***தனக்கு முயன்றோமோ தான்.***

தெளிவுரை: வியாதிக்கும் பனிக்கும் பிறராலே செய்யப்படும் கேட்டுக்கும் ஆசைப்பட்டு முயற்சி செய்தோமோ இல்லையே.

***407) இருவினைக்கு மீச னியைந்த பலத்தைத்***
***தருவ னொருவினைக்கோ தான்.***

தெளிவுரை: சிவபெருமான் ஒரு வினைக்குரிய பலத்தை மாத்திரமோ நல்வினை தீவினையென்னும் இருவினைகளுக்கும் பொருந்திய சுகதுக்கம் என்னும் இருபலங்களையும் கொடுப்பார்.

***408) உண்டோ வதீதத் துணர்வுதிக்கை யாமுளத்திற்***
***கொண்டகுறிப் பின்றிவிளங் கும்.***

தெளிவுரை: கருத்தா வேண்டுவதில்லை ஆன்மாத் தான் செய்த கன்மத்தை அறிந்து புசிப்பான் எனின் நாம் சூக்கும தேகத்தைப் பொருந்திய அதீதாவத்தையிலே நமக்கு அறிவு உதித்தல் உண்டோ இல்லையே. அது கருவி குறைதலினால் என்னிற் கருவி கரணாதிகளோடு கூடிய சாக்கிராவத்தையிலே நாம் காலையில் எழுந்து ஊருக்கு போதல் வேண்டுமென்று மனசிலே நினைத்துக்கொண்டு நித்திரை செய்தபோது விடிந்து இரண்டு நாழிகை சென்றும் எழாதிருப்பதென்னை, ஆதலால் ஆன்மாவுக்கு கருவி கரணாதிகளைக் கூட்டிக் காரியப்படுத்தும் ஒரு கருத்தா உண்டு.

***409) அகாரணத் தாலே விளங்கா ததனுக்***
***ககாரணனே கன்கா ரணன்.***

தெளிவுரை: ஆன்மாவுக்கு அறிவு யாதொரு காரணமின்றித் தானே விளங்க மாட்டாது.அதற்குத் தமக்குக் காரணமில்லாதவரும் ஒருவருமாகிய சிவபெருமானே காரணர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***410) உதிப்பித் தவனே யுணவை நிறுத்தும்
விதிக்கிசைய வென்றூக்கம் விட்டு***

தெளிவுரை: சிருட்டித்த சிவபெருமானே அவரவர் கருமத்துக்கு ஈடாக சுகதுக்க பலன்களை கொடுப்பார் என்று துணிந்து ஆன்ம போதத்தால் உண்டாகும் உற்சாகத்தை நீக்குக.

***411) இருப்ப ரிரவுபக லற்ற விடத்தி
னொருப்பட் டமலத் துடன்***

தெளிவுரை: கேவலமும் சகலமும் இல்லாத சுத்தாவத்தையிலே நிரும்லராகிய சிவத்தோடும் இரண்டற கலந்திருப்பார்.

***412) இருவினையான் மூவிதத் தின்போடு துன்புந்
தருமமல னென்றார் தமை.***

தெளிவுரை: சிவபெருமான் நல்வினை, தீவினைகளுக்கு ஈடாக ஆத்தியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூவிதத்தானும் சுகதுக்கங்களைக் கொடுப்பார் என்று தெளிந்த பெரியோர்களை.

தன்னாலும் பிறவான் மாக்களாலும் வருவது ஆத்தியான்மிகம். தேவர்களால் வருவது ஆதிதைவிகம். பிருதிவி முதலிய பஞ்சபூதங்களால் வருவது ஆதிபௌதிகம்.

***413) ஊட்டுவிப்பான் மற்றை யொருவரா லுள்ளபயன்
காட்டுமம லன்பலங்கள் கண்டு.***

தெளிவுரை: சிவபெருமான் அவர்களுக்குரிய பலங்களை அறிந்து வேறொருவரைக் கொண்டு நூனாதிகமின்றிப் புசிப்பிப்பர் தேகாந்தத்தில் அவர்களுக்குரிய முத்தியையும் கொடுப்பர்.

***414) அவனே வினர்தா மருத்த வருந்தி
யவனா யிருப்பரவ ராங்கு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: அந்தப் பெரியோர்கள் முற்கூறியபடி அச்சிவபெருமானாலே பிரேரிக்கப்பட்டவர்கள் புசிக்கப் பொருணசையில்லாது அவர்கள் பயன்கருதிச் சிவோகம் பாவனையினாலே புசித்து அச்சிவனேயாய்க நிற்பர்கள்.

ஆன்மா யாதனை யாதனைப் பற்றினான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந்தன்மையுடைமையால் அதுவதுவாயே நிற்பன். ஆதலால் அசுத்தப் பொருளாகிய பாசத்தோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும் போது பசுவேயாய் நின்ற ஆன்மாச் சுத்தப்பொருளாகிய சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும் போது சிவன் குணங்களாகிய எண்குணங்களும் தன்றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன். இதுவே சிவத்துவத்தைப் பெறுதலெனப்படும்.

***415) என்ன குறையுடையார் யானெனதென்னுஞ் செருக்கற்***
***றன்னியமற் றாரமலத் தார்ந்து.***

தெளிவுரை: அகங்கார மமகாரங்களை நீங்கி சிவத்தோடு கலந்து வேறற்ற ஞானிகள் யாது குறையுடையர்கள்.

***416) உண்ணுமுயி ரோதனத்தை யூட்டுவிப்பா னேசிவனென்***
***றெண்ணுமவர்க் கில்லைவினை யீங்கு***

தெளிவுரை: ஆன்மா அன்னத்தை புசிக்கும் சிவபெருமானே அதனை ஊட்டுவிப்பாரென்று தெளிந்த பெரியோர்களுக்கு ஆகாமியம் ஏறுவதில்லை.

**சற்பாத்திர அசற்பாத்திரங்களினிலக்கணமும் தாதா அதாதாக்களினிலக்கணமும் உணர்த்தத் தோற்றுவாய் செய்கின்றார்.**

***417) தரிக்கவினிப் பாத்திரா பாத்திரந்தா தாவோ***
***டுரைப்பா மதாதாவை யும்.***

தெளிவுரை: இனிச் சற்பாத்திரம் அசற்பாத்திரங்களின் இலக்கணத்தையும் தாதா அதாதாக்களின் இலக்கணத்தையும் சொல்வோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவைகளை உள்ளத்தமைக்க.

நிறுத்தமுறையானே சற்பாத்திரலக்கணம் மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*418) ஈவான் றனக்கிரங்கி யேற்குமவன் பாத்திரமே*
*காய்வா னவனே கரிசு.*

தெளிவுரை: ஒரு பொருளைத் தன்பயன் கருதாது அதனைத் தருபவன் மேலிரங்கி வாங்குபவனே சற்பாத்திரம் அவனே குற்றத்தைப் போக்குபவன்.

*419) பாத்திரமே யுச்சிப் பகலணைமிற் பாவியரும்*
*பார்ப்பாரோ பத்தர் பழுது.*

தெளிவுரை: பாவிகளும் மத்தியானகாலத்திலே பசித்து வந்தார்களாயிற் பாத்திரமேயாவர். அந்நேரத்திலே சிவபக்தர்கள் அவர்கள் குற்றத்தைப் பார்த்துத் தள்ளிவிடார்கள்.

*420) பங்கு குருடர்பிணிப் பட்டாரும் பாத்திரமே*
*தங்கினிரக் கந்தாதா வுக்கு.*

தெளிவுரை: தாதாவுக்கு இரக்கம் உண்டாயின் முடவரும் குருடரும் வியாதியாளரும் பாத்திரமே யாவர்.

உம்மையால் மிடியர் முதலாயினாருமெனவறிக.

அசற் பாத்திரலக்கண முணர்த்துகின்றார்

*421) தன்னைக் குறித்திரப்பான் றன்னை யபாத்திரமென்*
*றுன்னிடுவர் கற்றோ ருளத்து.*

தெளிவுரை: தன்பயனைக் குறித்திரப்பவனை அசற் பாத்திரமென்று நூல்களைக் கற்றோர் மனசிலே நினைப்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாதாவிலக்கண முணர்த்துகின்றார்.

422) *இரக்கதத்தா லாதரவா லேதேனு மீயும்*
*வரத்தினான் றாதாவா வான்.*

தெளிவுரை: தன்னிடத்து யாசித்த மிடியனிடத்திலே கிருபையினாலும் சிரத்தையினாலும் தனக்கு இயன்ற தொன்றை வரையாது கொடுக்கும் சிறப்பினையுடையவனே தாதாவென்று சொல்லப்படுவோன்.

அதாதாவிலக்கணம் ஐந்து திருக்குறளா லுணர்த்துகின்றார்.

423) *அன்பு மருளுமற வீவான்றா தாவலனவ்*
*வன்பன்கை வாங்கிடலுய் வார்.*

தெளிவுரை: கிருபையும் சிரத்தையுமின்றிக் கொடுப்பவன் தாதாவலன் பரகதியடையக் கருதுவோர் அவ்வன்னெஞ்சன் கையிலே வாங்காது ஒழிக.

424) *இரக்கமற வீவா னவன்கையேற் றானு*
*மிருப்பர் நிரயத் திளைத்து.*

தெளிவுரை: இரக்கமின்றிக் கொடுக்கும் அதாதாவும் அவன் கையில் வாங்கிய அபாத்திரனும் நரகத்திலே கிடந்து வருந்துவர்கள்.

425) *அஞ்சு மவனு மதிதியரைக் கண்டன்னம்*
*வஞ்சகனுந் தாதா வலர்.*

தெளிவுரை: அதிதிகளைக் கண்டவுடனே யாதாயினும் கேட்பாரென்று அஞ்சுவோனும் வீட்டில் அன்னமிருக்கும் போது கொடாது வஞ்சிப்பவனும் அதாதாக்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*426) இரையருந்துங் காலத் தினங்கூட்டுங் காக்கை*
*கரவாது காணாரார் காண்.*

தெளிவுரை: அறிவில்லாத காகமும் தான் இரை புசிக்கும் போது வஞ்சியாது தன்னினங்களைக் கூட்டிப் புசிக்கும் இதனைக் காணாதவர் யாவர்.

*427) பறவையினுக் குள்ள பரிவுமிலார் கற்று*
*மறிவற்றா ரற்றா ரறம்.*

தெளிவுரை: பறவையிடத்துள்ள இரக்கமுமில்லாதவர் நூல்களைக் கற்றும் அறிவுமில்லாதவர் தருமம் இல்லாதவர்.

**அறிவின் பயன்கள் இவையென்பதுணர்த்துகின்றார்**

*428) அன்பு மருளு மறிவுக் கடையாள*
*மென்பருணர்ந் தோர்சிவன்வாக் கீண்டு*

தெளிவுரை: இவ்வுலகத்திலே சிவாகமத்தை படித்தறிந்தோர் அறிவுண்மைக்கு இரக்கமும் கிருபையும் அடையாளமென்று சொல்வர்.

**சிவலிங்கவிலக்கணமுணர்த்தத் தோற்றுவாய் செய்கின்றார்.**

*429) இசைப்பா மினிச்சிவ லிங்க விதமும்*
*பசிப்பாழி மூலமறுப் பார்.*

தெளிவுரை: யாவரும் சரீரத்துக்கு மூலமாகிய வினையை நீக்கும் பொருட்டு இனி சிவலிங்க விலக்கணத்தையும் சொல்வாம்.

**சிவலிங்கவித முணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*430) பரார்த்தமென விட்டலிங்க மென்னவிரு பாங்கா
பரார்த்தவித மீரிரண்டாம் பார்.*

தெளிவுரை: சிவலிங்கமானது பரார்த்தலிங்கம் எனவும் இட்டலிங்கம் எனவும் இருவிதப்படும். அவற்றுள் பரார்த்தலிங்க பேதம் நான்காமென்றறிக.

**இட்டலிங்கவிலக்கணம் மேலுணர்த்தப்பட்டமையால் அதனை யொழித்துப் பரார்த்தலிங்க விலக்கண முணர்த்தத் தொடங்கி அவற்றின் பெயர்களுணர்த்துகின்றார்.**

*431) சயம்புவுந் தைவிகமு மாரிடமு மாந்தர்
நயந்தலிங்கந் தானுமென் நான்கு.*

தெளிவுரை: பரார்த்தலிங்கமானது சுயம்புவலிங்கமும், தைவிகலிங்கமும், ஆரிடலிங்கமும், மானுடலிங்கமும் என நான்கு பேதப்படும்.

குருசேத்திர முதலிய புண்ணியஸ்தலங்களிலே தானே தோன்றுவது சுயம்பு. தேவர்களாற்றாபிக்கப்பட்டது தைவிகம். இருடிகளாற்றாபிக்கப்பட்டது ஆரிடம். அசுரர் இயக்கர் சித்தர் அது மானுடராற்றாபிக்கப்பட்டது மானுடம்.

காணலிங்கமொன்று கூட்டிப் பராத்தலிங்கம் ஐவகைப்படு மெனக் கூறலுமொன்று.

**அவ்விலிங்க நிலையுணர்த்துகின்றார்.**

*432) சயன மிருக்கை நிலைசரிக்கை காண
மயசயம்பு மானுடந்தை வம்.*

தெளிவுரை: காணலிங்கமும் அழகிய சுயம்புலிங்கமும் மானுடலிங்கமும் தைவிகலிங்கமும் முறையே சயனிக்குமிலிங்கமும் இருக்குமிலிங்கமும் நிற்குமிலிங்கமும், நடக்குமிலிங்கமுமாம்.

சுயம்புலிங்கம் சலாசிரயமெனவும் பருவதாசிரயம் எனவும் இருவிதப்படும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது பதாகை வடிவினதாயும் சருக்கரை வடிவனதாயும், உருத்திராக்ஷ வடிவனதாயும் தேன் நெய் என்பவற்றின் கந்தங்களிலொன்றைப் பொருந்திப் பாதாளமுதற் பருவதா கிருதியாயிருக்கும். தைவிகலிங்கம் தீபாகாரமாய் மேடு பள்ளமுடையதாய் நானாவிதமாகிய கோடரத்தோடும் டங்கத்தோடும் சூலத்தோடும் கூடினதாய் இரண்டு கைகளையும் கூப்பினது போல்வதாய்த் திருமுகத்திலே நெல்லுப்பிரமாண முயர்ந்து நீண்டு தாரையாயிருக்கும். காணலிங்கம் வெள்ளரிக்காய், பூசணிக்காய், பனம்பழம், விளாம்பழம், மாதுளம்பழம் போன்று இருக்கும். ஆரிடலிங்கம் மூலந்தூலமாயேனும் நுனியும் நடுவும் தூலமாயேனும் பலாக்காய் சுரைக்காய் வழுதுணங்காய் வில்வக்காய் தேங்காய் வாழைப்பழம் போன்று பிரம சூத்திரமின்றி இருக்கும். மானுடலிங்கம் கர்ப்பக்கிரகத்துவாரமானத்தாலேனும் கர்ப்பக்கிருகமானத்தாலேனும், சிரோவர்த்தனத்தோடும் பிரமாதி மூன்று பாகத்தோடும் பிரமசூத்திரத்தோடும் செயப்படுவதாம். அது சமகண்ட முதலிய பேதத்தாற் தொண்ணூற்றாறு பேதப்படும்.

**சிவலிங்கங்கள் பூசிக்கப்படும்போது இருக்கு முறைமை யுணர்த்துகின்றார்.**

***433) இருக்குஞ் சயன மியக்க நிலையு***
***மருச்சனைசெய் யும்போதன் பால்.***

தெளிவுரை: அன்பினாலே பூசை பண்ணும் போது சயனிப்பதும் நிற்பதும் நடப்பதுமாகிய இலிங்கங்கள் அனைத்தும் சுகாசனமாக இருந்தே அப்பூசையைக் கைக்கொள்ளும்.

**விக்கிரகங்களும் இங்ஙனமென்பதுணர்த்துகின்றார்.**

***434) இருப்பர் மகேசரிரு பத்தைவ ருள்ளு***
***மருச்சனைசெய் யும்போதன் பால்.***

**தெளிவுரை: அன்பினாலே பூசை பண்ணும்போது மகேசுரபேதமாகிய இருபத்தைந்து விக்கிரகங்களுள்ளும் நிற்பனவும் நடப்பன்வுமாகிய அனைத்தும் சுகாசனமாக இருந்தே அப்பூசையைக்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கைக்கொள்ளும்.

**பரார்த்தலிங்க பூசைக்கு அதிகாரிகளை உணர்த்துகின்றார்.**

***435) சிவன் முகத்தி லேசெனித்த விப்பிரசைவ ருவரே யருச்சனைக்கென் றென்***

தெளிவுரை: சிருட்டி காலத்திலே அநாதி சைவராகிய சதாசிவ மூர்த்தியுடையசத்தியோசாதம், வாம தேவம், அகோரம் தற்புருடம், ஈசானம் என்னும் பஞ்சவத்திரத்தினின்றும் தோன்றிய கௌசிகர், காசியபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சருஷிகோத்திரத்திலே சனித்த சிவப்பிராமணர்களாகிய ஆதி சைவர்களே பரார்த்த பூசைக்கு அதிகாரிகளென்றறிக.

அநாதி சைவர், ஆதி சைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்திரசைவர், பிரவர சைவர், அந்திய சைவரெனச் சைவர் எழுவகையர். மகாசைவராவர் பிரமா முகத்திற் தோன்றிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். அநுசைவராவார் சிவதீக்ஷை பெற்ற க்ஷத்திரியரும், வைசியரும், அந்தார சைவராவர். சிவதீக்ஷை பெற்ற சூத்திரர் பிரவரசைவராவார். சிவதீக்ஷை பெற்ற அநுலோமர் அந்திய சைவராவார். சிவதீக்ஷை பெற்ற மற்றையோர் ஆதிசைவருள்ளும் சமயதீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவரே பரார்த்தலிங்கத்தை தீண்டதற்கு அதிகாரிகளாவர். இவை பெறாதவர் தீண்டின் உலகத்துக்கும் அரசனுக்கும் கேடு விளைவிக்கும்.

**மகாசைவர் பூசித்ததற்குரிய இலிங்கமுணர்த்துகின்றார்.**

***436) அயன்முகத்திற் றோன்றிய வந்தணரர் சித்துப் பயனடைதற் கிட்டலிங்கம் பாங்கு.***

தெளிவுரை: பிரமா முகத்திற் தோன்றிய வைதீகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றோராகிய மகாசைவர்கள் பூசித்த முத்தி பெறுதற்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இட்டலிங்கமே உரித்தாம்.

**மகாசைவர் பரார்த்தலிங்கத்தைத் தீண்டியவழிப்படும் குற்றமுணர்த்துகின்றார்.**

***437) பாங்கில்லை தீண்டப் பரார்த்த மவர்தீண்டிற்***
***றீங்குலகுக் காமென்று தேறு.***

தெளிவுரை: அம்மகாசைவர்கள் பரார்த்தலிங்கத்தை தீண்டுதற்கு விதியில்லை. தீண்டினார்களாயின் உலகத்துக்குத் தீங்கு உண்டாகும் என்று அறிக.

**சதாசிவமூர்த்திக்கு முகநிரூபணம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்**

***438) ஈசான முச்சிமுக மீசதிசை நோக்கியுறுந்***
***தேசார் புருடங்கீழ்த் திக்கு.***

தெளிவுரை: உச்சிமுகமாகிய ஈசானம் வடகிழக்குத் திக்கை நோக்கியிருக்கும் ஒளி பொருந்திய தற்புருடம் கிழக்குத்திக்கை நோக்கியிருக்கும்.

***439) தெற்கு வடக்குமேற் றிக்குமுறை யானோக்குந்***
***தக்கவகோ ராதிமுகந் தான்.***

தெளிவுரை: தகுந்த அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் மூன்று முகங்களும் முறையே தெற்கையும், வடக்கையும் மேற்கையும் நோக்கியிருக்கும்.

**பரார்த்தலிங்கத்துக்கு முகநிரூபணம் மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***440) எத்திசையி னாலயத்து வாயி லிங்குமுக***
***மத்திசையிற் றற்புருட மாம்.***

தெளிவுரை: திருக்கோயிற்றுவாரம் எத்திக்கிலிருக்கும் அந்தத் திக்கை நோக்கியிருக்கும் முகம் தற்புருடமாகும்.

***441) ஈசான வத்திரமு மேய்ந்ததன்மீ தேயிடப்பாற்***
***றேசார நோக்கும்வி திக்கு.***

தெளிவுரை: ஈசான முகம் அந்தத் தற்புரு டமுகத்திற்கு மேலே பொருந்தி அதற்கு இடபக்க திசைக்கோணத்தை ஒளி பொருந்த நோக்கியிருக்கும்.

***442) அந்தத் திசையா னனம்பூ ருவதிக் கிற்***
***பந்திக்கு மென்றுளத்திற் பார்.***

தெளிவுரை: தற்புருட நோக்கும் அந்தத்திக்கிலுள்ள முகமானது கிழக்குத்திக்கிலே பொருந்துமென்று மனசிலே அறிக.

எனவே மேற்குத்துவாரமாயில் மேற்கேயிருந்த சத்தியோசாதமும், தெற்குத்துவாரமாயில் தெற்கேயிருந்த அகோரமும், வடக்குத்துவாரமாயில் வடக்கேயிருந்த வாமதேவமும் தற்புருடத்துக்குத் தத்தமிடத்தைக் கொடுத்துக் கிழக்குத்திக்கிலே போமென்பது கருத்து, ஈசானமுச்சிமுகம் என்பது முதலிய ஐந்து திருக்குறட்கருத்தும்,

***"திகழும் பூர்வ திசைநோக்கி யமல னிலங்குஞ் சிவலிங்கந்***
***திகழு மற்றைத் தென்றி சையை நோக்கிப் புவியிற் சிவலிங்கந்***
***திகழு மருகிக் குடதிசையை நோக்கிச் சோம திசையினையு***
***நிகழு முகமைந் ததற்கதனைப் பூர்வ திசையி னிகழ்த்திடுவாம்."***

***"இலங்கு மீச முகமுச்சி தன்னி லீசத் திசைநோக்கி***
***யிலங்கு மதன்கீழ்த் தற்புருடம் பூர்வத் தெழிலார் வலத்தோண்மே***
***விலங்கு மகோரந் தென்னோக்கி யினிய சாதஞ் சிறுபுறத்தி***
***னிலங்கு குடதிக் கினைநோக்கி யிடத்தோள் வாமம் வடக்கிலங்கும்"***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*"தென்றிசை தன்னை நோக்கித் திகழ்ந்திடி னிலங்கு மங்கே*
*யொன்றிடும் புருட மீச முச்சியுற் றங்கி நோக்குந்*
*தென்றிசை யகோரம் பூர்வ திசைபுரு டத்தா னத்தி*
*னொன்றுமிவ் வாறு மற்றை யுத்தர திக்கு மேற்கும்"*
என்னும் செய்யுள்களாலும் அறிக.

தெற்குத்துவாரமாயில் தத்புருடம், தெற்கும் சத்தியோசாதம் வடக்கும், அகோரம் மேற்கும், வாமதேவம் கிழக்கும் பொருந்துமெனவும் வடக்குத் துவாரமாயிற் தற்புருடம் வடக்கும் சத்தியோசாதம் தெற்கும் அகோரம் கிழக்கும், வாமதேவம் மேற்கும் பொருந்துமெனவும் சில சிவ ஆகமங்களில் கூறப்படும்.

இடபமும் பலிபீடமும் இருக்குமிடமுணர்த்துகின்றார்

*443) இலிங்க முகத்தி னெதிரே யிடப்*
*மிலங்கும் பலியுமென வெண்.*

தெளிவுரை: சிவலிங்கத்தினது முகத்துக்கு எதிரே இடபமும், பலிபீடமும் விளங்குமென்றறிக.

பச்சிமத்துவாரமாகில் நிருதியீறாகப் பலியிடுக.

துவாரபாலகர் தானமுணர்ததுகின்றார்

*444) அந்தத் துவாரத்தி னர்ச்சித்துப் பாலகரை*
*வந்தனை செய்க மகிழ்ந்து.*

தெளிவுரை: சிவலிங்கம் எந்தத் திக்கை நோக்கியிருக்குமோ அந்தத் திக்குத்துவாரத்திற்தானே துவாரபாலகர்களை மனமகிழ்ந்து பூசித்து வணங்குக.

இவ்விருதிருக்குறட் கருத்தும்
*"எத்திசை தன்னை நோக்கி யிலங்கிடுஞ் சிவலிங் கந்தா*
*னத்திசை துவார பால ரர்ச்சனை புரிக வன்பா*
*லத்திசை தன்னிற் பீட மிடபமு மெதிரே யாகுஞ்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*சுத்தசை வாக மத்தின் விதிவழி தொகுத்துச் சொன்னோம்"*
என்னும் செய்யுளாலும் அறிக.

**நைவேத்தியஞ் செயப்பெறுமுகம் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***445) பஞ்சான னந்தனினும் பாங்குறப்போ னங்கொடுக்க***
***பஞ்சகசெம் பொற்பாத் திரத்து.***

தெளிவுரை: சிவந்த பொன்னினாலே செய்யப்பட்ட ஐந்து பாத்திரங்களிலே ஈசான முதலிய ஐந்து திருமுகங்களிலும் தனித்தனியே விதிப்படி அன்னத்தை நிவேதனம் பண்ணுக.

***446) தற்புருட வத்திரத்திற் றானேநை வேத்தியமு***
***மற்புதனுக் காமென் றறி.***

தெளிவுரை: அது கூடாதவழித் தற்புருட முகத்திற்றானே நிவேதிக்கப்பட்டதும் சிவபெருமானுக்குப் பிரீதியா மென்றறிக.

பாம்பின் முகங்களைந்தினுள் ஒரு முகத்திற் பருகின் மற்றவைகளுக்குந் திருத்தியாமாறு போலத் தற்புருட முகத்தின் நிவேதித்தது மற்றவைகளுக்கும் நிவேதித்ததாமென்று அறிக.

பஞ்ச சாதாக்கியங்களுள்ளே சிவசாதாக்கியம் ஈசானத்தும், அமூர்த்தி சாதாக்கியம். சத்தியோ சாதத்தும். மூர்த்தி சாதாக்கியம் வாமதேவத்தும், கர்த்திருசாதாக்கியம் அகோரத்தும், கருமசாதாக்கியம். தற்புருடத்தும், பொருந்துதலானும் சாதாக்கியம் ஐந்தும் ஒன்றாய் திரண்ட அவதரம் கரும சாதாக்கியம் ஆதலானும், தற்புருடமே சிறப்புடைத்து; ஆதலால் தற்புருடமுகத்து நிவேதித்தலே உத்தமமாயிற்று. அது

***கன்மசா தாக்கி யங்காண் கருதிடிற் புருட மெங்கு***
***மன்னபா னாதியந்த முகந்தினிற் கொடுக்க வன்பா***
***லுன்னிடி னகோரங் கர்த்த ரமூர்த்தமே யுணரிற் சாத***
***மன்னிய மூர்த்தம் வாம மதித்திடிற் சிவமீ சானம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*கன்மசா தாக்கி யத்திற் கலந்துறு மற்றை நான்கு*
*மன்னுமூன் றிரண்டு மொன்று மற்றைய முகங்க டம்மி*
*லுன்னியம் முறைமை தன்னை யோதன மாதி யெல்லாங்*
*கன்மசா தாக்கி யத்திற் றிசைதொறுங் கொடுக்க கற்றோர்*

என்னும் செய்யுள்களால் அறிக.

இவ்வாறன்றி, ஈசானமுகம் சிவாகமம் இருபத்துஎட்டும் உதிக்கப் பெற்ற ஊர்த்துவமுகமாதலால் அம்முகத்து நிவேதித்தலே உத்தமமென்று சில சிவாகமங்களில் கூறப்படும்.

**நிருமாலிய மல்லாதன இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***447) சயம்புவுந் தைவிகமு மாரிடமு மென்று***
***மிகந்தனநின் மாலியமென் றெண்.***

தெளிவுரை: சுயம்புவும் தைவிகமும் ஆரிடமுமாகிய இம்மூவகை இலிங்கங்களுக்கும் நின்மாலியம் எக்காலத்தும் இல்லை என்று அறிக.

***448) நின்மால்ய மன்றிவிலிங் கத்து நிவேதித்த***
***வன்னாதி பானியாந் தம்.***

தெளிவுரை: இவ்விலிங்கங்களுக்கு நிவேதிக்கப்பட்ட அன்னமுதற் பானீயமீறாயின நிருமாலியம் ஆகாவாம்.

**அந்நைவேத்தியம் புசிக்கு முறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***449) சிவதீக்கைச் சைவ ரருந்துகதே சாகு***
***மவருள்ளுந் தேசிகர்க்கா காது.***

தெளிவுரை: சிவதீக்ஷையைப் பெற்ற ஆதிசைவர்கள் அதனைப் புசிக்கக்கடவர்கள் புசிப்பவர்களுக்கு அறிவு பிரகாசிக்கும், அவர்களுள் ஆசாரியர்க்கு ஆகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசாரியர் பாத்திர சேடத்தைப் படையாது எடுத்து வந்து அதனாற் பிராணக்கினி ஹோமம் செய்து புசிக்க. நிருமாலியம் புசிக்கின் அவிழுக்கொருகற்பம் நரகத்தில் வாதையுறுவர். பஞ்சகவ்வியம் புசித்து அகோரத்திற் பதினாயிரம் உரு செபித்தல்லது மற்றைச் சந்தி பூசிக்கலாகாது என்று அறிக.

***450) மருந்திதுவென் றேயருந்தின் மாய்ந்துவிடும் பாவ***
***மருந்திடலன் னத்தாசை யால்.***

தெளிவுரை: மகாசைவர், அநுசைவர் அவாந்தர சைவர்கள். பிறவிப்பிணிக்கு இதுவே மருந்து என்று கருதிப் பத்தியினால் ஆதிசைவரை வணங்கி உழுந்து பருத்திக் கொட்டை இலந்தைக்காய் நெல்லிக்காய் எலுமிச்சங்காய் என்னும் இவற்றின் ஒன்றின் அளவினதாக வாங்கிப் புசிக்கின் அவர் செய்த பாவம் தேய்ந்து விடும். ஒரு காலத்தும் அன்ன வாஞ்சையினலே புசியற்க.

**புசிக்கலாகா நிருமாலியங்கள் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***451) மானுடர்தா பித்தசிவ லிங்கத்தின் மாலியத்தை***
***யானறல்பூ மிக்கழலுக் காக்கு.***

தெளிவுரை: மானுடலிங்கத்தின் நிர்மாலியத்தை ஒருவரும் புசிக்கலாகாதலால் அதனை பசுவுக்கு இடுதலேனும் நிலத்திற் புதைத்தலேனும் அக்கினியிலிடுதலேனுஞ் செய்க.

***452) அல்லாற் சிவவிப் பிரரருந்த லாமவரை***
***யல்லார்க்கா காதென் றறி.***

தெளிவுரை: அங்ஙனமன்றாயின் ஆதிசைவர் புசிக்கலாம். அவரையொழிந்தோர்கள். புசிக்கலாகாது என்று அறிக.

**நிருமாலியம் புசித்தற்குரியரல்லாதாரையுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

453) ***நின்மலமே நின்மலனின் மாலியந் னாதலினாற்
புன்மலத்தார்க் காகா புசிப்பு***

தெளிவுரை: நிருமலராகிய சிவபெருமானுடைய நிருமாலியம் நிருமலமேயாம். ஆகையால் அதனைப் புசித்தல் பொல்லாத மலத்தோடு பொருந்தினவர்களுக்காகாது.

புன்மலத்தாரென்றது சிவதீக்ஷையில்லாதவரை, சிவதீக்ஷையில்லாதாருள், நிர்மாலியம் புசித்தவனும், கொடுத்தவனும், விற்றவனும், அவிழுக்கொருகற்பம், கும்பிநரகத்தில் அழுந்தவர் என்று அறிக.

**நிருமாலியத்தை அவமதி செய்யலாகாதென்பது உணர்த்துகின்றார்**

454) ***மிதியேல் கடவேன் மிசைவியே லன்பர்க்
கதிபா தகமருத்தி னாம்***

தெளிவுரை: முற்கூறிய நிருமாலியங்களை மிதியாதே, கடவாதே, சிவபக்தர்களுக்குப் புசிப்பியாதே. அவைகளை விடாது புசிக்கின் அதிபாதகத்துக்கு சமமாகும்.

**நிருமாலியத்தை அமதித்தவருக்குப் பரிகாரமுணர்த்துகின்றார்.**

455) ***வன்னிகுசை கவ்வியமு மாந்திடுக மாய்ந்துவிடு
மின்னவிதத் தொன்றியற்றி னீங்கு.***

தெளிவுரை: இங்கே கூறப்பட்ட நிர்மாலியத்தை மிதித்தன் முதலிய இக்குற்றங்களுள் ஒன்றைச் செய்தால் சமிவிருக்க பத்திரமும் குசை நுனியும் போட்டுத் தாபித்த பஞ்சகவ்யத்தை உட் கொள்க. உட் கொள்ளின் அக்குற்றம் நீங்கி விடும்.

மிதித்தால் நூறுருவும். கடந்தால் ஐம்பதுருவும். இருந்தால் இருநுறுருவும் சிவபத்தருக்குப் புசிப்பித்தால் ஆயிரமுருவும் அகோர மந்திரத்திற் செபிக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடாது புசித்தவனும் விடாது புசிப்பித்தவனும் ஒரு காலத்து விவேக முதிக்கின், அன்று தொட்டுத் தினந்தோறும் ஒருபொழுதாயினும், இருபொழுதாயினும் அதிபாதகத்துக்குள்ள பரிகாரத்தையேற்றிச் செய்து முடிக்க.

**நிருமாலியமல்லாது இதுவென்று வரையறுத்துணர்த்துகின்றார்.**

***456) அல்லநிரு மாலியஞ்சாந் தாட்டியநீர் சூட்டியபோ***
***தெல்லார்க்கு மாமடைக்கா யீங்கு.***

தெளிவுரை: சுயம்பு முதலியவற்றிற்கு சாத்திய சந்தனமும் ஆடி அருளப் பண்ணிய திருமஞ்சனமும் சூட்டிய பூக்களும். தாம்பூலமும் பாக்கும் நிருமாலியங்கள் அல்ல, அவை எல்லார்க்குமாம்.

அபிடேகம் பண்ணிய பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு பழமென்பன ஆகாவெனக் கொள்க.

**விக்கிரகங்களுக்கு நிவேதிக்கப்பட்டன நிருமாலியமல்ல வென்று ஐந்து திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***457) சகளரிரு பத்தைவர் தாமருந்துஞ் சேட***
***மகலா வகத்தடியார்க் காம்.***

தெளிவுரை: சந்திரசேகர் முதலாகிய இருபத்தைந்து விக்கிரகங்களும் கொண்டருளிய நைவேத்யம் விட்டு நீங்காது பணிவிடை செய்யும் பரிசாரகர்களுக்காம்.

***458) அம்பிகைநிர் மாலியமா மந்தணர்முன் னால்வர்க்குத்***
***தந்திமுகன் மாலியமுந் தான்.***

தெளிவுரை: உமாதேவியினது நிருமாலியமும். விக்னேசுரரது நிர்மாலியமும் பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்க்குமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நால்வர்க்குமென்ற உம்மையால் அநுலோமர்க்குமாகுமெனவும், தந்திமுகன் மாலியமுமென்ற உம்மையால் சீதேவி, பூதேவி, சரசுவதி, துர்க்கை நிர்மாலியங்களுமாகும் எனவும் கொள்க.

***459) ஏறும் புகழ்வீர மெல்லாமுண் டுண்பாருக்***
***காறுமுக னின்மாலி யம்.***

தெளிவுரை: முருகக் கடவுளுடைய நிர்மாலியத்தைப் புசிப்பவர்களுக்கு மிகுந்த கீர்த்தி வீர முதலியனவெல்லாம் உண்டாகும்.

***460) வாதிக்கு மேபிணிஷய மாந்துமவர்க் கெப்பொழுது***
***மாதித்த னின்மாலி யம்.***

தெளிவுரை: சூரியனது நிர்மாலியமானது தன்னை எப்போதும் புசிப்பவர்களுக்கு வியாதியைப் போக்கும்.

சூரிய நிர்மாலியம் சூரியபூசையுடையார் மாத்திரம் புசிக்கலாகாதென அறிக.

***461) மற்றைப் பரிவாரத் தார்மாலி யந்தானுங்***
***குற்றமல மாந்தல் குணம்.***

தெளிவுரை: மற்றைப் பரிவார தேவதைகளுடைய நிர்மாலியங்களையும் புசித்தல் குற்றம் ஆகாது குணமாம்.

பரிவாரத்தாரென்றது அட்டபரிவார தேவதைகளையும் சோடச பரிவார தேவதைகளையும், முப்பத்திரண்டு பரிவார தேவதைகளையும் என்க. கொடிப்படத்தினிடபதேவர் நிர்மாலியம் பெண்கள் புசிக்கின் மகப்பெறுவர். பிரமா நிர்மாலியம் பிராமணருக்காம். இந்திராதிலோகபாலகர் நிர்மாலியம் புசிக்கின் ஆரோக்கியமுண்டாம். ஐயனார் நிர்மாலியமும் அவர் தேவிமாராகிய புட்கலை பூரணை நிர்மாலியமும், சத்தமாதர்கள் நிர்மாலியமும். பிராமணரொழிந்த மற்றவர்களுக்காம். துர்க்கை நிர்மாலியம் புசிக்கின் வீரமுண்டாம். சேட்டாதேவி நிர்மாலியமும், அவள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்கத்திலிருக்கும் அவள் பெண்ணாகிய மணியினது நிர்மாலியமும், அவள் பிள்ளையாகிய இரக்ஷபனது நிர்மாலியமும், புசிக்கிற் புத்திரனுண்டாம், வித்தியா பீடத்தின் நிர்மாலியம் புசிக்கின் ஞானமுண்டாம். கேத்திரபாலர் நிர்மாலியம் பூசிக்கின் நிதியுண்டாம், சண்டேசுரர் நிர்மாலியம் சூத்திரருக்காம். சண்டேசுர சத்தியாகிய யமனி நிர்மாலியம் பெண்கள் புசிக்கின் நன்மையுண்டாம்.

**இட்டலிங்க பூசையுணர்த்தத் தோற்றுவாய் செய்கின்றார்.**

***462) பகர்ந்தாம் பரார்த்த விலிங்க மினியாம்***
***பகர்வாமே யிட்டலிங்கம் பார்.***

தெளிவுரை: நாம் பரார்த்த லிங்கத்தைச் சொன்னோம். இனி இட்டலிங்கத்தைச் சொல்வோம். அறிக.

**இட்டலிங்கமாவதிதுவென்பது இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***463) செய்துசிவ தீக்கையினைத் தேசிகன்றான் புத்திரனைக்***
***கையுறக்கொ ளென்று கசிந்து.***

***464) கொடுக்கக் கொளுமிலிங்க மிட்டலிங்கங் கொண்டா***
***னடுத்தவினை தீர்க்கு மது.***

தெளிவுரை: ஆசாரியன் விசேட தீக்ஷையைப் பண்ணி அருள் சுரந்து அத்தீக்ஷை பெற்ற புத்திரகனைப் பார்த்து. நீ உள்ளளவும் கைவிடாது இவரை நாடோறும் பூசியென்று அநுமதி செய்து, அடியேன் இச்சரீரம் உள்ளவரையும் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன் என்று பிரதிஞ்ஞை செய்வித்துக் கொண்டு கொடுக்க. அவன் வாங்கி பூசிக்கும் இலிங்கம் இட்டலிங்கமாம். அது தன்னை வாங்கி நாடோறும் பூசிப்பவனை அடைந்த வினைகளைப் போக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**இட்டலிங்கபூசை செய்தற்கு அதிகாரிகளை யுணர்த்துகின்றார்.**

***465) அருச்சிக்க விட்டலிங்க மந்தணர்முன் னால்வ
ரூரித்தே யநுலோமர்க் கும்.***

தெளிவுரை: பிராமணர் முதலிய நால்வரும் இட்டலிங்கத்தைப் பூசிக்கக் கடவர்கள். அப்பூசை அநுலோமர்களுக்கும் உரித்தாகும்.

***"அந்தணர்முன் னொரு நால்வர் சிவதீக்கைக் கருகரவர்
சிந்தைமகிழ் வுறப்பூசை செய்கசிவன் றிருவடியிற்
புந்திமகிழ் வுறப்பூசை யநுலோமரும் புரிக
தந்தமக்குத் தக்கவெலை மண்டபத்திற் றனித்தனியே"***

என்னும் செய்யுளானுமறிக.

**அநுலோமரி லக்கணம் உணர்த்துகின்றார்.**

***466) புருடனுயர்ந் தானிழிந்த பொற்றொடியைப் புல்ல
வருவார்தா மேயநுலோ மர்.***

தெளிவுரை: நான்கு வருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாடவன் இழிந்த வருணத்துப் பெண்ணைப் புணர பிறப்பர்வர்களே அநுலோமர்.

***"பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெண
நாற்குலத் தவருந் தங்குல நடையினு
முயர்ந்த வாணினு மிழிந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவரநு லோமர்"***

என்னும் சூத்திரத்தானும் அறிக.

பிராமணனுக்கு க்ஷத்திரிய பெண்ணிடத்திலேப் பிறந்தவன் சவர்ணன், வைசியப் பெண்ணிடத்திலே பிறந்ததவன் அம்பட்டன், சூத்திரப்பெண்ணிடத்திலே பிறந்தவன் பாரசவன். ஆகப் பிராமணனுக்கு பிறந்தவர் மூவர். க்ஷத்திரியனுக்கு வைசியப் பெண்ணிடத்திலே பிறந்தவன் மற்குரு, சூத்திரப்பெண்ணிடத்திலே பிறந்தவன் உக்கிரன், ஆக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷத்திரியனுக்கு பிறந்தவர் இருவர். வைசியனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்திலே பிறந்தவன் சூசகன். ஆக அநுலோமர் அறுவராதல் காண்க.

பிராமணர் முதனால்வரும் முறையே நான்கு மூன்றிரண்டொருவருணங்களிலே விவாகஞ்செய்யலாமெனக் கிரணாகமத்தில் விதிக்கப்பட்டது.

**பிரதிலோமரிலக்கணம் உணர்த்துகின்றார்.**

***467) புருடனிழிந் தானுயர்ந்த பொற்றொடியைப் புல்ல
வருவார் பிரதிலோ மர்.***

தெளிவுரை: இழிந்த வருணத்தாடவன் உயர்ந்த வருணத்துப் பெண்ணை புணர பிறப்பவர்கள் பிரதிலோமர்கள்.

***"இழிந்த வாணினு முயர்ந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவர் பிரதி லோமர்"***

என்னும் சூத்திரத்தானும் அறிக.

க்ஷத்திரியனுக்கு பிராமணப் பெண்ணிடத்திலே பிறந்தவன் சூதன், வைசியனுக்கு க்ஷத்திரியப் பெண்ணிடத்திலே பிறந்தவன் மாகதன், பிராமணப் பெண்ணிடத்திலே பிறந்தவன் வைதேககன், ஆக வைசியனுக்கு பிறந்தவர். இருவர். சூத்திரனுக்கு வைசிய பெண்ணிடத்திலே பிறந்தவன் அயோகவன், க்ஷத்திரியப் பெண்ணிடத்திலே பிறந்தவன் க்ஷத்தர், பிராமணப் பெண்ணிடத்திலே பிறந்தவன் சண்டாளன்; ஆக சூத்திரருக்கு பிறந்தவர் மூவர் ஆகப்பிரதிலோமர் அறுவராதல் காண்க.

அநுலோமத்தானும் பிரதிலோமத்துப் பெண்ணுங் கூடிப் பிறந்தவர் அந்தராளர். பிரதிலோமத்தானும் அநுலோமத்துப் பெண்ணுங்கூடிப் பிறந்தவர் விராத்தியர். பிரதிலோமருக்கு, ஆச்சாரியனிடத்திலே தங்கள் தங்களுக்குரிய தீக்ஷை பெற்று அவன் கற்பித்தபடியே பிரதிக்கிண நமஸ்காரம் பண்ணிக் கொண்டிருப்பதே, சிவபூசை என அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**சூத்திரருக்கு மந்திரோச்சாரண முறைமை மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***468) சூத்திரர்பீ சாக்கரஞ்சொல் லாதுசொலி மந்திரத்தை***
***யாத்திகரர்ச் சிக்கபல மாம்.***

தெளிவுரை: ஆத்திகராகிய சூத்திரர்கள் மந்திரங்களைப் பீசாக்கரங்கூட்டாது உச்சரித்துப் பூசிக்கக் கடவர்கள், பூசிக்கின் அதற்கேற்ற பயனுண்டாம்.

ஆத்திகராவார் கடவுளும், புண்ணியபாவமும் சுவர்க்கநரகமும் உண்டென்போர்; நாத்திகராவார் இல்லையென்போர். அது

***"பொன்னுலகம் வெந்நரகம் புண்ணியபா வம்புரிவார்***
***நின்மலனு முண்டென்று நிச்சயித்தா ரிந்நிலைமை***
***யாத்திகரே யார்கண்டா ரம்மைப் பலமென்பார்***
***நாத்திகரென் றேயுளத்து ணாடு"***

என்னும் வெண்பாவால் அறிக.

***469) ஓதேல் கலாமந் திரமொருமூன் றேழைந்து***
***மோதேல்கா யத்திரியை யும்.***

தெளிவுரை: வேத மந்திரமாகிய கலாமந்திரம் முப்பத்துஎட்டையும் உச்சரியாதே, சிவ காயத்திரியையும் உச்சரியாதே.

***470) அக்கரநி யாசத்தை யிட்டலிங்கத் தாக்கிடுக***
***தக்கதென வேமதித்துத் தான்.***

தெளிவுரை: இட்டலிங்க பூசையிலே ஐம்பத்தோரு அக்கர நியாசத்தை மாத்திரம் தக்கதென்று நினைந்து பண்ணுக.

எனவே, பிராமணர் முதலிய மூவரும் இரண்டு நியாசமும் பண்ணலாமென்பது பெறப்பட்டது. சூத்திரருள், அம்மூவரின் ஒருவராலே சமயதீக்ஷை முதலிய ஐந்தினையும் பெற்ற நைட்டிகனும், அவனிடத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவற்றைப் பெற்ற நைட்டிகனும், தீக்ஷையான் மார்த்தகருமங்கள் எல்லாம் அதிகாரியாவனென்றும், அவைகளுக்குரிய சகல மந்திரங்களினும் அதிகாரி யாவனென்றும் புரோற்கீதத்தும் அமிர்தத்துஞ்சொல்லுகையால், அவர் எக்காலத்து மோதலாம். இல்வாழ்வானுக்கு நித்தியகருமத்திலே உபவீத மாத்திரமும் நைமித்திக கருமத்திலே பீசமந்திராதிகாரமும் உண்டு.

**சிவபூசா பேதங்களை மூன்று திருக்குறாலுணர்த்துகின்றார்.**

***471) சுத்தமுங் கேவலுமு மிச்சிரமுந் தொண்டரவர்***
***பத்தியினா லர்ச்சிக்கும் பாங்கு.***

தெளிவுரை: சிவனடியார்கள் பத்தியினாலே பூசிக்கும் சிவபூசை சுத்தமும் கேவலமும் மிச்சிரமுமென மூன்று பேதமாம்.

***472. சுத்தஞ் சிவலிங்க மொன்றுமே சுந்தரியு***
***மொத்துறைதல் கேவலமென் றோர்.***

தெளிவுரை: சிவலிங்கமொன்றை மாத்திரம் பூசித்தல் சுத்தபூசையாம் அவ்விலிங்கத்தோடு உமாதேவியையும் கூட்டிப் பூசித்தல் கேவல பூசை என்று அறிக.

விநாயகர், கந்தர், இடபதேவரென்னும் இம்மூவரையும் அவ்விருவருடன் கூட்டி ஐவராக பூசித்தலும் கேவலபூசை எனப்படும்.

***473) அருக்கன் கரிமுகவ னாதிசண் டாந்தம்***
***விரித்தருச்சிக் கைமிச் சிரம்.***

தெளிவுரை: சூரியன் விநாயகர் முதலாக சண்டேசுரர் இறுதியாக விரித்துப் பூசித்தல் மிச்சிர பூசையாம்.

**சிவபூசா பேதங்களுக்கு அதிகாரிகளைப் பிரித்து இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*474) துறந்தாற்க்குச் சுத்த மருகமில் வாழ்விற்*
*சிறந்தாற்குக் கேவலமே தேசு.*

தெளிவுரை: துறவிக்கு சுத்தபூசையை உரித்தாம், இல்வாழ்வானுக்குக் கேவல பூசையை விசிட்டமாம்.

*475) அருகமே தேசிகனுக் காமிந்த மூன்று*
*மொருவாத நேச முறின்.*

தெளிவுரை: சிவபெருமானிடத்தே விட்டு நீங்காத பத்தியுண்டாயின் ஆசாரியனுக்கு இம்மூவித பூசையும் உரியனவேயாம்.

**பொதுவிதியுணர்த்துகின்றார்**

*476) இயன்றதிவற் றொன்றை யருச்சிக்க வேற்ற*
*பயன்றருமீ சன்பாங்கு பார்த்து.*

தெளிவுரை: யாவராயினும் இம்மூவித பூசையுள் இயன்றதொன்றைப் பண்ணுக, சிவபெருமான் அம்முறைமையை அறிந்து அதற்கேற்ற பலத்தைக் கொடுப்பார்.

**மேன்முடிந்தது முடிக்கின்றார்.**

*477) அறிந்துவிதி யுஞ்சௌச மாதிநீ ராடற்*
*றிறமுந் தவறாதே செய்.*

தெளிவுரை: சிவாகம விதிகளையறிந்து சௌச முதலியனவற்றையும் ஸ்நானத்தையும் வழுவாது செய்க.

**இட்டலிங்க பூசைக்கு மண்டபஞ் செய்யுமுறைமை ஏழு திருக்குறளாலுணர்த்துகின்றார்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***478) மலையினதி தீரத்தின் வாழ்மனையி னீச***
***னெலையினுமா மண்டபமென் றெண்.***

தெளிவுரை: பருவதத்திலும் ஆற்றங்கரையிலும் இருக்கின்ற வீட்டிலும் சிவாலயத்திலும் மண்டபம் செயற் பாலதென்றறிக.

***479) முழமிருப தற்கொள்க முப்பதினுங் கொள்க***
***வழகுறவே மண்டபத்தை யாய்ந்து***

தெளிவுரை: மண்டபத்தை அழகு பொருந்த ஆராய்ந்து இருபது முழத்திற் செய்க, முப்பது முழத்தினும் செய்க.

***480) மண்டபமொன் பான்முழத்தின் வாய்க்கவியற் றேழினுமா***
***மெண்டிகலைந் தின்மூன் றினும்.***

தெளிவுரை: மண்டபத்தை ஒன்பது முழத்தினும் சிறக்கச் செய்க. ஏழு முழத்திற் செய்யினுமாம். எண் பொருந்திய ஐந்துமுழம் மூன்று முழத்தினும் செய்யினுமாம்.

முழமாவது மானாங்குலம் இருபத்து நான்கு கொண்டது. மானாங்குலம் உத்தமம் மத்திமம் அதமம் என மூவகைப்படும், எட்டுநெல்லுக் குறுக்குக் கொண்டது உத்தமம். ஏழு மத்திமம் ஆறு அதமம். அன்றியும் நான்கு நெல்லு நீளங்கொண்டது உத்தமம், மூன்றரை மத்திமம், மூன்று அதமம்.

***481) இயற்றுகநாற் கோணத்தா லிட்டமுற வட்டத்***
***தியற்றுலுமா மண்டபமென் றெண்.***

தெளிவுரை: மண்டபத்தை நாற்கோணத்தாலே பிரீதி பொருந்தச் செய்க. வட்டமாகச் செய்யலுமாமென்றறிக.

***482) திண்ணிய விட்டிகையாற் செய்மண் டபமரத்தாற்***
***பண்ணலுமாம் பாங்கென்றே பார்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: மண்டபத்தைக் கடினமாகிய செங்கல்லினாலே செய்க. மரத்தினாற் செய்தலுமுரித்தாமென்றறிக.

***483) மண்ணினாற் செய்யலு மாகும் வறியர்தாந்***
***திண்மையுற வேவிதியைத் தேர்ந்து.***

தெளிவுரை: வறியவர்கள் விதியைத் திண்மை பொருந்த ஆராய்ந்து மண்ணினாலே செய்யலுமாம்.

***484) வாயிலத னாற்றிசையும் வாய்க்கச்செய் பச்சிமத்தில்***
***வாயிலுமா கும்பூரு வத்து.***

தெளிவுரை: அம்மண்டபத்துக்கு நான்கு திக்கினும் துவாரங்களைச் சிறக்கச் செய்க. அன்றேல் மேற்கிலாயினுங் கிழக்கிலாயினங் துவாரம் செய்க.
துவாரம் தெற்குத்திக்கிற் செய்யலுமாம்.

**வேதிகை செய்யுமுறைமை நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***485) மண்டபமைங் கூறாக்கி வாய்க்க நடுக்கூற்றிற்***
***றிண்டிகழும் வேதிகையைச் செய்***

தெளிவுரை: பூசாமண்டபத்தின் உள்ளகலத்தை ஐந்து கூறு பண்ணி பக்கங்களிலே இவ்விரண்டு கூறுவிட்டு, நடுக் கூற்றிலே திண்மை பொருந்திய பூசாவேதிகையைச் சிறக்கச் செய்க.

***486) உத்தமமே மண்மயத்தின் வேதிகைதா னோருங்காண்***
***மத்திமமே செங்கன் மயம்.***

தெளிவுரை: ஆராயுமிடத்து மண்ணினாலே செய்யப்பட்ட வேதிகை உத்தமம். செங்கன்மயம் மத்திமம். செங்கல்லினாலே செய்யப்பட்ட வேதிகை மத்திமாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***487) உன்னதமீ ரெட்டாகு மோரெட்டு மாகுங்க***
***லின்னாது வேதிகைக்கென் றெண்.***

தெளிவுரை: அவ்வேதிகைக்கு உயரம் பதினாறு அங்குலம் இருத்தல் வேண்டும். எட்டு அங்குலமுமாம். வேதிகைக்குச் சிலை ஆகாதென்றறிக.

***488) நாற்றிசையும் வேதிகைக்கு நாட்டிடுக தம்பத்தை***
***யூற்ற முறவே யுணர்ந்து***

தெளிவுரை: உறுதியாகும்படி அறிந்து வேதிகைக்கு நான்கு திக்கிலும் தூண் நாட்டுக.

***489) தோயத்தாற் கோமயத்தாற் சுத்திசெய்க மண்டபத்தை***
***யேயத்தான் மந்திரத் தாலே.***

தெளிவுரை: இங்ஙனம் செய்யப்பட்ட பூசா மண்டபத்தை பொருந்தும்படி அத்திர மந்திரத்தை உச்சரித்து வடித்த சலத்துடன் கூட்டிய கோமயத்தினாலே சுத்தி செய்து விதிவழி பிரதிட்டை பண்ணுக.

**பீடலக்கணம் ஆறு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***490) இருமுழநீ ளம்பீடத் தெய்து மகல***
***மொருமுழ மென்றே யுணர்.***

தெளிவுரை: திருப்பீடத்திற்குப் பொருந்திய நீளம், இரண்டு முழமும் அகலம் ஒரு முழமாயிருத்தல் வேண்டும் என்று அறிக.

அரசு, ஆல், அத்தி, இறளி, பலாசு, கருங்காலி, வன்னி, வில்வம், மா, வேங்கை, நறுமுருங்கை, காட்டுவாகை என்னும் யஞ்ஞ விருக்ஷங்களுள் இயன்ற தொன்றினாலே திருப்பீடம் செய்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***491) பன்னிரண் டங்குலம் பாதத் துயரமா***
***முன்னினுய ரந்தனைநீ யோர்.***

தெளிவுரை: பீடத்தின் பாதத்தினுடைய உயரம் பன்னிரண்டங்குலம் ஆக இருத்தல் வேண்டும். ஆராயின் உயரத்தை நீயறிக.

***492) பாதத்தைச் சிங்கமெனப் பண்ணிடபம் போலும்பண்***
***போதகம் போலும் புரி.***

தெளிவுரை: பீடத்தின் காலைச் சிங்கம் போலப் பண்ணு. அன்றேல் இடபம்போலேனும் பண்ணு. அன்றேல் யானை போலேனும் பண்ணுக.

***493) நளினத்தைப் பீடத்தி னாப்பட் பணுக***
***வளமுறவே நானா வணம்.***

தெளிவுரை: அந்தப் பீடத்தின் நடுவே பதுமத்தை வளம் பொருந்தும்படி பலநிறமாக எழுதுக.

அகலத்தை ஒவ்வொரங்குலத்தின் நான்கு வட்டமாகப் பண்ணி, நடுமுதல் வட்டத்திற் கர்ணிகையைப் பொன்னிறமாகவும், அதனடுவே ஒன்பது விரையைக் கருநிறமாகவும், இரண்டாம் வட்டத்தின் முப்பத்திரண்டு கேசரத்தை அடி பொன்னிறமும் நடு இரத்த நிறமும் நுனி முத்து நிறமாகவும் மூன்றாம் வட்டம் தளமும் தளசந்தியுமாகவும், நான்காம் வட்டம் தாளாக்கிரமமாகவும், .இடையிடையிரேகை கருநிறமாகவும், இப்படியே பதுமத்தைச் சாதிலிங்க முதலாகிய பஞ்சவன்னங்களாலும் எழுதுக. முற்கூறிய நான்கு வட்டம் செய்த இரேகையை வெள்ளை நிறமாக எழுதுக.

***494) பீடத்தை வேதிகைமேல் வைத்ததன்மீ தேமற்றோர்***
***பீடத்தை வைத்ததற்கு பின்.***

தெளிவுரை: அந்தப் பீடத்தை வேதிகயையின் மேலே வைத்து அதன்மேலே வேறு ஒரு பீடத்தை வைக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

495) பதுமமலர் பீடமதின் பச்சிமத்தில் வைத்தே
விதிவழியுஞ் செய்க வினை.

தெளிவுரை: அதற்குபின்பு பொன் முதலியவற்றாற் செய்த பதுமத்தையேனும் அலங்கார பீடத்தையேனும் அந்தப் பீடத்தின் மேலே கிழக்கு முகமாக வைத்து, விதிப்படி அதில் அடுக்குமாலை தாங்கியும் செய்க.

**பூசோபகரண சம்பாதன முணர்த்துகின்றார்.**

496) பூசனைக்கு வேண்டு முபயோகம் பூரித்துப்
பேசுதலில் லாமவுனம் பெற்று.

தெளிவுரை: பூசைக்கு வேண்டும் திருமஞ்சனம் திருப்பள்ளித் தாம முதலிய உபகரணங்களைக் குறைவின்றித் தேடி சமீபத்தில் வைத்துக் கொண்டு மௌன விரதனாகுக.

**சௌரபூசை உணர்த்துகின்றார்.**

497) பூர்வதிசை நோக்கியிருந் தாதித் தியன்பூசை
யார்வமுறச் செய்கவிதி யால்.

தெளிவுரை: கிழக்கு முகமாக இருந்து சூரிய பூசையை விதிப்படி விருப்பம் பொருந்தச் செய்து முடிக்க.

**துவாரபூசையுணர்த்துகின்றார்.**

498) பண்ணிடுகு பூசனையைப் பச்சிமத்து வாரத்து
நண்ணினர்க் கெல்லா நயந்து

தெளிவுரை: வடக்கு முகமாக புலித்தோன் முதலிய ஆசனத்திலிருந்து பீடத்தின் மேற்கே துவாரமாக பாவித்து அங்கே பொருந்திய துவாரபாலகர் எழுவற்கும் விருப்பத்தோடு பூசையை பண்ணுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவாரபாலகர் எழுவராவர் கணபதி, சரஸ்வதி, இலக்குமி, நந்தி, கங்கை, மகாகாளர், யமுனை எனவிவர்.

பரிவாரநாயன்மாரரை எழுந்தருளப்பண்ணுமுறைமை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.

***499) பூர்வதிசை யிற்பிரிக போரேற்றின் பூசையினை***
***யார்வமுளத் தோங்கவல ரால்.***

தெளிவுரை: சிவபெருமானுக்கு சந்நிதி கிழக்காதலால் இடபதேவரை மேற்கே முகமாக எழுந்தருளப் பண்ணி மனசிலே விருப்பம் பொருந்தும்படி பூவினாலே பூசிக்க.

***500) ஆனைமுக னாதியரை யர்ச்சிக்க வெல்லையறிந்***
***தேனையரை யும்விதியா லே***

தெளிவுரை: விநாயகர் முதலியோர் பிறரையும் அவரவர்க்கு விதித்த எல்லையறிந்து விதிப்படி பூசிக்க.

இலிங்கத்துக்கு முன்னே மேற்கே முகமாகக் திருநந்தி தேவரையும், அவருக்கு முன் சூலத்தையும், அவருக்கு வாமத்திலே ஆதித்தனையும், அக்கினி திக்கிலே சாத்தாவையும், மகேசுரரையும், சிவபெருமானுக்குத் தெற்கே தக்ஷிணாமூர்த்தி வித்தியாபீடத்தையும், நிருதியிலே கணபதியையும், அவருக்கு இடப்பக்கத்திலே பிரமாவையும், வாயுவிலே சுப்பிரமணியரையும் வடக்கே தெற்கு முகமாக நிருத்த மூர்த்தியையும், அவருக்கு வாமத்திலே போக சக்தியையும், குபேரனுக்கும் வாயுவுக்கும் நடுவே இலிங்கோற்பவத்தையும் குபேரனுக்கும் ஈசானருக்கும் நடுவே சிவபக்தர்களையும், அவருக்கு வாமத்திலே வைரவரையும், எழுந்தருளப் பண்ணிப் பூசிக்க. இடபத்துக்கும் ஆதித்தனுக்கும் நடுவே திருநீற்றாதாரத்தில் மாயா சக்தியையும், திருநீற்றிவே லகுளீசுரனையும், கயிற்றிலே வாசுகியையும் பூசித்து, அதற்கடுக்கச் செபமாலையை வைத்துப் பூசிக்க.

**ஆன்மார்த்த பூசாவிதியை விரித்துரைக்குநூல்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**இதுவென்பதுணர்த்துகின்றார்.**

***501) இட்டலிங்க பூசனைகொய் தீங்கிசைத்தாஞ் சூக்குமத்துங் கட்டுரைக்கும் வித்தரித்துக் காண்.***

தெளிவுரை: ஆன்மார்த்த பூசா விதியை இங்கே சுருக்கிச் சொன்னோம். சூக்குமாகமத்திலும் விரித்துச் சொல்லும். அங்கே கண்டுகொள்.
உம்மையால் அஞ்சுமான் காரணம் முதலிய ஆகமங்களினு மென்றறிக.

**பஞ்சசுத்தியுணர்த்துகின்றார்.**

***502) பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப் பஞ்சவித பாசமனுப் பார்.***

தெளிவுரை: ஆணவ முதலிய பஞ்சபாசங்களையும், நீக்கக் கருதுவோர்கள். ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தியென்னும் பஞ்சசுத்திகளை விதிப்படி செய்க.
ஆத்ம சுத்தியாவது பூதசுத்தி, அந்தரியாகம், சமாதியென்று மூன்றன்றொகுதியாகும்.

**அந்தரியாகம் இன்றியமையாத தென்பதுணர்த்துகின்றார்.**

***503) அர்ச்சித்தா னந்தரியா கம்புரியா தேபலத்தை வர்ச்சித்தா னென்றே மதி.***

தெளிவுரை: அந்தரியாகம் பண்ணாது சிவபூசை செய்தவன் அந்த பூசா பலத்தை விட்டவனாவான் என்று அறிக.

***"சிறந்தகத்து ளான்மாவி லுறைசிவனைப் பூசையினைச் செய்யானாகி***
***மறந்துபுறந் தினிற்பூசை வருந்தியே யியற்றுபவன் வயங்கு மாவின்***
***கறந்தாபா லடி·சிலகங் கையுளே யிருப்பதுந்தான் கண்டு ணாது***
***புறங்கையினை நக்குமவன் போலுமால் யாமறியப் புகலுங் காலே"***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னும் செய்யுளானும் அறிக.

**ஸ்நான வேதிகை யிலக்கணம் நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***504) செய்க வபிடேக வேதிகை செம்பினாற்***
***செய்யலுமா கும்பலா சின்.***

தெளிவுரை: ஸ்நான வேதிகையைத் தாமிரத்தினாலே பண்ணுக. பலாசினாலே பண்ணுதலுமாம்.

***505) ஒருமுழங் கோமுகை யோடு மகல***
***மரைமுழமா மேயுன் னதம்.***

தெளிவுரை: ஸ்நான வேதிகைக்குக் கோமுகை கூட நீளம் ஒரு முழமாம். அகலமும் உயரமும் அரையரைமுழமாம்.

***506) நாற்கோண மேகலையைப் பண்ணிடுக நாற்றிசையு***
***மேற்றவணி பெற்றிலங்க வீது***

தெளிவுரை: இந்த ஸ்நானவேதிகை பொருந்திய அழகு பெற்று விளங்கும்படி இதற்கு நான்கு திக்கினும் நாற்கோண மேகலையைச் செய்க.

***507) வைத்தொருபீ டத்தி லதனையதன் மேலிலிங்கம்***
***வைத்தபிடே கஞ்செய் மதித்து.***

தெளிவுரை: அந்த ஸ்நான வேதிகையை ஒரு பீடத்தின் மேலே வைத்து அதன்மேலே சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணி விதியை ஆராய்ந்து அபிஷேகம் செய்க.

**அபிஷேகஞ் செய்யுந் தான முணர்த்துகின்றார்**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***508) அபிடேக வேதிகையில் வைத்தபிடே கஞ்செய்***
***யபிடேக மங்கையிலா கா.***

தெளிவுரை: சிவலிங்கத்தை அபிஷேக வேதிகையில் வைத்து அபிசேகம் பண்ணு. அழகிய கையில் வைத்து அபிஷேகம் பண்ணலாகாது.

**எண்ணெய்க் காப்புவிதி மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்**

***509) கைக்கிரியை யெண்ணெயா குங்கடவுண் மேனிக்குக்***
***கைக்கவதல் லாவெண்ணெய் காசு.***

தெளிவுரை: கையினால் விதிப்படி செய்யப்பட்ட எண்ணெயே சிவபெருமானுடைய திருமேனிக்குரித்தாம். அஃதொழிந்த எண்ணெய் குற்றமுடையதாதலால் அதனை வெறுத்துத் தள்ளுக.

எள்ளை வண்டு முதலிய பழுதறப் பதினாறுதரம் பார்த்து ஆராய்ந்து, உவர் முதலிய தீய சலங்களை விடாது, நல்ல சலத்தை புதிய பாண்டத்தில் விட்டு, எள்ளை கருந்தோல் போமளவும் காலினால் மிதியாது கையினாற் பிசைந்து கழுவி, காகம் கோழி நாய் பன்றி முதலியன வாயிடல் மிதித்தல் செய்யா வண்ணம் உலர்த்தி, கல்லினாலும் புளியமரத்தினாலும் செய்த நாய் முதலியன வாயிடாத கைச் செக்கினால் ஆட்டியே சாத்துக. இங்ஙனமன்றி ஆட்டிய எண்ணெய் மதுவுக்கு ஒக்கும் என்று அறிக.

***510) பாங்கல்ல வெண்ணெய் படிகத்தி னுக்காணெம்***
***பாங்கென்றே யாட்டுகவன் பால்.***

தெளிவுரை: படிகலிங்கத்துக்கு எண்ணெய் உரித்தன்று. பசுநெய்யே உரித்தென்று அறிந்து அன்பினால் அபிஷேகம் பண்ணுக.

***511) பரிவுறவெண் ணெய்யைப் புரோக்கிபடி கத்தில்***
***வரமுறுகூர்ச் சத்தான் மதித்து.***

தெளிவுரை: படிகலிங்கத்திலே எண்ணெய்யை மேன்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்திய கூர்ச்சத்தினால் ஆராய்ந்து அன்பு பொருந்தப் புரோக்ஷி.

**அபிஷேகத்திரவியங்களினடைவு நான்கு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***512) ஆட்டிடுக கந்த தயில முதலதன்பி***
***னாட்டுகவா னைந்தினையு மார்ந்து.***

தெளிவுரை: முதற்சந்தனாதி எண்ணெயினால் அபிஷேகம் பண்ணுக. அதன்பின்பு பஞ்சகவ்வியங்களினாலும் அன்பினோடும் அபிஷேகம் பண்ணுக.

பஞ்சகவ்வியமாவன:விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவாம்.

***513) பஞ்சாமிர் தம்பா லதன்பின் றதிநெய்தே***
***னெஞ்சாக் கரும்பினிரி தம்.***

தெளிவுரை: அதன்பின்பு பஞ்சாமிர்தமும் பாலும் தயிரும் நெய்யும் தேனும் குறைவில்லாத கருப்பஞ்சாறும் என்க.

விதிப்படிசேர்க்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, என்பன ரசபஞ்சாமிர்தம் எனப்படும். இவற்றோடு வாழைப்பழம் பலாப்பழம். மாம்பழம் என்னும் மூன்றையுங் கூட்டிற் பலபஞ்சாமிர்தம் எனப்படும்.

***514) கனியுதகந் தெங்கிளநீர் கந்தநீர் கும்பந்***
***தனில்விதியாற் றாபித்த நீர்.***

தெளிவுரை: பஞ்சபலோதகமும் தெங்கினது இளநீரும் சந்தனக் குழம்பும் கும்பத்தில் விதிப்படி தாபித்த சலமும் என்று அறிக.

பஞ்சபலோதங்களாவன: எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தமரத்தம் பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, என்பனவாம், இளநீர், முகிளைத் திறந்து தனித்தனி அபிஷேகம் பண்ணுக. தாமிரபாத்திரத்தில் விட்டபாலும், வெண்கலப்பாத்திரத்தில் விட்ட இளநீரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுவுக்கு ஒக்கும் என்று அறிக.

*515) என்னு மிவையு மினியபத மந்திரத்தைப்*
*பன்னியுரைத் தாட்டுகபாங் கால்.*

தெளிவுரை: என்று சொல்லப்படும் இந்தத்திரவியங்களை இனிமையாகிய என்பத்தொரு பதமந்திரத்தை உச்சரித்து விதிப்படி அபிஷேகம் செய்க. பதமந்திரத்துக்கு அருகரல்லாதவர் சங்கிதாமந்திரத்தை உச்சரிக்க.

**அபிஷேககலசம் பிடித்து அபிஷேகம் செய்யுமுறைமை நான்கு திருக்குறளாலுணர்த்துகின்றார்**

*516) ஏந்தியபி டேககல சத்தை யிடக்கரத்தில்*
*வாய்ந்தவலக் கையதன்மேல் வைத்து.*

தெளிவுரை: அபிடேக கலசத்தை இடக்கையில் ஏந்தி அதன் வாயிலே சிறந்த வலக்கையை வைக்க.

*517) சங்கென்னு முத்திரையாற் றாழ்ந்தொழுகுந் தண்புனலாட்*
*டெங்கிளிறை தங்கிலிங்கத் தின்.*

தெளிவுரை: நமது கடவுளாகிய சிவபெருமான் இருக்கும் இலிங்கத்திலே அபிடேக கலசத்தினின்றும் கீழ்நோக்கி விழுகின்ற குளிர்ந்த திருமஞ்சனத்தை சங்கு முத்திரையினால் அபிஷேகம் செய்க.

*518) சங்கென்னு முத்திரையாந் தர்ச்சனிமூலத் தைவலத்*
*தங்குட்டத் தக்கிரந்தொட் டால்.*

தெளிவுரை: வலக்கையினது பெருவிரனுனி சுட்டுவிரலினடியைத் தொட்டால் அது சங்க முத்திரையாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*519) ஆன்கோட்டு மாத்திரத்தி னாலங் குலவுயரத்*
*தான்விழுநீ ராட்டுகலிங் கத்து.*

தெளிவுரை: நாலங்குல உயரத்தினின்றும் பசுவினது நுனிக் கொம்பின் பருமைப்போலச் சிறுக விழுஞ்சலத்தை பரார்த்தலிங்கத்தில் அபிஷேகம் செய்க.

ஆன்மார்த்தலிங்கத்திலே பூசிக்கின், அதிற்பாதி பருமையும், இரண்டங்குல உயரமும் கொள்க.

**அபிடேகாந்தத்திலே செயற்பாலதுணர்த்துகின்றார்.**

*520) பத்தியினா லாட்டிடுக சங்குளூறும் பாணியினை*
*வத்திரத்தான் மேலீர மாற்று.*

தெளிவுரை: சங்கினுள் இருக்கின்ற சலத்தைப் பத்தியினால் அபிஷேகம் செய்க. அதன்பின்பு சிவலிங்கப்பெருமான் திருமேனியிலுள்ள ஈரத்தைத் திருவொற்றாடையாலே மாற்றுக.

**சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணுந்தான முணர்த்துகின்றார்.**

*521) எழுந்தருளப் பண்ணிடுக பீடத் திலிங்கம்*
*விழைந்துகம லாதனத்தின் மீது.*

தெளிவுரை: பீடத்திலே பதுமாதனத்தின் மேலே சிவலிங்கத்தை விரும்பி எழுந்தருளப் பண்ணுக.

**ஆசனவகையுணர்த்துகின்றார்**

*552) அருகஞ் சலாதனமு மிட்டலிங்கத் தென்று*
*மருகந் திரம்பரார்த் தத்து.*

தெளிவுரை: இட்டலிங்கத்துக்குச் சலாசனமும் உரித்தாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரார்த்தலிங்கத்துக்குத் திராசனமே எக்காலத்தும் உரித்தாம். இட்டலிங்கத்துக்கு ஸ்நான வேதிகையிலே சலாசனமும் ஸ்நானவேதிகையினின்றும் பீடத்தெழுந்தருளப் பண்ணிய பின்பு திராசனமும் பூசிக்க. பரார்த்தத்திலே சகலமூர்த்தியை ஸ்நான வேதி கையிற் சலாசனங்கற்பித்தப் பூசிக்க.

**நிறுத்த முறையானே சலாசனமுணர்த்துகின்றார்.**

***523) சலாதனம னந்தருந்தன் மாதியொரு நான்கு***
***நலாரெண்ணு மம்புயமு நாடு.***

தெளிவுரை: அனந்தாசனமும், தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், என்னும் நான்கும் நல்லோர் மதிக்கும் பதுமமும் சலாதனமாம் என்று அறிக.
சலாசனமெனினும் சடுத்தாசனம் எனினும் ஒக்கும்.

**திராசன முணர்த்துகின்றார்.**

***524) ஆதார சத்தி முதற்குடிலா சத்தியந்த***
***மோதாய் திராதனமென் றோர்ந்து***

தெளிவுரை: ஆதாரசத்தி முதற் குடிலாசத்தியீறாக அடைவிலே அருச்சிப்பது திராசன மென்றறிந்து சொல்க.

**ஆவாகனாதிகளுக்கு மந்திரம் மூன்று திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***525) ஆவாக னாதிகளைச் சத்தியோ சாதாதி***
***நாவாற் சொலிச்செய் நயந்து.***

தெளிவுரை: ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், சுவாகதார்கியம் என்னும் ஐந்தையும், விரும்பி முறையே சத்தியோசாத முதலிய ஐந்து மந்திரங்களையும் நாவினால் உச்சரித்துச் செய்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திக்குபந்தனம், அத்திரத்தினாலும் அவகுண்டனம் கவசத்தினாலும் தேனு முத்திரை மூலத்தினாலும் மகாமுத்திரை சத்தி மந்திரத்தினாலுஞ் செய்க.

***526) இருதயத் தினாலு மிவைபுரிய லாகு***
***மிருதயமெங் கும்பொதுவென் றெண்.***

தெளிவுரை: இருதயமந்திரம் எல்லாக்கிரியைகளுக்கும் பொதுவாம். ஆதலால் ஆவாகன முதலிய இக்கிரியைகளை இருதய மந்திரத்தினாலுஞ் செய்யலாமென்றறிக.

***527) மந்திரந் தன்னை மதித்தியம்பாக் கன்மத்திம்***
***மந்திரத்தைச் சொல்க மதித்து.***

தெளிவுரை: ஆகமங்களிலே இதற்கு இம்மந்திரமென்று சுட்டிச் சொல்லாத கிரியைகளெல்லாவற்றிற்கும் இந்த இருதய மந்திரத்தையே உரியதென்று தெளிந்து உச்சரிக்க.

**பஞ்சாவரண பூசை இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***528) பிரமாங்கம் வித்தேசர் பேணுகண மென்டிக்***
***குரமொடுகாப் போர்படைக ளும்.***

தெளிவுரை: பஞ்சப்பிரமசடங்கதேவர் பதினொருவரையும் வித்தியேசுரர் எண்மரையும் விரும்பப்பட்டகணேசுரர் எண்மரையும் நன்கு மதிக்கப்படும் உலோகபாலர் பதின்மரையும் அவர்களுடைய ஆயுதங்கள் பத்தையும் அறிக.

வித்தியேசுரர் எண்மராவர் அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி எனவிவர். கணேசுரர் எண்மராவர் நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபம், கந்தர், பார்வதி, சண்டர் எனவிவர். உலோகபாலர் பதின்மராவர் இந்திரன், அக்கினி., இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விட்டுணு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனவிவர். உலோகபாலராயுதம் பத்தாவன வச்சிரம். சத்தி, தண்டம் கட்கம், பாசம், அங்குசம், கதை, சூலம், பதுமம், சக்கரம் எனவிவை.

*529) பஞ்சா வரண மருச்சிக்க பாங்காக*
*வெஞ்சா விதியெண்ணி யீங்கு.*

தெளிவுரை: பஞ்சாவரணத்திலும் குறைவில்லாத விதியை ஆராய்ந்து உரிமை பொருந்த இங்கே பூசிக்க.

பிரமாங்கங்களைத் தளங்களிலும் வித்தியேசுரர்களைத் தளாக்கிரங்ளிலும், கணேசுரர்களைப் பீடத்தின் கண்டத்திலும் உலோகபார்களைக் கீழ்பீடத்திலும் தசாயுதங்களை ஆதாரசிலையின் மேலும் பூசிக்க. வித்தியேசுரர்களையும் கணேசுரர்களையும் நீக்கிப் பூசிப்பது திரயாவரண பூசை. பிரமாங்கங்களை மாத்திரம் பூசிப்பது ஏகாவரண பூசை.

**பாத்தியாதிகட்கு முத்திரை இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

*530) அங்குட்ட மத்திமைய நாமிகையி னாற்கொடுக்க*
*தங்கையாற் பாத்தியமுந் தான்.*

தெளிவுரை: பாத்தியாசமனார்க்கியங்களைக் கொடுக்கும்போது, பாத்திரத்தை இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையின் பெருவிரலும், நடுவிரலும் ஆழிவிரலுமாகிய மூன்றையுங் கூட்டி பிடிக்கும் மிருக முத்திரையினாலே கொடுக்க.

*531) அங்குட்டந் தர்ச்சனியி னாற்கொடே லர்க்கியமு*
*மங்குதிர மாங்கொடுக்கி னப்பு.*

தெளிவுரை: அர்க்கிய முதலியவற்றைப் பெருவிரலினாலும் சுட்டுவிரலினாலும் கொடாதே. அங்ஙனம் கொடுக்கின், அந்த சலம் இரத்தத்திற்கு ஒக்கும் என்று அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**பாத்தியத்துக்கு திரவியங்களுணர்த்துகின்றார்**

532) *ஆரமிலா மச்சை யறுகோடு வெண்கடுகுஞ்*
*சிருறவே பாத்தியத்திற் சேர்.*

தெளிவுரை: சந்தனம், இலாமச்சை, வெண்கடுகு, அறுகு. என்னும் இந்நான்கையும் விதிப்படி பாத்தியத்திற் கூட்டுக.

**ஆசமனத்துக்கு திரவியங்கள் இரண்டு திருக்குறளா லுணர்த்துகின்றார்.**

533) *இலவங்கங் கர்ப்பூரஞ் சாதிசிற் றேல*
*நலவசுவா சேலமுநன் று*

தெளிவுரை: இலவங்கப்பட்டையும், கருப்பூரமும், சாதிக்காயும், சிற்றேலமும், நலவசுவாசியும், பேரேலமுமாகிய ஆறுதிரவியங்களின் பொடியையும் நன்றாக கூட்டுக.

534) *ஆசமன மாகு மறலினொடு கூட்டுதலும்*
*பாசத்தைப் பாற்றும் பதிக்கு.*

தெளிவுரை: சலத்துடனே கூட்டுதலும் ஆன்மாக்களுடைய பாசத்தை நீக்குஞ் சிவபெருமானுக்கு ஆசமனமாம்.

**அருக்கியத்துக்குத் திரவியங்களுணர்த்துகின்றார்.**

535) *அருக்கியம்பா னீரெள் ளரிசிகுசை யந்த*
*நிறைத்தமலர் வெண்கடுகு நெல்.*

தெளிவுரை: பாலும், சலமும், எள்ளும் அரிசியும், தருப்பை நுனியும், நிறைக்கப்பட்டபூவும், வெண்கடுகும் நெல்லுமாகிய இவ் வெட்டும் அருக்கியம் தாபித்தற்கு உரியனவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**பாத்தியாதி கொடுக்குந்தான முணர்த்துகின்றார்.**

***536) பாதத்திற் பாத்தியமே பாங்குமுகத் தாசமன***
***மாதிமுடிக் கேற்றருக்கி யம்.***

தெளிவுரை: சிவபெருமானுடைய இரண்டு பாதங்களிலும் வலமிடமாக நமோந்தமாக பாத்தியத்தை ஒவ்வொருதரமும், ஈசான முதலிய ஐந்து திருமுகங்களினும் சுவகாந்தமாக ஆசமனத்தை மும்மூன்று தரமும், ஈசான முதலிய ஐந்து திருமுடிகளினும் சுவகாந்தமாக அருக்கியத்தை ஒவ்வொருதரமும் கொடுத்தல் உரித்தாகும்.

**முக நிரூபணம் இரண்டு திருக்குறாளாலுணர்த்துகின்றார்.**

***537) அபிமுகன்பூர் வத்தமல னித்தியகன் மாதிக்***
***கபிமுகனா வன்மேல்பா கத்து.***

***538) பாங்குறவே கும்பந்தா பிக்கும்போ தும்பத்த***
***ரோங்குதற்குத் தீக்கைசெயி னும்.***

தெளிவரை: சிவபெருமான் நித்திய முதலிய கருமங்களுக்கு கிழக்கு முகமாகவே இருப்பர். யாகசாலையிலே விதிப்படி கும்பம் தாபிக்கும் போதும், சிவபக்தர்கள் உய்யும்பொருட்டுத் தீக்ஷையிலே கும்பந்தாபிக்கும் போதும் மேற்கு முகமாக இருப்பர்.

**நைவேத்தியம் செய்யு முறைமை ஐந்து திருக்குறளா லுணர்த்து கின்றார்.**

***539) அருத்துகவைந் தானனத்து மன்னாதி யல்லா***
***லருத்திடுக பூர்வவத னத்து.***

தெளிவுரை: ஈசான முதலிய பஞ்சவத்திரங்களிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்னம் முதலியவற்றைத் தனித்தனியே பாத்திரத்திற்படைத்து நிவேதிக்க. அது கூடாவழி ஏகபாத்திரத்திற் படைத்துத் தற்புருடவத்திரத்திலே நிவேதிக்க.

***540) வத்திரமாந் தற்புருட மாதேவற் காதலினவ்***
***வத்திரத்தி னூட்டல் வழக்கு.***

தெளிவுரை: தற்புருடமே சிவபெருமானுக்கு வத்திரமாம். ஆதலினால் அவ்வத்திரத்தின் நிவேதித்திலே முறைமையாம்.

***541) அகோர மிதயமம லற்கியலை யாய்ந்தோ***
***ரகோரமுகத் தன்னமருத் தார்.***

தெளிவுரை: அகோரம் சிவபெருமானுக்கு இருதயமாம். ஆதலினாற் சிவாகமங்களை ஆராய்ந்தவர்கள் அவ்வகோரமுகத்தில் அன்னத்தை நிவேதியார்கள்.

***542) பூர்வதிசை யிற்புருடத் திற்போ தமிர்தாதி***
***யார்வமுற மற்றுமுத வாங்கு.***

தெளிவுரை: ஆதலினாற் கிழக்கு நோக்கிய தற்புருடத்திற்றானே திருப்பள்ளித்தாமம் அன்னாதி மற்றுமுள்ள உபசாரங்களை விருப்பம் பொருந்தக்கொடு.

***543) அங்குட்ட மத்திமைய நாமிகையா லன்னாதி***
***யங்கருத்தாய் தற்புருடத் தால்.***

தெளிவுரை: பெருவிரலும், நடுவிரலும், ஆழிவிரலுமாகிய மூன்றும் கூட்டிப் பிடிக்கும் மிருகமுத்திரையினால் அன்னாதிகளைத் தற்புருடமந்திரத்தினாலே நிவேதிக்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிவேதனத்துக்கு அரிசி வரையறுத்துணர்த்துகின்றார்.

*544) இருநாழி தான்கனிட்ட மிட்டலிங்கத் தென்று*
*மிருதூணி யுத்தமமென் றெண்.*

தெளிவுரை: தினந்தோறும் இட்டலிங்கத்திற்க்கு நிவேதித்தற்கு இருநாழி யரிசி அதமமாம். இருதூணியரிசி உத்தமமென்றறிக.

உத்தமத்தினுத்தமம் இருதூணி, உத்தமத்தின் மத்திமம் எழுகுறுணி., உத்தமதினதமம் தூணிப்பதுக்கு. மத்தி மத்தினுத்தமம் ஐங்குறுணி, மத்திமத்தின்மத்திமம் தூணி, மத்திமத்தினதமம் முக்குறுணி. அதமத்தினுத்தமம் பதக்கு., அதமத்தின் மத்திமம் குறுணி, அதமத்தினதமம் இருநாழி, ஐயுழக்கரிசி வைக்கிற் பிசாச போசனமாம். புத்திபூர்வமாகவேனும் அபுத்தி பூர்வமாகவேனும் இருநாழியிற்குறைய நிவேதித்தவன் ஒவ்வோரரிசிக்கு ஒவ்வொருகற்பம் பைசாச புவனத்திற் பிசாசாயிருந்து ஆண்டுள்ள போகங்களை அனுபவிப்பனென்றறிக.

சுத்தான்னம், மத்வன்னம், தத்தியன்னம் பாயசான்னம் கிருசரான்னம், குளான்னம், முற்கான்னம் என அன்னம் ஏழுவகைப்படும். பிறிதொன்றுங் கூட்டாது தனியே பாகம்பண்ணப்பட்டது சுத்தான்னம் தேன் வார்த்துப் பிசிறிய அன்னம் மத்வன்னம், தயிர் வார்த்துப் பிசறிய அன்னம் தத்தியன்னம். வேண்டிய அரிசியும் அதிற்பாதி கொண்ட பயற்றம்பருப்பும் அரிசியினிருமடங்கேனும் மும்மடங்கேனும். நான்மடங்கேனும் கொண்ட பாலும் கூட்டிப் பாகம்பண்ணப்பட்டது பாயசான்னம். அரிசியின் நான்கின் ஒருபங்கு எள்ளுப்பொடியும் எள்ளுப்பொடியிற்பாதி நெய்யுமாகப் பிசிறிய அன்னம் கிருசரான்னம். அரிசியிற்பாதி கொண்ட பாலும் அரிசியிற்பாதி கொண்ட வெல்லமும் வெல்லத்திற் பாதி கொண்ட நெய்யுமாகக் கூட்டிப் பாகம்பண்ணப்பட்டது குளான்னம். அரிசியின் நான்கு மடங்கு கொண்ட சிறுபயறும் தேங்காய்த் துறுவலும் கூட்டிப் பாகம் பண்ணப்பட்டது முற்கான்னம். இனி முற்கான்னம், சர்க்ஷபான்னம், மாஷான்னம், ஆமிலான்னம், திலான்னம் என அன்னம் ஐவகைப்படும். என்றொலுமொன்று சர்ஷபம் கடுகு, அமிலம் புளி கிருசரம் எள்ளு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**தற்புருட முகத்தில் நிவேதித்தற்குக் காரண முணர்த்துகின்றார்.**

***545) கன்மசா தாக்கியங்காண் டற்புருட மாதலினாற்***
***கன்மஞ்செய் கன்மத்தின் கண்.***

தெளிவுரை: தற்புருட வத்திரம் கன்ம சாதாக்கியமாம்.ஆதலால் நைவேத்திய முதலிய உபசாரங்களனைத்தையும் அந்த கன்மசாதாக்கியற்றானே செய்க.

சிவசாதாக்கிய முதலிய நான்கும் ஒன்றையொன்று பற்றி அடைவில் இக்கன்மசாதாக்கியத்தை அடைந்திருத்தலின், இக்கன்மசாதாக்கியத்திற், செய்தனவெல்லாம் மற்றை சாதாக்கியங்களினும் செய்தன வேயாமென்க.

**சாதாக்கியங்களின் இலக்கணம் இரண்டுதிருக்குறளா லுணர்த்துகின்றார்.**

***546) கன்மம் புருடங் கருத்தா வகோரமேற்***
***குன்னுங்கான் மூர்த்த முறும்.***

தெளிவுரை: சிந்திக்கும் காலத்து கன்மசாதாக்கியம் தற்புருடமாம். கர்த்திருசாதாக்கியம் அகோரமாம். மூர்த்திசாதாக்கியம் சத்தியோசாதமாம்.

***547) வாம மமூர்த்தமே யீசான வத்திரத்தி***
***னாமஞ் சிவமென்றே நாடு.***

தெளிவுரை: அமூர்த்திசாதாக்கியம் வாமதேவமாம். சிவசாதாக்கியம் ஈசான வத்திரமாமென்றறிக.

**சிவன் சகளநிட்களரா''' முறைமையுணர்த்துகின்றார்.**

***548) சாதாக் கியமைந்தி னாற்சகள நிட்களனாம்***
***போதானாந் தன்சிவனன் போடு.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: ஞானானந்தராகிய சிவபெருமான் ஆன்மாக்கண்மேல் வைத்த காருண்ணியத்தினாலே பஞ்சசாதாக்கியத்தினாற் சகளநிட்களராவர்.

சகளம் வடிவுடையது. நிட்களம் வடிவில்லது. இவ்விரு தன்மையுங் கூடுகையாற் சகளநிட்களனென்றார்.

**சகளநிட்களராயினமைக்குக் காரணம் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***549) நிட்களன்றா னன்பா னினைந்தருச்சிக் கச்சகள
நிடகளனா னானிமல னே.***

தெளிவுரை: நிட்களன் நிமிலன் அன்பால் நினைந்து அருச்சிக்கச் சகள நிட்களன் ஆனான் தம்மை ஆன்மாக்கள் அன்பினாலே தியானித்துப் பூசிக்கும் பொருட்டுச் சகளநிட்களராயினார்.

***550) ஆதலினா லென்றுஞ் சதாசிவனை யர்ச்சிக்க
வோதிவதி வாணலிங்கத் தும்.***

தெளிவுரை: ஆதலினாலே சிவபூசா விதியை ஓதியுணர்ந்து சதாசிவ மூர்த்தியை வாணலிங்க முதலிய இலிங்கங்களின் எக்காலமும் பூசிக்க.

**பூசாந்தத்திற் பிரதக்கிண விதியுணர்த்துகின்றார்.**

***551) எழுமூன்றல் லாலைம்மூன் றொன்பானே ழைந்து
வழுவழுமூன் றுஞ்செய் வலம்***

தெளிவுரை: பிரதக்கிணத்தை இருபத்தொரு தரமாயினும் அஃதன்றிப் பதினைந்துதரமாயினும், ஒன்பது தரமாயினும், ஏழுதரமாயினும், ஐந்துதரமாயினும், மூன்று தரமாயினும் செய்க. இவை குற்றமல்லவாம் எனவே, இரண்டுதரம் ஒருதரம் செய்தல் குற்றமாயிற்று என்பதனை அறிக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

**பூசாந்தத்திற் பிரதக்கிணஞ்செய்யாதார்க்குக் குற்ற முணர்த்துகின்றார்.**

***552) செய்யான் வலத்தைச் சிவபூசை செய்தபல***
***மெய்தா னவன்விடம்ப னே.***

தெளிவுரை: பூசை முடிவிலே பிரதக்கிணம் செய்யாதவன் அச்சிவபூசை செய்ததனாலாகும் பலத்தை அடையான், அவன் விடம்பனெனப்படுவன்.

**நமஸ்கார விதியுணர்த்துகின்றார்.**

***533) அட்டாங்கத் தாற்புருட ரல்லாதார் பஞ்சாங்க***
***மிட்டமுற மூன்றிருவர்க் கும்.***

தெளிவுரை: விருப்பம் பொருந்தும்படி ஆடவர்கள் அட்டாங்கமாக நமஸ்கரிக்க பெண்கள் பஞ்சாங்கமாக நமஸ்கரிக்க திரயாங்கம் அவ்விருவருக்கு முரித்தாம்.

நமஸ்காரவிதியை

***"வலஞ்செய்து தண்டதனை மானவிதி வழிதழுவத்***
***தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்***
***துலங்கு முக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமபி***
***ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே "***

என்பதனாலும்

***"சிரங்கர முழந்தாண் மண்ணைத் தீண்டிற்பஞ் சாங்கமாகுஞ்***
***ரந்தனிற் கரங்கள் கூப்பிற் றிரிவித வங்க மாகுஞ்***
***சிரந்தனைத் தாழ்த்து நிற்கை தேரினே காங்க மாகும்***
***வரம் பெறு மெட்டு மைந்து மத்திம மூன்றே கம்பின்"***

என்பதனாலும் அறிக.

**சண்டேசுர பூசை மூன்று திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

***554) ஏறாது குன்றா தியற்றி வினையனைத்துஞ்
சீறார்சண் டன்பூசை செய்.***

தெளிவுரை: சிவபூசா கருமங்கள் எல்லாவற்றையும் நூனாதிகமின்றிச் செய்து கோபம் பொருந்திய சண்டேசுரரைப் பூசை பண்ணுக.

***555) அருச்சிக் கினுமலரன் னாதியிலீ சன்றா
ளருச்சிக்க சண்டனையன் பால்.***

தெளிவுரை: சிவபெருமானுடைய திருவடிகளைப் புஷ்பம் அன்ன முதலிய கணிகலிங்கங்களிலே பூசிப்பினும் சண்டேசுரரை அன்போடு பூசை பண்ணுக.

பூசித்தவுடன் விடப்படுதலாற் கணிகமெனப்பட்டன. கணிகலிங்கம் பன்னிரண்டு. அவையாவன. மண். அரிசி, அன்னம், ஆற்று மணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்ப மாலை, சருக்கரை மா என்பனவாம்.

***556) சண்டனையர்ச் சித்தவரே சம்புவையர்ச் சித்தபலங்
கொண்டிடுவர் மற்றையர்கொள் ளார்.***

தெளிவுரை: சண்டேசுரரைப் பூசித்தவர்களே சிவபெருமானைப் பூசித்ததனாலாகும் பயனைப் பெறுவார்கள். பூசியாதவர்கள் அப்பயனைப் பெறார்கள்.

**உடையவரை எழுந்தருளப் பண்ணு முறைமை உணர்த்துகின்றார்.**

***557) தலையிற் கழுத்திற் றரிக்கசிவ லிங்க
மலையாமற் பேடகத்தி னாக்கு.***

தெளிவுரை: சிவலிங்க பெருமானை விசித்திர வஸ்த்திரத்தினாலே சுற்றி அசையாவண்ணம் பேடகக் கோயிலின்கண் எழுந்தருளப்பண்ணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைக்க. யாத்திரா காலங்களிலே சிரத்திலேனுங் கழுத்திலேனுந் தரித்துக் கொள்க. துறவிகள் வலக்கக்கத்திலேனும், வாகுவிலேனும், முழங்கையிலேனும், மணிக்கட்டிலேனும் தரிக்கலாமென்றறிக. நடக்கும்போது தாம்பூலாதிபட்சணம் மலசலம் விடல் நரவாகன மொழிந்த வாகனங்களினேறல் புத்தகந்தண்டு கமண்டலமொழிந்த சுமையெடுத்தலாகா. அரசர் சோரர் யானை புலி முதலியவற்றின் பயத்தால் மலசலம் விடின், அச்சமற்ற எல்லையிற் சென்றபின், மலமோசனக் குற்ற நீக்கத்தின் பொருட்டு ஐந்து பலச்சந்தன மாயினும் அதிற்பாதியாயினும் ஆட்டிப் பஞ்சகவ்வியமுந் தனித்தனி முழுக்காப்புஞ் சாத்தி அகோரத்தைப் பதினையாயிரம் தடவை செபிக்க. கேவலமுடையார் கவ்வியமும் இருபலச் சந்தனமும் ஆட்டித் தனித்தனி முழுக்காப்புஞ் சாத்தி அகோரத்தை எண்ணாயிரம் தடவை செபிக்க. சுத்தமுடையார் பஞ்சகவ்வியமாயினும் அவற்றுள் ஒன்றாயினும் ஆட்டிச் சந்தனமேனும் வில்வமேனும் ஒருபலமாட்டிப் அகோரத்தை ஐயாயிரம் தரம் செபிக்க. சலமோசனக் குற்றநீக்கத்தின் பொருட்டு மூவருங் கவ்வியத்தை ஆட்டி அகோரத்தை முறையே நாலாயிரம் தரம், ஆயிரம் தரம், ஐந்நூறு தரம் செபிக்க. இரண்டும் மோசித்துக் கழுவிச் சுத்தாசமன முதலிய கருமங்களாற் சுத்தனாகாது ஒருநாழிகை சென்று செய்தானாயின், இருகுணிதம் செய்க. இப்பயங்களினாற் பூசையோடு கூட நித்திரை செய்யின், மூவரும் அகோரத்தை முறையே அறுநூறு தரம் முந்நூறு தரம் நூறு தரம் செபிக்க.

**இட்டலிங்கத்துக்கு நிவேதித்தது நிருமாலியமன்றென்ப துணர்த்துகின்றார்.**

***558) இட்டலிங்கத் துக்குநிவே தித்ததுநி மாலியமன்
றிட்டமுற மாந்தினுறு மின்பு.***

தெளிவுரை: ஆன்மார்த்தலிங்கத்துக்கு நிவேதிக்கப் பட்டது நிருமாலியமன்றாம். ஆதலால் அதனை நாடோறும் விருப்பம் பொருந்தும்படி நியமமாகப் பூசிக்கின் இன்பமுண்டாம்.

**ஆன்மார்த்தலிங்க நிருமாலியம் புசித்தற்குரியார் இவரென்பது இரண்டு**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குறளாலுணர்த்துகின்றார்.

*559) பூசகற்கே தானாகு மற்றையர்க டாம்புசித்தா*
*லாசறுந்தே சாமென் றறி.*

தெளிவுரை: ஆதலால் அதனைப் புசித்தல் பூசகனுக்கே உரித்தாம். புத்திரர் மித்திரர் பாரி முதலாயினோர் புசித்தாலும் அவர்களிடத்து உண்டாகிய பாவம் நீங்கி ஞானம் உண்டாமென்று அறிக.

*560) மன்னும் படிகத்தின் வாணத்தின் மாலியந்தான்*
*கன்னியர்க்காம் பாலர்க்காங் காண்.*

தெளிவுரை: பொருந்திய படிகலிங்கத்தின் நிருமாலியமும் வாணலிங்கத்தின் நிருமாலியமும் கன்னியர்களுக்கும் பாலகர்களுக்குமாம் என்றறிக.

ஆசாரியர் சேடமும் திருமுறையின் சேடமும் புசிப்பார் பெறும் பயனுணர்த்துகின்றார்.

*561) தேசிகன் சேடந் திருமுறையின் சேடமுந்*
*தேசுறுமுண் பார்க்கென்றே தேறு.*

தெளிவுரை: சிவபதமடைந்த ஆசாரியனைப் பூசித்து நிவேதித்த சேடத்தையும் திருமுறைக்கு நிவேதித்த சேடத்தையும் பத்தியினால் உண்பவர்களுக்கு ஞானம் உண்டாமென்றறிக.

ஆசாரியர் பிரசாதங் கொள்ள வேண்டின் அவர் அனுமதிப்படி உச்சிட்டங்கொள்க. கொள்ளின் ஞானமுண்டாம். அவர் போசனம் செய்து உத்தரா போசனம் பண்ணியபின் பக்தியுடனே பிரசாதம் வாங்கிக்கொள்ளுவதன்றி முன் வாங்கின் அவருடனே புசித்ததோடொக்குமாதலாற் குற்றமாமெனவறிக. சமபோசன காலத்திற் பக்தி மிகுதியினால் விரும்பிக் கேட்டானாயின் மறுக்க. அன்றேற் பிரணாகுதி முடிவிற் சிறிது அன்னத்தைக் கொடுத்து அவ்வன்னத்தை அவன் புசிக்குமுன் மிருத்தியுஞ்ஜியத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எட்டுதரம் அபிமந்திரித்துப் புசிக்க. புசித்து விட்டானாயின் நூற்றெட்டுதரம் அபிமந்திரித்துண்க. (புசுத்து விட்டானாயின்) வாங்கினான் முற்குற்றத்திற்கு ஐநூறுதரமும் பிற்குற்றத்திற்கு ஐயாயிரம் தரமும் அகோரத்தைப் போசனாந்தத்திற் செபிக்க. அவர் உண்ட கதலி முதலிய இலைப் பரிகலங்களில் உண்ணின் நானூறு தரம் செபிக்க. கொடுத்தவர் பாதி செபிக்க. அவர் அறியாமல் உண்டால் இருநூறு தரம் செபிக்க.

**சிவஞானிசேடம் புசிப்பார் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

***562) சிவஞானி பாத்திர சேட மருந்தி***
***னவஞான மெல்லா மறும்.***

தெளிவுரை: ஒருவன் சிவஞானி புசித்த பாத்திர சேடத்தை உண்டானாயின் அவனிடத்துள்ள அவஞானமெல்லாம் நீங்கும்.

**ஆசாரியப் பிரசாதத்தையும் சிவஞானி பாத்திரசேடத்தையும் பாவிக்கு முறைமையுணர்த்துகின்றார்.**

***563) மருந்துமிது வானமுது மீதெனவே வாஞ்சித்***
***தருந்தினர்க்கெல் லாநலமு மாம்.***

தெளிவுரை: ஆசாரியப் பிரசாதத்தையும் சிவஞானி பாத்திரசேடத்தையும் புசிக்கும்பொழுது எமது பிறவிப்பிணியைத் தீர்க்கும் மருந்தும் இதுவே. தேவலோகத்திலுள்ள அமிர்தமும் இதுவேயென்று பாவித்து விரும்பிப் புசித்தவர்களுக்கு சகல நன்மைகளுமுண்டாம்.

**இந்நூலை எழுதிக் கொடுத்தவர் பெறும் பயன் இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***564) எழுதி.யிதழினுற விந்நூலை யீவார்***
***விழைவார்க்கு நூல்விதியி னால்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: சைவசமயநெறியென்னும் இந்த நூலை சிவாகம விதிப்படி ஓலையிலே பொருந்த எழுதி அதனை விரும்புவோர்க்குக் கொடுப்பவர்கள்.

***565) ஆயிரங் கற்பமெழுத் தொன்றுக் கமர்வருயிர்த்***
***தாயவனீ டும்புரத்துட் டாம்.***

தெளிவுரை: ஓரெழுத்துக்கு ஆயிரம் கற்பமாக சர்வ ஆன்மாக்களுக்கும் தாயாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தில் வாழ்வார்கள்.

**இந்நூலைப் பூசிப்போர் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

***566) அர்ச்சிப்பா ரிந்நூ லலரினாற் பாவவிதம்***
***வர்ச்சித்து வாழ்வார்மேல் வான்.***

தெளிவுரை: இந்நூலை பூவினாலே நாடோறும் பூசிப்பவர்கள் பலவகைப்பட்ட பாவங்களையும் போக்கி மேன்மையாகிய சிவலோகத்திலே வாழ்வார்கள்.

**இந்நூலைப் போதிப்போர் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

***567) படித்துணர்ந்திந் நூல்பகர்வார் பக்குவர்க்ப் பாவ***
***மடர்த்தமர்வா ரேசிவலோ கத்து.***

தெளிவுரை: இந்நூலை ஓதியுணர்ந்து பக்குவ ஆன்மாக்களுக்குப் போதிப்பவர்கள் பாவங்களைப் போக்கிச் சிவலோகத்தில் வாழ்வார்கள்.

**இந்நூலைக் கேட்போர் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

***568) மகிழ்வுறக்கேட் பாருங் கரிசினை மாற்றிப்***
***புகழுறச்சேர் வார்மேற் புரம்.***

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுரை: இந்நூலை மகிழ்ச்சி பொருந்த கேட்பவர்களும் பாவத்தைப் போக்கிக் கீர்த்தியுண்டாகும்படி மேன்மையாகிய சிவலோகத்தை அடைவார்கள்.

**இந்நூலைக் கேட்டு முடித்த நாளிலே செயற்பாலனவற்றை இரண்டு திருக்குறளாலுணர்த்துகின்றார்.**

***569) முற்றியநாட் கேட்டிந்நூன் முன்வைத் தியன்றபொரு
ளர்ச்சிக்க தேசிகற்கார் வத்து.***

தெளிவுரை: இந்நூலைக் கேட்டு முடித்த நாளிலே போதகாசாரியருக்கு தங்கள் தங்களால் இயன்ற திரவியம், பூமி, பசு, மோதிரம் முதலியவைகளைக் கொடுத்து அவரை விருப்பத்தினோடும் பூசிக்கக் கடவர்கள்.

இதனைப் படித்தவர்களும் இவ்வாறே செய்க.

***570) பந்த மறுக்கும் பசுபதிதன் பத்தர்க்கு
மந்தணர்க்கு மூட்டுகவன் னம்.***

தெளிவுரை: பாசத்தைக் கெடுத்தருளும் சிவபெருமானுக்கு அன்பர்களாகிய மாகேசுரர்களுக்கும் பிராமணர்களுக்கும் அன்னம் ஊட்டக் கடவார்கள்.

**இங்ஙனம் செய்தார் பெறும் பயனுணர்த்துகின்றார்.**

***571) இந்தமுறை தன்னை யியன்றபடி தாமியற்றின்
வந்துறுமே முன்சொல் வரம்.***

தெளிவுரை: இந்த முறையை இயன்ற பிரகாரம் செய்யின் முற்கூறிய சிவலோக பிராப்தியாகிய பலம் வந்து சேரும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலாசிரியர் பெயர்.

***572) சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்***
***மையலற வாய்க்க வாம்.***

தெளிவுரை: மறைஞான சம்பந்த நாயனார் ஆன்மாக்களுக்கு அஞ்ஞானம் நீங்கவும் சிவபதப் பிராப்தியாகிய பலம் கிடைக்கவும் சைவசமய நெறி என்னும் இந்நூலைத் திருவாய் மலர்ந்து அருளினார்.

**பொதுவிலக்கணம் முற்றிற்று.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

# ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

## திருப்பரங்குன்றம்

SURYA, SIVAKASI. Ph : 22335